
திருமணம்
சு. குருசாமி

250

# திருமணம்

(நாவல்)

~~567~~ A
309

ஆசிரியர்:

சு. குருசாமி, பி. ஏ., எல். டி.

அன்பர்கள் T. K. S. சகோதரர்கள்
அவர்களுக்கு ஆசிரியனின்
அன்பளிப்பு.
சு. குருசாமி
12.8.52

முகவுரை எழுதியவர்:

ஸ்ரீ ஆர். மகாதேவன் ('தேவன்')

துணை ஆசிரியர், ஆனந்த விகடன்.

அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல்துறை.

அருணோதய நிலையம்

வேலூர் (சேலம்)

முதற் பதிப்பு : செப்டம்பர், 1947
உரிமை பதிவு செய்யப்பட்டது

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 623
நன்கொடை எண்: 623



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

27–1–1979

மதுரை காமராசர் பல்கலைக் கழக
அவ்வை தி.க. சண்முகம் நூல்

அச்சிட்டோர் :
மெட்ராஸ் ரிப்பன் பிரஸ், ராமச்சந்திரபுரம்
புதுக்கோட்டை சமஸ்தானம்

# முகவுரை

"ஒரு சிறந்த கதாசிரியருடைய திறமை எதில் இருக்கிறதென்றால், நமக்குப் பரிச்சயப்பட்ட விஷயங்களைப் புத்தம் புதியவை போலவும், புதிய விஷயங்களைத் தினமும் பழகுபவை போலவும் தீட்டிக் காட்டுவதில் தான்" என்று மேல் நாட்டு ஆசிரியர் **தாக்கரே** கூறியிருக்கிறார். சில வருஷங்களுக்கு முன்பு **ஸ்ரீ குருசாமி** அவர்கள் எழுதிய 'தேசாந்திரி' என்னும் சிறு கதையைப் படித்தபோது, எனக்கு இதே அனுபவம் ஏற்பட்டது. ஆசிரியர் என்னை வடக்கே இமயமலைச் சாரலுக்கு அழைத்துக் கொண்டு போனார். வெடவெடக்கும் குளிரை நான் அனுபவித்தேன். கண்களைக் கவரும் மலைக் காட்சிகளைக் கண்டேன். பனி லிங்கத்தைத் தரிசனம் செய்தேன். தேசாந்திரிகளுடன் சத்திரத்தில் குளிர் காய்ந்தேன். இதெல்லாம் எனக்குப் புதிய சமாச்சாரங்கள், அனுபவங்கள் தாம். ஆனால், கதையைப் படிக்கும் போது, இத்தனையும் நடக்கக் கூடியதுதான், நடந்தாலும் இதே போல்தான் இருக்கும் என்ற திடமான நம்பிக்கை ஏற்பட்டது.

அந்தத் தமிழ்க் கதையைப் படித்துக் கொண்டிருந்த போது, நடையின் மந்திர சக்தியை நான் முழுவதும் உணரவில்லை. படித்து முடித்த பிறகுதான் பக்கத்துத் தெருவில் நடக்கும் கல்யாணத்திற்குப் போவதற்குக் கூடச் சோம்பல்பட்ட என்னை, இந்த ஆசிரியர் எப்படி, "வார்த்தைகளைக் கொண்டே மயக்கி இமயமலை யாத்திரைக்கு அழைத்துக் கொண்டு

போய்விட்டார்'' என்பதை உணர்ந்தேன். '**தேசாந்திரி**' **ஆனந்த விகடனில்** வெளியாயிற்று. இப்போது நான்கு வருஷங்களுக்கு மேல் ஆகிவிட்டன. ஆனல், விச்ராந்தியான நேரங்களில், மனம் கட்டுப்பாடுகளைத் தளர்த்திக்கொண்டு திரியும் சமயங்களில், என் கண் முன்பு தேய்ந்து தேய்ந்து வளரும் தூய பனி லிங்கமும், அதைக் காண 'க்யூ' வரிசையில் திட சித்தத்துடன், கரடு முரடான பாதையில் நடை போடும் உறுதி நெஞ்சம் படைத்த பக்தர்களின் வரிசையும் தோன்றத் தவறியதில்லை.

சில மாதங்களுக்கு முன்பு ஸ்ரீ குருசாமி தாம் எழுதிவரும் "**திருமணம்**" என்ற நவீனத்துக்கு முகவுரை எழுதவேண்டும் என்று என்னிடம் தெரிவித்தபோது, உடனே ஒப்புக்கொண்டேன். இதற்கு முக்கிய முதல் காரணம், நல்ல நவீனம் ஒன்றை முதன் முதலாகப் படிக்கலாம் என்ற ஆசையே ஆகும் என்பதை ஒப்புக் கொள்கிறேன். "திருமண"த்தை ஒரே மூச்சில் படித்து முடித்தேன். என் வருத்தமெல்லாம் கதை முடிந்து விட்டதே என்பதுதான்!

"இன்னும் கொஞ்சம் சாப்பிட வேண்டும்" என்ற ஆசை தோன்றும் காலந்தான், சாப்பாட்டை நிறுத்திக் கொள்ள வேண்டிய சரியான சமயம் என்பார்கள். இன்னும் கொஞ்சம் எழுத மாட்டாரா என்று தோன்றும்படி செய்து கொண்டு, கதையை நிறுத்தும் ஆசிரியர் சமர்த்தர் என்று சொல்ல வேண்டியதுதான். '**திருமணம்**' இந்த அம்சத்தில் முதல் தர வெற்றி பெற்றுவிட்டது என்பதில் எனக்குச் சந்தேகமே கிடையாது.

'**திருமணம்**' திருமணமாக மட்டும் இல்லை. தமிழ் மணம் அதிலே ததும்பி வழிகிறது. எந்தப்

பக்கத்தைப் புரட்டினாலும் அது தமிழ்க் கதை. தமிழன் உள்ளத்தில் பொங்கும் எண்ணங்களே எழுத்தில் பிரதிபலிக்கின்றன. வெள்ளைக்காரச் சீமாட்டிகளுக்குத் தாவணி, புடவைகளை உடுத்தித் தமிழ் பேசச் செய்யும் 'இலக்கியம்' அல்ல இது. லக்ஷ்மி அம்மாள் உயர்குடும்பங்கள்தோறும் காணப்படும் மங்கள முகம் படைத்த மாதுசிரோன்மணிதான்; அவள் புருஷன் சுந்தரஞ் செட்டியார் சகஜமாக நாம் சந்திக்கும் நல்ல மனுஷர்; வேலைத் தொந்திரவு நிறைந்தவர். படித்த பிள்ளை பாலகிருஷ்ணன் செய்வதையும், எண்ணுவதையும், நடந்து கொள்வதையும் எங்கேயுமே காணலாம். சிவகாமி தமிழ் நாட்டுப் பெண். மனம் நிறைய ஆசாபாசங்கள். ஆனால், துணிச்சலாக அவைகளை வெளியிட அவளுடைய பண்பட்ட மனம் இடங்கொடுக்கவில்லை. இத்தனை சகஜமான மனிதர்களைக் கொண்டு, எளிய நடையிலே வாசகரைச் சங்கிலி போட்டுப் பிணைக்கும் அம்சம் என்ன? கதையில் திருட்டும், கொலையும், போலீஸும் வருகின்றனவா? திட்டம் போட்டுக் கொண்டு வேலை செய்யும் தீவட்டிக் கொள்ளைக்காரர்கள் இருக்கிறார்களா? அல்லது, மேஜையடியில் உட்கார்ந்து உச்சி மோட்டைப் பார்த்துத் தீவிர சிந்தனையில் ஈடுபட்டிருக்கும் துப்பறிபவன் இருக்கிறானா? கைத் துப்பாக்கிகள் விளையாடுகின்றனவா? ஒன்றுமே இல்லை. மனிதனுடைய ஆசாபாசங்கள், வெவ்வேறு சந்தர்ப்பங்களில் அவன் மனம் இயற்கையாக நாடும் பாதை, அவன் இதயத்திலே தலை முறை தத்துவமாக ஊறிக் கிடக்கும் பழக்க வழக்கங்களின் போக்கு இவைகளையே காண்கிறோம். நமக்கெல்லாம் ஏற்படும் சுபாவமான எண்ணங்கள்தாம் இந்த மனிதர்களுக்கும் ஏற்படுகின்றன. நமக்குத் தெரிந்த இந்த விஷயத்தைப்

புதியது போலவும், மேலே மேலே அறிய ஆவலைத் தூண்டும்படியாகவும் ஸ்ரீ குருசாமி எழுதிவரும் போது, அடிக்கடி **தாக்கரே** எழுதி வைத்த வாக்கியந் தான் ஞாபகம் வந்தது. சிறந்த ஆசிரியர் பரிச்சய மான விஷயத்தைப் புத்தகம் புதியது போல் காண் பிக்கும் திறமை பெற்றவர் !

தமிழ் நாட்டில் ஸ்ரீ குருசாமியின் பெயர் பிர சித்தமானதுதான். அவர் கதைகளை எல்லாரும் படித்திருப்பவர்களே. 'திருமணம்' அவருடைய புகழை மேலும் ஓங்கச் செய்யப் போகிறதென்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை. தெளிந்த நதிப் பிர வாகம் போலக் கம்பீரமாகச் செல்லும் குளிர்ச்சி மிகுந்த நடை; கதைப் போக்கிலே இரு புறமும், இயற்கையான செழுமையான விஸ்தரிப்புகள், அதன் சாந்தமான ஓட்டத்திலேயே ஆழமான பிரச்னைகள், பயங்கரமான சுழற்சிகள், லாகவமான நெளிவு, சுளிவுகள்— '**திருமணம்**' ஒரு புதிய வாழ்க்கையை ஒட்டிய ஓர்நல்ல நவீனம். இதற்கு உரித்தானமதிப்பும் வரவேற்பும் தமிழ் நாட்டில் நிச்சயம் கிடைக்கும்.

யோக்கியதை உள்ள எழுத்துக்குக் கௌரவம் அளிக்க வாசகர்கள் தீர்மானித்து விட்டார்கள். நூதனமான முறைகளையும், நவநவமான உத்திகளை யும் கையாளுபவர்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளிக்கப் பெரும்பான்மையானவர் தயங்குவதில்லை. யார் எழுதினார்கள் என்பதை மட்டும் வைத்துக் கொண்டு சீர்தூக்குவதும், அபிப்பிராயம் சொல்லு வதும் இப்போது அநேகமாக இல்லவே இல்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் எனக்கு நேர்ந்த ஒரு சிறிய அனுபவத்தைச் சொல்லலாமென்று நினைக்கிறேன். மூன்று வருஷங்களுக்கு முன்பு ஒரு நண்பர் வந்தார்.

"என் நீங்கள் கொஞ்ச நாட்களாக எழுதுவதே இல்லை?" என்று கேட்டார். நான் அப்போது எழுதாமல் இல்லை, எழுதிக் கொண்டுதான் இருந்தேன். அவை 'ஆர். எம்.' என்ற பெயரில் வெளியாகிக் கொண்டிருந்தன. நான் சிரித்துக்கொண்டே, "நான் எழுதினல் தானு? மற்றவர்கள் நன்ருகத்தானே எழுதிக்கொண்டு வருகிருர்கள்!" என்றேன். "என்ன ஸார்! 'ஆர். எம்.' என்று யாரோ எழுதுகிருர்; நீங்களும் பிரசுரித்துக் கொண்டே வருகிறீர்கள். சுத்த மோசம். நான் அதைப் படிக்கிறதை நிறுத்தி விட்டேன்; என் சிநேகிதர்களும் அப்படித்தான். அதை உடனே நிறுத்தி, அந்த ஆறு பக்கங்களுக்குப் பதிலாக நீங்கள் நாலு பக்கங்கள் எழுதுங்கள், போதும்!" என்று என்னை மேலும் எழுதத் தூண்டி உற்சாகப்படுத்திவிட்டு அவர் போனர்.

இந்த மனேபாவம் இப்போது அநேகமாக இல்லவே இல்லை என்று மகிழ்ச்சியுடன் சொல்ல முடியும். நிர்த்தாக்ஷண்யமாக, பாரபட்சத்துக்கு இடம் கொடாமல் நல்ல அம்சங்களை ஏற்றுக் கௌரவிக்கும் சகாப்தம் ஆரம்பமாகிவிட்டது. சுதந்திர உதயத்துக்கும் இந்த மனப்பான்மைக்கும் நல்ல பொருத்தந்தான்.

ஆகஸ்டு பதினைந்தாம் தேதிக்குப்பின் முதன்முதல் வெளியாகும் ஸ்ரீ சு. குருசாமி அவர்களின் நவீனத்துக்கு என் மனமார்ந்த பாராட்டுக்கள்.

ஆனந்தவிகடன்,
21—8—1947.

இங்ஙனம்,
ஆர். மகாதேவன்.

# நன்றியுரை

இந் நாவலுக்கு முகவுரை எழுதுமாறு அன்பர் ஸ்ரீ '**தேவன்**' அவர்களை அணுகிக் கேட்டுக்கொண்டபோது, அவர் மிக்க சந்தோஷத்துடன் இசைந்தார். அழகியதோர் முகவுரையும் ஈந்தார். அவருக்கு யான் பெரிதும் கடமைப் பட்டுள்ளேன். அன்னவருக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சு. குருசாமி.**

மதுரை காமராசர் பல்கலைக்கழக
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.

# முதலாவது அத்தியாயம்

கந்தசாமிபுரம் ஒரு குக்கிராமம். சுமார் ஐநூறு அறுநூறு வீடுகள்தாம் அதிலிருக்கலாம். செட்டிகள் தெரு என்று சொல்வதற்கில்லாவிட்டாலும், நாலைந்து செட்டிகள் வீடு சேர்ந்தாற்போல் அவ்வூரில் ஒரு பக்க மிருந்தன. அவைகளில் கிழக்கு நோக்கிய வீடுதான் முருகன் செட்டியாருடையது. அவ்வீட்டில் ஓர் அறையில் உடல் மெலிந்த பெண்ணுருவம் படுத்திருந்தது. மத்திய வயதைத் தாண்டிய பெண்ணொருத்தி அப்போதுதான் வீட்டிற்குள் நுழைந்தாள்.

"அது யார்?" என்று கேட்டாள் அறையில் படுத்திருந்த பெண்.

"ஏன்? நான் தானம்மா, சீதை."

"இவ்வளவு நேரமா எங்கே போயிருந்தாய்? ஐயாவும் போய்விட்டார், நீயும் எங்கே போய்விட்டாய்?"

இதற்குப் பதிலில்லை. சீதை பதிலை எதிர் பார்க்கவுமில்லை. தாயாரை வெகு நேரமாய்க் காணுமே என்றுதான் அவளுக்குக் கவலை. அவள் எங்கு போயிருந்தாள் என்பதைப் பற்றி அவளுக் கென்ன கவலை? மேலும் அவள் பேசலுற்றாள்.

"அம்மா, அந்தப்பயலை வெகு நேராமாய்க் காணுமே, எங்கே யிருக்கிறான் என்று கொஞ்சம் பாரேன்."

தாயார் ஆவுடையம்மாளின் பதிலில் துக்கமும், சிறிது எரிச்சலும் தொனித்தது. "அவனைப் பற்றி நீ ஏனம்மா கவலைப் படுகிறாய்? அந்தச் சனியன் எந்த நேரம்

பிறந்ததோ, அதிலிருந்து தானே உன்னை இப்படிப் படுத்த படுக்கயைாய்க் கிடத்திவிட்டது!"

"எப்பப் பார்த்தாலும் என்னை 'செத்துப்போ' 'செத்துப்போ!' என்று சொல்லுகிறானே, அம்மா. நான் செத்துப்போனேன் என்றால், இவனை யாரம்மா பார்த்துக் கொள்வார்கள்?"

"அது நாசமாய்ப் போக, அது வாயிலே ஏன் அப்படி வருது?"

இந்தச் சமயம் சுமார் நான்கு வயதுள்ள சிறுவன் ஒருவன் வீட்டிற்குள் ஓடி வந்தான்.

"இங்கே வாடா, கண்ணு, பாலு" என்று குழந்தையைச் சீதை தன்னருகில் கூப்பிட்டாள்.

குழந்தை பிறந்ததிலிருந்தே சீதை நோய் வாய்ப் பட்டுப் படுத்த படுக்கையாய்ப் படுத்து விட்டாள். ஒரு நோய் போனால், ஒரு நோய் வந்து கொண்டே இருந்தது. இப்பொழுது வயிற்றுக் கடுப்பினால் அவதிப் பட்டுக் கொண்டிருந்தாள். குழந்தையுடன் கொஞ்சிக் குலாவுவதற்குக் கூட அவளால் முடியவில்லை. உடல் நலமிழந்து, மெலிந்த உருவத்தில் இருந்த தன் தாயைக் குழந்தை ஆதி முதலே வெறுத்தது. அவளை அணுகவும் அஞ்சியது.

"நான் வரமாட்டேன். நீ செத்துப் போ. உனக்கு நானே கொள்ளி வைக்கிறேன்!" என்றான் சிறுவன். அவன் பெயர் பாலகிருஷ்ணன்.

குழந்தையின் இவ்வார்த்தைகளைக் கேட்டதும், நோயுற்றிருந்த அன்னை வெகு சீக்கிரத்தில் பொறுமை இழந்தாள்.

"கொள்ளி வைக்கத்தாண்டா பிறந்திருக்கே! கொள்ளி வைக்காமல் இருப்பாயா?" என்று எரிச்சலுடன் கூறினாள் சீதை.

“இந்த வயதிலே இவனுக்கு யார் இப்படிச் சொல்லிக் கொடுத்தது? இனிமேல் அப்படிச் சொன்னால், நாக்கிலே சூடு போட்டிருவேன் பார்த்துக்கோ” என்று ஆவுடையம்மாள் பாலகிருஷ்ணனைப் பயமுறுத்தினாள். அவளுக்கு மகளைப் பற்றிய கவலை!

சிறுவன் மீண்டும் வெளியில் ஓடி விட்டான்.

“நான் சொன்னதை ஐயாவிடம் சொன்னாயா, அம்மா?” என்று சீதை கேட்டாள்.

“சொல்ல மறந்து விட்டேன். இப்ப வருவாரல்லவா. வந்ததும் சொல்றேன்” என்றாள் ஆவுடையம்மாள்.

அதிகாலையில் எழுந்து பருத்திக் காட்டிற்குச் சென்ற முருகஞ் செட்டியார் அப்போதுதான் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தார். பங்குனி மாதம். உச்சி வெய்யில் ஓங்கி அடித்துக் கொண்டிருந்தது. அதைத் தாங்குவதற்குச் செட்டியாரின் தலையில் பருத்திச் சாக்கொன்றிருந்தது. அது பருத்தி வெடிப்புக் காலம். இருண்ட வானில் நக்ஷத்திரங்கள் பிரகாசிப்பது போல், அவருடைய காட்டில் அங்கங்கே செடிகளில் பருத்தி வெடித்திருந்தது. அதைச் சேகரிப்பதற்காக ஏழெட்டுப் பெண்களைக் கூலிக்கு விட்டிருந்தார். அவர்கள் சேகரித்த பருத்திதான் அவருடைய தலையின் மீதிருந்த சாக்கிலிருந்தது. அகோரமான வெய்யில்! கீழே அடிஎடுத்து வைக்க முடியாதபடி பூமாதேவி கொதித்துக் கொண்டிருந்தாள். ஆகையினால் அங்கங்கே இருந்த நிழலுக்கு நிழல் தாவிச் செல்வது போல், அவ்வளவு வேகமாய் சென்று கொண்டிருந்தார் செட்டியார். அவருடைய வேகத்திற்கு அது மட்டுமா காரணம்?

வீட்டிற்குள் நுழைந்ததுமே செட்டியார், “சீதை எப்படி இருக்கிறாள்?” என்று கேட்டார்.

" இருக்கிருள். எப்பவும் போலத்தானிருக்கிருள் " என்று உற்சாகமற்ற குரலில் அவருடைய மனைவி ஆவுடையம்மாள் பதிலளித்தாள்.

" இதுவரை எத்தனை தடவை போயிருக்குது ?"

" ஏழெட்டுத் தடவைக்கு மேலாச்சு. ரத்த ரத்தமாய்த்தான் போகுது ! "

" சின்னப்பயலை எங்கே காணும் ? "

அது எங்கே தொலைந்ததோ, கழுதை ? "

செட்டியார் பல் விளக்கி விட்டுப் பழைய சாதம் சாப்பிட உட்கார்ந்தார். பருத்தி வெடிப்புக் காலத்தில் தினந்தோறும் மத்தியானத்திற்கு மேல் தான் அவர் பழையது சாப்பிடுவது வழக்கம்.

" புருஷன் வீட்டிற்குப் போக வேண்டும் என்று சீதை பிடிவாதம் செய்கிருளே, நீங்கள் என்ன சொல்கிறீர்கள் ? " என்று ஆவுடையம்மாள் கேட்டாள்.

" இப்படிப் படுத்த படுக்கையாய்க் கிடக்கிருளே, எப்படிப் போக முடியும் ? "

" நானும் எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டேன். கட்டாயம் போகத்தான் வேண்டும் என்கிருள் "

" உங்களுக்குப் பருத்திக் காட்டோடு மாரடிக்கத் தானே சரியாய்ப் போகுது, ஐயா. எனக்கு ஒரு மருந்தா மாயமா ஒன்றும் கிடையாது. காலையில் எழுந்திருந்து காட்டுக்குப் போனவர் இப்பத்தானே வந்திருக்கிறீர்கள் ? அங்கே கொண்டுபோய் விட்டுவிட்டால், அவர் பாடு, என் பாடு " என்று சிறிது ஆத்திரத்துடன் கூறினாள் சீதை.

" நான் என்னம்மா செய்வேன் ? பட்டிக் காட்டிலே என்னசெய்யமுடிகிறது? பணங்கொடுத்துப் பத்துநாளைக்கு

மேலாகிறது. மருந்து செய்து கொண்டு வருவதாகச் சொன்ன வைத்தியனை இன்னுங்காணோம்'' என்றார் முருகஞ்செட்டியார்.

"உங்கள்மேல் நான் குற்றமா சொல்கிறேன், ஐயா? கொண்டவரிடம் என்னைச் சேர்த்து விட்டால், அப்புறம் ஆண்டவன் விட்டபடி விடட்டும் என்று தானே சொல்கிறேன்?''

முருகஞ்செட்டியார் யோசித்துப் பார்த்தார். மகள் சொல்லியது சரி என்றே தோன்றியது. அவளுடைய கணவனின் ஊரில் ஆஸ்பத்திரி, டாக்டர், மருந்து எல்லாச் சௌகரியங்களும் இருப்பதனால், அங்கே கொண்டு போய்ச் சேர்த்து விடுவதே நலம் என்று நினைத்தார்.

அன்றிரவு சாப்பாட்டிற்குப் பின்பு, முருகன்செட்டியார் வண்டி ஒன்று ஏற்பாடு செய்வதற்காக வெளியில் சென்றார். செட்டியாரிடம் மாடுகளிருந்தன. ஆனால் நோயாளிகளைக் கொண்டு செல்வதற்குத் தகுதியான வில் வண்டி கிடையாது. அவ்வூரிலேயே மேல வீட்டு நாயக்கர் ஒருவரிடந்தான் வில் வண்டி உண்டு. ஆகையினால் அவரிடம் கேட்பதற்காகச் செட்டியார் சென்றிருந்தார்.

கணவனுடைய வீட்டிற்குச் செல்ல வேண்டுமென்று சீதை விரும்பியது வாஸ்தவம்தான். ஆனால் அப்புறம் யோசித்துப்பார்த்த பொழுது, அவளுக்கு அங்கே செல்லப் பயமாயிருந்தது. புருஷன் வீட்டில் தன்னை நன்றாய்க் கவனிப்பார்களா, அங்கே தனக்குச் சேவை, சிஸ்ருஷை எல்லாம் யார் செய்வார்கள் என்று பல விதமாக யோசிக்க வாரம்பித்தாள். ஆகையினால் தன் தாயாரைப் பக்கத்தில் அழைத்து, "எனக்கு அங்கே போகப் பயமாயிருக்கிறதே, அம்மா'' என்றாள்.

உன்னை யார் இப்பொழுது அங்கே போகச் சொல்கிறார்கள்? நீயாகத்தானே போகவேண்டும் என்கிறாய்?''

சீதைக்குத் திடீரென்று ஒரு சம்பவம் ஞாபகத்துக்கு வந்தது. கண்களில் கண்ணீர் மல்க, ''என்னைக் கல்யாணம் பண்ணின வருஷம் திருவிழாச் செலவுக்கு என் கணவரிடம் பணங்கேட்டேன். செல்லாக் காசுகளாக பனிரண்டு காசுகளைப் பொறுக்கிக் கொண்டு வந்து என்னிடங் கொடுத்தார். அப்பேர்ப்பட்டவர்கள், என்னை எப்படி அம்மா கவனிப்பார்கள்?'' என்றாள்.

அப்படியானால் ஏன் அங்கு போகவேண்டும் என்கிறாய்?''

''என்ன வானாலும் சரி. இங்கேயே இருந்துவிடட்டுமா, அம்மா?''

''இருக்கத்தானே சொல்கிறேன்.'' சீதை சிறிது நேரம் மௌனமாயிருந்தாள். அவளுடைய மகனைப் பற்றிய கவலை அவள் மனதில் தோன்ற வாரம்பித்தது. ஆண் பிள்ளை, படிக்க வேண்டிய பையன், கந்தசாமிபுரம் பள்ளிக்கூடம் இல்லாத குக்கிராமம் என்பதெல்லாம் ஞாபகத்துக்கு வரவே, தான் கணவன் வீட்டிற்குச் செல்வதே உசிதம் என நினைத்தாள். மேலும் அங்கே அவளுடைய மாமியார் இருப்பதும் அவளுக்குத் தைரியம் அளித்தது.

''அம்மா, நான் போகத்தான் வேண்டும்'' என்று இறுதியாகத் தாயாரிடம் சீதை சொன்னாள்.

பின்பு சிறிது நேரம் கழித்து என்ன நினைத்தாளோ தெரியவில்லை, ''இந்தப்பயல் தலையில் ஆண்டவன் எப்படி எழுதி இருக்கிறானோ, தெரியவில்லையே, அம்மா'' என்றாள்.

"ஒன்றுக்கும் நீ பயப்படாதே அம்மா" என்ருள் ஆவுடையம்மாள்.

வெளியில் சென்ற முருகஞ்செட்டியார் தற்செயலாய் இரண்டு பெண்கள் தெருவில் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்க நேர்ந்தது.

"அவளைப் போன கணக்கோடு சேர்க்க வேண்டியது தான். இனி பிழைக்கவா போகிருள்?" என்ருள் ஒருத்தி.

"நானும் இன்று சாயந்திரந்தான் போய்ப் பார்த்தேன். எப்படி இருந்தவள் எப்படி இளைத்து விட்டாள்!" என்ருள் இன்னொருத்தி.

அவர்கள் சீதையைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தார்கள். பிறர் வாயின் மூலம் கேட்ட போதுதான் முருகஞ் செட்டியாருக்குத் தன் மகளின் உண்மையான நிலைமை நன்கு தெரியவந்தது. அது இத்தனை நாட்களும் அவருக்கு ஏன் தெரியாமற் போய்விட்டது?

அவர்கள் சொன்னது உண்மைதான? சீதை இனிப் பிழைக்க மாட்டாளா?

அப்படியானல் சிறுவன் பாலகிருஷ்ணனின் கதி என்னவது?

## இரண்டாவது அத்தியாயம்

சீதை வெற்றிபுரத்திலுள்ள தன் கணவன் வீட்டிற்கு வந்து சேர்ந்தாள். அங்கு அவள் கண்ட காட்சி அவளைக் கதி கலங்கச் செய்தது. கணவன் வீட்டிற்குப் போகலாமா வேண்டாமா என்று பலவாருக அவள் மனே வியாகூலப் பட்டுக்கொண்டிருந்த பொழுது, அவளுடைய

மாமியார் நினைவுதான் அவளுக்குத் தைரியம் அளித்தது. அதன் பிறகுதான் வெற்றிபுரத்துக்குப் போவதென்று அவள் உறுதியாகத் தீர்மானித்தாள். மாமியார் தனக்கு உதவியாயிருப்பாள், தன் குழந்தையின் மீதும் பிரியமாயிருப்பாள் என்ற நம்பிக்கையுடன் தான், அவள் வந்தாள். ஆனால் அவளுடைய மாமியார் இருந்த நிலைமையைப் பார்த்த போது, அவளுடைய ஆசைகளெல்லாம் பாழாயின. ஒன்றை நினைத்தால், அது ஒழிந்திட்டொன்றாகும் இந்த உலகத்தில் எதைத்தான் நம்புவது?

சீதையின் மாமியார் லக்ஷ்மியம்மாள் அவளுக்கு உருவத்திலும் மாமியாரில்லை; உண்மையிலும் மாமியாராயில்லை. லக்ஷ்மியம்மாள் சீதையின் மாமனாருக்கு இரண்டாந் தாரமாக வாழ்க்கைப் பட்டவள். அவளைக் கலியாணம் பண்ணிக்கொண்டபோது, சுந்தரஞ்செட்டியாருக்கு இரண்டு புத்திரிகளும், ஒரு புத்திரனும் இருந்தனர். பெண்களுக்கு நல்ல வேளையாகக் கல்யாணமாகிவிட்டது. பெண்களுக்குக் கலியாணம் செய்து பார்த்து விட்டாவது செத்தாளே புண்ணியவதி, இல்லையானால் இளையாள் வருபவளிடம் அப்பெண்கள் என்ன கஷ்டப்பட நேர்ந்திருக்குமோ என்று ஊரில் எல்லோரும் பேசிக்கொண்டார்கள். ஆனால் பின்பு லக்ஷ்மியின் குணத்தைக் கண்டவர்கள் அத்தகைய பயத்திற்கே இடமில்லை என்பதை அறிந்தார்கள்.

மனைவி இழந்தவர்கள் எத்தனையோ பேர்கள் இரண்டாந்தாரம் கலியாணம் செய்து கொள்ளத்தான் செய்கிறார்கள். ஆயினும் சுந்தரஞ்செட்டியாருக்கு வாய்த்தது போல் யாருக்கு வாய்க்கிறது என்று ஜனங்கள் பேசினர்கள். லக்ஷ்மி அவ்வளவு அடக்கமும், ஒடுக்கமும், குணமும், அழகும் பொருந்தியிருந்தாள். கணவன் இட்ட கட்டளைக்கு எதிர் பேசாமல் நடந்து வந்தாள் அவள். பெயருக்

கேற்றபடி லக்ஷ்மீகரம் பொருந்தி யிருந்த அவளுடைய முகத்தில் எப்பொழுதும் திருப்தியும், சந்தோஷமுங் குடிகொண்டிருந்தன.

கிராமத்துப் பெண்தான். கணவன் வீட்டிற்கு வந்த போது, வீட்டு வேலைகளைப் பார்ப்பதற்குக் கூட அவளுக்கு நன்ருய்த் தெரியாது. கணவன் தான் எல்லா வேலைகளையும் அவளுக்குக் கற்றுக் கொடுத்தார். புதுமண மோகத்தில் ஈடுபடும் இளவயதில் இல்லை சுந்தரஞ்செட்டியார். ஆகையினுல் வீட்டுக் காரியங்களில் தன் இள மனைவிக்கு ஒத்தாசை செய்வதில் அவர் ஆனந்தத்தைக் கண்டார். லக்ஷ்மியும் வெகு சூட்டிக்கையாக வேலைகளைக் கற்றுக் கொண்டாள். எழுத்து வாசனையே அறியாமலிருந்த தன் மனைவிக்குச் செட்டியார் கல்வியுங் கற்றுக் கொடுத்து விட்டார். எல்லோரும் லக்ஷ்மியின் அறிவையும், குணத்தையும் மெச்ச வாரம்பித்தார்கள்.

மூத்தாளுக்கு வயது வந்த மக்கள் மூவர் இருக்கும் வீட்டில், இளையாளாக வாழ்க்கைப் பட்டு நல்ல பெயரும் வாங்குவதென்ருல் இலேசான காரியமில்லை. இயற்கையில் நல்லவளாயிருப்பவளைக்கூட மூத்தாளின் உறவினர்கள் குத்தலாகப் பேசியும், கோள் மூட்டி விட்டும், இல்லாததை உண்டென்று சிருஷ்டித்தும் கெடுத்து விடுவார்கள். ஆனுல் தன்னுடைய சக்களத்தியின் உறவினர்கள் கூடக் கொண்டாடும்படி அவள் நடந்து கொண்டது எல்லோருக்கும் ஆச்சரியமாகவே தோன்றியது. "நீ என்ன வசிய மருந்து தூவி இப்படி எல்லாரையும் மயக்கி விட்டாய் லக்ஷ்மி?" என்று சுந்தரஞ் செட்டியார் கூடச் சிற்சில சமயங்களில் கேட்பதுண்டு.

கணவனுடைய வீட்டிற்குவந்த கொஞ்ச காலத்திலேயே, லக்ஷ்மி தன் பொறுப்பு முழுவதையும் உணர்ந்து

கொண்டள். வீட்டிற்கு எஜமானிஎன்ற கர்வத்துடனல்லா மல் கௌரவத்துடன் நடக்கலானுள். சுந்தரஞ்செட்டியா ருடைய மூத்த தாரத்தின் மகன் அவளுக்கு இரண்டொரு வயதுதான் இளையவன். அவள் வந்ததிலிருந்து அவனைத் தன் மகனைப் போலவே நடத்தி வந்தாள். அவனும் அவ ளிடம் மரியாதையுடனும் அன்புடனும் நடந்து கொண் டான். அப்பொழுது அவனுக்குக் கலியாணம் ஆகவில்லை. அதற்கப்புறம் ஐந்தாறு வருடங்களுக்குப் பின்பு அவ னுக்கு விவாகம் நிறைவேறியது. லக்ஷ்மிதான் பெரிய மனுஷி மாதிரி அவனுக்குப் பெண் பார்த்து வந்தாள்!

கணவன் வீட்டிற்குச் செல்லத்தான் வேண்டுமென்று சீதை தீர்மானித்த பொழுது, லக்ஷ்மியின் நினைவுதான் அவளுக்குத் தைரிய மூட்டியது. லக்ஷ்மிக்கும் அவளுக்கும் சுமார் பத்துப் பன்னிரண்டு வயது வித்தியாசமிருக்கும். ஆயினும் சீதையை லக்ஷ்மி தன் தோழிபோல் நடத்தி வந்தாளே ஒழிய மருமகள்போல் கருதவில்லை. கணவ னுடைய அசிரத்தையையும், அலக்ஷியத்தையும், தான் நோய் வாய்ப் பட்டிருப்பதால் தன் மீது பிரியமில்லாம லிருப்பதையும் நினைத்துப் பார்த்த பொழுது சீதைக்குப் பயமாகவே இருந்தது. திருவிழாச் செலவிற்காகப் பன்னி ரெண்டு செல்லாக்காசுகளைப் பொறுக்கிக் கொண்டு வந்து கொடுத்த கணவனின் வன்கண்மையைப் பற்றிச் சீதை தன் தாயாரிடம் குறைப் பட்டுக் கொண்டபொழுது தன் மாமியார் அச்சமயத்தில் எப்படி நடந்து கொண் டாள் என்பதைச் சொல்லவில்லை. இவ்விஷயத்தை அறிந் ததும், லக்ஷ்மி ஒரு பையனைக் கடைக்கு அனுப்பித் தனக் கும் சீதைக்கும் திருவிழாச் செலவுக்கு ஐந்து ரூபாய் வேண்டுமென்று வாங்கி வரச் சொன்னுள். சுந்தரஞ் செட்டியாரும் உடனே கொடுத்தனுப்பினுர். அவளுடைய வார்த்தைக்கு எப்போதுமே அவர் மறு வார்த்தை சொல்வ

தில்லை. வீட்டில் அவள் அடி எடுத்து வைத்த பிறகு தான் லாபத்திற்கு மேல் லாபங் கிடைத்துத் தனக்குக் கூடிவந்ததென்பது அவருடைய நம்பிக்கை.

சீதையின் கணவன் அன்று சாப்பிட வந்த பொழுது லக்ஷ்மி அவனைப் பார்த்து, "ஊரிலுள்ள பயல்களெல்லாம் மனைவிகளை எப்படிக் கொஞ்சிக் குலாவுகிறுன்கள், என்னென்ன வாங்கிக் கொடுக்கிறுன்கள்! திருவிழாச் செலவுக்குப் பணங் கேட்ட பெண்ணுக்கு நீ பனிரெண்டு காசுகளைக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறுயே, இது உனக்கு நன்ருயிருக்கிறதா?" என்று கண்டிக்கவும் செய்தாள்.

அத்தகைய லக்ஷ்மியம்மாளுக்கு இப்பொழுது என்ன நேர்ந்திருந்தது?

இரண்டாந்தாரமாக வாழ்க்கைப் பட்ட லக்ஷ்மி கவலைப்படுவதற்கு ஒரு காரணமுமில்லாமல் தான் முதலிலிருந்தது. அவளுக்கு மூன்று குழந்தைகள் பிறந்தன. இரண்டு பெண்கள், ஒரு ஆண். குழந்தைகளை அவள் வெகு பிரியமாக வளர்த்தாள். சுந்தரஞ்செட்டியாரும் அவர்களின் மீது வெகு வாஞ்சையாக இருந்தார். மூத்தாள் பிள்ளைகளின் பொருமையைத் தூண்டாமலும் லக்ஷ்மியின் மனங் கோணுமலும் வெகு திறமையுடன் நடந்து கொண்டார்.

ஆனுல் லக்ஷ்மி கொடுத்து வைத்தது அவ்வளவு தானே என்னவோ, அவளுடைய இரண்டு பெண்களும் எட்டு வயது வரைக்கும் வளர்ந்து, வளர்ந்து, ஒருத்தி பின் ஒருத்தியாய் இறந்தனர். அப்புறம் ரங்கசாமி என்ற ஒரே மகன் மட்டுந்தான் இருந்தான்.

அவன் மீது உயிராயிருந்தாள் லக்ஷ்மி. அவனுடைய கண் கலங்கினுல், அவளுடைய மதியே கலங்கி விடும். அவனுக்கு ஜலதோஷம் பிடித்தால் கூட, லக்ஷ்மி சகிக்க

மாட்டாள். ரங்கசாமியும் வெகு நன்ருய் வளர்ந்து வந்தான். குழந்தையின் பருவத்திற்கேற்ற விளையாட்டுக்களையும், வேடிக்கைகளையும் கண்டு அவள் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. ஒரே குழந்தையல்லவா?

இரண்டு கைகளாலும், கால்களாலும், தவழ்ந்து கொண்டிருந்த குழந்தை, கைகளிரண்டையும் தூக்கி எழுந்து நின்று, நடக்க வாரம்பித்த பொழுது, லக்ஷ்மி ஏன் அத்தனை ஆனந்தம் அடைந்தாள்? இரண்டு கால்களால் நடக்கும் அந்தப் பிரம்மாத வித்தையை இந்த வுலகில் தன் குழந்தை ஒன்று மட்டுந்தான் செய்கிறது என்ற நினைத்தாளோ !

பின்பு குழந்தையின் குதலை மொழிகளைக் கேட்டு அதனுடன் கொஞ்சிக் குலாவினுள். ஐந்து வயதில் ரங்கசாமி பள்ளிக்கூடம் போக ஆரம்பித்தான். பையன் மிகுந்த புத்தி நுட்ப முள்ளவனுகவே தோன்றியது. பெற்ற தாய் அடைந்த பெருமையைச் சொல்ல வேண்டுமா? தன் மகனைப் போல் அறிவுள்ளவன் இந்த உலகத்திலேயே எங்கும் கிடையாதென்று எண்ணி இறுமாந்திருந்தாள்.

தினந்தோறும் பையன் பள்ளிக்கூடத்திலிருந்து ஏதாவது புதிதாகக் கற்றுக் கொண்டு வருவான். தான் கற்ற கதைகளையும் பாட்டுக்களையும் தாயாரிடத்தில் சொல்லிக் களிப்பூட்டுவான். ஒரு நாள் பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும், "மாமி தந்த லட்டு. மடியில் வாங்கிக் கட்டு. அதைக் கொஞ்சம் பிட்டு, எனக்குக் கொஞ்சம் ஊட்டு" என்று பாடவாரம்பித்தான். அவனுக்குப் பள்ளிக்கூடத்தில் அன்று கற்றுக் கொடுக்கப் பட்ட பாட்டு அது. சமையல் அறையில் ஏதோ வேலையாய் இருந்த லக்ஷ்மி இதைக் கேட்டவுடன் குதித்துக் கொண்டு ஓடி வந்தாள் "மாமி தந்த லட்டா? எந்த மாமியடா கொடுத்தாள்? அடராசா!

உனக்கு லட்டுக் கொடுப்பதற்கு எந்த மாமியடா இருக்கிருள்? நான் கொடுக்கிறேனடா, கண்ணே!" என்று அப்பொழுதே கடைக்கு ஆள் அனுப்பி லட்டு வாங்கி வந்து பிள்ளேக்குக் கொடுத்தாள்!

இன்னொரு நாள் பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும், ரங்கசாமி லக்ஷ்மியைப் பார்த்து, "அம்மா! உனக்கொரு கதை சொல்லட்டுமா?" என்ருன்.

"சொல்லடா, தங்கம்!" என்ருள் தாய். பையன் சொல்லவாரம்பித்தான்.

"ஒரு ஊரில் ஒரு கணேசன் இருந்தான். அவன் பெயர் கணேசன்! அவன் காலேயில் எழுந்திருப்பான். சுத்தமாய்ப் பல் தேய்ப்பான். சுத்தமாய்க் குளிப்பான். சுத்தமாய்ச் சொக்காய் போட்டுக்கிவான். சுத்தமாய்ப் படிப்பான். சுத்தமாய்ப் பள்ளிக் கூடம் போவான்" என்று நிறுத்தினுன்.

"அப்புறம்"? என்ருள் லக்ஷ்மி. "அவ்வளவுதான்!" என்று குதலே மொழியில் கொஞ்சினுன் குழந்தை.

"சுத்தம் சுத்தம் என்று எத்தனே தடவையடா சொல்லுகிருய்? அத்தனே சுத்தமாய் இருப்பாயாக்கும், நீ ஏண்டா கண்ணே! இந்தச் சட்டையைப் பார். அழுக்காயிருக்கிறது. வெளுத்தசட்டை போடுவோம், வா!" என்றுகுழந்தையை அணேத்துக்கொண்டு சென்ருள்.

ஒரு நாள் ரங்கசாமிக்கு லக்ஷ்மி சாதம் போட்டு வைத்தாள். திடீரென்று சிறுவன் தாயைப் பார்த்து, "நீ இன்று காலேயில் என்ன சாப்பிட்டாய்?" என்று இலக்கணமாய்க் கேட்டான்.

தன்னே அம்மாதிரி கேட்க வேண்டுமென்று அவள் விரும்புகிருனே என்று நினேத்துக் கொண்டு, லக்ஷ்மி

அவனைப் பார்த்து, "நீ இன்று காலையில் என்ன சாப்பிட்டாய்?" என்று கேட்டாள்.

அவன் விரும்பியது அதுவல்ல "ஊ ஹூம், நீ சொல்லு" என்றான்.

உடனே லக்ஷ்மி, "நான் இன்று காலையில் இட்டிலி சாப்பிட்டேன்" என்று பதில் சொன்னாள்.

"அப்புறம் என்ன சாப்பிட்டாய்?"

"காப்பி சாப்பிட்டேன்"

"ஐயோ! காப்பி சாப்பிடப்படாது. கெடுதி! பால் சாப்பிட்டேன்னு சொல்லு" என்றான் ரங்கசாமி.

"பால் சாப்பிட்டேன்"

"அப்புறம் என்ன செய்தாய்?"

"வீட்டு வேலைகளைக் கவனித்தேன்"

"ஐயோ! பள்ளிக்கூடம் போனேன்ண்ணு சொல்லு"

"நான் பள்ளிக்கூடம் போகலடா, ராசா. நீ தாண்டா போனே, கண்ணு" என்று பிள்ளையை வாரி முத்த மிட்டாள் லக்ஷ்மி.

இதை எல்லாம் தானும் கண்டு களித்த சீதை, அன்று வீட்டிற்குள் நுழைந்ததும், லக்ஷ்மியைக் கண்ணீரும் கம்பலையுமாய்க் கண்டால், ஏன் அவளுக்குக் கதி கலங்காது? மூன்றே நாள் காய்ச்சலில் தன் ஒரே மகனையும் இரண்டு நாட்களுக்கு முன்பு இழந்து விட்டுப் பரிதவித்துக் கொண்டிருந்தாள் லக்ஷ்மி!

"இங்கே இத்தனை நடந்திருக்கிறது. அங்கே ஒன்றுந் தெரியாமல் கிடந்தேனே! எனக்கு ஒரு வார்த்தை சொல்லி விடப்படாதா, அத்தை?" என்று சீதை கேட்டாள்.

"நீ சீக்காய்க் கிடக்கிருயே என்று ஆள் விடவில்லை. காகிதந்தான் போடச் சொன்னேன்" என்ருள் லக்ஷ்மி.

குழந்தை ரங்கசாமி இறந்த துக்கந் தாளாமல் அழுத தனுலும், எல்லோரும் துக்கமாயிருந்ததனுல், அவளை ஒருவரும் அதிகமாய்க் கவனிக்காததாலும், சீதையின் நோய் மேலும் அதிகரித்தது. தனக்கு ஏதாவது நேர்ந்தாலும், அவளுடைய மாமியார், ரங்கசாமியுடன் பாலகிருஷ்ணனையும் குழந்தையோடு குழந்தையாய் வளர்ப்பாள், நன்ருய்ப் படிக்கவைப்பாள் என்ற எண்ணத்துடன்தான் மாமனுர் வீட்டுக்குச் சீதை வந்தாள். ஆனுல் அவளோ பாலனை இழந்து, அழுது தவித்துக்கொண்டிருந்தாள்! ஆகையினுல் தன் மகன் கதி என்னவாகுமோ என்று எண்ணுததெல்லாம் எண்ணி, ஒரு நாள் ஏங்கிக் கொண்டிருக்கும்போது, பாலகிருஷ்ணன் அவள் படுத்திருந்த அறைக்குள் ஓடி வந்தான்.

"உன் தலையில் எப்படி எப்படி எழுதிருக்கிறதோடா கண்ணு" என்று அவனைப் பக்கத்தில் அழைத்தாள் சீதை.

"நான் வரமாட்டேன். நீ செத்துப்போ! நான் உனக்கு கொள்ளி வைக்கிறேன்!" என்று சொல்லிவிட்டுச் சிறுவன் ஓடிவிட்டான்!

## மூன்ருவது அத்தியாயம்

சுந்தரஞ் செட்டியாருக்குப் பலசரக்கு வியாபாரம். செட்டியார் முறுக்கா, சரக்கு முறுக்கா என்று ஜனங்கள் கேட்பது வழக்கம். சுந்தரஞ் செட்டியார் சம்மந்தப்பட்ட மட்டில் செட்டியாரும், சரக்கும் இரண்டுமே முறுக்குத்

தான்! அவர் ஆதியில் தன் முதல் மனைவியின் நகைகளை விற்று அதனால் கிடைத்த சுமார் முன்னூறு ரூபாயை முதலாகப்போட்டு வியாபாரத்தை ஆரம்பித்தவர். அவருடைய புத்தி நுட்பத்தினாலும், ஓயாத உழைப்பினாலும் வியாபாரம் சிறிது சிறிதாக வளர்ந்து ஓங்க ஆரம்பித்தது. அவர் தனது பேச்சு நயத்தாலும், சரக்கின் நயத்தாலும் ஜனங்களைத் தன் கடைக்கு இழுக்க ஆரம்பித்தார். செட்டியார் கடைச் சரக்கென்றால், விலையும் கேட்க வேண்டியதில்லை, பொருளையும் பார்க்க வேண்டிய அவசியமில்லை என்று யாவரும் அவர் கடையிலேயே சாமான்கள் வாங்கிச் சென்றனர். சுற்றுப்புறமுள்ள கிராமங்களிலுள்ள சில்லறை வியாபாரிகளும் அவருடைய கடைக்கே வந்து வியாபாரம் செய்ய ஆரம்பித்தனர். சமீபகாலத்தில் அவருடைய வியாபாரம் பன்மடங்கு பெருகி விட்டது. சிறிய சில்லறைப் பலசரக்குக் கடையாக ஆரம்பித்தது, வெகு சீக்கிரத்தில் பெரிய கடையாகி வியாபாரம் அதிகரிக்கவே, சுந்தரஞ் செட்டியார் பக்கத்திலிருந்த கடையையும் வாடகைக்கு எடுத்துக் கொண்டு இரண்டு கடைகளாக்கினார். அதன் பிறகு கொஞ்ச காலத்திலேயே ஒரு ஜவுளிக்கடையையும் ஆரம்பித்தார்.

முதல் மனைவியின் நகைகளை விற்றுத்தான் அவர் வியாபாரம் தொடங்கியபோதிலும், இரண்டாம் மனைவி வந்ததின் பின்பே அது செழிக்கலாயிற்று. ஆகையினால் செட்டியாருக்கு லக்ஷ்மியம்மாளின் மீது மிகுந்த வாஞ்சை உண்டு.

லக்ஷ்மியம்மாளுக்குத் தன் மகன் இறந்த துக்கம் சிறிதேனும் ஆறினபாடில்லை. குழந்தை ரங்கசாமி பேசின பேச்சுக்களையும், செய்த செய்கைகளையும் ஒவ்வொன்றாக நினைத்து, நினைத்து அவள் அழுது புலம்பினாள். சிதம்பரத்திற்குச் சென்று நடராஜரின் திவ்ய நடனத்தை அவள்

கண்டு களித்ததில்லை. ஆனால் அவளுடைய மகன் ரங்க சாமி "ஆனந்த நடமாடினார், அம்பலந்தன்னில் நடேசர் ஆனந்த நடனமாடினார்" என்று ஆடிய போதும், ஆட்டத் திற்கேற்றபடி பாடியபோதும் பொன்னம்பலத்தில் நடேச ருடைய களிக்கூத்தையே காண்பது போல் அவள் பரவசம் அடைவாள்.

"இதுகூடக் கடவுளுக்குப் பிடிக்கவில்லையா? என் ரங்கசாமியை ஏன் என்னிடமிருந்து பிடுங்கிக் கொண் டார்? என்று அவள் ஏங்கினாள். 'நடவு நட்டுப் பயிர்கள் செய்து' என்று அவன் பாடும் போது, நடவு நட்டுவது போலவும், பயிர் செய்வது போலவும் தன் அழகிய கைகளினால் நடித்துக் காண்பிப்பானே! 'அதை இனி என்று பார்ப்பேன்' என்று அவள் இதயம் நொந்தாள்.

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்று ரங்கசாமி தன் மழலை மொழிகளில் பாடிய போதெல்லாம் லக்ஷ்மியின் காதுகளில் தேனல்ல, தேவாமிர்தமே வந்து பாய்வதுபோல் தோன்றியது. 'அச்சொற்களை எல்லாம் இனிமேல் நான் என்று கேட்பேன்!' என்று அடிக்கடி புலம்பினாள்.

சீதையின் நிலைமை இன்னும் அப்படியே தானிருந்தது. ஆயினும் அவள் தன் கஷ்டத்தைப் பொருட்படுத்தாது. மாமியாரைத் தேற்ற யத்தனித்தாள். ஒரு சமயம் அவள் "பறித்த கடவுள் கொடுக்கவும் செய்வார், அத்தை. மனதை அதிகமாய்ப் புண்படுத்திக் கொள்ளாதீர்கள்" என்று சொன்னபோது, அது விபரீதமாய் முடியும் என்று அவள் நினைக்கவே இல்லை.

"இனிமேலா கடவுள் கொடுக்கப் போகிறார்? அப் படி என்ன நான் பிள்ளை பெறும் வயதிலா இருக்கிறேன்

கடவுள் கொடுப்பார் என்று நினைப்பதற்கு?'' என்று சொல்லி லக்ஷ்மி ஏங்கி, ஏங்கி அழவாரம்பித்தாள்.

தான் அதைச் சொல்லியிருக்கக் கூடாதென்று சிதைக்கு அப்புறந்தான் தெரிந்தது. லக்ஷ்மி அப்படி ஒன்றும் பிள்ளை பெறும் வயதைத் தாண்டி விடவில்லை. அவளுடைய கணவனின் பருவத்தையே அங்ஙனம் குறிப்பாக உணர்த்தினாள் அவ்வுத்தமி!

சுந்தரஞ் செட்டியார் தன்னாலான மட்டுந் தன் மனைவியைத் தேற்றுவதற்கு முயற்சித்தார். வியாபாரத்திலேயே தன் கவனத்தைச் செட்டியார் அதிகமாய்ச் செலுத்திய போதிலும், அவருக்கு ஆழ்ந்த தமிழறிவும், தமிழ் நூற் பயிற்சியும் உண்டு. வயது ஆக, ஆக அவர் வேதாந்த விசாரத்தில் இறங்கினார். அவருக்கு அநேக சிஷ்யர்களும் இருந்தனர். அவர்கள் அவரிடம் வந்து ஞானவாசிட்டம் பகவத்கீதை, கைவல்ய நவநீதம், திருக்குறள் முதலிய நூல்களில் பாடங் கேட்டுப் போவது வழக்கம். இப்பொழுது அந்நூல்களில் உள்ள விஷயங்களைத் தன் மனைவிக்கும் போதித்து, அவளுடைய ஆறாத் துயரத்தை ஆற்றுவதற்குப் பிரயத்தனப் பட்டார். மைந்தன் இறந்ததிலிருந்து செட்டியார் கடைக்குப் போவதையும் நிறுத்தி விட்டார்.

ஒரு நாள் திடீரென்று லக்ஷ்மி, "இதோ, என் மகன் வந்து விட்டான்!" என்று கூச்சலிட்டாள்.

சுந்தரஞ் செட்டியார் பதற்றத்துடன் வந்து, "என்ன லக்ஷ்மி?" என்று கேட்டார்.

"இதோ, என் ரங்கசாமி!" என்றாள்.

"எங்கே?" என்று கேட்டார் செட்டியார்.

லக்ஷ்மி திரும்பிப் பார்த்து "இதோ!" என்று கூறியவள் அங்கே தன் மகனைக் காணாதவளாய்த் திடுக்கிட்டு,

"இப்பொழுதுதான் என் கழுத்தைக் கட்டிக்கொண்டிருந்தான். அதற்குள் எங்கே போய் விட்டான்?" என்று விம்மி விம்மி அழுவாரம்பித்தாள்.

மனிதர்கள் அளவு கடந்த துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் போது எந்த விதமான போதனையும் பிரயோஜனப்படுவதில்லை. மென்மேலும் அவர்களுடைய துக்கம் அதனால் அதிகரிக்கவே செய்யும். துக்கம் நாளடைவில் சற்று ஆறி, போதனைகளை மனது ஏற்றுக்கொள்ளும் தறுவாயில் தான் அவை பயன்படுகின்றன. சுந்தரஞ் செட்டியாருடைய போதனைகளும் விபரீத பலனையே அளித்தன.

"ஒருவன் பிறக்கிறான் என்று நினைப்பதும், இறக்கிறான் என்று நினைப்பதும் தவறு. ஆத்மா பிறப்பிறப்பற்றது. அப்படி இருக்க உன் மகன் இறந்து விட்டான் என்று ஏன் தவறாக நினைத்துக் கொள்கிறாய்?" என்று செட்டியார் கேட்டார்.

"அவன் இறந்து விட்டான் என்று நான் நினைக்கவில்லையே. அவன்தான் அடிக்கடி வந்து என் கழுத்தைக் கட்டிக் கொண்டு சிரிக்கிறானே! அவனைப் பார்க்க முடியவில்லையே என்று தானே நான் வருந்துகிறேன்" என்றாள் லக்ஷ்மி.

"மண்ணும் நான், விண்ணும் நான் என்று பகவான் சொல்லுகிறார்" என்பதாகச் சுந்தரஞ் செட்டியார் போதித்த போது, "அவர் எனக்கு விண்ணாய்க் காட்சி அளிக்காமல், மண்ணாகவா காட்சி அளிக்க வேண்டும்? என் ஆசையில் எல்லாம் மண்ணைப் போட்டு விட்டாரே!" என்று லக்ஷ்மி வயிற்றெரிச்சலுற்றாள்.

"நீரும் அவரே, நெருப்பும் அவரே" என்ற வாசகங்களைக் கேட்டபோது, அதனால் தான் தன்னுடைய அடி

வயிற்றில் அவர் நெருப்பைக் கொட்டி விட்டாரோ என்று லக்ஷ்மி நினைத்தாள்.

"வஞ்சகரின் சூது நான்" என்ற கீதா வாசகத்தைப் பார்த்த போது, "அதனால் தானே பாவி ஈசன் என் மகனை மூன்றே நாள் காய்ச்சலில் வஞ்சகமாய்க் கொண்டு போய் விட்டான்!" என்று தேம்பித் தேம்பி அவள் அழுதாள்.

"நீ வேறு, உன் மகன் வேறு என்று நினைப்பதனால் தானே உனக்கு இப்படித் துக்கமும் அழுகையும் உண்டா கிறது. நீயும் உன் மகனும் ஒன்றென்பதை மறந்து விட்டு ஏன் துக்கப் படுகிறாய், லக்ஷ்மி?" என்று சுந்தரஞ் செட்டியார் கேட்பார்.

"அப்படியானால் நான் என்னுடைய மகனுடன் சென்று சேர்ந்து விடுகிறேனே! இனி நான் வாழ்ந்து என்ன பிரயோஜனம்?" என்று லக்ஷ்மி சொல்வாள்.

தன்னுடைய போதனைகளினால் ஒரு வித பலனும் ஏற்படாமல் போகவே, சுந்தரஞ்செட்டியார் அம்முயற்சியைக் கைவிட்டு விட்டு, முன்போல் கடைக்குச் செல்லவாரம்பித் தார்.

ஒரு நாள் மத்தியானம் அவர் கடையில் உட்கார்ந் திருந்த பொழுது, ஒரு சிறுவன் வந்து, அவரையும் அவர் மகனையும் அவசரமாக வீட்டிற்குக் கூட்டிவரச் சொன்ன தாகக் கூறினான். அவன் அடுத்த வீட்டுச் சிறுவன். க்ஷண நேரத்தில் சுந்தரஞ் செட்டியாருடைய உள்ளத்தில் பலவிதமான எண்ணங்கள் தோன்றிவிட்டன. அவர் எப் பொழுதும் போல் கடைக்கு வந்துகொண்டிருந்த போதி லும், லக்ஷ்மியின் மீது அவர் கவனம் செலுத்தாமல் இல்லை. துக்கந் தாளாமல் தற்கொலை செய்துகொள்வாளோ என்ற பயம் அவருக்கிருந்தது. சிறுவன் வந்து அவசரமாக அவரை வீட்டுக்கு வருமாறு அழைத்த போது, அவருக்கு இந்த

எண்ணந்தான் முதலில் உதித்தது. அப்படி ஏதாவது செய்து விட்டாளோ என்று நினைத்தபோது அவள் அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்த வார்த்தைகளும் அவருக்கு திடீரென்று ஞாபகத்திற்கு வந்தது.

எதற்காகக் கூட்டி வரச் சொன்னார்கள் என்று சிறுவனைக் கேட்டபோது, அவனுக்கு ஒன்றும் பதில் சொல்லத் தெரியவில்லை.

"யார் கூட்டி வரச் சொன்னது?" என்று சுந்தரஞ் செட்டியார் கேட்டார்,

"அம்மா!" என்றான் சிறுவன்.

"சின்னம்மாளா, பெரியம்மாளா?"

"எங்கம்மா!" என்றான் சிறுவன்

உடனே சுந்தரஞ் செட்டியார் வெகு வேகமாய் வீட்டிற்கு ஓடினார். அவருடைய மகன் ராமநாதனும் கூடவே சென்றான். வீட்டிற்குச் சென்றபோது, நல்ல வேளையாக லக்ஷ்மிக்கு ஒன்றுமில்லை என்று அவர் ஆறுதலடைந்தார். ஏனென்றால் லக்ஷ்மி வாசலிலேயே இவர்கள் வருகிறார்களா என்று பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் அவ்வாறுதல் கணநேரந்தானிருந்தது. காரணம் என்னவெனில் சீதை மிகவும் அபாயகரமான நிலைமையிலிருந்தாள்!

வைத்தியர் உடனே அழைத்துக் கொண்டு வரப்பட்டார். அவர் மருந்து கொடுத்து விட்டுச் சென்ற இரண்டு மணிநேரத்திற்குள்ளேயே, சீதை இவ்வுலக வாழ்வை நீத்தாள்!

பாலகிருஷ்ணன் தன்னுடைய தாயாருக்குக் கொள்ளி வைத்தான்!

யாவரும் அழுதனர். சீதையின் கணவன் ராமநாதன் அத்தனை அழுகை அழுததுதான் யாவருக்கும் ஆச்சரிய

... காமராசர் பல்கலை... அன்பளிப்பு பி.கே. சண்முகம்...

மாய்த் தோன்றியது. இது வரைக்கும் அவன் மனைவியிடத்தில் காட்டிய மனப்பான்மைக்கு, அவன் அன்று அப்படி அழுதது முற்றிலும் விரோதமாயிருந்தது. இரண்டு நாட்களுக்கு முன்பு கூட, வைத்தியரைக் கூட்டி வரும்படி சுந்தரஞ் செட்டியார் அவனிடம் சொன்ன போது, "சனியன் தனக்குந் தொல்லையாய், பிறருக்குந் தொல்லையாய் ஏன் இழுத்துக் கொண்டே கிடக்கிறது? சீக்கிரம் தொலைந்தாலும் சுகமாயிருக்கலாமே" என்று சொன்னான்.

அப்பொழுதெல்லாம் தன் மகன் பாலகிருஷ்ணன் கதி என்னவாகும் என்பதை அவன் சிறிதும் சிந்திக்கவில்லை. சீதை இறந்த பின்புதான் அவ்வெண்ணம் அவனுக்குத் தோன்றியது. அவனை எப்படி வளர்ப்பது, அந்தப் பாரத்தை யார் சுமப்பது என்று நினைக்கும்போதெல்லாம் ராமநாதனுக்குப் பொங்கிப் பொங்கி அழுகை வந்தது.

அவனை யார் வளர்ப்பது? சிறுவன் கதி என்னுவது?

லக்ஷ்மியம்மாள் தன் மகன் இறந்த துக்கத்தை இன்னும் மறக்கவில்லை. அவள் பாலகிருஷ்ணனைச் சீண்டுவாளா? தன் அருமையான மகனே மடிந்து விட்டபோது, பிறர் குழந்தையை வளர்க்க வேண்டுமென்று அவளுக்கு என்ன ஆத்திரம் வந்தது? குழந்தை பாலகிருஷ்ணனுக்கு லக்ஷ்மியம்மாளை மிகவும் பிடித்திருந்தது. அவனுக்குப் பிடித்திருந்ததனால் ஆவதென்ன? அவளுக்கல்லவா அவனைப் பிடித்திருக்க வேண்டும். அவளுக்கல்லவா அவன்மீது இரக்கமும் பாசமும் ஏற்பட வேண்டும்? குழந்தை லக்ஷ்மியைநோக்கி ஓடி ஓடிச்செல்லும். ஆனால் அவள் அதைக் கவனிக்காதது போல் அப்பால் போய்விடுவாள்.

ஒரு நாள் லக்ஷ்மியம்மாள் தன் மகனை நினைத்து அழுது கொண்டிருந்த போது, அறைக்குள் திடீரென்று

சுந்தரஞ்செட்டியார் நுழைந்தார். "நான் சொன்னல் வீண் பிரமை என்று சொல்கிறீர்களே. இதோ பாருங்கள் என் மகன் கழுத்தைக் கட்டிக் கொண்டிருப்பதை!" என்று லக்ஷ்மி சொன்னுள்.

"யாரென்று திரும்பிப் பார்" என்று புன்சிரிப்புடன் சுந்தரஞ் செட்டியார் சொன்னர்.

லக்ஷ்மி திரும்பிப் பார்த்தாள். பாலகிருஷ்ணன் அவளுடைய கழுத்தைக் கட்டிச் சிரித்துக் கொண்டே "பாட்டி!" என்றுன்.

## நான்காவது அத்தியாயம்

சீதையின் தாயார் தன் மகளைச் சாகக் கொடுத்த துக்கத்தில் குழந்தை பாலகிருஷ்ணனைக் கவனிக்காமல் போய்விட்டாள். பாலகிருஷ்ணன் பிறந்த துரதிர்ஷ்டத்தினல் தான் அவளுடைய மகள் இறந்துவிட்டதாக அவள் எண்ணினுள்; இங்ஙனம் ஒருவரும் வேண்டாத விரும்பாத குழந்தையாக இருந்தான் பாலகிருஷ்ணன்!

தாயை இழந்த தன் குழந்தைக்கு ராமநாதன் பிஸ்கோத்தும், பழங்களும், வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தான். ஆனல் குழந்தையை வளர்ப்பதற்குப் பிஸ்கோத்தும், பழங்களும் மட்டும் போதுமா? தன் மனைவியின் அருமை ராமநாதனுக்கு இப்பொழுது நன்கு விளங்க வாரம்பித்தது. நோயாளி ஜீவனுயிருந்தபோதிலும், எவ்வளவு பெரிய சுமையைப் பிறருக்கு எந்த விதமான கஷ்டமும் கொடுக்காமல் வெகு சுலபமாகச் சுமந்துகொண்டிருந்திருக்கிறுள் என்பதையோசித்துப் பார்த்தபோது, அவனுக்குத் தன் மனைவியின் மீது பச்சாத்தாபமும், தான் அவளை

அலக்ஷியம் செய்ததற்காகத் தன் மீது சிறிது வெறுப்பும் உண்டாயின. அவள் சுமந்து கொண்டிருந்த பாரத்தைப் பொத்தென்று கீழே போட்டு விட்டு மறைந்துவிட்டாள். இனி அச் சுமையை யார் தூக்குவது?

லக்ஷ்மியின் கழுத்தைக் கட்டிக்கொண்டு பாலகிருஷ்ணன் அன்று நின்றதைக் கண்டபோது, சுந்தரஞ்செட்டியார் தன் மனைவியை நோக்கி, "இனிமேல் இவன்தான் உனக்கு மகன் என்று நினைத்துக்கொள். இவனை நன்ருகக் கவனித்துக்கொள், லக்ஷ்மி. பாவம், தாயில்லாக் குழந்தையல்லவா!" என்ருர்.

லக்ஷ்மி வேருென்றும் பதில் சொல்லவில்லை. "ச்ச்" என்று உற்சாகமற்ற முறையில் உச்சுக் கொட்டினுள். அவளுடைய சொந்தக் குழந்தைகளோ ஒன்றன் பின் ஒன்ருய் இறந்து விட்டன. இவனை எவ்லாம் வளர்க்க வேண்டுமென்று அவளுக்குத் தலை விதியா? அப்படியே அவனை வளர்த்தாலும் அவன் அவளுக்கு என்ன சாதிக்கப் போகிருன்? தன் மகனுயிருந்தால், தனக்குப் பிற்காலத்தில் உதவுவான். பாலகிருஷ்ணனை வளப்பதனுல் என்ன பிரயோஜனம்? என்ன இருந்தாலும் அவன் அயலாள் மகன் தானே என்று இவ்வாறெல்லாம் லக்ஷ்மி நினைத்தாள். தன் மகன் ரங்கசாமி இறந்த பின்பு வேறு எந்தப் பிள்ளையின் மீதும் தன்னுல் அன்பு செலுத்த முடியாதென்று அவளுக்குத் தோன்றியது. அவனைப் போன்ற புத்தி நுட்பம், அவனைப் போன்ற அழகு வேறு எந்தப் பிள்ளைக்கு வரும்? வேறு எந்தக் குழந்தையினுல் அவனைப்போல் மழலை மொழிகள் கூறி அவளை மயக்க முடியும்? அப்படி ஒரு குழந்தை உலகத்தில் இருக்கப்போகிறதா? அல்லது இனித் தான் பிறக்கப் போகிறதா என்றெல்லாம் எண்ணினுள்.

குழந்தை பாலகிருஷ்ணன் "பாட்டி! பாட்டி!" என்று அவளுடைய கால்களை வந்து கட்டுவான். அச்சமயங்களில்

எல்லாம் பலாத்காரமாய் அவனை இழுத்தெறிய அவளுக்கு மனம் வருவதில்லை. அது அவளுடைய இயற்கைக்கு முற்றிலும் விரோதம். ஆயினும் "அதோ பொம்மை இருக்கிறது எடுத்துக் கொண்டுவா; அதோ பிஸ்கோத் இருக்கிறது, எடுத்துக்கொள்" என்று ஏதாவது போக்குக் காட்டி அனுப்பிவிடுவாள்.

தன் தாயினிடத்திலும், தாயைப் பெற்ற பாட்டியினிடத்திலும் காணாத ஒரு வசிகர சக்தியை தன் தாத்தாவின் இரண்டாந்தாரமாகிய லக்ஷ்மியினிடம் பாலகிருஷ்ணன் கண்டான். தாய் நோயாளியாயிருந்தாள். அவளைக் கண்டாலே அவனுக்கு வெறுப்பு. லக்ஷ்மியின் முகத்தில் சோகச் சாயை படர்ந்திருந்த போதிலும், அது மலர்ந்த முகம். அது அவனைத் தன் பாலிழுத்தது.

ஒரு நாள் பாலகிருஷ்ணன் லக்ஷ்மியிடம் வந்து, "பாட்டி, ஒனக்கு ஒரு பாட்டுச் சொல்லட்டுமா?" என்று கேட்டான். குழந்தை தனக்குத் தெரிந்தவைகளை எல்லாம் பிறரிடத்தில் சொல்லி அவர்களுடைய புகழைப் பெற வேண்டுமென்று நினைக்கிறது. பாட்டி பதில் சொல்வதற்குள் பாலகிருஷ்ணன் பாட்டை ஆரம்பித்துவிட்டான்.

"காக்கா, காக்கா, கண்ணுக்கு மைக்கொண்ணு
குருவி, குருவி, கொண்டைக்குப் பூக்கொண்ணு
கொக்கே, கொக்கே, குழந்தைக்குப் பால் கொண்ணு
கிளியே, கிளியே, கிண்ணியிலே தேன் கொண்ணு"

என்று சிறுவன் பாடினான். இம்மாதிரி ரங்கசாமி பாடி இருந்ததால், கிண்ணியில் பாலுந்தேனும் கலந்து கொண்டு வந்து லக்ஷ்மி கொடுத்திருப்பாள். ஆனால் இப்பொழுதோ, "நாலு வயதிலேயே தாயைத் தின்னவனுக்கு, வேறு யார் பாலுந் தேனுங் கொடுப்பார்கள்? கொக்குங் குருவியுந் தான் கொடுக்கவேண்டும்!" என்று சிரித்துக்

கொண்டே சொல்லி, அவனுடைய கன்னத்தை இலேசாய்க் கிள்ளினுள். பாலகிருஷ்ணனுடைய பாட்டு அவளுக்கு நன்ருய்த்தானிருந்தது!

சிறுவன் பள்ளிக்கூடம் செல்ல ஆரம்பித்தான். தாயில்லாக் குழந்தையாகையினுல், சிறிது பருவம் தவறியே அவன் பள்ளிக்கு அனுப்பப்பட்டான். ரங்கசாமி பாடிய பாட்டுக்களேயும், பேசிய பேச்சுக்களேயும் அவனுங் கற்றுக் கொண்டு வந்து பாட்டியிடம் சொல்லி, அவளே மகிழ்விக்க ஆரம்பித்தான். அவைகளே எல்லாம் அனுபவித்து லக்ஷ்மி சந்தோஷமடைந்தாள்.

"நிலா, நிலா! எங்கே போறே? மலேக்குப் போறேன். மலேக்கு எதுக்கு? மரம் வெட்ட. மரம் எதுக்கு? செப்புச் செய்ய. செப்பு எதுக்கு? காசு போட. காசு எதுக்கு? மாடு வாங்க. மாடு எதுக்கு? பால் கறக்க. பால் எதுக்கு? நீ குடிக்க! என்று ஒரு நாள் அவன் கூறிய பொழுது, "வானத்திலிருக்கும் சந்திரனுடா உனக்குப் பால் கொண்டு வர வேண்டும்? நான் கொடுக்க மாட்டேனு?" என்று சொல்லி லக்ஷ்மி சிரித்தாள்.

"அடே கண்ணு, ஆனந்த நடனம் ஆடு பார்க்கலாம் என்பாள் லக்ஷ்மி. பாலகிருஷ்ணன் ஆடி முடிந்தவுடன், "நீயும் என் ரங்கசாமியைப் போலவே ஆடுகிருயடா, கனி!" என்று அவனேக் கட்டி முத்தமிடுவாள்.

பாலகிருஷ்ணனும் "ஓடி விளேயாடு பாப்பா" "செந்தமிழ் நாடு" என்னும் பாட்டுக்களேப் பாடினுன். சில நாட்களில் ரங்கசாமி பாடாத அநேக பாட்டுக்களேப் பாடி, அவன் காட்டாத அநேக விதமான விளேயாட்டுக்களே எல்லாங் காட்ட வாரம்பித்தான். அப்பொழுதெல்லாம் லக்ஷ்மி, "நீ என் ரங்கசாமியை விட புத்திசாலியாயிருக்கிருயடா, பாலு!" என்று சொல்லி மகிழ்வாள்.

இங்ஙனம் சிறிது சிறிதாக லக்ஷ்மி தன் மகனிறந்த துக்கத்தை மறக்கலானாள். சுந்தரஞ்செட்டியாருடைய போதனைகள் சாதிக்காத ஒரு காரியத்தைக் காலதேவனும் பாலகிருஷ்ணனும் சேர்ந்து சாதித்துவிட்டார்கள்!

ஒரு சமயம் சீதையின் தாயார் வெற்றிபுரத்துக்குவந்தாள். தன் மகள் வயிற்றுப் பேரனைத் தன்னுடைய வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு போய்க் கொஞ்ச நாள் வைத்திருக்க வேண்டுமென்று அவளுக்கு ஆசை. அதை லக்ஷ்மியிடம் தெரிவித்த போது, "பேஷாய்க் கூட்டிக் கொண்டு போங்கள். உங்களுக்கில்லாத பிள்ளையா?" என்று சொன்னாள்.

ஆனால் அன்று தன் கணவன் வந்தபோது, "குழந்தை நன்றாய்ப் படித்துக்கொண்டிருக்கிறானே. இப்பொழுது அவனைப் பட்டிக் காட்டிற்கு அனுப்பினால், அவனுடைய படிப்பு என்னாவது?" என்று ரகசியமாகச் சொன்னாள். அவரும் அவளுடைய உள்ளக் கிடக்கையை அறிந்து கொண்டு, பாலகிருஷ்ணனை அவனுடைய பாட்டியுடன் அனுப்புவதற்கு மறுத்து விட்டார்.

தன் மனைவியின் தூண்டுதலின் பேரில்தான் சுந்தரஞ் செட்டியார் பையனை அனுப்ப மறுத்து விட்டாரென்பது, ஆவுடையம்மாளுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. "என் பேரனை அனுப்பமாட்டேன் என்பதற்கு இவள் யார்? அப்படியாவது இவள் தகப்பனைப் பெற்ற பாட்டியா, இந்த மாதிரியெல்லாம் அதிகாரம் செய்வதற்கு? இரண்டாந் தாரமாய் வாழ்க்கைப் பட்ட கழுதைதானே! இவளுக்கென்ன இத்தனை வம்பு?" என்று அடுத்த வீட்டுக்காரியிடம் குறைப் பட்டுக் கொண்டு, வீட்டில் சாப்பிடாமலும் சொல்லிக் கொள்ளாமலும் அவள் ஊருக்குப் போய் விட்டாள்.

அதைக் கேள்விப் பட்டவுடன், லக்ஷ்மி மிகவும் மனம் வருந்தினள். என்ன இருந்தாலும் பாலகிருஷ்ணன் தன் பிள்ளையாவானு என்று அவள் நினைத்தது சரியாய் விட்டதல்லவா? எதற்காக இன்னொருத்தி பிள்ளையிடம் இப்படி வாஞ்சை வைக்கவேண்டும் என்று நினைக்க ஆரம்பித்தாள். இதற்கேற்றாற்போல் இன்னொரு சிறு சம்பவம் அவளுக்கு ஞாபகம் வந்தது. ஒரு நாள் பள்ளிக்கூடத்திலிருந்து வந்து, நுழையும் போதே, பாலகிருஷ்ணன் "பாட்டி!" என்று கூப்பிட்டுக் கொண்டே வந்தான். அவ்வளவு பிரியத்துடன் அவன் கூப்பிட்டுக் கொண்டு வந்ததைப் பார்த்ததும், "நான் உனக்குப் பாட்டி இல்லையடா, கண்ணு, நான் தான் உனக்கு அம்மா. என்னை 'அம்மா' என்று கூப்பிடு ராசா. ஆகட்டுமா?" என்று சொன்னாள். ஆனால் பழைய வழக்கப் படி பாலகிருஷ்ணன் அவளைப் 'பாட்டி' என்றே கூப்பிட்டான். அப்பொழுதெல்லாம் அவளுக்கு அது விகற்பமாய்த் தோன்றவில்லை. ஆனால் இப்பொழுதோ, 'அந்தப் பயலும் நான் என்ன சொல்லியபோதிலும் என்னைப் 'பாட்டி' என்றுதானே கூப்பிடுகிறான். 'அம்மா' என்று ஒரு தடவையாவது கூப்பிடுகிறானா? என்ன இருந்தாலும் நான் அயலாள்தானே?' என்று லக்ஷ்மி உள்ளம் நொந்தாள்.

அன்று சுந்தரஞ் செட்டியார் சாப்பிட வந்த போது, "பாலகிருஷ்ணனைக் கொண்டு போய் அவன் பாட்டியிடம் சேர்த்து விட்டு வாருங்கள். நான் யார் அவனை அனுப்ப வேண்டாம் என்று சொல்வதற்கு?" என்று சொன்னாள் லக்ஷ்மி அவளுடைய கண்களில் கண்ணீர் நிறைந்திருந்தது.

விஷயம் முழுவதையும் விசாரித்து அறிந்து கொண்டு, "உனக்கில்லாத உரிமைதான் அவளுக்கிருக்கிறதாக்கும்? அவள் என்னென்னமோ உளறினாள் என்று நீ ஏன் வருத்தப்படுகிறாய்?" என்று சுந்தரஞ் செட்டியார் மனைவியைத் தேற்றினார்.

"மக்களின்பம் எனக்குக் கூடாதென்று தானே ஈசன் என் பிள்ளைகள் எல்லாவற்றையும் பறித்துக் கொண்டார்! இன்னும் ஏன் எனக்கு இந்த வீண் ஆசை?" என்றாள் லக்ஷ்மி.

இப்படியே லக்ஷ்மியின் மனம் மாறுபட்டு விடுமோ என்று சுந்தரஞ் செட்டியார் அஞ்சினார். எல்லாம் பக்குவமாய் வந்து கொண்டிருந்த சமயத்தில், வகை தொகை ஒன்றுந் தெரியாத ஆவுடையம்மாள் வந்து காரியத்தைக் கெடுத்து விட்டாளே என்று அவர் நினைத்தார்.

இங்ஙனமிருக்கையில் ஒரு நாள் சுந்தரஞ்செட்டியார் வீட்டிற்கு வந்தபோது, வீட்டில் ஒருவருமில்லை. வீடு திறந்திருந்தது. ஆனால் லக்ஷ்மியைக் காணோம்! அவள் எங்கே? மாடிக்குச் சென்று பார்த்தார். அங்கும் இல்லை. வீட்டைத் திறந்து போட்டு விட்டு எங்கே போய் விட்டாள்? செட்டியார் காத்திருந்து பார்த்தார். சுமார் அரை மணி நேரமாய் விட்டது. எங்கே இன்னுங் காணோமே என்று வாசலுக்குச் சென்று இப்பக்கமும் அப்பக்கமும் பார்த்தார். தெருக்கோடியில் பாலகிருஷ்ணனைக் கையில் பிடித்துக் கொண்டு லக்ஷ்மி வந்து கொண்டிருந்தாள்.

"எங்கே போயிருந்தாய்?"

"பள்ளிக்கூடம் விட்டு வெகு நேரமாய் விட்டது. பாலனைக் காணோமே என்று பார்க்கப் போயிருந்தேன்!"

"அதற்கு வீட்டைப் பூட்டி விட்டாவது போகக் கூடாதா?"

"ஐயையோ! திறந்தா கிடந்தது? நான் போன அவசரத்தில் பூட்ட மறந்து விட்டேன் போலிருக்குது!"

செட்டியார் சிரித்துக் கொண்டே, "நீ யார் அவனைத் தேடுவதற்கு? உனக்கு ஏன் இந்த வீண்

ஆசை? உன் பிள்ளையா நீ இப்படி எல்லாம் ஆத்திரப் படுவதற்கு?'' என்றார்.

லக்ஷ்மியும் சிரித்துக் கொண்டே, ''சாப்பிட வாருங்கள். நேரமாச்சு'' என்றாள்.

## ஐந்தாவது அத்தியாயம்

பள்ளிக்கூடம் விட்டவுடன் பாலகிருஷ்ணன் வெகு வேகமாய் வீட்டை நோக்கி ஓடினான். இப்பொழுது அவனுக்கு வயது பத்திருக்கும். அன்றாவது பாட்டி வந்திருக்கிறாளா என்று பார்க்க வேண்டுமென்று அவனுக்கு ஆவல். பாட்டி ஊருக்குப் போய் ஏறக்குறைய ஒரு மாதமாகிறது. இன்னும் வரவில்லை. ஒவ்வொரு நாளும் காலையிலும் லையிலும்ம பள்ளிாக்கூடம் விட்டவுடன் இதே ஆவலுடன் மிக விரைவாய் வீட்டிற்கு வருவான். வீட்டிற்கு வந்ததும் பாட்டி வராததைக் கண்டு ஏமாற்றமடைவான். யலக்ஷ்மிம்மாள் தன்னுடன் பாலகிருஷ்ணனையுங் கூட்டிக் கொண்டு சென்றிருப்பாள். அவனுடைய படிப்புக் கெட்டு விடும் என்று சுந்தரஞ் செட்டியார் தாம் வேண்டாமென்று தடுத்து விட்டார். இவ்வொரு மாதமாகச் சுந்தரஞ் செட்டியாருக்கும் பாலகிருஷ்ணனுக்கும் ஹோட்டலில்தான் சாப்பாடு.

பாலகிருஷ்ணனுடைய தந்தை ராமநாதஞ் செட்டியாருக்கு மறு விவாகம் ஆகிவிட்டது. புதிதாக வந்த பெண்ணுக்கும் லக்ஷ்மிக்கும் ஒத்துப் போகவில்லை. ஆகையினால் அவர் தன் புது மனைவியின் தூண்டுதலின் பேரில், தனிக்குடித்தனம் செய்யவாரம்பித்தார். மகனும் மருமகளும் தனியாகப் பிரிந்து செல்வதாகத் தீர்மானித்த

காலத்தில், பாலகிருஷ்ணனையும் ராமநாதன் கூட்டிக் கொண்டு சென்று விடுவானே என்பதுதான் லக்ஷ்மிக்குப் பெருங் கவலையாகவிருந்தது. ஆனால் நல்ல வேளையாகப் பாலகிருஷ்ணனை லக்ஷ்மியிடமே விட்டுச் சென்று விட்டார் ராமநாதஞ் செட்டியார். அவ்விதம் செய்ததில் அவர் லக்ஷ்மிக்கும் பாலகிருஷ்ணனுக்கும் பெருஞ் சேவை செய்தார். ஏன்? தனக்கும் ஒரு பெரிய நன்மையைத் தான் செய்து கொண்டார். பாலகிருஷ்ணன் இடையில் இருந்தால், அவர் தன்னுடைய மனைவியுடன் சந்தோஷமாக இருந்திருக்க முடியாது.

லக்ஷ்மி ஊருக்குச் சென்றவுடன் பாலகிருஷ்ணனை அவனுடைய தகப்பன் வீட்டிற்குச் சென்று கொஞ்சநாட்கள் சாப்பிடுமாறு சுந்தரஞ் செட்டியார் சொன்னார். ராமநாதஞ் செட்டியாரும் மகனைக் கூப்பிட்டார். ஆனால் பாலகிருஷ்ணன் போக மறுத்து விட்டான். கொஞ்ச வாரிடத்தில் தானே குழந்தை செல்லும்!

“தாத்தா, பாட்டி எப்பொழுது வருவாள்? இன்னுங் காணோமே?” என்று மிகுந்த ஆத்திரத்துடன் அன்று காலையில் பாலகிருஷ்ணன் கேட்டான்.

“காரியங்கள் எல்லாம் முடிந்து விட்டன. அநேகமாய் இன்றைக்கு வந்துவிடுவாள்” என்றார் சுந்தரஞ்செட்டியார்.

அந்த நம்பிக்கையில் தான் அவசர, அவசரமாய் ஓடி வந்தான் பாலகிருஷ்ணன். வீட்டிற்கு வந்து பார்த்தான். வீடு பூட்டியிருந்தது. அன்றும் பாட்டி வரவில்லைபோலும் என்று நினைத்துக் கொண்டு, அடுத்த வீட்டில் சாவியை வாங்கி, வீட்டைத் திறந்து புத்தகங்களை வைத்துவிட்டு வீட்டைப் பூட்டிக் கொண்டு கடைக்குச் செல்வதற்காக

வாசற்படி இறங்கினுன். தெருக் கோடியில் லக்ஷ்மி யம்மாள் வந்து கொண்டிருந்தாள்! அவளுக்குப் பின்னுல் அதோ வருவது யார்?

பாட்டி வீட்டிற்கு வந்து சேரும் வரைக்கும் சிறுவன் காத்திருக்க வில்லை. "பாட்டி!" என்று அவளை எதிர் நோக்கி ஓடினுன். "வாடா கண்ணு!" என்று லக்ஷ்மி தன் பேரனைப் பக்கத்தில் அணைத்துக்கொண்டு "பள்ளிக்கூடத் திற்குப்போகிருயா, பாலு? எங்கேடா சாப்பிட்டுக்கொண் டிருந்தாய்?" என்று அவனைப் பலவிதமாக விசாரிக்க வாரம்பித்தாள். ஆனுல் அவளுடைய கவனம் அவனுடைய கேள்விகளில் செல்லவில்லை. அது யார் அவனுடைய பாட் டியின் கூட வந்துகொண்டிருந்தது!

லக்ஷ்மிக்குப் பின்னுல் ஒரு சிறுமி மெதுவாக நடந்து வந்துகொண்டிருந்தாள். அவளுடைய தலைமயிர் வாராமல் பின்னுமல் பரட்டையாகக் கிடந்தது. தன்னுடைய கட்கத் தில் அவள் ஒரு பொட்டணத்தை இடுக்கியிருந்தாள். அதில் நாலைந்து துணிகள் கட்டப்பட்டிருந்தன. பால கிருஷ்ணன் அவளையே உற்று நோக்கினுன். அவள் யார்?

இதற்குள் அவர்கள் வீட்டிற்கு வந்துவிடவே, வீடு திறக்கப்பட்டது. சிறுமி பயந்து, பயந்து மெள்ள வீட்டிற் குள் அடி எடுத்து வைத்தாள். உள்ளே சென்றதும், சிறுமி இங்குமங்கும் மிரள, மிரள விழித்தாள். இதை யெல்லாம் பார்த்தபோது, பாலகிருஷ்ணனுக்கு வேடிக் கையாக விருந்ததோ, என்னவோ, "இது யார், பாட்டி?" என்று கேட்டான்.

"சிவகாமி!"

இந்தப் பதிலினுல் சிறுவனுக்கு என்ன விளங்கி இருக் கும்? ஒன்றுந் தெரியாமல் விழித்தான்.

"உனக்குத் தங்கை என்று வைத்துக்கொள்ளேன்!"

"எனக்குத் தங்கை இல்லையே!"

"இதுவரைக்கும் இல்லை. இனிமேல் இவளைத் தங்கையாக வைத்துக்கொள்" என்றாள் பாட்டி.

அன்றிரவு சுந்தரஞ்செட்டியார் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். சிறியதாயார் வந்திருக்கும் செய்தியை அறிந்து, ராமநாதனும் துக்கம் விசாரிப்பதற்காக வந்திருந்தான். லக்ஷ்மியம்மாள் அவனைச் சாப்பிடச்சொல்லவே, அவனும் உட்கார்ந்தான். பாலகிருஷ்ணனும் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

சிறுமி வந்திருப்பதைச் சுந்தரஞ்செட்டியார் கவனித்திருந்தார். ஆனால் அவளைப்பற்றி ஒன்றுங் கேட்கவில்லை. தானாகவே லக்ஷ்மி சொல்வாள் என்று நினைத்துக் கொண்டிருந்தார். இதுவரைக்கும் அவள் அப்பேச்சை எடுக்காததைக் கண்டு, அவரே கேட்க வாரம்பித்தார்.

"உன்னுடன் கூட்டிக் கொண்டு வந்திருக்கிறாயே, அவள் தான் உன் தங்கை மகளா?"

லக்ஷ்மி மிகச் சுருக்கமாகப் பதிலளித்தாள். "ஆம்."

"பாவம்! அவளைக் காப்பாற்றுவதற்கு ஒருவரும் இல்லை போலிருக்குது!"

"ஏன் இல்லை? நான் இருக்கிறேனே முண்டம்போல! அது உங்களுக்குத் தெரியவில்லையா?" அவளுடைய பதிலில் சிறிது ஆத்திரம் தொனித்தது.

"நீ அந்தப் பெண்ணுக்குப் பெரியம்மா என்பது எனக்குத் தெரியாதா, என்ன? பாவம் இந்த வயதிலேயே அது தாயையும் தகப்பனையும் இழந்து விட்டு அநாதையாக இருக்கிறதே என்றுதான் சொன்னேன்."

ஆகையினால் இனிமேல் நான்தான் அவளுக்குத் தாயார்! நீங்கள்தான் தகப்பனார்!'' என்றாள் லக்ஷ்மி. இங்ஙனம் சொல்லிவிட்டுக் கடைக்கண்ணால் ராமநாதனை ஒருமுறை பார்த்தாள்.

ராமநாதன் ஒன்றும் சொல்லவில்லை.

மேலும் லக்ஷ்மி பேசினாள். ''அவள் இங்கேதானிருப்பாள். நாம்தான் அவளை வளர்த்து எல்லாம் செய்ய வேண்டும்'' என்று ஆத்திரத்துடனும், அழுத்தத்துடனும் சொன்னாள்.

''யார் வேண்டாமென்றது? பேஷாயிருக்கட்டும். பேஷாய் வளர்ப்போம். யாரோ வேண்டாமென்றது போல் நினைத்துக்கொண்டல்லவா நீ பேசுகிறாய்?'' என்று புன்சிரிப்புடன் சுந்தரஞ் செட்டியார் கூறினார்.

லக்ஷ்மி மேலும் ஒருமுறை ராமநாதனைப் பார்த்தாள். அவன் பேசாமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

எல்லோரும் சாப்பிட்டுக் கை கழுவினார்கள்.

''அவளுக்கு என்ன வயதாகிறது?'' என்று சுந்தரஞ் செட்டியார் மனைவியைக் கேட்டார்.

''எட்டு வயதாகிறது''

''எங்கே அவளைக் காணோம்?''

''சிவகாமி!'' என்று லக்ஷ்மி கூப்பிட்டாள். பதில் இல்லை.

வாசலிலும், வீட்டிற்குள்ளுமாக இங்குமங்கும் தேடினாள். அவளைக் காணோம்.

''எங்காவது இருட்டு வீட்டில் ஒரு மூலையில் ஒட்டிக் கொண்டிருப்பாள்!'' என்றான் பாலகிருஷ்ணன்.

"ஏண்டா, அவள் இருக்குமிடத்தை விளக்கு வைத்துத்தான் பார்க்க வேண்டுமோ!" என்று சிரித்தார் சுந்தரஞ் செட்டியார்.

எல்லா இடங்களிலுந் தேடிப் பார்த்தபோது பாலகிருஷ்ணன் சொல்லியபடி, மாடியின் ஒரு இருட்டறையில் ஒரு மூலையில் சிவகாமி ஒண்டிக் கொண்டிருந்தாள். அச் சிறுமிக்கு இருளில் இருப்பது கூடப் பயமாயில்லை. ஆனால் புதிய ஆட்களிடையே இருப்பது அதைவிடப் பயமாயிருந்தது போலும்!

"இவ்வளவு பெரிய வீட்டில் நீ இருப்பதற்கு இருளடைந்த இந்த மூலைதான் கிடைத்ததாடி? இங்கு ஒண்டிக் கொண்டு கிடக்கிறாய்?" என்று லக்ஷ்மி கேட்டாள்.

சிவகாமி அழுதாள்!

சிவகாமியைப் பாலகிருஷ்ணன் பல விதங்களில் கேலி செய்ய வாரம்பித்தான்.

"பாட்டி, பூனை வருகிறது. பாலை எங்கே வைத்திருக்கிறாய்? உரியில் வைத்து விடு" என்பான் பாலகிருஷ்ணன்.

"ஏற்கனவே அவள் பயந்து நடுங்கிக் கொண்டிருக்கிறாள். நீயும் ஏண்டா அவளைக் கேலிபண்ணுகிறாய்?" என்பாள் பாட்டி.

சிவகாமி அடிமேல் அடி வைத்துச் சத்தமில்லாமல் பூனையைப் போல் நடப்பது பாலகிருஷ்ணனுக்கு வேடிக்கையாயிருந்தது.

"ஏன் பாட்டி, இவள் இப்படி பயப்படுகிறாள்? நம்மையெல்லாம் பார்த்தால் அவளுக்கு புலி போலவா இருக்கிறது?" என்பான் பாலகிருஷ்ணன்.

ஒரு நாள் லக்ஷ்மியம்மாள் சிவகாமியை ஏதோ ஒரு காரியத்திற்காகக் கூப்பிட்டாள்.

"ஏன் பெரியம்மா?" என்று சொல்லிக் கொண்டு சிறுமி வந்தாள்.

"எட்டு வயதிலே தாயுந் தகப்பனையுந் தூக்கி விட்டவளுக்கு பெரியம்மா வேறே சின்னம்மா வேறே என்னடி வேண்டியிருக்கு? 'அம்மா' என்றுதான் கூப்பிடு" என்ருள் லக்ஷ்மி. 'பெரியம்மா' என்று கூப்பிடக் கூடாது போலும் என்று சிவகாமி பயந்துகொண்டு, அதிலிருந்து லக்ஷ்மியம்மாளை 'அம்மா' என்றே அழைக்க வாரம்பித்தாள். லக்ஷ்மிக்கு வெகு சந்தோஷம்!

சிவகாமிக்குப் புதுப் பாவாடைகள், சட்டைகள் எல்லாம் தைக்கப்பட்டன. பாலகிருஷ்ணனுக்குத் தலைவாருவதுடன் சேர்த்து, சிவகாமிக்கும் தலைவாரிப் பின்னினுள் லக்ஷ்மியம்மாள். சிவகாமி அவளை 'அம்மா' என்று அழைத்தாள்! தன்னை அவ்விதம் கூப்பிடுமாறு பாலகிருஷ்ணனை அவள் வேண்டினுள். ஆனுல், அவன் அவளைப் 'பாட்டி' என்றுதான் கூப்பிட்டான். இவளோ ஒரு முறை சொன்னவுடன் அதிலிருந்து 'அம்மா' என்றே கூப்பிடுகிருள்! சிவகாமி அவளுடைய சொந்தத் தங்கையின் மகள், பாலகிருஷ்ணனே அவளுடைய மூத்தாளின் பேரன்.

இனி அவளுடைய அன்புத்தாரை எவ்வழியில் பாயும்? அதனுடைய போக்கு மாறிவிடுமோ? யார் கண்டது? போகப் போகத்தானே தெரியும்!

## ஆருவது அத்தியாயம்

"நீ ஏண்டா அந்தப் பெண்ணை இப்படி காணக் கருக்குலேகிருய்? தாயுமில்லாமல், தகப்பனுமில்லாமல் சீரழிகிறதே என்று அவளேக் கூட்டிக் கொண்டுவந்தால் ஏண்டா இப்படித் துன்பப் படுத்துகிருய்?"

"அனுதைக் கழுதை வேறு எங்காவது போகட்டுமே. இங்கு ஏன் இருக்கவேண்டும்?"

"அவளை அனுதைக் கழுதை என்று சொல்கிருயே? நீ என்னடா தாயோடு சவரணையாய் வாழ்கிருய்? நீயும் நாலு வயதிலிருந்து என் கையைத்தானே ஒடிக்கிருய்? நீ உங்கப்பன் வீட்டிற்குப் போவதுதானே? இங்கு ஏன் இருக்கிருய்?"

"எனக்கு இந்த வீட்டிலிருப்பதற்கு உரிமை உண்டு. அவளுக்கில்லே"

"என்னடா உரிமை எல்லாங் கண்டுவிட்டாய்? உனக்கிருக்கிற உரிமை அவளுக்கும் இருக்கத்தான் செய்கிறது. உன் தாத்தா உன்னைக் கொண்டுவந்து வளர்க்கிருர். நான் அவளேக் கொண்டு வந்து வளர்க்கிறேன். யாராவது என்னமும் சொல்லட்டும். அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்."

"அதைத் தானே பார்க்கப் போகிறேன்" என்ருன் பாலகிருஷ்ணன். இம்மாதிரி சச்சரவு பாட்டிக்கும் பேரனுக்கும் அடிக்கடி நடக்க வாரம்பித்தது. ஆதியில் சிவகாமியைப் பாலகிருஷ்ணன் விநோதமாகக் கேலி செய்து கொண்டிருந்தான். அது வெகு சீக்கிரத்தில் மாறிவிட்டது. "பாலு, பாலு" என்று மட்டுங் கூப்

பிட்டுக் கொண்டிருந்த லக்ஷ்மி இப்பொழுது "காமு, காமு" என்றுங் கூப்பிட வாரம்பித்தாள். பால கிருஷ்ணனை மட்டுமே பாராட்டிக் கொண்டிருந்தவள், இப்பொழுது சிவகாமியையும் சீராட்ட வாரம்பித்தாள். என்ன செய்தாலும் இருவருக்குமே செய்தாள் லக்ஷ்மி. இது பாலகிருஷ்ணனுக்குப் பிடிக்கவில்லை. அவனுடைய உள்ளத்தில் பொருமை குடி கொண்டது. சிவகாமி வருவதற்கு முன்பு, எல்லாப் பண்டங்களையும் பால கிருஷ்ணன் மட்டுந்தான் அனுபவித்துக் கொண்டிருந் தான். அது மட்டுமல்ல. பாட்டியின் அன்பையும் அவன்தான் முழுதுங் கவர்ந்தான். ஆனல் இப்பொழுதோ பண்டங்கள் பகிர்ந்து கொடுக்கப்பட்டன. பாட்டியின் அன்பையும் அவனே முழுதும் அனுபவிக்க முடியவில்லை. லக்ஷ்மியம்மாள் சிவகாமியின் மீதும் அன்பு செலுத்தினுள்!

லக்ஷ்மிக்கும் ஒருவிதமான சிறுமை உணர்ச்சி இருக்கத்தான் செய்தது. என்ன விருந்தாலும் சிவகாமி அயல் வீட்டுப் பெண்தானே. பாலகிருஷ்ணன்தானே வீட்டுக்குரியவன் என்ற எண்ணம் அவளுடைய மனதில் உள்ளூர விருந்தது. மேலும் பாலகிருஷ்ணனை சிறு பிள்ளையிலிருந்து வளர்த்தவளல்லவா? ஆகையினுல் பாலனுக்கு நெய் விட்டாளானுல், சிவகாமிக்கு எண் ணெய்தான் விடுவாள். எந்தத் தின்பண்டமும் பால கிருஷ்ணனுக்கு சற்று அதிகமாகத்தான் கொடுத்தாள். பேரன் தூங்குவதற்கு மெத்தை விரித்துத் கொடுத்தா ளென்ருல், சிவகாமியைப் பாயின் மீது தான் படுக்கப் போட்டாள், ஆயினும் அதுகூட அவனுக்குப் பிடிக்க வில்லை. சிவகாமி தன் வீட்டில் ஏன் தூங்கவேண்டும் என்று அவன் நினைத்தான். அப்படி இருக்கும்போது, அவளுக்குப் பாய்விரித்துக் கொடுத்தால், அவனுக்குப் பொறுக்குமா?

ராமநாதஞ் செட்டியார் வீட்டிலிருந்து பிரிந்தது போல் கொஞ்சகாலத்தில் கடையிலிருந்தும் விலகிக் கொண்டு தனி வியாபாரம் செய்யவாரம்பித்தார். சிற் சில சமயங்களில் பாலகிருஷ்ணன் தந்தையின் கடைக் குச் செல்வான். தந்தை என்ற பாசமோ, அன்போ, இல் லாத போதிலும் சிறுவனுக்கு அவரிடத்தில் மரியாதை உண்டு. அவன் அம்மாதிரி அவரிடம் செல்லும் சமயங்க ளில், அவர் தன் மகனுக்கு இரண்டணு அல்லது நான்கணு கொடுப்பது வழக்கம். தாத்தாவிடம் கேட்டுத் தனக்குக் கிடைக்காத சாமான்களை அவன் தன்னுடைய தந்தையி னிடம் சென்று வாங்கிக்கொள்வான். ஒருநாள் அம்மாதிரி சிறுவன் தந்தையிடம் சென்றபோது, அவர் அவனைப் பார்த்து, "முன்போல் பாட்டி உன்மீது பிரியமாயிருக்கிரு ளாடா? அவளுடைய தங்கை மகள் ஒரு பெண் வந்திருக் கிருளே, அவள் மேல்தான் பிரியமாயிருக்கிருளா?" என்று கேட்டார்.

"எப்பொழுதும் போல் பிரியமாய்த் தானிருக்கிருள்" என்று பாலகிருஷ்ணன் பதிலளித்தான்.

அப்புறம் இரண்டணுவைக் கொடுத்தார். வாங்கிக் கொண்டு வந்து விட்டான். இதற்கப்புறம் சிறுவன் அவ ரிடம் செல்லும் போதெல்லாம் இதே கேள்வியை அவர் அடிக்கடி கேட்பார்; பாலகிருஷ்ணனும் அதே மாதிரியே பதிலளித்து வந்தான். ஆயினும் அவனுடைய மனதிற் குள்ளே, பாட்டி தன்னை முன்போல நடத்தவில்லை என்ற எண்ணம் சிறிது சிறிதாக வேரூன்ற வாரம்பித்தது. அதற்குக் காரணம் அந்தச் சிவகாமியல்லவா என்று அவன் நினைத்தான்.

ஒருநாள் பாலகிருஷ்ணன் இட்டிலி சாப்பிட்டுக் கொண்டிருந்தான். முணுக்கு விடாமல் சிவகாமி வந்து அவனுக்குப் பின்னுல் தண்ணீர்ச் செம்பை வைத்தாள்.

"உன் மகள் சமர்த்தைப் பார்த்தாயல்லவா? தண்ணீர்ச் செம்பை எங்கு வைப்பது? பட்டிக்காட்டுக் கழுதைகள் பிள்ளை வளர்த்திருக்கிற லக்ஷணத்தைப் பார்!" என்முன் பாலகிருஷ்ணன்.

"ஏண்டா அவளை உனக்குப் பிடிக்காவிட்டால், அவளை மட்டுந் திட்ட வேண்டியதுதானே? செத்துப் போன அவளுடைய ஆத்தாளையும், அப்பனையும் ஏண்டா இழுக்கிறே?" என்முள் பாட்டி.

சிறிது நேரத்திற்குப் பின்பு, சிவகாமி தன்னுடைய குடத்திலிருந்து தண்ணீர் கொண்டுவந்து வைத்திருந்தாள் என்பது பாலகிருஷ்ணனுக்குத் தெரியவந்தது. லக்ஷ்மியுடன் சிவகாமியும் ஒரு சிறு குடத்தை எடுத்துக் கொண்டு கிணற்றுக்குச் சென்று நீர் சுமந்து வருவது வழக்கம். இப்படி வீட்டு வேலைகளில் அவள் ஒத்தாசையாயிருந்ததும் ஒரு காரணம், லக்ஷ்மி அவள்மீது பிரியமாயிருந்ததற்கு.

சிவகாமியை வெறுத்ததோடு நில்லாமல், பாலகிருஷ்ணன் அவள் தொட்ட சாமான்களையும் வெறுக்கவாரம்பித்தான். அவள் மீது அவன் கொண்ட பகைமையும் பொருமையும் நாளுக்கு நாள் அதிகரித்தது. ஆகாதவள் கைபட்டால் குற்றம், கால்பட்டால் குற்றமென்று அவள் சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் அவன் தள்ளினுன்.

"அவள் தொட்ட தண்ணீர் எனக்கு வேண்டாம்" என்முன் பாலகிருஷ்ணன்.

"பின்னே, உனக்குத் தண்ணீர் எடுத்துவைக்க உன் பெண்டாட்டியாடா வைத்திருக்கிமுய்? என்னுல் இப்பொழுது எழுந்திருக்க முடியாது. குடித்தால் குடி. இல்லாவிட்டால், சும்மா கிட" என்முள் பாட்டி.

இவள் வந்துதானே பாட்டி தனக்குத் தண்ணீர் எடுத்து வைப்பதைக் கெடுத்துவிட்டாள் என்று பால கிருஷ்ணன் நினைத்தான்.

"நான் தொட்ட தண்ணீர் ஆகாதென்றால், இட்டிலி மட்டும் ஏன் தின்கிறாய்? அது நான் அரைத்த மாவு தானே?" என்றாள் சிவகாமி.

பாலகிருஷ்ணனுக்குக் கோபம் பொறுக்க முடிய வில்லை. அவளுக்கு அவ்வளவு வாய்க்கொழுப்பு வந்து விட்டதா என்று அகங்காரங்கொண்டு, "உன் கரிக் கையைக் கண்டதில் எல்லாம் ஏண்டி வைப்பாய்?" என்று இட்டிலி தின்பதை விட்டு எழுந்து, அந்தக் கையோடு அவளுடைய கன்னத்தில் பலமாய் ஒரு அறை கொடுத்தான்.

பாட்டிக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை. ஆனால் பாலகிருஷ்ணன் மீது காட்ட வேண்டிய கோபத்தை எல் லாம் சிவகாமியின் மீது கொட்டினாள்! "அறிவு கெட்ட கழுதை! உனக்கும் நன்றாய் வேண்டும்! அப்பனையும் ஆத்தாளையும் இந்த வயதிலேயே தூக்கிவிட்ட கழுதைக்கு உனக்கென்னடி வாய்? உனக்கென்னடி பேச்சு? பேசாமல் மூலையில் அவிந்து கிடக்காமல், அவனுக்கு ஏண்டி தண் ணீர் எடுத்து வைக்கிறாய்?" என்று அவளைத் திட்டிவிட்டு மௌனமாய்க் கண்ணீர் வடிக்க வாரம்பித்தாள்.

சிவகாமியை அடிக்க லக்ஷ்மிக்கு உரிமை உண்டு. ஆனால் பாலகிருஷ்ணனை அடிக்க அவளுக்கு உரிமை உண்டா? அவனைத் தொட்டால், நாலுபேர் நாலு வார்த்தை சொல்லுவதற்கு இடமுண்டாகு மல்லவா? ஆனால் சிவகாமியை அவள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். கேட்பார் யார்? அவள் மீது தனக்கிருந்த

அதிக உரிமையையும், உறவையும் லக்ஷ்மி இம்மாதிரி காட்ட வாரம்பித்தாள்!

"இவ்வளவு நாளைக்கப்புறம் எனக்குக் கெட்டபெயர் வாங்கிக் கொடுக்க நீ ஏண்டி இங்குவந்து தொலைத்தாய்? தாயோடு, தகப்பனோடு நீயும் போய்ச் சேர்ந்திருந்தால், நான் என் பாலகிருஷ்ணனை வைத்துக்கொண்டு சுகமாக இருந்திருப்பேனே" என்று சில சமயங்களில் சிவகாமியைக் கடிந்து கொள்வாள், லக்ஷ்மி.

இப்படியிருக்கையில் ஒருநாள் மாலை லக்ஷ்மியின் சிநேகிதை ஒருத்தி அவளைப் பார்க்கவந்தாள். அவர்களிருவரும் ஏதேதோ பேசிக்கொண்டிருந்த பொழுது சிவகாமி, குடத்தை எடுத்துக்கொண்டு சமயலறையிலிருந்து வெளியில் வந்து, "தண்ணீர் கொண்டு வருகிறேன், அம்மா" என்று சொல்லிவிட்டு வெளியில் சென்றாள்.

"இவள் யார்?" என்று கேட்டாள் லக்ஷ்மியின் சிநேகிதை. அவள் பெயர் கோமதியம்மாள்.

"இவள் தான் என் தங்கையின் மகள்."

"அடியே! இவள்தானா தகப்பனையும், தாயையும் பறி கொடுத்தவள்? கட்ட வளர்ந்திருக்கிறாள் போலிருக்கிறதே!"

"ஆமாம், வயதாச்சு. ஒரு மாப்பிள்ளை பார்க்க வேண்டும்."

"எல்லாம் நீ தானே செய்யவேண்டும்? பாவம், அதுக்குத் தாயுமில்லை, தகப்பனுமில்லை!" என்றாள் கோமதியம்மாள்.

"நான் தான் செய்யவேண்டும். வேறு யார் இருக்கிறார்கள்?"

"மாப்பிள்ளைக்கு இங்குமங்கும் ஏன் அலையப் போகிருய்? உன் பேரனுக்கே கட்டி விடு. ஒன்றுக்குள் ஒன்று பின்னிக் கொண்டு கிடக்கும். பெண் நன்ருயிருக்கிருள். இருவரும் சரியான ஜோடிதான்!" என்ருள் கோமதி.

"ஆனல் இரண்டுக்கும் ஏழாம் பொருத்தமாயிருக்கிறதே. நாயும் பூனையும் போல் அல்லவா சண்டை போட்டுக் கொள்கிறதுகள்!"

"இப்பொழுது அப்படித்தானிருக்கும். கலியாணம் பண்ணிவிட்டால், எல்லாம் சரியாய்ப் போய்விடும். நீ இதையும் அதையும் யோசிக்காதே" என்ருள் கோமதியம்மாள்.

"நம்முடைய விருப்பத்தில் என்ன இருக்கிறது? அவர் (சுந்தரஞ்செட்டியார்) சம்மதிக்கவேண்டும். அவர் சம்மதித்தாலும் பையனுடைய அப்பன் இணங்கி வர வேண்டுமல்லவா?" என்ருள் லக்ஷ்மியம்மாள்.

"எல்லாம் இணங்குவார்கள் இணங்காமல் என்ன? என்று சொன்னுள் கோமதியம்மாள்".

தன்னுடைய தங்கையின் மகளாகிய அவ்வனுதைப் பெண் அத்தகைய அதிர்ஷ்டசாலியாகவா இருக்கப் போகிருள் என்று லக்ஷ்மியம்மாள் நினைத்தாள்.

## ஏழாவது அத்தியாயம்

பாலகிருஷ்ணனுக்குச் சுமார் பதினறு அல்லது பதினேழு வயதிருக்கும். சிறிதேனும் முகவாட்டமின்றி நன்ருய் வளர்ந்திருந்தான். அவனைப் பார்த்தவர்கள் யாரும் அவனைத் தாயில்லாப் பிள்ளை என்று சொல்ல

மாட்டார்கள். பிரகாசமான கண்கள், பொலிவுள்ள முகம். பள்ளிக்கூடத்தில் சிற்சில சமயம் அவன் திறந்த மேனியுடன் தேகப்பயிற்சி செய்யும்போது, திரண்டு, பருத்த அவனுடைய தோள்களையும், மார்பையுங் கண்டு பிற மாணவர்கள் பொருமை கொள்வர். "தாயில்லாப் பிள்ளைதானே! லக்ஷ்மி அவனை எப்படி வளர்த்திருக்கிருள்? இத்தனைக்கும் பிறந்ததிலிருந்து அவனுக்குத் தாய்ப்பால் கூடக்கிடையாது. பிள்ளை வளர்ப்பதில் லக்ஷ்மிக்கு ஈடாக ஒருவரையும் சொல்லமுடியாது. அவளுடைய தங்கையின் பெண்ணைத்தான் கூட்டிக் கொண்டு வந்தாளே. அப் பெண் வந்தபோது நோஞ்சையாய் எப்படி இருந்தது! இப்பொழுது அதை எப்படி வளர்த்துவிட்டாள்! அவள் கைப்பட்ட சோறுண்டாலே பிள்ளைகள் நன்ருய் வளரும் போலிருக்குது. கல்மிஷமற்ற உள்ளம் அல்லவா?" என்று தெருவில் எல்லோரும் பேசிக்கொள்வார்கள்.

இப்படி அவர்கள் பேசிக்கொண்டிருப்பது லக்ஷ்மியம்மாள் காதுக்கு எட்டினுல், "நான் நன்ருய் வளர்த்திருந்தால், இவர்கள் கண்களில் ஏன் தீப்பிடிக்கிறது? என்று சொல்லி, அவர்களுடைய காலடி மண்ணை எடுத்துத் தன் பேரனுக்கும், பெண்ணுக்கும் திருஷ்டி சுற்றிப் போடுவாள். அத்தனை வயதுக்கப்புறம் தனக்குத் தன் பாட்டி திருஷ்டி சுற்றிப் போடுவதைப் பார்த்தால், பாலகிருஷ்ணனுக்குச் சிரிப்பாய் வரும். அச் சமயங்களில் எல்லாம் பாட்டி எப்பொழுதும்போல் தன்மீது பிரியமாய்த்தானே இருக்கிருள் என்று அவனுக்குத்தோன்றும்.

ஒருநாள் காலையில் பாலகிருஷ்ணன் மிகுந்த கோபமாயிருந்தான். சிவகாமி இங்குமங்கும் போகும் போதெல்லாம், அவளை எரித்து விடுபவன்போல் பார்த்துத்

தனக்குள்ளேயே ஏதோ முணு முணுத்துக்கொண்டான். புதுப்புகைச்சல் ஏதோகிளம்புகிறது என்று லக்ஷ்மி நினைத்தாள். ஆனால் ஒன்றும் பேசவில்லை. அதுவாக எரியும் போது எரியட்டும். அதற்குள் ஏன் அதை ஊதிவிட வேண்டும் என்பது அவளுடைய எண்ணம்.

"இந்தச் சனியன் என்றைக்குத்தான் தொலையுமோ தெரியவில்லை. இவள் தொலையும் வரைக்கும் நான் நிம்மதியாயிருக்க முடியாது" என்றான் பாலகிருஷ்ணன்.

அவன் அவ்விதம் கத்தினால், பாட்டி என்ன விஷயம் என்று அவனை விசாரிப்பாள் எனப் பாலகிருஷ்ணன் எதிர்பார்த்தான். பாட்டி ஒன்றும் பேசவில்லை. அவள் பேசாமலிருந்தது அவனுடைய கோபத்தை அதிகப் படுத்தியது.

"என் பவுண்டன் பேனாவைக் காணோம்!" என்று கடைசியில் பாட்டியிடம் சென்று அவனே சொன்னான்.

"அதை என்னிடம் ஏன் சொல்லுகிறாய்?"

"உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்வது?"

"நான் அதை எடுக்கவில்லை"

"நீ எடுக்கவில்லை என்பது எனக்குத்தெரியும். அவளைக் கேள்."

"அவளும் எடுக்கவில்லை."

பெட்டியில் பேனா இல்லை என்று கண்டவுடனே சிவகாமியின் மீதுதான் அவனுக்குச் சந்தேகம் உண்டாகியது. சிறிது நேரத்திலேயே அச்சந்தேகம் நிச்சயமான நம்பிக்கையாக மாறிற்று.

"அவள்தான் எடுத்திருப்பாள்!" என்றான் பால கிருஷ்ணன்.

"அவள் அதை எடுத்து என்னடா செய்யப்போகிறாள்?"

"விற்பாள்!"

"அவள் யாருக்கடா விற்பாள்?"

"அது எனக்கு எப்படித் தெரியும்?"

இம்மாதிரி சமயங்களில் எல்லாம் சிவகாமியின் பக்கமே லக்ஷ்மி சேர்ந்து கொண்டது பாலகிருஷ்ணனுடைய பொறுமையை மேலுந் தூண்டிவிட்டது. மனித உள்ளம் சஞ்சல முள்ளது தானே! அவள் யார்மீது பிரியமாயிருக்கிறாள் என்பதை இச் சம்பவம் எல்லாம் காட்டுவதாக அவன் நினைத்தான். பாட்டி அவன் மீது முன்பு அதிகப் பிரியமாயிருந்தாள். ஆனால் இப்பொழுது?

அவள் விழிக்கிற விழியே, அவள்தான் பேனாவை எடுத்திருக்க வேண்டுமென்று காட்டுகிறதே என்று பாலகிருஷ்ணன் நினைத்தான்.

சிறிது நேரத்திற்குப் பின்பு 'சிவகாமி' என்று மாடியிலிருந்து சப்தம் வந்தது. பாலகிருஷ்ணன்தான் அவளை மாடிக்கு அழைத்தான். எதற்காக? குற்றவாளி போல் அவளைத் தன் முன்னால் நிறுத்தி விசாரிப்பதற்காக!

ஆனால் அவள் போகவில்லை. "நீ அங்கு போக வேண்டாமடி," என்று லக்ஷ்மி தடுத்து விட்டாள். பாலகிருஷ்ணனுடைய கோபம் முன்னிலும் அதிகரித்தது.

இவ்விதம் பாலகிருஷ்ணன் அவள் மீது ஏதாவது குறை கூறிக்கொண்டும், குற்றம் சாட்டிக் கொண்டுமே இருந்தான். எல்லா விஷயங்களிலும் அவளைத் தன்

போட்டியாகவே அவன் கருதினன். கடைவீதிக்குப் போய் ஏதாவது சாமான் வாங்கிக்கொண்டு வருமாறு லக்ஷ்மியம்மாள் பாலகிருஷ்னனை ஏவுவாள். "அவளைப் போகச் சொல்லேன்?" என்பான் அவன். "அவள் பெண் பிள்ளை, கடைவீதிக்குப் போக வெட்கப்படுகிருள். நீ போடா" என்பாள் பாட்டி. "நான் ஆண் பிள்ளை. படிக்கவேண்டாமா?" என்று அவன் சொல்லிவிடுவான். பின்பு கடையிலிருந்து யாராவது வேலைக்காரன் வந்தால் அவன் மூலம் வேண்டிய சாமான்களை லக்ஷ்மியம்மாள் வாங்கிக் கொள்வாள்.

சிவகாமியின் கலியாணத்தைப் பற்றி லக்ஷ்மியம்மாளுக்குக் கவலை அதிகரிக்க வாரம்பித்தது. அன்று அவளுடைய சிநேகிதை கோமதியம்மாள் அதைப் பற்றிக் குறிப்பிடுவதற்கு முன்பே, அவளுடைய உள்ளத்தில் அவ்வெண்ணம் ஒரு சிறிய ரேகைபோல் இருந்து வந்தது. சிவகாமியைத் தன் பேரனுக்குக் கலியாணம் செய்துவிட்டால் என்ன? கோமதியம்மாளும் அதைப் பற்றிச் சொல்லவே, அவ்வெண்ணம் சற்று வலுவடைந்தது. தன் தங்கையின் மகளை இன்னொரு இடத்தில் கொடுத்தால், அவள் அங்கு என்னென்ன கஷ்டம் அனுபவிக்க நேருமோ? தன் பேரனுக்கு இன்னொரு பெண்ணைக் கலியாணம் செய்து வைத்தால் அவள் எப்பேர்ப்பட்டவளாய் அமைவாளோ? அவளுக்குந் தனக்கும் ஒத்துக் கொள்ளுகிறதோ என்னவோ? ராமநாதஞ் செட்டியாருக்கு இரண்டாந்தாரம் வாய்த்தது போல் இருந்தால் என்ன செய்வது? இம்மாதிரி எல்லாம் லக்ஷ்மியம்மாள் எண்ணுவதுண்டு. ஆனல் வீட்டில் நடக்கும் விஷயங்களோ அவளுடைய ஆசைக்கு உற்சாகம் ஊட்டுவனவாகத் தோன்றவில்லையே!

ஒரு நாள் பாலகிருஷ்ணன் தன் தந்தையிடம் சென்றிருந்தான்.

"பாட்டி உன் மேல் பிரியமாயிருக்கிருளா, பாலு," என்று அவர் வழக்கம்போல் கேட்டார்.

"பிரியமாய்த் தானிருக்கிருள்," என்று பதிலளித்து விட்டு அவன் சென்ற காரியத்தைத் தெரிவித்தான். அவன் கால் பந்துப் போட்டிப் பந்தயம் ஒன்றில் கலந்திருந்தான். பந்தயம் விளையாடுவதற்காக அவன் அயலூருக்குச் சில நாட்கள் போகவேண்டியிருந்தது. செலவு பள்ளிக்கூடத்தைச் சேர்ந்ததுதான். ஆயினும் அவன் கையில் கொஞ்சம் பணம் வேண்டுமென்று நினைத்தான். தாத்தாவிடம் கேட்டுப் போதிய பணம் வாங்கிக் கொண்டான். தந்தையிடமும் ஒரு சிறு தொகை வாங்கிக் கொண்டால் தாராளமாய்ச் செலவழிக்கலாமென்று வந்திருந்தான். அவன் விரும்பிய தொகையை வாங்கிக்கொண்டு, அவரிடம் விடைபெற்றுக் கொள்ளும்போது ஏதோ, அவர் சொல்ல விரும்பியதுபோல் அவனுக்குத் தோன்றியது. ஆகையிஞல் சற்று நின்ருன். தான் சொல்ல விரும்பியதை எப்படி ஆரம்பிப்பது என்று அவர் தயங்கிக் கொண்டிருந்தார். கடைசியில் வேறு முகவுரை ஒன்றுந் தோன்றவில்லையோ, என்னவோ, "பாட்டி உன்மீது பிரியமாயிருக்கிருளா?" என்று மீண்டுங் கேட்டார்.

"உம்," என்ருன் பாலகிருஷ்ணன்.

"அவளுடைய எண்ணம் சரியாகத் தெரியவில்லை. அப்படி ஏதாவது பேச்சு வந்தால், நீ சம்மதித்து விடாதே" என்ருர் தந்தை.

பாலகிருஷ்ணன் ஒன்றும் பேசாமல் நின்ருன்.

ராமநாதஞ் செட்டியார் மீண்டும் பேசினுர். "ஏராளமான நகைகளுடனும், நல்ல முடியும்பணத்துடனும் (வரதக்ஷிணை) பெரிய பணக்கார வீட்டுப் பெண்கள்

எத்தனையோ உனக்கு வரும். உனக்கு எதற்கடா அவ்வனுடைய பெண்?''

"இது கூடவா எனக்குத் தெரியாது? நான் உங்களை விட ஜாக்கிரதையாக விருக்கிறேன்'' என்று மனதில் நினைத்துக் கொண்டான் பாலகிருஷ்ணன். ஆனால் வெளியில் ஒன்றும் பதில் சொல்லவில்லை.

"நேற்றுக் கூட மதுரையிலிருந்து சில பேர் வந்து ஜாதகம் கேட்டார்கள். "பையன் படிப்பு முடியும் வரைக்கும் ஜாதகம் கொடுப்பதில்லை'' என்று நான் சொல்லி விட்டேன்.

கலியாண விஷயத்தைப் பற்றிப் பேசினால் வாலிபர்களுக்கெல்லாம் சிறிது வெட்கம். ஆகையால் சற்று அலக்ஷியமாயிருப்பது போல் காட்டிக் கொள்வார்கள். பாலகிருஷ்ணனும் அவ்விதமே நடந்து கொண்டான்.

அவனுடைய மௌனத்தை அவர் எவ்விதம் புரிந்து கொண்டாரோ தெரியவில்லை "அப் பெண் உனக்கு முறையும் இல்லையே!'' என்று மேலுங் கூறினார்.

அதற்குமேல் தனக்கு ஒன்றுங் கூற வேண்டியதில்லை என்று அவனுடைய முகபாவம் காட்டிற்றோ, என்னவோ, ராமநாதஞ்செட்டியார் அத்துடன் நிறுத்திக்கொண்டார்.

அன்று பாலகிருஷ்ணன் வீட்டிற்குத் திரும்பி வருகையில் வழி நெடுக மிகக் சந்தோஷத்துடன் வந்து கொண்டிருந்தான். அவனுடைய ஜாதகத்தை எத்தனையோ பேர் கேட்கிறார்கள். அவனுடைய தந்தை கொடுக்க மறுக்கிறார். அதில் அவனுக்கு அத்தகைய பூரிப்பு!

சுந்தரஞ் செட்டியார் சூக்ஷ்ம புத்தியுள்ளவர். பாலகிருஷ்ணனுக்கும் சிவகாமிக்கும் நடந்த போராட்டங்களை

அவர் கூர்மையாகக் கவனித்து வந்தார். கவனிக்கக் கவனிக்க அது அவருக்கு அச்சத்தையே விளைவித்தது. என்ன அச்சம்? விபரீதமாய் முடிந்து விடுமோ என்று பயந்தார். ஆகையினுல் கூடிய சீக்கிரம் அதை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று நிச்சயித்துக் கொண்டார்.

## எட்டாவது அத்தியாயம்.

சுந்தரஞ் செட்டியார் வெளியூருக்குச் சென்றிருந்தார். அநேக நாட்களாய் விட்டன, இன்னும் வரக்காணுமே என்று லக்ஷிமியம்மாள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள். வியாபார ஜோலியாகப் போவதாகச் சொல்லியிருந்தார். இத்தனை நாட்களாக என்ன செய்து கொண்டிருக்கிருர் என்று லக்ஷிமியம்மாள் யோசித்தாள். அநேக ஊர்களில் அவருக்குச் சிஷ்யர்கள் உண்டு. யாராவது இரண்டு பேர் கிடைத்தால் போதும். நாள் கணக்காக வேதாந்த விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டே இருப்பார். வந்த வேலை கூட அவருக்கு மறந்துபோய்விடும். வர வர இப்பொழுது அவர் கடையில் வியாபாரத்தைக் கூடச் சரியாகக் கவனிப்பதில்லை. ஏதாவது தத்துவ விசாரணையில் எங்காவது ஈடுபட்டு விட்டாரோ என்று லக்ஷிமியம்மாள் நினைத்தாள்.

கடையிலிருக்கும் சம்பளகாரர்களை, "முதலாளி எங்கே போயிருக்கிருர்? உங்களிடம் ஏதாவது சொன்ஞரா? இன்னுங் காணுேமே?" என்று லக்ஷிமியம்மாள் கேட்டாள்.

"இன்ன ஊருக்கென்று நிச்சயமாய்ச் சொல்லவில்லை. வியாபார விஷயமாய்த்தான் போவதாகச் சொன்ஞர்.

"என்ன விஷயம்?"

"கருப்பட்டி மொத்தமாக ஒப்பந்தம் செய்துகொண்டு வருவதாகச் சொன்னார்."

"எப்பொழுது வருவார்?"

"வியாபார சம்பந்தமாய்ப் போகும்போது, அதெல்லாம் நிச்சயமாய்ச் சொல்ல முடியுமா? ஜோலி முடிந்தவுடன் வந்து விடுவார்."

"அவர் மட்டுந்தான் போயிருக்கிறாரா, கைவல்யநவநீதமும் கூடப் போயிருக்கிறதா என்று கேட்டேன்!" என்றாள் லக்ஷிமியம்மாள்.

இந்தச் சமயம் அங்கு நின்றுகொண்டிருந்த சம்பளகாரர்கள் எதிர்பாராத விதமாய்த் திடீரென்று சிரித்தார்கள். லக்ஷிமியம்மாள் சொன்னதிலிருந்த ஹாஸ்யத்திற்காக அவர்கள் சிரிக்கவில்லை. அவள் அப்படிக் கூறிய போது அவர்களிடையே இருந்த சிறுவன் ஒருவன், "ஞானவாசிட்டமும் சேர்ந்து போயிருக்கிறதென்று சொல்லு. நான்தான் பெட்டிக்குள் எடுத்து வைத்தேன்" என்று மெதுவாகச் சொன்னான். அது லக்ஷிமியம்மாளுக்குக் கேட்டிராது. முதலாளியம்மாளுக்குக் கேட்குமாறு உரத்த குரலில் சொல்வதற்கு அவனுக்குத் தைரியம் வந்திராது. அதைக் கேட்டுத்தான் அவர்கள் அப்படிச் சிரித்தார்கள்.

இங்ஙனம் லக்ஷ்மியம்மாள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தபோது, இரண்டு நாட்களுக் கப்புறம் சுந்தரஞ் செட்டியார் வந்து சேர்ந்தார். அவர் வீட்டிற்குள் நுழைந்தபோது, சிவகாமிக்குப் பூச்சூடிப் பொட்டிட்டுக் கொண்டிருந்தாள், லக்ஷ்மி. அதைப் பார்த்ததும் செட்டியார் புன் முறுவல் கொண்டார்.

"எங்கே ஒரேயடியாய் 'டேரா' அடித்து விட்டீர்கள்?"

"சாவகாசமாய்ச் சொல்கிறேன். இலையைப் போடு. சாப்பிடுவதற்கு."

"போன இடத்தில் வேதாந்தக் காலக்ஷேபம் ஆரம்பித்து விட்டீர்களோ என்று நினைத்தேன்."

"அதுவுந்தான் நடந்தது."

"கருப்பட்டி ஒப்பந்தம் செய்து வரப் போயிருப்பதாகச் சொன்னார்கள்."

"அதுவுந்தான் முடித்தேன்."

"வேறென்ன செய்தீர்கள்?"

"சாதத்தைப் போடு. சாப்பிட்டுவிட்டுச் சொல்கிறேன்."

செட்டியார் சாப்பிட்டுவிட்டு வெற்றிலைச் செல்லத்தை எடுத்துக்கொண்டு உட்கார்ந்தார். அவர் சொல்லப் போவதில் ஆவலுள்ளவள் போல் லக்ஷ்மியம்மாள் காட்டிக் கொள்ளவில்லை. ஆயினும் செட்டியாரே விஷயத்தை ஆரம்பித்தார்.

"கலியாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் சீக்கிரமாய்ச் செய்!"

ஆச்சரியத்தினால் லக்ஷ்மியம்மாள் விழித்தாள்.

"உன் மகளுக்கு மாப்பிள்ளை பார்த்து வந்திருக்கிறேன்."

"சிவகாமிக்கா?" என்று துணுக்குற்றுக் கேட்டாள் லக்ஷ்மியம்மாள். கானல் நீர்போல் அவளுக்கு ஒரு தூர நம்பிக்கை இதுவரை இருந்து வந்தது. அது நிறைவேறக் கூடியதா என்பது வேறொரு கேள்வி. ஆயினும் அவ்வாசை அவளுக்கு இருந்தது. அதை வெளியில் கூட

அவள் ஒருவரிடமும் சொல்லவில்லை. சொன்னால் அது ஏற்றுக் கொள்ளப்படுமா என்று சந்தேகித்தாள். எனினும் அந் நம்பிக்கை அவளுடைய உள்ளத்தின் ஒரு மூலையிலிருப்பதை இதுவரை ஒன்றுந் தடுக்கவில்லை. ஆனால் இப்பொழுதோ?

"ஏன், உனக்கு ஆச்சரியமா யிருக்கிறதா?" என்று சுந்தரஞ்செட்டியார் கேட்டார்.

"இல்லை. நான் சொல்லாமல் நீங்களே பார்த்துக் கொண்டு வந்து விட்டீர்களே" என்று சொல்லி லக்ஷ்மி சமாளித்துக் கொண்டாள்.

"சிவகாமிக்கு வயதும் ஆகிவிட்ட தல்லவா? நாம் தானே கலியாணம் செய்து வைக்கவேண்டும்?"

"ஆமாம். நீங்கள் பார்த்து வந்தது சரிதான். மாப்பிள்ளை எந்த ஊர்?"

"திருநெல்வேலி"

"திருநெல்வேலியில்.........?"

"திருநெல்வேலியில் பகவான் செட்டியாரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாய் அல்லவா?"

"எனக்கு அதெல்லாந் தெரியாது. சொல்லுங்க. அந்தப் பகவான் செட்டியாருடைய மகனா?"

செட்டியார் திடுக்கிட்டு ஒரு நிமிஷம் தயங்கினார். பின்பு மென்று விழுங்கிக்கொண்டு, "பகவான் செட்டியாரேதான்" என்றார்.

"இரண்டாந்தாரமா?"

"உம்." அப்படிச் சொல்லும்போது செட்டியாருக்கு என்னவோ மாதிரி தானிருந்தது.

'என்ன வயதிருக்கும்?''

''நாற்பது வயதென்று சொல்கிறார். ஆனால் ஆளைப் பார்த்தால் அவ்வளவு மதிக்க முடியாது.''

இதைச் சொல்லிவிட்டு உற்சாகந் தரக்கூடிய விஷயம் வேறு ஏதாவது சொல்ல வேண்டுமென்று அவர் நினைத்தாரோ என்னவோ, ''எல்லா நகைகளும் மாப்பிள்ளையே போடுகிறார். காசுமாலை, பெரண்டைக் காய்ச் சங்கிலி இரண்டுசரம், மிளகுமணிமாலை, கலர்க்கல் மாலை, வயிர மூக்குத்தி, வயிரத்தோடு, வங்கி, கைக்கு நாலு வளையல்கள், மோதிரம்—எல்லாம் என்று வைத்துக்கொள்ளேன்'' என்றார்.

பின்பு அடுத்தாற் போல், ''அவருடைய மனைவிக்கு அவர் போடுகிறார். யாருக்குப் போடுகிறார்?'' என்று கூறினார்.

''மூத்த குடியாளுக்கு எத்தனை பிள்ளைகள்?''

''ஒரே ஒரு பெண்தான். வேறு ஒன்றுமில்லை. சொத்தெல்லாம் நம்ம சிவகாமியின் பிள்ளைகளுக்குத்தான்'' என்று சிரித்துக்கொண்டே சுந்தரஞ் செட்டியார் சொன்னார்.

''சொத்து என்ன இருக்கும்?''

''நாலைந்து லக்ஷங்கள் இருக்கலாம். அத்துடன் வியாபாரமும் இருக்கிறது.''

''உம்.'' என்றாள் லக்ஷ்மியம்மாள். சிறிதுநேரத்திற்குப் பின் ஏதோ நினைத்துக் கொண்டவள் போல் ''அப்படியானால் எல்லாம் முடிவு செய்து விட்டீர்களா? என்றைக்கு முகூர்த்தம்?'' என்று கேட்டாள்.

"இன்னும் ஒன்றும் முடிவு செய்யவில்லை. எல்லாம் பேசினோம். மாப்பிள்ளை பெண்ணைப் பார்க்க வேண்டும் என்றார். இன்னும் இரண்டு, மூன்று நாட்களில் வருவார். அப்பொழுது நீயும் மாப்பிள்ளையைப் பார்த்துக் கொள்ளலாம். மாப்பிள்ளை பிடித்திருந்தால், வெற்றிலை பாக்குப் பரிமாறலாம். இல்லையானால் வேண்டாம்," என்றார் சுந்தரஞ் செட்டியார்.

அவர் கூறிய பிரகாரமே, மாப்பிள்ளையும் இரண்டு மூன்று தினங்களில் நன்றாக முகக்ஷவரம் செய்து கொண்டு வந்து சேர்ந்தார். பெண் அவருக்குப் பிடித்திருந்தது. பெண்ணோ, அல்லது பெண்ணின் பெரிய தாயாரோ யாதொரு ஆக்ஷேபணையும் சொல்லவில்லை. வெற்றிலை பாக்குப் பரிமாறி, முகூர்த்தம் நிச்சயிக்கப் பட்டது!

இக் கலியாணத்தைப் பற்றி லக்ஷ்மியம்மாளின் மனப்பான்மை என்னவென்பதை அறிவது மிகவுங் கஷ்டமாயிருந்தது. ஒருசமயம் ஒரு மாதிரியும், இன்னொரு சமயம் ஒரு மாதிரியும் பேச வாரபித்தாள். "மாப்பிள்ளை அப்படி ஒன்றும் வயதானவராய்த் தோன்றவில்லை. ஏராளமான சொத்திருக்கிறது. மூத்த குடியாளுக்கு ஆண் சந்ததி இல்லை எல்லாம் இவளுடைய பிள்ளைகளுக்குத்தானே. என் சிவகாமிக்கு என்ன குறைச்சல்?" என்பாள் ஒரு சமயம். இன்னொரு சமயம் சலிப்புடன், "உம், என்ன விருந்தாலும் இரண்டாந் தாரந்தானே. அவள் தலையில் எழுதியது அவ்வளவுதான்!" என்பாள். அவளுடைய மனதில் அதைப் பற்றி நிச்சயமான அபிப்பிராயம் ஒன்றும் இல்லை போலும். அத்துடன் இந்நிலைமைக்குத் தன்னை அவள் வெகு நாட்களாகத் தயார் செய்து கொண்டு வந்தது போலவுந் தோன்றியது. உள்ளூற அவளுடைய மனதில் அவ்வெண்ணம் வேரூன்றிவிட்டது. தாயையுந்

தகப்பனையும் பறிகொடுத்த சிவகாமியைத் தன் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வந்த போதே, 'இவள் இரண்டாந் தாரமாய்த்தான் வாழ்க்கைப்பட வேண்டியிருக்கும்' என்று லக்ஷ்மியம்மாள் நினைத்து விட்டாள். இடையில் பாலகிருஷ்ணனைப் பற்றி அவள் எண்ணிய எண்ணம் கானல் நீர் தானே! ஆகையினால் பொதுவாகப் பார்க்குமிடத்து, லக்ஷ்மியம்மாள் சந்தோஷமடைந்தாள் என்றே சொல்லவேண்டும்.

சிவகாமி? அவள் இதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை.

ராமநாதஞ் செட்டியார் இவ் விஷயத்தைக் கேள்விப்பட்டபோது, அதிக சந்தோஷமடைந்தார். சிவகாமியைப் பாலகிருஷ்ணனுக்குக் கலியாணம் செய்துவைக்க வேண்டும் என்ற எண்ணம் தன் சிறிய தயாருக்கு இருக்குமோ என்று அவர் பயந்ததுடன், தன்னுடைய தந்தைக்கும் அம்மாதிரி அபிப்பிராய மிருக்குமோ என்றும் அவர் சந்தேகித்தார். அதை உத்தேசித்துத்தான் அவர் தன்னுடைய மகனை அன்று எச்சரித்தார். ஆகையினால் சிவகாமிக்கு வேறு இடத்தில் கலியாணம் ஆவது அவருடைய அச்சத்தை நீக்கியது.

பாலகிருஷ்ணன்? இதைப் பற்றி அவனுடைய உள்ளக் கிடக்கை என்ன? அந்தச் சனியன் என்றைக்குத் தொலையும், தான் நிம்மதியாயிருக்கலாம் என்று தானே அவன் நினைத்துக் கொண்டிருக்கிறான்! ஆகையினால் அவனும் சந்தோஷம் அடையத்தானே வேண்டும்?

ஒரு நாள் அவன் ஏதோ நினைத்துக்கொண்டு மாடியில் உட்கார்ந்திருந்தான். படிப்பில் ஏனோ, அவன் மனம் செல்லவில்லை. சிவகாமி ஏதோ அலுவலாக மாடிக்கு வந்தாள். பாலகிருஷ்ணனுக்கு என்ன தோன்

றியதோ தெரியவில்லை. சட்டென்று எழுந்து சென்று, அவளை அணுகி, அவளுடைய கைகளைப் பிடித்தான். “காமு! உனக்குக் கலியாணமாமே! இன்னுஞ் சில தினங்களில் நீ உன் புருஷன் வீட்டிற்குப்போய் விடுவாய். அப்புறம்.........” என்று கொஞ்சுதலாய்ச் சொன்னான்.

“உன் ஆதரவும் வேண்டாம், உன் அடியும் வேண்டாம்” என்று சொல்லி வெடுக்கெனத் தன் கைகளைப் பிடுங்கிக் கொண்டு அவள் சென்று விட்டாள்!

அப்பொழுது பாலகிருஷ்ணனுக்கு என்ன தோன்றியது? அவன் என்ன நினைத்தான்?

## ஒன்பதாவது அத்தியாயம்

பகவான் செட்டியார் பேச்சுமாறிவிட்டார்! முன்னம் கலியாணத்தைப் பற்றி அவர் பேசிய பேச்சுக்களும், அதற்குப்பின் இப்பொழுது நடந்த நடவடிக்கைகளும் சுந்தரஞ் செட்டியாருக்கு ஞாபகம் வந்தன. சிவகாமிக்கு என்னென்ன நகைகள் மாப்பிள்ளைபோடுகிறார் என்பதைச் சுந்தரஞ் செட்டியார் லக்ஷ்மியம்மாளிடம் வெகு சுலபமாகவும் வெற்றிகரமாகவும் சொல்லிவிட்டார். ஆனால் பகவான் செட்டியாரை அதற்குச் சம்மதிக்க வைப்பதற்கு அவர் பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. கருப்பட்டி ஒப்பந்தம் சகாயமாகச் செய்து கொள்வதிலாவது அவருடைய வேதாந்த ஞானம் சிறிது உதவியது. இங்கே அது கூட அவருக்கு உதவாது போல் முதலில் தோன்றிற்று.

"உம்முடைய மனைவிக்குத் தானே ஐயா போடுகிறீர்? வேறு யாருக்குப் போடப் போகிறீர்" என்று சொன்னார் சுந்தரஞ் செட்டியார்.

அதற்கப்புறங்கூடப் பகவான் செட்டியார் சம்மதிக்கவில்லை. கடைசியில் அந்நகைகள் போடுவதற்குச் சம்மதிக்கா விட்டால், தான் கலியாணத்திற்கு இசைய முடியாதென்று சுந்தரஞ் செட்டியார் முறித்துக் கொண்டார். அதற்கப்புறந்தான் பகவான் செட்டியார் அரை மனதாய்ச் சம்மதித்தார். ஆனால் ஆசாமி மிகக் கரூரான பேர்வழி போலும்! "நகைகள் இன்னின்னவை என்று தீர்மானித்தது சரிதான். ஒவ்வொன்றும் இத்தனை பவுன் என்பதையும் இப்பொழுதே பேசிக் கொள்வோம். பின்னால் கலியாணவீட்டில் தகராறு ஏற்படக் கூடாதல்லவா?" என்றார்.

"புதிதாகவா நகைகள் செய்யப் போகிறீர்கள்? முதல் மனைவியின் நகைகளெல்லாம் இருக்குமல்லவா? அதைப் போட்டால் போதும்" என்றார் சுந்தரஞ் செட்டியார்.

"அவளுடைய நகைளெல்லாம் என் மகளுக்குத் தனியாக் எடுத்து வைத்து விட்டேன். அது ஒன்றையேனும் நான் தொடப் போவதில்லை. எல்லாம் இப்பொழுது புதிதாய்த்தான் செய்யவேண்டும்."

எத்தனை பவுனில் நகைகள் செய்யப்பட்டாலும், அதைப்பற்றி சுந்தரஞ் செட்டியாருக்குக் கவலை அதிகமில்லை. அத்தனை நகை போடுவதாகப் பெருமையாச் சொல்லி, லக்ஷ்மியம்மாளைக் கலியாணத்திற்குச் சம்மதிக்க வைக்க வேண்டும் என்பதுதான் அவருடைய நோக்கம். ஆயினும் வார்த்தையை விட்டுக் கொடுக்காமல், "உங்கள் மனைவிக்குச் செய்து போடுகிறீர்கள். நீங்கள் எப்படிச்

செய்தாலும் சரி. நன்ருய்ச் செய்தால் உங்களுக்குத் தானே பெருமையும், சந்தோஷமும்,'' என்ருர்.

"காசுமாலை பதினைந்து பவுன்களுக்குள் சுருக்க மாய்த்தான் செய்வேன்'' என்று கண்டிப்பாகப் பகவான் செட்டியார் கூறினர். இதற்குச் சுந்தரஞ் செட்டியார் சம்மதிக்க மாட்டாரோ என்று அவருக்குக் கவலை.

"சரி,'' என்ருர் சுந்தரஞ் செட்டியார்.

"பெரண்டைக்காய்ச் சங்கிலி இரண்டு சரங்கள் போடவேண்டும் என்றீர்கள். மூன்றும் மூன்றும் ஆறு பவுன் தான்''

"சரி.''

"மிளகு மணிமாலை இரண்டே பவுன்தான்!''

"சரி.''

"கலர்க்கல் மாலையும் அப்படித்தான்.''

"உங்களிஷ்டம் என்றுதான் சொல்லிவிட்டேனே!''

"எல்லாம் இப்பொழுதே பேசிக்கொண்டால்தான் நல்லது. பின்னல் கலியாண வீட்டில் நீங்கள் தகராறு செய்தால், நாலுபேர் பார்ப்பவர்களுக்கு நன்ருயிருக் காதல்லவா? நாலும் நாலும் எட்டுவளையல்கள் நாலே பவுன்தான்!''

"ஆசாரி கெட்டிக்காரனுயிருந்து, உங்களுக்கு இரண்டு பவுனில் செய்து கொடுத்தாலும் எனக்குச் சம்மதமே!''

"புதுவைரத் தோடுதான் போடுவேன். மூக்குத்தியும் அப்படியே.''

இவைகளில் எல்லாம் விட்டுக்கொடுத்த சுந்தரஞ் செட்டியாருக்குத் திடீரென்று ஒருயோசனை தோன்றியது. "நகைகளை எல்லாம் உங்களிஷ்டத்திற்கு விட்டுவிட்டேன். ஆனால் நிச்சய தாம்பூலப் புடவையையும், முகூர்த்தப் புடவையையும் என்னிஷ்டம்போல் நீங்கள் வாங்கவேண்டும்," என்றார்.

புடவையொன்று இருநூறு, மூன்னூறு ரூபாய்க்கு வாங்கவேண்டுமென்று சொல்லி விடுவாரோ என்று பகவான் செட்டியார் பயந்தார். ஆனால் சுந்தரஞ் செட்டியாருடைய கற்பனை அவ்வளவு தூரத்திற்குச் செல்லவில்லை.

"நிச்சயதாம்பூலப் புடவை எழுபத்தைந்து ரூபாய். முகூர்த்தப் புடவை ஐம்பது ரூபாய்!"

உங்களிஷ்டம் போலவே செய்து விடுவோம். இல்லையானால் நீங்கள் விடமாட்டீர்கள் போலிருக்கிறதே!" என்றார் பகவான் செட்டியார்.

இவைகளில் எல்லாம் விவாதம் சீக்கிரம் முடிந்து விட்டது. கலியாணச் செலவெல்லாம் பகவான் செட்டியாரைச் சேர்ந்தது என்று சொல்லப்பட்டது. அதையும் அவர் விசேஷமாய் ஆக்ஷேபிக்கவில்லை. ஆனால் கலியாணம் எங்கு நடத்துவது என்பதைப் பற்றித்தான் அதிகத் தகராறு ஏற்பட்டது. மாப்பிள்ளை வீட்டிலோ அல்லது தன்வீட்டிலோ நடத்தவேண்டும் என்பது சுந்தரஞ் செட்டியார் கக்ஷி.

"இரண்டாந்தாரந்தானே, ஆடம்பரமெல்லாம் எதற்கு? திருப்பரங்குன்றக் கோயிலில் சுருக்கமாகச் செய்து விடுவோம்" என்றார் பகவான் செட்டியார்.

தன்னுடைய சொந்தப் பிள்ளைகளின் கலியாணத்தைச் செய்து பார்ப்பதற்கு லக்ஷ்மியம்மாள் கொடுத்து

வைக்கவில்லை. தன் தங்கையின் மகள் கலியாணம் ஒன்று தான்அவள் சந்தோஷமாய்ச் செய்து பார்க்கப்போகிருள். அதையும் இப்படிக் கோயிலில் செய்வதற்கு அவள் சம்மதிக்கவே மாட்டாள் என்று சுந்தரஞ்செட்டியார் நிச்சயமாக நினைத்தார்.

"ஒருநாள் கலியாணமானாலும் சரி. உங்கள் வீட்டிலோ, அல்லது எங்கள் வீட்டிலோ வைத்துக்கொள்வோம். கோயிலில் செய்வதற்கு என் மனைவி சம்மதிக்க மாட்டாள்" என்று சுந்தரஞ்செட்டியார் சொன்னார்.

கடைசியில் வேறு வழியில்லாமல் அதற்கும் சம்மதிக்க நேர்ந்தது பகவான் செட்டியார். இவ் விஷயங்களில் எல்லாம் சுந்தரஞ் செட்டியாருக்குப் பூர்ண வெற்றி!

இவ்வளவு விஷயங்களையும் பேசி, சில்லறை விஷயங்களைக்கூடக் கண்டிப்பாகவும், கருராகவும் பேசிவிட்டு, பெண்ணைப் பார்த்துவிட்டுப் போனவர் இப்படி அடியோடு மாறிவிடுவாரென்று சுந்தரஞ் செட்டியார் நினைக்கவே இல்லை!

பகவான் செட்டியார் பேசின பேச்சு மாறி விட்டார்!

அந்த மனுஷரைச் சும்மா விடக்கூடாது! நாலு பேர்களுக்கு மத்தியில் அவர் மானத்தைப் போக்கிவிட வேண்டுமென்று சுந்தரஞ்செட்டியார் தீர்மானித்துக் கொண்டார். கலியாண வீட்டில் அதற்காக ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தார். நல்லவேளையாக ஒருசந்தர்ப்பமும் சீக்கிரமே வாய்த்தது. ஏழெட்டுப் பேர்களுடன் பகவான் செட்டியார் பேசிக் கொண்டிருந்தார். சுந்தரஞ் செட்டியார் உடனே அங்கு சென்று, "இவர் இப்படிப் பேச்சு மாறலாமா ஐயா? வாக்கு மாறினல் வகுசி மாறி விடும் என்றல்லவா சொல்வார்கள்! இவர் செய்தது நியாயமா?" எனத் திடீரென்று கேட்டார்.

பகவான் செட்டியார் திடுக்கிட்டுப் போனுர்! அவர் எவ்வகையில் வாக்கு மாறி விட்டார்?

"பதினைந்து பவுனில் காசு மாலை செய்வதாகப் பேசிவிட்டு, ஐம்பது பவுனில் பவுன் மாலையாக இவரை யாரையா செய்யச் சொன்னது? அதைச் சுமக்க மாட்டாமல், என் பெண்ணினுடைய கழுத்தல்லவா புண்ணாய்ப் போய்விட்டது?" என்று சொல்லிச் சுந்தரஞ் செட்டியார் புன்முறுவல் செய்தார்.

எல்லோரும் சிரித்தார்கள்.

பேசினது பேசியபடி ஒன்ருவது செய்திருக்கிருரா என்று கேளுங்கள். சங்கிலி ஆறு பவுனில் செய்வதாகப் பேச்சு. அது பத்துப் பவுன், மிளகு மணி மாலையும், கலர்க்கல் மாலையும் நாலு பவுனிலே பண்ணி விடுகிறேன் என்ருர். அவை இரண்டும் பன்னிரண்டு பவுன். புது வைரத் தோடு தான் போடுவதாகச் சொன்னுர். இப்பொழுது அசல் வைரத் தோடு வாங்கியிருக்கிருர். ஒவ்வொன்ருய்ச் சொல்வானேன்? ஒன்ருவது சொன்னபடி செய்யவில்லை!

யாவரும் சிரித்தனர்.

"பெண்ணைப் பார்த்து விட்டுத்தான், ஐயா, இப்படிச் சொன்ன சொல் தவறி விட்டார். பெண்ணைப் பார்க்குமாறு இவரை விட்டது பிசகாய்ப் போச்சு!" என்ருர் சுந்தரஞ் செட்டியார்.

எல்லோரும் குலுங்கக் குலுங்கச் சிரித்தனர். கலியாணவீட்டில் அது நல்ல தமாஷாயிருந்தது. பகவான் செட்டியாருக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. இப்படித் தன் மானத்தைக் கெடுப்பாரென்று அவர் எதிர்பார்க்கவில்லை.

"என்னைக் கேலி பண்ணுவதற்கு மச்சினன் இல்லை என்று மாமா கேலி செய்கிறார். செய்து விட்டுப் போகட்டுமே!'' என்றார் பகவான் செட்டியார்.

ஹாஸ்யம் மேலும் தொடரப்பட்டது.

"ஒரு நாள் கலியாணம் என்று நினைத்துக் கொண்டு, என் அலுவல்களை எல்லாம் அப்படி, அப்படியே போட்டு விட்டு வந்திருக்கும் போது, ஐந்துநாட்களுக்குக் கலியாணத்தை வைத்துக்கொண்டு, என்னைப் போகவிட மாட்டேன் என்கிறாரே. என் காரியங்களெல்லாம் கெட்டுப் போகுமே, அதற்கு யாரையா ஜவாப்தாரி?'' என்று கலியாணத்திற்கு வந்திருந்த ஒருவர் கேட்டார்.

லக்ஷ்மியம்மாளுக்கும் பகவான் செட்டியார் மீது ஒரு குறை இருந்தது. தான் போட்டது என்று பெயர் சொல்வதற்கு ஏதாவது சில நகைகள் தன் மகளுக்குச் செய்து போட வேண்டுமென்று அவளுக்கு ஆசை. அதற்கு இடமே வைத்திருக்கவில்லை, அவளுடைய மருமகன். முகூர்த்த நெல் சேலை, நாலா நீர்ச்சேலை என்று சில நல்ல புடவைகளையாவது எடுத்துக் கொடுக்கலாம் என்று நினைத்து அவள் வாங்கி வைத்திருந்தாள். இவ் விஷயத்தில் சுந்தரஞ் செட்டியாரும் அவளுடைய இஷ்டப்படியே விட்டிருந்தார். ஆனால் பகவான் செட்டியார் எடுத்திருந்த விலையுயர்ந்த பட்டுப் புடவைகளிடையே, லக்ஷ்மி யம்மாள் எடுத்திருந்தவை சிறிது கூடச் சோபிக்கவில்லை.

திருநெல்வேலியில் சிவகாமியின் மாப்பிள்ளை வீட்டைப் பார்த்தபோது லக்ஷ்மிக்குச் சந்தோஷம் தாங்கமுடியவில்லை. மாடுகளும் கன்றுகளும், கூடமும் மாடியுமாயிருந்ததைக் கண்டுப் பூரித்துப் போனாள். ஒரு பெரிய அறை முழுவதும் நெல் மூட்டைகள் அடுக்கப்

பட்டிருந்தன. சிவகாமிக்கு இத்தகைய பாக்கியங்கள் எல்லாம் கிடைக்குமென்று அவள் நினைக்கவே இல்லை.

"சிவகாமி அதிர்ஷ்டக்காரிதான்!" என்ருள் கலியாணத்திற்கு வந்திருந்த ஒருத்தி.

"அதிர்ஷ்டக்காரிதான். இல்லையென்று யார் சொன்னது? ஆனுல் மாப்பிள்ளைதான்........." என்று இன்னெருத்தி ஆரம்பித்தாள்.

"மாப்பிள்ளைக்கு என்ன? மன்மதன் மாதிரி இருக்கிருர்," என்று இரண்டு மூன்று பேர் சேர்ந்தாற்போல் சொன்னுர்கள்.

அவள் அப்படியே அடங்கிவிட்டாள்.

சுந்தரஞ் செட்டியார் கடையிலிருந்த வேலைக்காரர் சிலரும் கலியாணத்திற்கு வந்திருந்தனர். அவர்களுக்கெல்லாம் பகவான் செட்டியார் புதுவேஷ்டியும், புது அங்கவஸ்திரமும் வாங்கிக் கொடுத்தார். அவர்களுக்கும் பரமசந்தோஷம்!

பகவான் செட்டியாரை அப்படி மயக்கி விட்டாள் சிவகாமி!

பட்டும் பணியும், பொட்டும் பூவுமாய்ச் சிவகாமியைப் பார்த்தபோது, சுந்தரஞ் செட்டியாருக்குக்கூட ஒரு சபலம் தோன்றியது அவருக்கென்ன சபலம்?

இங்ஙனம் எல்லாருக்கும் சந்தோஷமா யிருந்தது சரிதான். ஆனுல் சிவகாமிக்கு?

ஏன், சிவகாமிக்கும் மிகுந்த திருப்திதான். பகவான் செட்டியார் ஒரு சங்கீதக் கச்சேரியும் வைத்து விட்டார்! தன்னுடைய கலியாணம் இவ்வளவு சிறப்பாக நடக்குமென்று அவள் கனவிலும் கருதவில்லை. வீட்டிலிருந்த கட்டில்களையும், மெத்தைகளையும், நாற்காலிகளையும்

பார்த்தபோது, அவளுக்கு மட்டற்ற மகிழ்ச்சி உண்டாயிற்று. அத்தனை செல்வங்களும் இனி அவளுடையவை!

திருமணப் பத்திரிகை அச்சிடுவதாக முதலில் நினைப்பில்லை. ஆனால் ஒரு குறையுமிருக்கலாகாதென்று, பகவான் செட்டியார் அதையும் அச்சிட்டுப் பந்து மித்திரர்களுக்கு வழங்கி இருந்தார்.

இவ்வளவு விமரிசைகளுடன் பகவான் செட்டியாருக்கும் சிவகாமிக்கும் திருமணம் நிறைவேறியது!

## பத்தாவது அத்தியாயம்

சிவகாமிக்குத் 'திருமணம்' ஆகிவிட்டது. பகவான் செட்டியாருக்கு அவள் வாழ்க்கைப் பட்டுவிட்டாள். இனி அவருக்கு வேண்டிய பணிவிடைகள் செய்து அவருக்கு வாழ்க்கைத் துணைவியாக இருக்க வேண்டியதே அவளுடைய கடமை.

அத் 'திருமண'த்தில் சம்பந்தப்பட்ட யாவருக்கும் அது திருப்தியே அளித்தது. அதைப் பற்றிய பேச்சு முதலாவது வந்தபோது, பாலகிருஷ்ணனுக்கும் அது திருப்திகரமாகவே தோன்றியது. ஆனால் பின்பு அவனுடைய மனோநிலை மாறுபடத் தொடங்கியது. அதைப் பற்றி நினைக்க நினைக்க, அவனுக்கு எப்படியோ இருந்தது.

இரண்டாங் கலியாணமாயிருந்த போதிலும், மறுவிடு, ஆடிக்கழைத்தல் முதலிய சடங்குகளை எல்லாம் லக்ஷ்மியம்மாள் விமரிசையாக நடத்தினாள். ஆடிக்கு வந்த சிவகாமி, தான் வளர்ந்த வீட்டில் சில நாட்களிருந்து விட்டுக் கணவனுடன் புக்ககத்திற்குச் சென்றுவிட்டாள்.

பாலகிருஷ்ணனுடைய வாழ்க்கைப் பாதையில் முதன் முதல் அவள் குறுக்கிட்ட காலத்திலிருந்து, அவன் அவளைப் பல நாட்கள் சேர்ந்தாற்போல் பார்க்காமலிருப்பது இதுதான் முதல் தடவை. அவள் அவனுடைய வாழ்க்கையில் எவ்வளவு பெரிய பங்கு எடுத்து வந்திருக்கிறாள், அவனுடைய சுக வாழ்க்கைக்கு அவள் எவ்வளவு தூரம் இன்றியமையாதவள் என்பதை இப்போதுதான் அவன் உணரவாரம்பித்தான். சிவகாமியின் கலியாணத்தைப் பற்றிக் கேள்விப்பட்டவுடன், அன்று மாடியில் நடந்த சம்பவமானது க்ஷணநேரத் தூண்டுதலின் பேரில் நடந்த தொன்றல்ல, அவனுடைய உள்ளத்தில் ஆழமாகப் பதிந்த ஓர் உணர்ச்சியின் பிரதிபலிப்பே ஆகும் என்பதும் அவனுக்கு விளங்கியது. ஆகையினால் அவனுடைய மனத்தில் ஏக்கம் குடி கொள்ளலாயிற்று.

இவ்வாறு சிவகாமிக்காக ஏங்கினவன் பாலகிருஷ்ணன் மட்டுமல்ல. கணவன் வீட்டுக்குச் சிவகாமி சென்று ஏறக்குறைய ஒருமாத காலமாயிற்று. லக்ஷ்மியம்மாளுக்குத் தன் மகளைப் பிரிந்து எத்தனையோ மாதங்களானது போல் தோன்றியது. மகளது பிரிவைச் சகிக்கமாட்டாமல், லக்ஷ்மியம்மாள் ஒருநாள் திருநெல்வேலிக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டாள்.

மருமகனின் உபசாரங் காரணமோ, அல்லது மகள் மீது கொண்ட பிரியம் காரணமோ, திருநெல்வேலிக்குச் சென்ற லக்ஷ்மியம்மாள் சீக்கிரம் திரும்பவில்லை. பாட்டியின் வரவை ஒவ்வொரு நாளும் பாலகிருஷ்ணன் எதிர் பார்த்துக்கொண்டிருந்தான். முன்னம் ஒரு முறை இம் மாதிரி பாட்டியின் வரவை மிகுந்த ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருந்ததுண்டு. ஆனால் அதற்கும் இப் பொழுது அவன் எதிர்பார்த்ததற்கும் அதிக வித்தியாச முண்டு.

"பாட்டி போய் வெகு நாளாச்சே. இன்னும் வரக் காணுமே" என்று பல முறை தாத்தாவினிடம் அவன் தெரிவித்தான்.

"சீக்கிரம் வரச்சொல்லி ஒரு கடிதம் எழுதட்டுமா, தாத்தா" என்றும் ஒரு நாள் கேட்டான்.

இவ்வாறு அவன் தன்னுடைய ஆத்திரத்தைக் காட்டியதற்குப் பாட்டியின்மீது கொண்ட அன்பு மட்டுங் காரணமல்ல என்பதைச் சுந்தரஞ்செட்டியார் உணர்ந்தார். ஆனால் இப்பொழுது என்ன செய்ய முடியும்? காரியம் மிஞ்சிப்போய் விட்டதல்லவா?

பாலகிருஷ்ணன் தாயில்லாப் பிள்ளையாக வளர்ந்தவனுகையால், காலா காலத்தில் அவன் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்படவில்லை. ஆகையினுல் அவன் புத்தி நுட்பம் வாய்ந்தவனுயிருந்த போதிலும், பதினெட்டாவது வயதில் பத்தாவது வகுப்பில்தான் படித்துக் கொண்டிருந்தான். ஒருநாள் அவன் பள்ளிக்கூடத்திலிருந்து வந்து வீட்டிற்குள் நுழைந்தபோது, பாட்டி வந்திருப்பதைக் கண்டான். பாட்டியைக் கண்டதும், "சிவகாமி சுகமாயிருக்கிருளா, பாட்டி" என்று கேட்க வேண்டுமெனத்தான் அவனுக்குத் தோன்றியது. ஆனுல் அம்மாதிரி கேட்க அவனுக்கு சங்கோசமாக இருந்தது. மேலும் அவள் தன் வீட்டிலிருந்த காலமெல்லாம், அவளைப் பல வகைகளிலுந் துன்புறுத்தி விட்டு,இப்பொழுது அவளுடைய க்ஷேமலாபங்களைப்பற்றி விசாரித்தால், அது விபரீதமாய்த் தோன்றும் எனவும் அவன் நினைத்திருக்கலாம். ஆகையினுல் பொதுவாக, "அங்கு எல்லோரும் சௌகரியமா யிருக்கிருர்களா, பாட்டி?" என்று பொதுப்படையாகக் கேட்டான்.

"எல்லாரும் சௌகரியந் தாண்டாப்பா" என்ருள் லக்ஷ்மியம்மாள்.

மேலும் அக்கேள்வியைக் கேட்பதில் அவனுக்கு இன்னொரு நோக்கமுமிருந்தது. வீட்டில் பாட்டியைக் கண்டவுடன், அவனுடைய கண்கள் அவசர, அவசரமாக நாலாபுறங்களிலும் துளாவ ஆரம்பித்தன. வெகுநாட்களாகியும் இன்னும் பாட்டியைக் காணுமே என்று அவன் வருந்தியபோதெல்லாம், பாட்டியின் வருகைக்காக மட்டும் அவன் ஏங்கவில்லை. பாட்டியுடன் ஒருவேளை சிவகாமியும் வரலாம் என்ற தூர நம்பிக்கை அவனுக்கிருந்தது. அவளும் வந்திருக்கிறாளா என்பதைச் சீக்கிரம் அறிந்து கொள்வதற்காகவே அக் கேள்வியைக் கேட்டான். அவள் வரவில்லை என்பதைப் பாட்டியினுடைய பதில் அவனுக்குத் தெரிவித்தது.

சிவகாமியைப் பற்றிப் பல விஷயங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று பாலகிருஷ்ணனுடைய உள்ளந் துடித்தது. ஆனால் எப்படிக் கேட்பான்? கேட்க அவனுக்கு உரிமை உண்டா?

பெண்களின் வாய் பேசாமலிருக்காது! அன்றிரவு சாப்பாட்டிற்குப்பின் லக்ஷ்மியம்மாள் தன் கணவனுக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்துக்கொண்டே தானும்போட்டுக்கொண்டு, சுந்தரஞ் செட்டியாரிடம் திருநெல்வேலிச் சங்கதிகளை ஒவ்வொன்றாய்ச் சொல்ல வாரம்பித்தாள். லக்ஷ்மியம்மாள் திருநெல்வேலிக்குப் போனதன் நோக்கம் தன் மகளைப் பார்க்கவேண்டும் என்பதற்காக மட்டுமில்லை. சிவகாமி தன் கணவனுடன் எப்படிக் குடித்தனம் செய்கிறாள், சந்தோஷமாயிருக்கிறாளா என்று பார்ப்பதும் அவளுடைய நோக்கமாயிருந்தது. ஆகையினால்தான் அங்கு ஒரு மாதத்திற்கு மேலேயே தங்கியிருந்துவிட்டாள்.

"ஏது லக்ஷ்மி, மகள் வீட்டில் ஒரேயடியாய் 'டேரா' அடித்துவிட்டாயே!" என்றார் சுந்தரஞ் செட்டியார்.

"அவள் குடித்தனஞ் செய்கிற லக்ஷணத்தைப் பார்க்க வேண்டுமல்லவா? அதற்காகத்தான் இருந்தேன்" என்ருள் லக்ஷ்மி.

"சந்தோஷமா யிருக்கிருளல்லவா ?"

"சந்தோஷத்திற்கென்ன குறை ?"

"புருஷன் மனப்படி நடந்து கொள்ளுகிருளா ?"

"அவள் மட்டுமல்ல, அவரும் அவள் மனப்படியே நடந்து கொள்கிருர்."

"அவர் அவள் மனப்படி நடப்பதில் என்ன அதிசய மிருக்கிறது? அவர்தான் உன் மகளுடைய அழகில் சொக்கிக் கிடக்கிருரே!"

"இந்த வேடிக்கையைக் கேளுங்கள். ஒருநாள் காய்கறி என்னென்ன வாங்கி அனுப்பட்டும்?" என்று அவர் கேட்டார். "பாவக்காய் தவிர வேறு எது விற்ருலும் வாங்கி அனுப்புங்கள்" என்று அவள் சொல்லிவிட்டாள். எனக்கு அது அதிசயமாயிருந்தது. அவர் சென்ற பின், "ஏண்டீ சிவகாமி, உனக்குப் பாவக்காய் என்ருல் பிரியமாச்சே, ஏன் அது வேண்டாம் என்ருய்?" எனக்கேட்டேன். "அது அவருக்குப் பிடிக்காதம்மா" என்ருள். இப்படி இவ்வளவு சீக்கிரத்தில் கணவருடைய விருப்பு, வெறுப்புக்களை அவள் அறிந்துகொண்டு நடந்தது எனக்கு ஆச்சரியமாயிருந்தது. ஆனுல் அன்று வாங்கிக்கொண்டுவரப்பட்ட காய்கறிகளில் பாவற்காய்தான் அதிகமாயிருந்ததைக் கண்டதும் என்னுடைய ஆச்சரியம் அதிகரித்தது!" என்ருள் லக்ஷ்மியம்மாள்.

"மகளுக்குக் கிடைத்த மாப்பிள்ளையைப்பற்றி உனக்குத் திருப்திதானே லக்ஷ்மி!" என்று கேட்டார் சுந்தரஞ் செட்டியார்.

"திருப்திக் கென்ன கேட்கவா வேண்டும்? அதை நினைத்துப் பார்த்தால் எனக்குச் சிரிப்பாய் வருகிறது!" என்று அவளுக்கு ஞாபகம் வந்த இன்னொரு சம்பவத்தை பற்றிக் கூறவாரம்பித்தாள். "ஒருநாளிரவு வெகு நேரம் வரைக்கும் சிவகாமி என்னுடன் பேசிக்கொண்டிருந்து விட்டாள். அவளுடைய மாப்பிள்ளை வெளியில் வந்து, பார்த்துவிட்டுப் போனார். பிறகு, 'சிவகாமி, தண்ணீர் கொண்டுவா என்று' சொன்னார். உடனே அவசர, அவசர மாகச் சிவகாமி எழுந்து சென்றாள். "தண்ணீர் கொண்டு போடீ! தண்ணீர் கேட்டாரே" என்று நான் சொன்னேன். "அவருக்கு வேண்டியது தண்ணீரில்லை அம்மா!" என்று சொல்லி விட்டுப் போய்ப் படுக்கையறையைத் தாளிட்டுக் கொண்டாள்!"

இதைச் சொல்லிவிட்டு லக்ஷ்மியம்மாள் சிரிக்க வாரம்பித்தாள்.

இதை எல்லாங் கேட்டபோது, சுந்தரஞ் செட்டியாருக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. "உங்கள் வமிசத்திற்கே இரண்டாந்தாரத்து மாப்பிள்ளைதான் தலையில் எழுதியதோ?" என்று குத்தலாகக் கேட்டார்.

"ஏன், இப்பேர்ப்பட்ட பெண்ணை உங்கள் பேரனுக்குக் கலியாணம் பண்ணி வைத்தோம் இல்லையே, என்று இப்பொழுது அடித்துக் கொள்கிறதாக்கும்? என்று லக்ஷ்மியம்மாள் கேட்டாள்.

"எனக்கு மட்டுந்தான் பேரன், உனக்கில்லையா? அவனுக்கு நல்லபெண்ணைப் பார்த்துக்கட்டும் உரிமை உனக்கும் இருக்கிறதல்லவா? சிவகாமி நல்ல பெண். நம்ம பாலகிருஷ்ணனுக்கேதான் கட்டவேண்டும் என்று நீ ஏன் சொல்லவில்லை?"

"அவன்தான் பூனையைக் கண்ட நாய்போல் சீறிக் கொண்டிருந்தானே. நான் எப்படிச் சொல்வேன்?"

பாலகிருஷ்ணன் பக்கத்திலேயேதான் படுத்துக் கொண்டு, இவைகளை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தான்.

லக்ஷ்மியம்மாள் மேலுஞ் சொல்லலுற்றாள். "உங்கள் வம்சந்தான் உறவினரோடு ஒட்டாத வம்சம். எங்களுக்கு எப்போதும் சொந்தக்காரர் மீது பாந்தவ்யமுண்டு. இவன் அவளை எப்படி எல்லாம் படுத்திவைத்தான்? வேறொருத்தியாயிருந்தால் இந்தப்பக்கங்கூடத் தலை வைத்துப்படுக்க மாட்டாள். இப்பொழுது நான் அங்கு போனதும் முதன் முதலில் 'அண்ணன் சுகமாயிருக்கிறதா?' என்று அவள் கேட்டதைப் பார்த்ததும் எனக்குக்கூட ஆச்சரியமாய்ப் போய் விட்டது. இவனைப் பற்றிப் பேசினால் அவளுக்கு எத்தனை ஆனந்தம் தெரியுமா?" என்று கேட்டாள் லக்ஷ்மியம்மாள்.

"அவளைப் பற்றிப் பேசும்போது எனக்கு இப்பொழுது ஆனந்தம் ஏற்படுகிறதே, அது போலவா?" என்று பாலகிருஷ்ணன் தனக்குள் நினைத்துக்கொண்டான்.

லக்ஷ்மியம்மாள் மேலும் பேசினாள். "அண்ணன் இப்பொழுது பத்தாவது வகுப்பிலா படித்துக் கொண்டிருக்கிறது? பத்தாவது பாஸ் பண்ணினவுடன் மேல்படிப்புக்கு அனுப்பத்தானே? ஏன், இங்கே அனுப்பினால் என்ன? எங்கள் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டு, காலேஜில் படித்துக் கொண்டிருக்கலாம் அல்லவா? என்கிறாள். அவளுக்கு எவ்வளவு வாஞ்சை இருக்கிறது? நான் இங்கே வந்தேனே, அவளைப்பற்றி இந்தப் பயல் ஒரு வார்த்தை கேட்டானா?" என்றாள் லக்ஷ்மியம்மாள்.

"அவனுக்கும் வாஞ்சை இல்லாமலில்லை. இருக்கத் தான் செய்கிறது. சரி, போய்ப்படுத்துக்கொள். வெகுநேர மாச்சு" என்று சுந்தரஞ் செட்டியார் ஏனோ, இக்கட்டம் வந்தவுடன் திடீரென்று பேச்சை முடித்து விட்டார்.

லக்ஷ்மியம்மாளின் கடைசி வார்த்தைகளைக் கேட்ட போது பாலகிருஷ்ணனின் உள்ளத்தில் உவகைபூத்தது. 'சிவகாமி என்னைப்பற்றிக் கேட்டாளாமே! என்னைப்பற் றிப் பேசினுல் அவளுக்கு ஆனந்தமாமே! அதன் தாத்பரி யம் என்ன?' என்று அவன் யோசிக்கலானுன். யோசிக்க, யோசிக்க அவனுடைய மூளை குழம்பவே ஆரம்பித்தது.

## பதினொன்ருவது அத்தியாயம்

சுந்தரஞ் செட்டியார் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்.

"கலியாணத்திற்கப்புறம் பெண்ணையும் மாப்பிள்ளை யையும், ஆடிக்கு அழைத்துவந்தது தவிர வேறு ஒன்றுமே நாம் செய்யவில்லையே. சிவகாமியை மட்டும் ஒரு வழி கூட்டிக் கொண்டுவந்து ஒரு மாதமாவது வைத்திருந்து அனுப்பவேண்டுமென்று எனக்கு ஆசையாயிருக்கிறது" என்ருள் லக்ஷ்மியம்மாள்.

"நன்ருயிருக்கிறது!" என்று சுந்தரஞ் செட்டியார் புன்முறுவலுடன் கூறினுர்.

"நன்ருயில்லாமல் என்ன? என் மக்களிருந்தால், நான் எல்லாம் செய்வேனல்லவா? நான் சிவகாமியைக் கூட்டிக் கொண்டு வரத்தான் செய்வேன், அதோடில்லை. அவளுக்கு ஏதாவது செய்தும் அனுப்புவேன்" என்று லக்ஷ்மியம்மாள் கோபத்துடனும் பிடிவாதத்துடனும் சொன்னுள்.

"போதாது. மேலும் வேண்டும்!" என்று சுந்தரஞ் செட்டியார் பின்னும் புன்முறுவலுடன் கூறினர்.

"இதுவரைக்கும் செய்ததெல்லாம் போதாதுதான். மேலும் செய்யத்தான் வேண்டும். நான் செய்யத்தான் செய்வேன். என்னை யார் தடுக்கிறதென்று பார்க்கலாம்" என்ருள் லக்ஷ்மியம்மாள். சிவகாமிக்குச் செய்வதைத் தன்னுடைய கணவன்கூடத் தடுக்கவாரம்பித்துவிட்டார் என்று அவளுக்குக் கோபம் பொறுக்க முடியவில்லை.

சுந்தரஞ் செட்டியார் கடகடவென்று சிரித்தார். "நீ செய்திருக்கும் மைசூர்ப்பாகு நன்ருயிருக்கிறது. தாம்பாளத்தில் வைத்த இரண்டு மைசூர்ப் பாகையும் தின்றுவிட்டேன். மேலும் வேண்டும் கொண்டு வா என்று சொன்னல், மைசூர்ப்பாகும் கொண்டுவராமல் நான் ஒன்றைச் சொன்னல், நீ ஒன்றை நினைத்துக் கொண்டு ஏன் இப்படிக் கூத்தாடுகின்ருய் லக்ஷ்மி?" என்று சொல்லிச் சுந்தரஞ் செட்டியார் மேலுஞ் சிரித்தார், அவருக்கு முன்னலிருந்த வெள்ளித் தாம்பாளம் காலியாயிருந்தது. அவருக்கு வைக்கப்பட்ட இரண்டு மைசூர்ப்பாகுகளையும் அவர் தின்று முடித்துவிட்டார்!

லக்ஷ்மியம்மாள் சிரித்துக்கொண்டே இன்னெரு மைசூர்ப்பாகைக் கொண்டுவந்து தாம்பாளத்தில் வைத்து விட்டு, "என்னுடைய சமையல் திறமையை மெச்சினது போதும். நான் சொன்ன விஷயம் என்ன? அதற்கு என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"நான் சொல்வதென்ன? அவசியம் கூட்டிக்கொண்டு வரவேண்டியதுதான். அவள் தன் கணவன் வீட்டிற்குச் சென்றும் அநேக மாதங்கள் ஆகின்றன அல்லவா?" என்ருர்.

"நம்முடைய பெண்ணுக்கு நாம் ஆசையார என்னமாவது செய்வோமென்று நினைத்தால், உங்கள் மாப்பிள்ளை அதற்கு இடங்கொடுக்காமல் வைத்துவிடுகிறாரே!"

"அவர் செய்தால், நீ செய்யக்கூடாதென்று இருக்கிறதா? நீயும் உன் இஷ்டப்படி செய்யேன்? அதனால் என்ன கெட்டுப்போகிறது?"

"அவளைக் கூட்டிக்கொண்டு வருவதில் எனக்கு இன்னொரு கவலையுமுண்டு. நம்ம பாலகிருஷ்ணன் பயல் எப்படி நடந்துகொள்கிறானோ? அதுவல்லவா எனக்குப் பயமாயிருக்கிறது."

"என்ன பயம்?" என்று செட்டியார் கேட்டார்.

"முன்பு அவள் இங்கிருக்கும்போது 'கர்புர்' என்று முறைத்துக்கொண்டிருந்தானே, இப்பொழுதும் அப்படி இருந்தால் என்ன செய்வது? முந்தித்தான் அவள் தலைவிதியே என்று இவன் கொடுமைகளை எல்லாம் மௌனமாகப் பொறுத்துக் கொண்டிருந்தாள். இப்பொழுது அவள் பொறுத்துக் கொண்டிருப்பாளா? அவளும் ஏதாவது எதிர்த்துப் பேசினால் என்னசெய்வது? வீடு ரணகளமாய்ப் போய்விடுமல்லவா? பார்ப்பவர்கள் சிரிக்க மாட்டார்களா?" என்று லக்ஷ்மியம்மாள் சொன்னாள்.

"எனக்கு இப்போது அந்தப் பயமில்லை" என்றார் செட்டியார்.

அவர் சொல்வதைக் கவனியாமல், லக்ஷ்மியம்மாள் மேலும் சொல்லலுற்றாள். "என் சொத்தைத் தின்பதற்கு மறுபடியும் வந்துவிட்டாளே என்று வயிறு எரிவான் அல்லவா? உங்கள் வம்சத்தைப்போல் பொறாமை பிடித்தவர்களை எங்குமே பார்க்க முடியாது. நாங்கள் எல்லாம் உங்களைப்போல் இப்படியா மனுஷர் ஆகாதென்கிறோம்?" என்று கேட்டாள்,

"பொருள் இருந்தால்தானே பொருமைப் படுவதற்கு? உங்களுக்கெல்லாம் என்ன இருக்கிறது? அது போய்விடுமே என்று நீங்கள் பொருமைப்படப் போகிறீர்கள்?" என்று சுந்தரஞ் செட்டியார் சிரித்துக் கொண்டே கேட்டார்.

"எங்களிடம் அழகிருக்கிறது, குணமிருக்கிறது. அதெல்லாம் பொருளில்லையா? உங்களிடமிருக்கும் ரூபாயும் அணவுந்தான் பொருளாக்கும்?" என்று லக்ஷ்மியம்மாள் சிரித்துக்கொண்டே கேட்டாள். அந்தச்சமயம் வியர்த்து விறுவிறுத்து, மிகுந்த களைப்புடன் பாலகிருஷ்ணன் வீட்டிற்குள் நுழைந்தான்.

"என்னடா இத்தனை வியர்வையும், களைப்பும்? எங்கடா இவ்வளவு நேரமாய்ப் போயிருந்தாய்?" என்று சொல்லிக்கொண்டே அவனுக்கு ஒரு தட்டில் மைசூர்ப் பாகு கொண்டுவந்து கொடுத்தாள்.

அன்று மாலை பாலகிருஷ்ணனுடைய பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த கால்பந்தாட்டக் கக்ஷிக்கும், பக்கத்திலிருந்த இன்னொரு ஊரிலுள்ள பள்ளிக்கூடத்திற்கும் கால்பந்தாட்டப் போட்டி நடந்தது. பாலகிருஷ்ணன் தான் அவனுடைய கக்ஷிக்குத் தலைவன். முன்னணி வரிசையின் மத்தியிலிருந்து விளையாடினன். எப்பொழுதும் நன்ருய் விளையாடுகிற அவனுக்கு ஏனே அன்று ஒரு அடியேனும் சரியாய்ப் பிடிக்கவில்லை. அவன் ஒரு குறியை நோக்கிப் பந்தை அடித்தான் என்ருல் அது இன்னொரு பக்கம் சென்றது. அல்லது எதிர்க் கக்ஷிக்காரன் ஒருவன் வந்து அதைத் தடுத்துவிடுவான். ஆகையினுல் அன்று அவனுடைய கக்ஷி தோற்றுவிட்டது. அவன் செய்த தவறுகளினுல் தான் அன்று தோல்வி ஏற்பட்டதென்று எல்லோரும் அவனைக் குறை கூறினர்கள். தோல்வியி

ஞல் ஏற்பட்டிருந்த ரோஷத்தினுல், அடுத்தவாரமே மீண்டும் ஒரு போட்டி விளையாட்டிற்கு வரவேண்டும் என்று எதிர்க் கக்ஷியினருக்குப் பாலகிருஷ்ணன் ஒரு சவால் விட்டிருந்தான்.

விளையாட்டில் ஏற்பட்ட தோல்வியினுல் அவன் அன்று வீட்டிற்கு வந்தபொழுது, அவனுடைய மனம் உற்சாகங் குன்றியிருந்தது. பாட்டி அவனுக்கு முன்னுல் கொண்டுவந்து வைத்த மைசூர்ப்பாகுகள் சிறிது ஆறுதல் அளித்தனவோ என்னவோ, அவைகளை அவன் ஆவலுடன் தின்றுகொண்டிருந்தான்.

"ஏண்டாப்பா பாலு, சிவகாமியைக் கூட்டிக் கொண்டு வந்து இங்கு ஒரு மாதம் வைத்திருந்து அனுப்பலாம் என்றிருக்கிறேன். உன்னுடைய அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டாள் லக்ஷ்மியம்மாள்.

"என்னை என்ன கேட்பது? உனக்கு இஷ்டமானுல் கூட்டிக்கொண்டு வரவேண்டியதுதானே?" என்ருன் பாலகிருஷ்ணன்.

"உன்னுடைய மனதிலிருப்பதையும் சொல்லேன்."

"உனக்கு இஷ்டமானுல் கூட்டிக்கொண்டு வர வேண்டியது. இல்லையானுல் வேண்டாம். என்னை ஏன் கேட்கிருய்?" என்று பாலகிருஷ்ணன் கூறினுன். இப்படி வேண்டா வெறுப்பாய்ப் பேசுவதுதான் நலம் என்று அவன் நினைத்தான்.

மைசூர்ப்பாகுகள் அவனுடைய உற்சாகக் குறைவைப் போக்கினவோ இல்லையோ. ஆனுல் பாட்டி கேட்ட இந்த கேள்வி அவனை நிச்சயமாக உற்சாகப் படுத்தியது. அதில் அடங்கியிருந்த விஷயத்தைப்பற்றி அவனுடைய

உள்ளம் ஆலோசிக்க வாரம்பித்தது. மீண்டும் சிவகாமியைச் சந்திக்க அவனுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கப் போகிறது. அவன் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? அவள் எப்படி இருப்பாள் என்றெல்லாம் பாலகிருஷ்ணன் தன் மனதைக் குழப்பிக்கொண்டிருந்தான்.

அவன் அம்மாதிரி எண்ணிக்கொண்டிருக்கையில் லக்ஷ்மியம்மாளின் எண்ணங்கள் வேறு விதமாய்ச் சென்றன. பாலகிருஷ்ணன் அளித்த பதில் அவளுக்குத் திருப்தி அளிக்கவில்லை. அவள் பார்வைக்குத் தன் தங்கையின் மகளுக்குச் சீர் சிறப்புக்கள் செய்வதிலும் அவள்மீது அன்பு செலுத்துவதிலும் பிடிவாதமாயிருப்பதுபோல் காட்டிக்கொண்டாலும், உண்மையில் ஒரு சிறு தடைகூட அவளுடைய மனதைத் துன்புறுத்தியது. இயற்கையிலேயே அவளுடைய மனது மிகச் சுலபமாகப் புண்படும் இயல்புடையது. ஆகையினுல் அவள் சிவகாமியைக் கூட்டிக்கொண்டு வருவது பாலகிருஷ்ணனுக்கு விருப்பமில்லை என்றும், அதை வெளிப்படையாகக் காட்ட மனமில்லாமல்தான் அதைப்பற்றி நேரடியான அபிப்பிராயம் சொல்லாமல் தட்டிக்கழிக்கிருன் என்றும் அவள் நினைத்தாள்.

"நான் ஏன் இன்னொருத்தி மகளை இங்கே கூட்டிக் கொண்டு வரவேண்டும்? ஆண்டவன் கிருபையில் இப்பொழுது அவள் ஒருவர் வீட்டுச் சோற்றுக்கு ஏமாந்து கிடக்கவில்லை. அவளுக்கு அங்கே இருக்கும் செல்வமும் சிறப்பும் எனக்குக்கூட கிடைக்கவில்லை. எனக்கு அவளைப் பார்க்கவேண்டும் என்று ஆசையாயிருந்தால், நானே அங்கே போய்விட்டுவருகிறேன். ஒருமாதத்துக்குஇரண்டு மாதம் அங்கு தங்கினுல்போகிறது. என்னகெட்டுப்போகிறது? தாத்தாவும் பேரனும் கிளப்புச்சோற்றைத் தின்று,

வாயாலும், வயிற்ருலும் போய்க்கொண்டிருக்கட்டும். எனக்கென்ன?'' என்று ஆத்திரத்துடன் ஒருநாள் லக்ஷ்மியம்மாள் சொன்னபோது, பாலகிருஷ்ணன் பிரமித்து விழித்தான்.

"அவருக்கும் அவளை நான் கூட்டிக்கொண்டு வருவதில் மனப்பூர்வமான விருப்பமில்லை என்பது எனக்கு இப்பொழுதுதான் தெரிகிறது. அப்படியிருந்தால் ஏன் இன்னும் பேசாமலிருக்கிருர்? நான் இதைப்பற்றி பிரஸ்தாபித்து இப்பொழுது ஒரு வாரமாகிறதே. ஒரு வார்த்தையாவது சொன்ஞரா? நான் ஏன் புறப்படவில்லை என்று கேட்டாரா?'' என்று தனக்கிருந்த ஆத்திரத்தை எல்லாம் மேலுங் கொட்டிஞள் லக்ஷ்மியம்மாள்.

இதற்கு மறுதினம் காலையில் சுந்தரஞ் செட்டியார் கடைக்குப் புறப்படும் சமயம் தற்செயலாய், "என்ன லக்ஷ்மி, சிவகாமியைக் கூட்டிக்கொண்டு வரப் போவதாக அன்று சொல்லிக் கொண்டிருந்தாய். அப்புறம் அந்தப் பேச்சையே எடுக்கக் காணேம்! என்றைக்குப் புறப்படப் போகிருய்?'' என்று கேட்டார்.

"அவளை நான் கூட்டிக்கொண்டு வரப்போவதில்லை.''

"ஏன்?"

"அப்படித்தான்."

"யாரேனும் என்னமாவது சொன்ஞர்களா?''

"ஒருவர் வாயெரிய, வயிறெரிய அவளை ஏன் இங்கு கொண்டுவந்து வைத்திருக்க வேண்டும்? அவள் அங்கே சுகமாயிருக்கட்டும்.''

"இதென்ன பேச்சுப் பேசுகிருய், லக்ஷ்மி? ஒருத்தருக்கும் வயிற்றெரிச்சல் ஏற்படாது. நீபோய்க் கூட்டிக் கொண்டுவா.''

"எனக்கேன் இந்த வீண் ஆசை? என் சொந்த மக்களே ஒன்றன்பின் ஒன்ருய்ப் போய்விட்டன! இன்னெருத்தி மகள் மீது நான் ஏன் பற்று வைக்கவேண்டும்?"

"இந்தப் போலி வேதாந்தம் எல்லாம் வேண்டாம். நான் கடைக்குப் போய்ப் பணம் அனுப்புகிறேன். நீ நாளைக்கே புறப்படு" என்று சொல்லிக்கொண்டே வாசற்படியைவிட்டுக் கீழே இறங்கினுர் சுந்தரஞ் செட்டியார்.

"வேண்டாம். அனுப்பாதீர்கள். நான் போகமாட்டேன்" என்று லக்ஷ்மியம்மாள் தீர்மானமாகக் கூறினுள்.

## பனிரெண்டாவது அத்தியாயம்

சுந்தரஞ் செட்டியார் வீட்டிற்குச் சிவகாமி அழைத்து வரப்பட்டாள். லக்ஷ்மியம்மாள்தான் திருநெல்வேலிக்குச் சென்று கூட்டிக்கொண்டு வந்தாள். அவள் திருநெல்வேலிக்குப் போவதில்லை என்றும் சிவகாமியைக் கூட்டி வரப் போவதில்லை என்றும் பிடிவாதமாய்ச் சொல்லிக் கொண்டு தானிருந்தாள். ஆயினும் சுந்தரஞ்செட்டியார் அவளைப் பலவிதமாகச் சமாதானம் செய்து அனுப்பினுர்.

சிவகாமியை அழைத்து வருவதில் திருநெல்வேலியிலும் சில சிறு சிறு இடையூறுகள் ஏற்பட்டன. பகவான் செட்டியாருக்குச் சிறிது சௌகரியக்குறைவு ஏற்பட்டது. மேலும் அவர் தன்னுடைய மகளுக்கு மாப்பிள்ளை பார்க்கப் போகவேண்டும் என்றும், வீட்டில் ஆள் வேண்டுமென்றும் சொன்னுர்.

ஆயினும் லக்ஷ்மியம்மாளின் வற்புறுத்தலும், அத்துடன் சிவகாமியின் விருப்பமும் சேர்ந்துகொள்ளவே,

பகவான் செட்டியாரால் மேற்கொண்டு ஆக்ஷேபம் சொல்வதற்கு முடியாமற் போய்விட்டது. சிவகாமி தான் வளர்ந்த வீட்டிற்கு வந்து சேர்ந்தாள்.

குதிரைவண்டி வாசலில் வந்து நின்றது. அப்பொழுது பாலகிருஷ்ணன் மாடியில் அவனுடைய அறையில் படித்துக்கொண்டிருந்தான். அன்று ஞாயிற்றுக்கிழமை. வண்டிவந்து நின்ற சத்தத்தைக் கேட்டதும், வாசலைப் பார்த்திருந்த ஜன்னலை நோக்கி அவன் ஓடினான். முதலில் லக்ஷ்மிப்பாட்டி வண்டியினின்றும் இறங்கினாள். அவ ளுக்குப்பின்னால் சிவகாமி வண்டியினின்றும் இறங் கினாள். வண்டிக்குள் வெள்ளிக்கூஜா இருந்தது. அதை இழுத்துக் கையிற் பிடித்துக்கொண்டு, நிமிஷநேரத்தில் அவள் வீட்டிற்குள் போய்விட்டாள். அந்த நேரம் வேலைக்காரச் சிறுமி வீட்டைப் பெருக்கிச் சுத்தம் செய்து கொண்டிருந்தாள்.

"வீட்டில் ஒருவரும் இல்லையாடி?" என்று பாட்டி கேட்டது பாலகிருஷ்ணன் காதில் விழுந்தது.

"சின்னமுதலாளி மாடியில் இருக்கிறார்" என்றாள் வேலைக்காரி.

"பெரியமுதலாளி எங்கேடி?"

"கடைக்குப் போயிட்டாங்க."

பாலகிருஷ்ணன் மீண்டும் தன் அறையில் வந்து உட் கார்ந்தான். சிவகாமி வந்திருக்கிறாள் என்று அவன் மனம் மீண்டும் மீண்டும் கூறியது. அது அவ்வளவு முக்கியமான சம்பவமா? அதைப்பற்றி ஏன் அவன் சிந்திக்க வேண்டும்?

வெள்ளிக்கூஜாவை எடுத்துக் கொண்டு க்ஷண நேரத்தில் அவள் வீட்டிற்குள் போய் விட்டாள். அவளை நன்றாய்ப் பார்ப்பதற்கு அவனால் முடியவில்லை. ஒரு

மூலைப்பார்வை, அதிலும் ஓடும் பார்வை. ஆகையினால் சிவகாமியை அவனால் சரியாய்ப் பார்க்கக் கூடவில்லை. வேலைக்காரச் சிறுமி வீட்டில் இல்லாதிருந்தால், பால கிருஷ்ணனே சென்று கதவைத் திறந்துவிட நேர்ந்திருக்கும். அப்பொழுது சிவகாமியை அவன் நன்றாய்ப் பார்த்திருக்கக் கூடும். ஆனால் இப்பொழுது அவ்விதம் செய்ய முடியவில்லை.

அன்று ஞாயிற்றுக் கிழமையாயிருந்தது அவனுக்குத் திருப்தி அளித்தது.

அவன் இப்பொழுது கீழே இறங்கிச் செல்வதா, கூடாதா? உடனே இறங்கிப்போக வேண்டுமா? அவன் முன்போல் சிறுவனாக இருந்தால், "பாட்டி" என்று கூவிக்கொண்டு உடனே இறங்கிச் சென்றிருப்பான். ஆனால் இப்பொழுது என்ன செய்வது? சிவகாமியை எப்படி வரவேற்பது? இப்படி எல்லாம் அவன் சிந்தித்துக் கொண்டிருந்தான். அவன் கையில் இருந்த புத்தகத்தில் ஏதோ ஒரு பக்கம் விரிக்கப்பட்டிருந்தது. அதன் பக்கங்கள் அப்பால் திருப்பப்படவில்லை. அப்படியே அது அவனுடைய கையில் கிடந்தது.

மாடியில் இங்ஙனம் இருக்கையில், கீழே லக்ஷ்மிப் பாட்டியின் உள்ளத்தில் எண்ணங்கள் வேறுபாதையில் ஓடின. 'நாங்கள் வந்து இவ்வளவு நேரமாகிறதே இந்தப் பாலகிருஷ்ணன் பயல் மாடியிலே தானே இருக்கிறான். இறங்கி வந்து 'வா' என்று ஒருவார்த்தை கேட்டானா? பொறாமை பிடித்த பயல்! என்று அவள் நினைத்துக்கொண்டிருந்தாள். 'நல்லவேளை. இந்தப் பயல்களின பொறாமைக் கெல்லாம் அப்பால் கடவுள் அவளைக் கொண்டு போய்ச் சேர்த்து விட்டார்!' என்று அவள் மனதில் திருப்தியும் அடைந்தாள்.

சிறிது நேரத்திற்குப்பின் பாலகிருஷ்ணன் கீழே இறங்கி வந்தான். பாட்டியும், சிவகாமியும் சமயலறைக் குள்ளிருந்தார்கள். பாலகிருஷ்ணன் உள்ளே நுழையாமல், வெளியிலிருந்தபடியே, "வாருங்கள்பாட்டி' என்ருன்.

"ஆம்" என்ருள் லக்ஷ்மியம்மாள்.

அடுத்தாற்போல், "வா சிவகாமி!" என்ருன்.

அவள் அறைக்குள்ளிருந்தபடியே "ஆம்' என்ருள்.

அவளுடைய குரல் மட்டுந்தான் கேட்டது. உருவந் தெரியவில்லை. பாலகிருஷ்ணன் மீண்டும் மாடிக்குச் சென்று விட்டான்.

லக்ஷ்மியம்மாளுக்கு அது மிகவுந் திருப்தி அளித்தது. இத்தனை நாட்களுக்கப்புறம் வீட்டிற்கு வந்த பெண்ணை இவ்வளவு நேரங் கழித்தாவது மாடியிலிருந்து இறங்கி வந்து "வா" என்று கேட்டுவிட்டுப் போகிருனே. 'வா' என்று கேட்பானே, கேட்கமாட்டானே என்று நினைத்துக் கொண்டிருந்தேன். வீட்டிற்கு வந்த பெண்ணுக்கு இந்த மரியாதையாவது காட்டினுனே' என்று அவள் சந்தோஷ மடைந்தாள்.

சிறிது நேரத்திற்குப் பின் சுந்தரஞ் செட்டியார் வீட்டிற்கு வந்தார். வீட்டில் சிவகாமி வந்திருப்பதைக் கண்டதும், "வாம்மா சிவகாமி!" என்ருர்.

"ஆம் ஐயா" என்ருள் சிவகாமி.

"சௌக்கியந்தானே, அம்மா?" என்று கேட்டார்.

"சௌக்கியந்தான் ஐயா" என்று சிவகாமி பதில ளித்தாள்.

"மாப்பிள்ளை சௌக்கியமாயிருக்கிருரா?"

" இருக்கிறார்."

" நீ சந்தோஷமாயிருக்கிறாயா அம்மா ?"

சிவகாமி பதில் சொல்லவில்லை.

"உன் மாப்பிள்ளை உன்னைப் பிரியமாய் வைத்துக் கொள்கிறாரல்லவா ?" என்று மீண்டும் சுந்தரஞ்செட்டியார் கேட்டார்.

" பிரியமாய்த்தான் வைத்துக் கொள்கிறார். இதெல்லாம் என்ன கேள்வி?" என்று லக்ஷ்மியம்மாள் பதில் கூறினாள்.

" இதெல்லாம் கேட்காமல் பின் என்ன கேட்பது?" என்று சிரித்துக் கொண்டே சுந்தரஞ்செட்டியார் கூறினார்.

இதையெல்லாம் மாடியிலிருந்த பாலகிருஷ்ணன் கவனித்துக் கேட்டுக் கொண்டேயிருந்தான்.

சிவகாமி வீட்டிற்கு வந்து ஒரு நாளாகி விட்டது. ஆனால் அவளைச் சரியாகப் பார்க்கும் சந்தர்ப்பம் இன்னும் பாலகிருஷ்ணனுக்குக் கிடைக்கவில்லை. அவனுடைய கண்ணில் படாமலே அவள் நடமாடிக் கொண்டிருந்தாள. "இதென்னடி, அவன் உனக்கு மாமனா, மச்சானா அல்லது கொழுந்தனா? அவனுக்கு ஏன் இப்படி ஓடி ஒளிகிறாய்?" என்று லக்ஷ்மியம்மாள் கேட்டாள். சிவகாமி அதற்குப் பதில் சொல்லவில்லை.

பாலகிருஷ்ணனும் அடிக்கடி கீழே இறங்கிச்சென்று அவளைப்பார்க்க ஆர்வமுள்ளவனாகக் காட்டிக் கொள்ளவில்லை. ஏதாவது அவசியமான ஜோலிகளின் நிமித்தம் அவன் அங்கு மிங்கும் சென்றபோதுகூட அவளைப்பார்க்க வேண்டுமென்று அவன் அதிகமாய் முயற்சிக்கவில்லை.

முயற்சித்தால் அது பிறரால் எங்ஙனம் கருதப்படுமோ எற்று நினைத்தான். ஆயினும் பால் உணர்ச்சி முற்றுப் பெற்றிருந்த அவனிடத்தில் அவளுடைய வருகை ஒரு கிளர்ச்சியை உண்டு பண்ணியிருந்தது. அவனுடைய உடல் முழுதும் ஓர் உணர்ச்சி அலை பாய்ந்தோடிக் கொண்டிருந்தது. அவளுடைய ஆடையின் சலசலப்பை அவன் கேட்டான். அவளுடைய பேச்சின் குரலையும், அவளுடைய காற்சிலம்பின் சப்தத்தையும் அவன் செவி மடுத்தான். அவை எல்லாம் அவனுடைய உள்ளத்தில் ஒரு புத்துணர்ச்சியை உண்டு பண்ணுவது போல் தோன்றின.

அன்றிரவு அவன் சாப்பிட்ட பின்பு சமயலறையிலிருந்து வெளியேவந்தான். ஹாலின் ஒரு ஓரத்தில் சிவகாமி நின்று கொண்டிருந்தாள். விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. பாலகிருஷ்ணன் அவளைப் பார்த்தான். அவள் இவன் வரும் திக்கை நோக்காமல், வேறு புறந் திரும்பிக் கொண்டிருந்தாள். அம்மங்கிய வெளிச்சத்தில் அவளுடைய உருவம் தெளிவாய்த் தெரியவில்லை. அவளுடைய உருவத்தின் ஒரு பொதுத் தோற்றம், அதிலும் புறத் தோற்றம் மட்டுமே அவனுக்குத் தெரிந்தது. அவன் அதிக நேரம் அங்கு நிற்கவில்லை. விரைவாய் மாடிக்கு ஏறிப் போய்விட்டான். மாடிப்படிகளில் ஏறிச் செல்லும்போது, அவனுக்குத் திடீரென்று ஒரு விஷயம் ஞாபகத்திற்கு வந்தது. முன்னொரு முறை பாட்டி திருநெல்வேலிக்குச் சென்றிருந்தபோது, சிவகாமி அவனைப்பற்றி அதிகமாய் விசாரித்தாளாம்.

அவனைப்பற்றிய விஷயங்களை அறிவதில் அதிக ஆர்வங் காட்டினளாம். அந்த நினைவு ஏனோ அவனுக்கு இப்பொழுது இன்பம் அளித்தது.

மங்கிய வெளிச்சத்தில் தோன்றிய சிவகாமியின் உருவம், பாலகிருஷ்ணனின் மனதில் அவளை நன்ருய்ப்

பார்க்க வேண்டுமென்ற ஆசையை எழுப்பியது. ஏன்? அவளை முன்னால் அவன் பார்த்ததில்லையா? அவனுக்கு மிக நன்ருய்த் தெரிந்த பெண்தானே அவள்! மேலும் அவனால் வெறுக்கப்பட்ட பெண்தானே அவள்! அவளைப் பார்க்க வேண்டுமென்ற விருப்பம் ஏன் இப்பொழுது அவனுக்கு உண்டாயிற்று?

அவனுடைய உள்ளத்தின் ஒரு ஓரத்தில் இன்னொரு எண்ணமுந் தோன்றியது. அவளைப் பார்க்க வேண்டுமென்று விரும்புவது சரியா? அது தவறில்லையா? அவளைப் பார்ப்பது பாவமில்லையா? இவ்விதம் எல்லாம் சிந்தித்துக் கொண்டே மாடிப் படிகளில் ஏறிச் சென்று, தன் படுக்கையை விரித்துப் படுத்துக் கொண்டான். ஆனால் இவ் வெண்ணங்களால் எல்லாம் அவனுடைய தரிசனதாகம் அடங்கவில்லை. அதிகரிக்கவே செய்தது.

## பதிமூன்ருவது அத்தியாயம்

சிவகாமியைப் பாலகிருஷ்ணன் நன்ருய்ப் பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டபொழுது, அவன் உண்மையிலேயே பிரமித்துப் போனான். அவள் குளித்துவிட்டு ஸ்னான அறையிலிருந்து வந்து கொண்டிருந்தாள். அப்பொழுது தான் அவன் படிக்கவேண்டிய பாடங்களை எல்லாம் முடித்துவிட்டுப் பற்பொடியைக் கையில் எடுத்துக் கொண்டு, அவன் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்து கொண்டிருந்தான். பலமாதங்களுக்கப்புறம் மீண்டும் அவன் அவளைப் பார்ப்பது அதுதான் முதல் தடவை. சிவகாமியை அவன் பார்த்துப் பலமாதங்களாய் விட்டன என்பது உண்மைதான். ஆயினும் அம்மாதங்களில் அவளிடத்தில் அவ்வளவு பெரிய மாறுதல் உண்டா

யிருக்கும் என்று அவன் எதிர் பார்க்கவே இல்லை. அப்பொழுது அவனுடைய கண்களுக்கு முன்பு தோற்ற மளித்த தேவதைதானு அவன் முன்னம் பார்த்துப் பழகிய சிவகாமி என்ற வியப்பு அவனுக்கு உண்டா யிற்று. முன்னம் காணுத ஒரு பொலிவை அவளிடத்தில் அவன் அப்பொழுது கண்டான்.

அதற்கப்புறம் பாலகிருஷ்ணன் அவளை அநேக முறை கள் சந்திக்கும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. அப்பொழு தெல்லாம் அவள் இளமையின் பூரிப்பில் திளைத்துக்கொண் டிருப்பதை அவன் கண்டான். யெளவனப் பருவம் அவளுடைய மேனிக்கு மெருகிட்டிருந்தது.

இப்பொழுது அவளைப் பார்த்த போதெல்லாம் அவனுடைய மனதில் ஓர் எண்ணம் எழுந்தது. அந்த நாளில், அதாவது அவள் அனுதைப் பெண்ணுக அவ னுடைய வீட்டில், அவனுடன் வளர்ந்துவந்த அக்காலத் தில், அவள் இவ்வளவு அழகாயில்லையே என்று அவன் நினைத்தான். துலக்காத ஒரு பித்தளைப் பாத்திரமானது, திடீரென்று அனேக சித்திர வேலைப்பாடுகள் அமைந்த பொன் பாத்திரமாக மாறிவிட்டது போல் அவனுக்குத் தோன்றியது. அவளுடைய அங்கங்களில் எல்லாம் ஒரு புதிய ஒளி, ஒரு புதுமணம் வீசியது.

முன்பு அவள் அனுதைச் சிவகாமியாயிருந்தாள். ஆனல் இன்றே நிலைமை வேறு. இப்பொழுது அவளு க்கும் ஒரு சொந்த வீடிருந்தது; சொத்திருந்தது; சுக மிருந்தது. ஏழைச்சிறுமியாக, பிறந்தமேனியை ஒரு பீற்றல் துணியினுல் மூடிக்கொண்டு வந்த சிவகாமியல்ல அவள். அவளுடைய அங்கங்களில் அங்கங்கே பொன் னும் மணியும் மிளிர்ந்தன. விதவிதமான புது ஆபர ணங்கள் அவளுடைய உடலை அலங்கரித்தன. அழகிய

பட்டாடை ஒன்று அவளுடைய மேனியை ஒட்டித் தழுவிக் கொண்டிருந்தது.

நேசிப்பாரற்று, அன்புப் பிச்சை கேட்டு, இப்பொழுது அவள் சுந்தரஞ் செட்டியாரின் வீட்டிற்கு வரவில்லை. அவர்கள் யாவரும் விரும்பி அழைத்த ஒரு விருந்தினளாய் வந்திருந்தாள். அவள் மீது அன்பு செலுத்துவதற்கு ஒரு கணவர் இருந்தார். இனி அவள் யாருடைய தயவையும் எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லை. ஒருவருக்கு அஞ்சி நடக்க வேண்டிய தேவையுமில்லை. அவளுடைய நடையும், பார்வையும், பேச்சும் அதைப் பாலகிருஷ்ணனுக்கு எடுத்துக் காட்டுவனபோல் தோன்றின.

அவளுடைய அந்த நிலைமைதான் அவனை வசிகரித்ததோ? பொருளாதாரச் சுதந்திரந்தான் அவளுக்கு அத்தனை அழகையுங் கொடுத்ததோ?

ஒரு தோல் பெட்டியில் அவள் தனக்கு வேண்டிய சாமான்களை எல்லாம் கொண்டு வந்திருந்தாள். அவள் அதைத் திறப்பதற்காகச் செல்லும் போதெல்லாம், பாலகிருஷ்ணன் அவளைக் கவனித்தான். அந்த நடையே ஒரு தனி மாதிரியாக இருந்தது. அதில் அவன் அகங்காரத்தைக் காணவில்லை; ஆனால் அழகைக் கண்டான். அப்பெட்டியில் அனேக பட்டுப்புடவைகள், ரவிக்கைகளும், சோப், கண்ணுடி, சீப்பு, வாசனைத்தைலம், பவுடர் டப்பி போன்ற அனேக அலங்காரச் சாமான்களுமிருந்தன. அவள் பெட்டியைத் திறக்கும் போதெல்லாம் பாலகிருஷ்ணன் அவளைக் கவனிப்பான். அப்பொழுதெல்லாம் அவனுடைய கண்களின் முன்பு பழைய காட்சிகள் தோன்றும். சிலவருடங்களுக்கு முன்பு, அவள் முதன் முதல் அவனுடைய வீட்டிற்கு வந்த காட்சி

பாலகிருஷ்ணனுக்கு ஞாபகம் வந்தது. உடுத்தியதுணி போக மீதமுள்ள துணிகளைச் சுருட்டிய ஒரு பொட்ட ணத்தைக் கட்கத்தில் இடுக்கிக் கொண்டு, புதியஇடத் தில் தனக்கு எத்தகைய வரவேற்புக் கிடைக்குமோ என்று பயந்தவளாய், கூனிக் குறுகி அஞ்சி, அஞ்சி வீட்டிற்குள் அப்போது அடி எடுத்து வைத்தாள் அவள். ஆனால் இப்பொழுதோ.......... குதிரைவண்டியிலிருந்து இறங்கி, வெள்ளிக்கூஜாவுடன் மின்வெட்டுப்போல், வீட்டிற்குள் நுழைந்து விட்டாள். அவள் வீட்டிற்குள் சென்ற மாதிரியே, 'நான் இப்பொழுது ஏழைச்சிறுமி யல்ல,' என்று அறை கூறுவதுபோல் தோன்றியது. அதற்கும் இதற்கும் எவ்வளவு வித்தியாசம்?

சிவகாமியின் அழகில் பாலகிருஷ்ணன் மயங்கி விட்டான். அவள்பால் அவனை வசீகரித்தது எது? அவளுடைய ஆடைகளும் ஆபரணங்களுமா? இல்லை யென்றுதான் சொல்ல வேண்டும். ஆடைகளுக்கும், ஆபர ணங்களுக்கும் அப்பாற்பட்டது அவளுடைய அழகென் பது தெளிவாய் விளங்கியது. ஒருநாள் அவள் எண்ணெய் தேய்த்துக் குளித்துவிட்டு, ஆபரணங்களை எல்லாம் கழற்றி, ஒரு சாதாரணச் சேலைதான் உடுத்தியிருந்தாள். அன்றுதாள் அவள் அதிக அழகாய் இருந்தாள்!

இளமையின் மினுக்கும், குலுக்குமா அவளுக்கு அவ்வசீகரத்தைக் கொடுத்தன? சிறிது கொடுத்திருக் கலாம். ஆனால் இளமைப்பருவம் அவளுக்கு மெருகிட் டதேஒழிய, முலாம் பூசவில்லை. அவள் இயற்கையிலேயே அழகிதான். இன்றைக்குத் தோன்றும் இவ்வசீகரசக்திகள் எல்லாம் சிறு பிருயத்திலும் அவளிடமிருந்தன. அன்று வித்து உருவத்தில் மறைந்திருந்தன. இன்று அவை வளர்ச்சியுற்று வெளித் தோன்றியிருந்தன.

முன்பு பாலகிருஷ்ணன் அவளுடைய அழகை ஏன் கவனிக்கவில்லை? ஏன் பொருட்படுத்தவில்லை? அவளை ஏன் அவன் வெறுத்தான்? அவளுடைய ஏழ்மையும், அநாதரவான நிலைமையுந்தான் அவனுடைய கண்களை அதிகமாக உறுத்தினவா? அதனால்தான் அவளை அவன் புறக்கணித்தானா? அதுதான் காரணமா? அதில் சிறிது உண்மையிருப்பதுபோல் தோன்றுகிறது. ஆனால் முழு உண்மையும் அதுவல்ல. அப்படியாயின் உண்மையானகாரணம் என்ன?

பால்உணர்ச்சி முற்றிலும் வளர்ச்சி உறாத அச்சிறு பருவத்தில், சிவகாமியை அவன் ஒரு பெண்ணாக மதிக்கவில்லை. அவனுடன் எல்லாவற்றிலும் போட்டியிட வந்த ஒரு சிறிய மனிதப் பிராணியாகவே அவளை அவன் கருதினான். எதையும் பங்கிட்டுக்கொள்ளும் சுபாவமில்லாத அவ்வயதில் பொறாமைக் குணந்தான் அவனிடம் மேலோங்கி இருந்தது. அதுவரை பாட்டியின் அன்பு முழுமைக்கும் அவன் ஒருவனே பாத்திரமாயிருந்தான். அதில் ஒருபகுதியை அபகரித்துக் கொள்ளுவதற்குச் சிவகாமி வந்து சேர்ந்தாள்! பாலகிருஷ்ணனை மட்டுங் கூப்பிட்டுக் கொண்டிருந்தவாய் “சிவகாமி! சிவகாமி!” என்றும் அடிக்கடி கூப்பிட வாரம்பித்தது. அவனுக்கு மட்டும் அன்னமளித்தகை இப்பொழுது அவளுக்கும் அன்னமிட்டது. தாயின் அன்பு இன்னதென்றறியாத அவனுடைய உள்ளம் பாட்டியின் அன்பில்தான் சிறிது ஆறுதலுற்றிருந்தது. அதைப் பங்கிட்டுக் கொள்ள அவள் வந்துவிட்டாள்! சிறிது அதிகப் பங்கே அவளுக்குக் கிடைத்துவிடுமோ? அவள் பாட்டியின் தங்கை பெண். அவனோ பாட்டியினுடைய சக்களத்தியின் பேரன்!

சிவகாமியின் கல்யாணம் தீர்மானமாகிய பின்புதான், பாட்டியின் அன்பை அனுபவிப்பதில் அவனுக்

இருந்த ஆபத்து நீங்கிவிட்டது. என்ற உணர்ச்சி அவனுக்கு உண்டாகியது. அப்பொழுதுதான் அவனுடைய கண்கள் திறந்தன. சிவகாமியின் பெண்மைக் குணங்கள் அவன் மீது முதன் முதல் அப்போதுதான் மோதவாரம்பித்தன. இன்னொரு உண்மையும் அவனுக்கு அப்பொழுதுதான் விளங்க வாரம்பித்தது. எவ்வன்பை முழுதும் அனுபவிக்க அவனுக்கு இப்பொழுது சந்தர்ப்பம் கிடைத்ததோ அது இனி அவனுக்கு அவ்வளவு தூரம் தேவையா என்ற சந்தேகம் தோன்றியது. பயிர் முற்றிய பின்பல்லவா ஆற்றில் வெள்ளம் வந்திருக்கிறது? அவனுடைய உள்ளத்தை வளம்படுத்துவதற்கு இப்பொழுது வேறொரு அன்புத்தாரை யல்லவா வேண்டியிருந்தது! அவ்வன்புத் தாரை எங்கிருந்தது? ஐயோ! அது அவனைவிட்டு ஓடிக் கொண்டல்லவா இருந்தது! அதை ஓடவிடாமல் தடுப்பதற்குத்தான் அன்று மாடியில் சிவகாமியின் கைகளை அவன் இறுகப் பிடித்தான் போலும்!

ஆனால் அத்தாரை ஓடியே போய்விட்டது!

இனி சிவகாமியைப்பற்றி நினைக்க அவனுக்கு உரிமை இல்லை. அவளை அறவே மறந்துவிட வேண்டும் என்று பாலகிருஷ்ணன் தீர்மானித்தான்.

ஆனால் மறக்க முடியவில்லை!

அவள் அடிக்கடி மாடிக்கு வந்தாள். மாடியில் தான் பாலகிருஷ்ணன் படித்துக் கொண்டிருப்பான் அவள் வந்தபோதெல்லாம் அவனையு மறியாமல் அவனுடைய கண்கள் அவளை நாடின. ஆனால் அவள் அவனை ஏறிட்டுக் கூடப் பார்க்க வில்லை. ஏன் பார்ப்பாள்? பார்க்கக்கூடாதல்லவா? அவன் இருந்த புறத்திற்கு எதிர்ப்பக்கமாகவே அவள் முகத்தைத் திருப்பிக்கொண்டு சென்றாள்.

ஒவ்வொருநாளும் மாலையில் பாலகிருஷ்ணன் கடையிலிருந்து பூவும், பலகாரங்களும் வாங்கிக் கொண்டு வந்து சிவகாமிக்குக் கொடுப்பான். பாட்டிக்கு அதில் மிகுந்த திருப்தி எற்பட்டது. முன்னைப்போல் சிவகாமியின்மீது அவன் பொறுமைப் படாமல் அவள்மீது அன்பு காட்டியதும், வித விதமான பொருள்களை அவளுக்காக வாங்கிக் கொண்டு வந்ததும் அவளுக்குச் சந்தோஷமளித்தது.

சிவகாமியின் மனப்பான்மை எங்ஙன மிருந்தது? அவள் பாலகிருஷ்ணனுடன் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. இம்மாதிரி பாராமுகமா யிருப்பவளா தன்னைப் பற்றி அதிகம் விசாரித்தாள், தன்னுடைய விஷயங்களை அறிவதற்கு அதிக ஆர்வங்காட்டினுள் என்று பாலகிருஷ்ணன் நினைத்தான்.

இன்று அவனிடமிருந்து வெகு தூரத்தில் இருப்பதாகத் தோன்றிய அவள், ஒரு சமயம் அவனுடைய கைக் கெட்டும் தூரத்தில் தானிருந்தாள். அப்பொழுது அவன் நினைத்திருந்தால் அவளை அடைந்திருக்கக்கூடும். அதைப் பற்றி எண்ணும் போதெல்லாம் அவனுக்கு ஆத்திரம் உண்டாகியது. 'ஐயோ! என் கைப்பிடியிலிருந்த ஒரு அழகான கிளியை முட்டாள்தனமாய்ப் பறக்க விட்டு விட்டேனே!' என்று அவன் ஏங்கினுன்.

## பதினுன்காவது அத்தியாயம்

அன்று திடீரென அச்சம்பவம் நடக்கும் என்று பாலகிருஷ்ணன் நினைக்கவில்லை. அது மிகச் சிறிய சம்பவந்தான். ஆனுல் அவனுக்கு அது முக்கியமானதாகத் தோன்றிற்று. அவனுடைய உள்ளத்தில் எழுந்த ஒரு வினுவுக்கு அது விடையளிப்பது போல் இருந்தது.

அவன் கடைவீதியிலிருந்து திரும்பி வந்திருந்தான். பள்ளிக்கூடம் விட்டவுடன், மாலை வேளைகளில் விளையாடச் செல்வதற்கு முன்பு, அவன் கடைவீதிக்குச் செல்வது வழக்கம். அவ்விதம் செல்வதில் அவனுக்கு இரண்டு நோக்கங்கள் உண்டு. ஒன்று அவனுடைய தாத்தாவை திருப்தி செய்வது. அவன் அடிக்கடி கடைக்குப் போக வேண்டுமென்றும், வியாபார விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டுமென்றும் அவர் சொல்வார். ஆனால் சாயந்திர வேளைகளில் அவன் கடைக்குச் செல்வதன் முக்கிய காரணம் வேறு. மாலைச் சிற்றுண்டிக்குப் பணம் பெறுவதற்காகவே அவன் போவது வழக்கம். அவ்வமயங்களில் கடையிலிருந்து ஏதாவது சில விஷயங்களை அறிந்து கொண்டு வந்து, தாத்தாவிடம் அவைகளைப்பற்றி விவாதிப்பான். பல சமயங்களில் அது முட்டாள்தனமாகவும் இருக்கும்.

அன்று அவன் கடைக்குச் சென்று திரும்பி வந்து கொண்டிருந்தபோது, அவனுடைய தந்தை அவனைக் கூப்பிட்டார்.

"அதென்னடா கையில்?"

ஏதோ திருட்டுக் குற்றத்தில் திடீரென பிடிக்கப்பட்டவன்போல் பாலகிருஷ்ணன் விழித்தான். அவன் பதிலளித்த போது, "பலகாரமும் பூவும் யாருக்கு?" என்று ராமநாதஞ் செட்டியார் கேட்டார்.

இக்கேள்விக்குப் பதில் சொல்வதற்கு அவன் சிறிது நேரம் திகைத்தான். ஆயினுங் கடைசியில், "சிவகாமி வந்திருக்கிறாள்," என்றான்.

"ஓஹோ! பாட்டி வாங்கிக் கொண்டுவரச் சொன்னாளாக்கும்?" என்று ராமநாதஞ் செட்டியார் கேட்டார்.

'இல்லை' என்று உண்மையைச் சொல்ல அவனுக்குத் தைரியம் வரவில்லை. 'ஆம்' என்று பொய் சொல்ல அவனுக்கு விருப்பமில்லை. ஆகையால் மௌனமாய் நின்றான். பாட்டியைக் காட்டிக் கொடுப்பதற்குப் பயந்து கொண்டு தான் அவன் பேசாமலிருக்கிறான என்று நினைத்துக் கொண்டு, ராமநாதஞ் செட்டியார், "இப்படி நம்முடைய சொத்தை எல்லாம் விரயம் பண்ணுகிறாளாக்கும். பண்ணட்டும், பண்ணட்டும்! எத்தனை நாளைக்கு இப்படி நடக்கும் என்று பார்க்கலாம்," என்று கடுமையான குரலில் சொன்னார்.

இந்தப் பொறாமை மனப்பான்மை பாலகிருஷ்ணனுக்குச் சற்றேனும் பிடிக்கவில்லை. அது தந்தையின்மீது அவனுக்கு வெறுப்பையே உண்டாக்கியது. அவன் பேசாமல் நின்று கொண்டிருக்கும் பொழுது, "உன்னிடம் ஒரு விஷயம் சொல்வதற்காகக் கூப்பிட்டேன்" என்று ராமநாதஞ் செட்டியார் மீண்டும் பேச்சை ஆரம்பித்தார். "மதுரைச்செட்டிகள் இரண்டு, மூன்றுபேர் இன்று வந்து உன் ஜாதகத்தைக் கேட்டார்கள். பையன் தாத்தாவிடந்தான் இருக்கிறான். அவரிடம் போய் வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்லி விட்டேன். அவர்கள் அங்கு வந்து கேட்டால், கொடுக்கச் சொல். இடம் நல்ல இடந்தான். அது எனக்குப் பிடித்திருக்கிறதென்றும் சொல்" என்றார்.

தந்தையிடம் விடைபெற்றுக்கொண்டு அவன் வீட்டிற்குச் சென்றபோது, அவனுடைய மனதில் இந்த எண்ணந்தான் மேலோங்கி இருந்தது. மதுரைச் செட்டிகள் சிலர் அவனுடைய ஜாதகத்தைக் கேட்க வந்திருக்கிறார்களாம். நல்ல இடமாம். பணக்கார வீடாயிருக்கலாம். ஆனால் பெண் எப்படியோ? அது எப்படியிருந்த போதிலும் அவர்கள் அவனுடைய ஜாதகத்தைக் கேட்க வந்திருப்

பது அந்தச் சமயத்தில் அவனுக்குப் பெருமையாகவே இருந்தது. அவனுடைய நடையில் ஒரு மாறுதல் தோன்ற வாரம்பித்தது. அப்பொழுதே அவன் தன்னைப் புது மாப் பிள்ளை என்று நினைத்துக் கொண்டான் போலும்!

அப்பெருமித உணர்ச்சியுடன் அவன் வீட்டிற்குச் சென்ற போதுதான் அச்சம்பவம் நேரிட்டது. அது அந்த விதத்தில் நடக்கும் என்று அவன் நினைக்கவேயில்லை. மாடியில் அவனுடைய அறையில் அவன் உட்கார்ந்திருந் தான். அச்சமயம் திடீரென்று சிவகாமி அங்குத் தோன் றினாள். அவளுடைய முகம் பிரகாசத்துடன் விளங்கியது. "அம்மா பலகாரம் சாப்பிடக் கூப்பிடுகிறாள்" என்று சிவகாமி கூறினாள்.

அவளுடைய தோற்றமும், வார்த்தைகளும் அவனைத் திக்கு முக்காடச் செய்தன. அவனுக்கு என்ன செய்வ தென்று தோன்றவில்லை. எப்படியோ சமாளித்துக் கொண்டு, "நான் இப்பொழுது தானே சாப்பிட்டு விட்டு வருகிறேன்" என்றான்.

"அதென்னமோ அம்மா கூப்பிடுகிறாள்" என்று சொல்லி விட்டுச் சிவகாமி போய் விட்டாள்.

அவன் ஹோட்டலில் வயிறு நிறையச் சாப்பிட்டு விட்டுத்தான் வந்திருந்தான். ஆயினும் சிவகாமி கூப்பிட் டதற்காகக் கீழே இறங்கிச் சென்றான்.

அவன் பலகாரஞ் சாப்பிடுவதற்காக அங்கு இலை விரிக்கப்பட்டுத் தண்ணீர் தெளிக்கப்பட்டிருந்தது. பக்கத் தில் ஒரு டம்ளர் நிறையத் தண்ணீர் வைக்கப்பட்டு மிருந்தது.

"ஏண்டா பாலு, வீட்டில்தான் பலகாரம் செய்திருக் கிறதே, இன்றைக்கு ஏன் ஹோட்டலிலிருந்து வாங்கிக் கொண்டு வந்தாய்?" என்று பாட்டி கேட்டாள்.

"எனக்கு இங்கு செய்திருப்பது தெரியாதே" என்ருன் பாலகிருஷ்ணன்.

"ஏண்டி சிவகாமி, இலைபோட்டுத் தண்ணீர் எடுத்து வைத்தாயே. பலகாரத்தைப் பரிமாறுகிறதுதானே?" என்று லக்ஷ்மியம்மாள் சொன்னுள்.

"நீயே எடுத்து வையம்மா," என்று சமயலறைக்கு வெளியில் நின்றுகொண்டிருந்த சிவகாமி சொன்னுள்.

பாலகிருஷ்ணன் சாப்பிட உட்கார்ந்தான். இதே மாதிரி முன்பு ஒரு தடவை அவள் தண்ணீர் எடுத்து வைத்ததற்காகத்தான், பாலகிருஷ்ணன் அவளை அடித்தான். அன்று அவன் அத் தண்ணீரைத் தொடக் கூட இல்லை. அதன் மீது அவனுக்கு அவ்வளவு வெறுப்பு ஏற்பட்டிருந்தது. ஆனுல் இன்ருே அவனுக்கு அத் தண்ணீர் மிக்க சுவையுள்ளதாய்த் தோன்றியது. அவளே வந்து தனக்குப் பலகாரமும் பரிமாறக் கூடாதா என்று நினைத்தான்.

பலகாரங்களைச் சாப்பிட்டு விட்டு அவன் மாடிக்குச் சென்றபொழுது, தான் ஏதோ ஒரு புது உலகில் இருப்பதாகவே அவனுக்குத் தென்பட்டது. இதுவரைக்கும் அவனை ஏறிட்டுக்கூடப் பார்க்காத சிவகாமி அவன் முன்னுல் நேருக்கு நேர் தோன்றினுள். அவனை நேருக்கு நேர் பார்த்தாள். அவனுடன் பேசவும் செய்தாள். அவன் சாப்பிடுவதற்காக இலைபோட்டிருந்தாள். தண்ணீரும் எடுத்து வைத்திருந்தாள். ஒரு வேளை அத் தண்ணீர் அவளே கிணற்றிலிருந்து கொண்டு வந்த தண்ணீராகவும் இருக்கலாம். அவைகளைப்பற்றி எண்ண, எண்ண அவனுக்கு இன்பமாயிருந்தது.

திரும்பத் திரும்ப அந்த எண்ணங்களே அவனுடைய மனதில் எழுந்துகொண்டிருந்தன. இப்பொழுது யோசித்

துப்பார்த்த பொழுது, ஏதாவது சாக்குப்போக்கை கவைத்துக் கொண்டு சிவகாமி அடிக்கடி மாடிக்கு வந்து போய்க் கொண்டிருந்ததாகவே தோன்றியது. முந்தின நாள் அவள் எருமுட்டை எடுப்பதற்காக மாடிக்கு வந்தாள். பாலகிருஷ்ணன் படித்துக் கொண்டிருந்தான்; வந்தவள் வெகுநேரம் வரைக்கும் கீழே இறங்கிச் செல்லவில்லை.

"அடி சிவகாமி, இங்கு அடுப்புப்புகைந்து கொண்டிருக்கிறது. நீ அங்கு என்னடி செய்து கொண்டிருக்கிருய்?" என்று லக்ஷ்மியம்மாள் கீழே இருந்து கத்தினுள்.

"எரு முட்டைகள் கீழும் மேலுமாய் விழுந்து கிடக்கின்றன. அவைகளை அடுக்கினேன். இதோ வந்து விட்டேன்" என்ருள் சிவகாமி.

அவள் எருவை அடுக்கிக்கொண்டிருந்தது பாலகிருஷ்ணனின் படிப்புக்கு மிகவும் இடைஞ்சலாக இருந்தது,

பாட்டி அம்மாதிரி அடுக்கிக் கொண்டிருப்பாளாயின் பாலகிருஷ்ணன் மிகவுங் கடிந்திருப்பான் ஆனல் அன்ருே அவன் ஒன்றும் பேசவில்லை. பேசாமல் அச்சப்தத்தைக் கவனித்துக் கொண்டே இருந்தான்.

அவளுக்கு கல்யாணம் ஆனபின்பு அவனுடன் அவள் பேசியது அதுதான் முதல் தடவை. அவள் ஏன் அவனுடன் பேசினுள்? அதை நினைக்க, நினைக்க அவனுக்கு ஆனந்தமாயிருந்தது. அவளை மறந்து விடவேண்டும், அவளைப் பற்றி இனி நினைக்கவே கூடாது என்று அவன் தீர்மானித்த போது, அச்சம்பவம் நடந்தது. அது அவனுடைய உறுதியைக் குலைத்தது. அவனுடைய பால் உணர்ச்சிக்கு ஒரு ஆகாரம் கிடைத்துக் கொண்டிருந்த சமயத்தில் அவள் அவனுடன் பேசியது, அப்புதிய ஆகாரத்தைப் பற்றிய சிந்தனையே அவனுடைய மனதில்

தோன்றாமல் அடித்து விட்டது. அவனுடைய உள்ளத்தில் ஒரு தீ கொழுந்துவிட்டு எரியலாயிற்று.

இம்மாதிரிச் சிந்தனைகளில் அவன் ஈடு பட்டிருந்த பொழுது லக்ஷ்மி அம்மாளும் சிவகாமியும் கீழே பேசிக் கொண்டிருந்த சத்தங் கேட்டது. பாலகிருஷ்ணன் உற்றுக் கவனித்தான்.

"அண்ணனுடைய சாதகத்தை யாராவது வாங்கிக் கொண்டு போயிருக்கிறார்களா, அம்மா?" என்று சிவகாமி கேட்டாள்.

"எதற்காகக் கேட்கிறாய்?"

"சும்மாத்தான் கேட்கிறேன்."

"எனக்குத் தெரியும் நீ எதற்காகக் கேட்கிறாய் என்று. இது வரைக்கும் இன்னும் ஒருவரையுங் காணோம்?"

"வேறொன்றுமில்லை. அண்ணனுக்கு நல்ல பெண்ணைப் பார்த்துச் சீக்கிரம் கல்யாணம் பண்ண வேண்டுமென்று சொன்னேன்."

இச்சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்த பாலகிருஷ்ணனின் உள்ளங் குழம்ப வாரம்பித்தது.

அன்றிரவு சாப்பிட வந்த சுந்தரஞ் செட்டியார், லக்ஷ்மியம்மாளைப் பார்த்து, "உன்னுடைய பேரன் ஜாதகத்தை வாங்கிக் கொண்டு போயிருக்கிறார்களடி, அம்மா" என்றார்.

"யார்?"

"மதுரை உமையொருபாகஞ் செட்டியார்."

"இடம் எப்படி?"

"பணக்காரர்தான். ஜாதகம் பிடித்திருந்தால். உன்னுடைய பேரன் அதிர்ஷ்டக்காரன் தான்!" என்றார் சுந்தரஞ் செட்டியார்.

## பதினைந்தாவது அத்தியாயம்

சில தினங்களுக் கப்புறம் ஒருநாள் பாலகிருஷ்ணன் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பிவந்தபோது, அவன் ஓர் அதிசயத்தைக் கண்டான். அவனுடைய அறை சுத்தமாகக் கூட்டபபட்டிருந்தது. மேஜையின மேலுங் கீழுமாக வாரி இறைக்கப்பட்டிருந்த புத்தகங்கள் எல்லாம் அழகாய் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. மேஜையின்மேல் தூய, அழகிய துணி ஒன்று விரிக்கப்பட்டிருந்தது. அவைகளைச் செய்தது யார்?

பாட்டி லக்ஷ்மியம்மாள் அவனுடைய அறையைத் தினந்தோறு மில்லாவிட்டாலும், அடிக்கடி கூட்டிச் சுத்தம் செய்வது வழக்கம். ஆனால் அவள் அவனுடைய புத்தகங்களை அடுக்கி, ஒழுங்கு படுத்த மாட்டாள். அவை அப்படிக் கிடப்பதைப் பார்த்தால் அவளுக்குக் கோபந் தான் வரும். "பயல் படிக்கிற லக்ஷணத்தைப் பார்க்கலே லக்ஷணத்தை! புத்தகத்தைப் ஒழுங்காய் வைத்துக் கொள்ளத் தெரியாதவனுக்கு படிப்பென்ன வேண்டி யிருக்கு? போய் முதலாவது புத்தகத்தை அடுக்கி வைத்து விட்டு, மறுஜோலி பார்" என்று அவனைக் கண்டிப்பாள். ஆகையினால் இன்று அவைகளை அடுக்கி வைத்தது யார் என்று அவன் யூகித்து அறிந்து கொண்டான். ஆயினும் அதை நிச்சயமாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று அவனுக்கு அவா ஏற்பட்டது.

"இங்கே இருந்த என் சரித்திரப் புத்தகத்தைக் காணுமே" என்று அறையிலிருந்தவாறே பாலகிருஷ்ணன் கத்தினன்.

"ஏண்டி சிவகாமி, அவனுடைய அறையைக் கூட்டிக் கொண்டிருந்தாயே. நீ பார்த்தாயா?" என்று லக்ஷ்மியம்மாள் கேட்டாள்.

"நான் பார்க்கலே. மேஜையிலிருக்கும் அல்லது அலமாரியிலிருக்கும். எங்கே போய்விடும்?" என்று அவள் பதிலளித்தாள்.

அன்று அவள் அவனுடைய அறையைச் சுத்தம் செய்துவிட்டு, புத்தகங்களை அடுக்கலாமா, வேண்டாமா என்று பலமுறை சிந்தித்தாள். கடைசியில் அவைகளை அடுக்கி வைத்துவிட்டு, அவைகளில் ஒரு புத்தகத்தை எடுத்து, அவன் உட்காரும் நாற்காலியிலேயே உட்கார்ந்து சிறிது நேரம் வாசித்துக்கொண்டிருந்தாள். "ஏண்டி சிவகாமி, இவ்வளவு நேரமாய் அங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று லக்ஷ்மியம்மாள் கூப்பிட்ட போதுதான், அவள் அந் நாற்காலியை விட்டு எழுந்திருந்து வந்தாள்.

அன்று அவன் வாசிப்பதற்காகப் புத்தகங்களை எடுத்த போதெல்லாம், அவனுடைய உடலில் ஒரு புத்துணர்ச்சி தோன்றியது போல் இருந்தது. ஏன்? அவள் தொட்ட புத்தகங்கள் அல்லவா அவை! ஆகையினுல் அவைகளைத் தொடும் போதெல்லாம், அவளால் ஸ்பர்சிக்கப்பட்டது போலவே அவன் இன்பம் அடைந்தான்.

இச் சம்பவம் நடந்த மறுநாள் லக்ஷ்மியம்மாள் திடீரென்று காய்ச்சலாய் படுத்துக் கொண்டாள். உடம்பு தீயாய்க் கொதித்தது. தலைவலி பொறுக்க முடியாமலிருந்தது. அவளுக்குச் சேவை, சிஸ்ரூஷை செய்வதில் பால

கிருஷ்ணனும், சிவகாமியும் அடிக்கடி சந்தித்தார்கள். பக்கத்திலிருந்து பழகும் சந்தர்ப்பமும் ஏற்பட்டது.

லக்ஷ்மியம்மாள் படுத்துக்கொண்டதால், பாலகிருஷ்ணனுக்கு சிவகாமியே உணவு பரிமாற வேண்டியிருந்தது. சுந்தரஞ் செட்டியார் கடையிலிருந்து சாப்பிடுவதற்கு எந்த நேரம் வருவார் என்பது நிச்சயமில்லை. ஆகையினால் பாலகிருஷ்ணன் தனக்குப் பசித்த போது அவரை எதிர் பார்க்காமல் சாப்பிட்டு விடுவது வழக்கம். சிவகாமி பரிமாறத் தான் சாப்பிடவேண்டுமென்று பாலகிருஷ்ணன் மிகுந்த அவாக் கொண்டிருந்தான். ஆனால் அச் சந்தர்ப்பம் ஏற்பட்ட பொழுது, அது அப்படி முடியும் என்று அவன் நினைக்கவில்லை.

"கஞ்சி கொண்டு வரட்டுமா, அம்மா," என்று சிவகாமி லக்ஷ்மியம்மாளைக் கேட்டாள். பாலகிருஷ்ணன் பள்ளிக்கூடத்திலிருந்து வந்திருந்தான்.

"இப்பொழுது வேண்டாம். இன்னுங் கொஞ்சநேரங் கழித்துச் சாப்பிடுகிறேன்," என்ருள் லக்ஷ்மியம்மாள்.

"சமயல் ஆய்விட்டது, அம்மா."

"பாலு வந்துவிட்டானே, அவனுக்குச் சோறு போடுகிறதுதானே?"

"வரச் சொல்லம்மா," என்ருள் சிவகாமி.

பாலகிருஷ்ணன் சாப்பிட உட்கார்ந்தான். சிவகாமி பரிமாறினுள். அவன் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது சிவகாமி சமயலறை வாசலில் வந்து நின்றுகொண்டு, ஹாலில் படுத்திருந்த லக்ஷ்மியம்மாளுடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தாள். அவனுக்கு ஏதாவது வேண்டும் போது மட்டும், உள்ளே சென்று இலையில் அதை வைத்து விட்டு, மறுபடியும் வாசலுக்கு வந்துவிடுவாள். அல்லது

லக்ஷ்மியம்மாளின் பக்கத்தில் சென்று, "போர்வையை நன்ருய் போர்த்தட்டுமா, அம்மா. இன்ஞெரு தலையணை கொண்டுவரட்டுமா, அம்மா," என்று ஏதாவது கேட்பாள். சிவகாமி ஏதாவது பரிமாறச் சென்றபோது, பாலகிருஷ்ணன் பல முறைகளில் அவளுடைய கண்களைச் சந்திப்பதற்கு எத்தனித்தான். ஆனல் முடியவில்லை.

இப்படியிருக்கும்போது, ஒரு நாளிரவு பாலகிருஷ்ணன் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில், சிவகாமி அவளுடைய வழக்கத்திற்கு விரோதமாக அவன் பக்கத்திலேயே நின்று கொண்டிருந்தாள். பாலகிருஷ்ணன் அவளைக் கவனித்தான். அவளுடைய முகத்தில் உணர்ச்சி பொங்கியிருந்தது.

"என்ன வேண்டும்?" என்று மெதுவான குரலில் அவள் கேட்டாள்.

ஏதாவது வேண்டுமென்று சொல்லவேண்டுமே என்று நினைத்து, "வருவல் போடு," என்ருன்.

அவனுக்கும் உணர்ச்சிமேலிட்டது. ஏதாவது சொல்ல வேண்டும், செய்ய வேண்டும்போல் அவனுக்குத் தோன்றியது அவளும் அவனிடமிருந்து ஏதோ எதிர்பார்ப்பது போல் நின்று கொண்டிருந்தாள் அவன் சாப்பிட்டு முடிந்துவிட்டது. போக எழுந்து நின்ருன். அவளும் நின்று கொண்டிருந்தாள். பாலகிருஷ்ணன் சில அடிகள் எடுத்து வைத்து, சமயலறை வாசல் வரைக்கும் சென்ருன். சிவகாமி தான் நின்று கொண்டிருந்த இடத்தை விட்டு நகரவாரம்பித்தாள். பாலகிருஷ்ணன் திடீரென்று திரும்பிவந்து, "தண்ணீர்," என்ருன்.

சிவகாமி தண்ணீர் எடுத்துக் கொடுத்தாள். அதில் கொஞ்சம் குடித்து விட்டுப் பாலகிருஷ்ணன் போய் விட்டான்.

அவனுடைய உள்ளத்தில் ஏமாற்றம் குடிகொண்டது!

மறுநாள் மத்தியான்னம் அவன் சாப்பிட உட்கார்ந்த போது, தற்செயலாய் அவனுடைய தாத்தாவும் வந்து விட்டார். இருவரும் சேர்ந்தே சாப்பிட்டார்கள்.

இரவு சாப்பாட்டு நேரத்தை வெகு ஆவலுடன் எதிர்ப்பார்த்திருந்தான் பாலகிருஷ்ணன். மணி ஏழாகிவிட்டது. சாப்பிடப் போகலாமா என்று நினைத்துக் கொண்டிருந்த போது, லக்ஷ்மியம்மாள் பேசுஞ் சத்தங் கேட்டது.

"ஏண்டி சிவகாமி, சமயலாய் விட்டதா, என்ன?"

"ஆய் விட்டது."

"அவன் வந்து விட்டானே. சாப்பிடச் சொல்கிறது தானே?"

"ஐயாவும் வரட்டும் அம்மா. ரெண்டு பேருக்கும் சேர்த்துப் போட்டு விடுகிறேன்," என்றாள் சிவகாமி.

"பாலு பசி பொறுக்க மாட்டானடி. அவனுக்கு முதலாவது சோற்றைப் போட்டு விடுவது தானே?"

இதற்குச் சிவகாமி பதிலளிக்கவில்லை.

இச்சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்த பாலகிருஷ்ணனுக்குத் தலையில் இடி விழுந்தது போலிருந்தது. சிவகாமியினுடைய மனப்பான்மை அவனுக்கு விளங்கவில்லை. அவள் ஏன் இப்படி அவனை அவமானப்படுத்தினாள்? அவன் அவளை என்ன செய்தான்? ஒன்றும் செய்யவில்லையே. அங்ஙனமிருக்க ஏன் அவள் அப்படிப் பேசினாள்? அதைக் கேட்டதும் பாட்டி அவனைப் பற்றி என்ன நினைத்துக் கொள்வாள்? முந்தின நாள் சம்பவத்தினால் தான் ஏமாற்றம் அடைந்ததுபோல், அவளும் ஏமாற்றம்,

அடைந்திருப்பாளோ! அவனிடமிருந்து ஒன்றும் எதிர் பார்க்க முடியாது என்று அவள் நிச்சயித்து விட்டாளா? அதன் பலனா இம்மனப்பான்மை? அல்லது திடீரென்று ஏற்பட்ட ஒருவிரக்தியினால் அவள் அப்படிப் பேசினாளா? அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. இவ்வாறு பலவித மாக அவன் சிந்தித்துக் கொண்டிருந்தபோது, திடீரென்று சிவகாமி அவனுக்கு முன்னால் தோன்றினாள்.

"சாப்பிடவா அண்ணா. உனக்குப் பசிபொறுக்க முடியாதாம் அல்லவா?" என்றாள்.

"எனக்கு இப்பொழுது பசி இல்லை," என்றான் பால கிருஷ்ணன்.

சிவகாமி திரும்பி வந்து விட்டாள். அவளுக்கு அவ மானம் பிடுங்கித் தின்றது. 'எனக்கு நன்றாய் வேண்டும்! எனக்கு ஏன் இந்த வெட்கங்கெட்ட தனம்? அவன் என்னு டன் ஒரு வார்த்தையேனும் பேசாமலிருந்தபோது முதல் முதல் நானே வலியப்போய்ப் பேசினேன். அவனுக்குச் சாதம் பரிமாற வேண்டுமென்று துடியாய்த் துடித்தேன். எனக்கு என்ன குறை இருக்கிறதென்று இப்படி எல்லாம் நடந்து கொண்டேன்! சீ! சீ! மானங்கெட்ட தனம்!' என்று சிவகாமி தன்னைத்தானே மிகவுங் கடிந்து கொண்டாள்.

அவள் கீழே இறங்கி வந்ததும், "என்னடி சிவகாமி?" என்று லக்ஷ்மியம்மாள் கேட்டாள்.

"இப்பொழுது வயிறு பசிக்க வில்லையாம்."

"சரி. அவர் வந்த பிறகே சாப்பிடட்டும். இப்பொழுது என்ன கெட்டுப்போகிறது? எனக்கு கஞ்சியைக் கொண்டு வா," என்றாள் லக்ஷ்மியம்மாள். கள்ளங்கபடமற்ற அவ ளுக்கு இளமையின் துடிப்புக்கொண்ட அவ்விரு உள்ளங் களில் கொந்தளித்துக் கொண்டிருந்த புயல்களைப்பற்றிச் சிறிதேனும் சந்தேகம் தோன்றவில்லை.

சுந்தரஞ் செட்டியார் வீட்டிற்கு வந்தபோது மணி பத்தாகிவிட்டது. பேரனைச் சாப்பிடக் கூப்பிட்டபோது அவன் தனக்குப் பசி இல்லை என்று சொல்லிவிட்டான். மனைவியினுடைய உடல் நிலையைப்பற்றி விசாரித்துவிட்டு அவர் சாப்பிட உட்கார்ந்தார். சாப்பிட்டுக் கொண்டிருந்த பொழுது, மதுரையிலிருந்து ஆள் வந்திருப்பதாகத் தெரிவித்தார்.

"யாரிடமிருந்து?" என்று லக்ஷ்மியம்மாள் கேட்டாள்.

"உமையொருபாகஞ் செட்டியாரிடமிருந்து."

"என்னவாம்?"

"ஜாதகம் பிடித்திருக்கிறதென்று சொல்லிவிட்டிருக்கிறார்."

"அப்புறம்.............?"

"அப்புறம் ஒன்றுமில்லை. அது மட்டுந்தான் சொல்லிவிட்டிருக்கிறார்."

## பதினாறுவது அத்தியாயம்

ஒரு ரயில் வண்டியில் ஒரே சமயத்தில் எத்தனை விதமான பிரயாணிகள் பிரயாணம் செய்கிறார்கள்? வெவ்வேறு வயதினர், வெவ்வேறு கொள்கையை யுடையவர்கள், வெவ்வேறு நோக்கங்களுடன் வெவ்வேறு ஊர்களுக்கல்லவா செல்கிறார்கள்! சிலர் கல்யாணத்திற்காகச் செல்பவர்கள்; சிலர் இழவிற்காக; சிலர் வியாபாரஞ் செய்யப் போகிறார்கள். சிலர் கல்வியின் நிமித்தம் பிரயாணத்தை மேற்கொள்கிறார்கள். சிலர் பிரசங்கம் செய்யவும், பலர் பிரசங்கம் கேட்கவும் போகிறார்கள். வேறு சிலர் உல்லாசமாகப் பிரயாணம் செய்கிறார்கள். அன்று அந்த ரயிலில் பிரயாணம்

செய்த பாலகிருஷ்ணனும் சிவகாமியும் எந்த நோக்கத்துடன் எங்கே சென்று கொண்டிருந்தார்கள்?

இரண்டு தினங்களுக்கு முன்பு பாலகிருஷ்ணனைச் சிவகாமி சாப்பிடக் கூப்பிட்டதும், அவன் வருவதற்கு மறுத்ததுமான சம்பவம் சிவகாமியின் மனதில் அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தது.

அவள் தன்னை மிகவும் நொந்துகொண்டு, தன்னைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்று சங்கற்பமும் செய்து கொண்டாள். இது இவ்வாறிருக்க, பாலகிருஷ்ணனின் மனோநிலை எப்படி இருந்தது? சிவகாமியின் விஷயத்தில் மிகவுங் கொடூரமாக நடந்து கொண்டதாகவும், அவளை அவன்தான் அவமானப் படுத்தி விட்டதாகவும் நினைத்தான். அவன நடந்து கொண்டவிதம் சரிதானே என்று திடீரென இன்னொரு எண்ணமும் அவனுடைய மனதில் குறுக்கிட்டது. 'இல்லை, இல்லை அவளுடைய மனதை நான் புண் படுத்தி விட்டேன். நான் அவளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளவேண்டும்' என்று தனக்குள் அடிக்கடி அவன் சொல்லிக் கொண்டான்.

பாலகிருஷ்ணன் மீண்டும் யோசித்தான். எதற்காக மன்னிப்புக் கேட்கவேண்டும்? மனனிப்புக்கேட்பது எதைக் குறிக்கும்? அவளல்லவா அவனை அவமானப் படுத்தினாள்! ஆசையினால் அவள்தானே மன்னிப்புக் கேட்கவேண்டும்? ......அவள்தான் எதற்காக மன்னிப்புக் கேட்கவேண்டும்? அவள் சொன்னது சரிதானே. அவனுக்குத் தனிமையில் அவள் உணவுபரிமாறலாமா? அவள் யார் அவனுக்கு? முன் பின் யோசியாமல், ஏதோ ஒரு கணநேரத்தில் அந் நிகழ்ச்சிகள் நடந்துவிட்டன. அவை அவ்வாறு நடந்தது நன்மையேயாகும். இனி அவளைப்பற்றி அவன் ஒருபோதும் நினைக்கக் கூடாதென்று தீர்மானித்துக் கொண்டான்

இவ்வாறு அவர்களிருவருடைய உள்ளங்களிலும் புயல் சற்று அமர்ந்திருந்தபோது, அவ்விருவரையும் விதி தனிமையில் ஒன்று சேர்த்தது.

லக்ஷ்மியம்மாளுக்குக் காய்ச்சல் நின்றுவிட்டது. ஆயினும் மிகவும் பலஹீனமாயிருந்தாள். அங்ஙனமிருக்கையில், சிவகாமியை ஒரு அவசர காரியத்தின் நிமித்தம் உடனே கொண்டுவந்து விடுமாறு திருநெல்வேலியிலிருந்து கடிதம் வந்து சேர்ந்தது. யார் கொண்டுபோய் விடுவது? லக்ஷ்மியம்மாள் மிகவும் பலஹீனமாயிருந்தாள். அந்நிலையில் அவள் போக முடியாது. போனால் மீண்டும் படுத்துக் கொள்வாள். சுந்தரஞ் செட்டியாருக்குக் கடையில் அவசர வேலைகளிருப்பதாகச் சொன்னார். ஆகையினால் பாலகிருஷ்ணனே அவளைக் கொண்டுபோய் விட்டு வருவது என்று தீர்மானிக்கப்பட்டது. ஒரே கல்லில் இரண்டு பழங்களைக் குறிபார்த்தார், சுந்தரஞ் செட்டியார். பாலகிருஷ்ணன் சிவகாமியைத் திருநெல்வேலியில் அவளுடைய கணவன் வீட்டில் சேர்த்துவிட்டு அப்படியே தூத்துக்குடிக்குச் சென்று சில சரக்குகள் கொள்முதல் செய்துகொண்டு வரவேண்டுமென்பது ஏற்பாடு. பேரனை வியாபாரத்தில் பழக்கினாற் போலும் ஆகுமென்று சுந்தரஞ்செட்டியார் நினைத்தார். யானைக்கும் அடி சறுக்கும் என்பார்கள். எல்லாம் அறிந்திருந்த சுந்தரஞ் செட்டியாருக்கும் கால் சறுக்கி விட்டது!

பாலகிருஷ்ணனும் சிவகாமியும் ரயிலில் சென்று கொண்டிருந்தார்கள். அவர்கள் ஏறியிருந்த வண்டியில் விசேஷமாகக் கூட்டமில்லை. பேசுவதற்கு ஒரு சந்தர்ப்பங் கிடைத்தபோது, பாலகிருஷ்ணன் "சிவகாமி," என்றான்.

அவள் பதிலளிக்கவில்லை. ஆனால் அவனை ஏறிட்டுப் பார்த்தாள்

"நான் உன் மனதைப் புண்படுத்தி விட்டேன். நீ என்னை மன்னிக்க வேண்டும்."

நெருப்பின்மீது பூத்திருந்த நீறு அகன்று, அது கொழுந்துவிட ஆரம்பித்தது.

"உன்னை நான் என்ன மன்னிப்பது? கடவுள் என்னைத்தான் மன்னிக்க வேண்டும்."

சிவகாமியின் இவ்வார்த்தைகள் அவர்களுடைய பேச்சுக்குத் தற்காலிகமாக முற்றுப்புள்ளி வைத்தது. வெகுநேரம் வரைக்கும் இருவரும் எதுவும் பேசவில்லை. அவர்களுடைய உள்ளங்களில் என்னென்ன எண்ணங்கள் தோன்றினவோ!

வண்டி வேகமாய்ச் சென்று கொண்டிருந்தது. மனித உள்ளத்தின் உணர்ச்சி வேகம் அதைவிடக் குறைந்ததா? நன்செய்களையும், புன்செய்களையும், மரங்களையும் புதர்களையும், கால்களையும் ஆறுகளையும், வாய்க்கால்களையும் பின்னிடச் சென்று கொண்டிருந்தது ரயில். உணர்ச்சிப் பெருக்கு எதை எல்லாம் தாண்டிச் சென்று கொண்டிருந்தது? தூரத்தை ரயில் பொருட்படுத்துவதில்லை. உணர்ச்சி எதை மதிப்பதில்லை? மீண்டும் பாலகிருஷ்ணன்தான் பேச்சை ஆரம்பித்தான்.

"சிவகாமி!"

"என்ன?"

"இன்றைக்குத் தென்காசியிலிறங்கி, குற்றாலத்து அருவியில் முழுகிவிட்டு நாளைக்குத் திருநெல்வேலி போகலாமா?"

"நாம் திருநெல்வேலிக்கல்லவா டிக்கட் எடுத்திருக்கிறோம். எப்படி இறங்க முடியும்?"

பாலகிருஷ்ணன் ஒரு புன்சிரிப்புடன் தன் பையி லிருந்து டிக்கட்டுகளை எடுத்துக் காட்டினான். தென்கா சிக்கே டிக்கட்டுகள் வாங்கப் பட்டிருந்தன! அவைகளைப் பார்த்ததும் சிவகாமியின் உள்ளத்தில் ஒருவிதமான திகில் குடி கொண்டது.

குற்றாலம் என்றவுடன் சிவகாமிக்கு அவளுடைய கணவனின் ஞாபகம் வந்தது.

"குற்றாலத்திற்குப் போயிருக்கிறாயா, சிவகாமி?" என்று ஒருநாள் பகவான்செட்டியார் அவளைக் கேட்டார்.

"நான் குற்றாலம் ஒன்றுதான் பார்க்கவில்லை! மற்றதெல்லாம் பார்த்துவிட்டேன்!" என்று சிரித்துக் கொண்டே சிவகாமி பதிலளித்தாள்.

"கன்னியாகுமரி முதல் காசிவரைக்கும் உன்னைக் கூட்டிக் கொண்டு போய்க் காட்டுகிறேன், சிவகாமி," என்றார் பகவான் செட்டியார்.

சிவகாமி பதிலொன்றும் பேசவில்லை.

"இந்த வருஷம் 'சீசனுக்கு' நாம் குற்றாலம் போக லாம் சிவகாமி."

பின்பு சிறிது நேரம் யோசித்துக் கொண்டிருந்து விட்டு மீண்டும் தான் சொன்னதையே வற்புறுத்துவது போல் சொன்னார். "வியாபாரம் எக்கேடு கெட்டாலும் சரி, இவ் வருஷம் அவசியம் போவோம்!"

அவளுடைய கணவன் போகவேண்டும் என்று விரும் பிய குற்றாலத்திற்குத்தான் இப்பொழுது சிவகாமி சென்று கொண்டிருந்தாள். ஆனால் யாருடன்?

ரயில் தென்காசியை அடைந்தது. பாலகிருஷ்ணனும் சிவகாமியும் ரயிலைவிட்டு இறங்கினர். பாலகிருஷ்ணன்

திருக்குற்றாலத்திற்குப் போக ஒரு குதிரை அமர்த்தினான். சிவகாமி முதலில் ஏறி வண்டிக்குள் ஒண்டி ஒடுக்கமாய் உட்கார்ந்து கொண்டாள். அவளுடைய முகம் பிரகாச மற்றிருந்தது. பாலகிருஷ்ணன் பின்னால் ஏறி உட்கார்ந் தான்.

"அருவிக் கரைக்கே விடவா, ஸார்?" என்று வண்டிக்காரன் கேட்டான்.

"ஆம்," என்றான் பாலகிருஷ்ணன்.

கண்கொள்ளா இயற்கைக் காட்சிகளிடையே ஓடிச் சென்று சிறிது நேரத்திற்குப்பின் வண்டி அருவியின் முன்னால் நின்றது. 'ஜோ!' என்ற சப்தத்துடன் ஏராள மான தண்ணீர் மலையினின்றும் கீழே விழுந்து கொண் டிருந்தது. ஆஹா! எத்தகைய அழகான காட்சி! என்ன அற்புதமான நீர் வீழ்ச்சி!

பொதியமலை மிகப் பழமையானதொன்று. பழம் பாறை விளிம்பென்பர் பூகோள சாஸ்திரிகள். பொதிய மலையரசன் தன் மார்பகத்தே கொண்டான் சிற்றாற்று மங்கையை. கணவன் உள்ளங்குளிர அவன் மார்பகத்தே ஓடிக்கொண்டிருந்தாள் அவள். திடீரென்று சமநிலத்தைக் கண்ணுற்றாள். கல் தோன்றிய பின்பு தோன்றியது மண். அதனுடைய இளமை அவளை வசிகரித்தது. இளமை ததும் பிய அச் சமநிலத்தை யடையக் காமுற்றாள் சிற்றாற்று மங்கை. ஒரே வீழ்ச்சி! பொங்குமா கடல் அவ்வீழ்ச்சியைத் தடுக்கமுயன்றது முடியவில்லை! 'நான் விழுந்தே தீருவேன்' என்பதுபோல், பொங்கிக் கொந்தளித்துக்கொண்டு அவள் விழுந்து விட்டாள். முதிய பொதிய மலையை விட்டு இளைய சமநிலத்தைச் சேர்ந்து விட்டாள் சிற்றாற்று மங்கை. அதில்தான் எத்தகைய வீழ்ச்சி!

வண்டிக்காரனுக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டுச் சிறிதுநேரம் அவ்வருவியையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டு பாலகிருஷ்ணனும், சிவகாமியும் நின்று கொண்டிருந்தார்கள்.

என்ன அற்புதமான வீழ்ச்சி!

பின்பு வாடகைக்கு ஒரு அறை அமர்த்தித் தங்களுடைய சாமான்களை எல்லாம் அதில் வைத்துப் பூட்டி விட்டு, குளிப்பதற்காக அருவிக்குச் சென்றார்கள்.

ஆஹா! அருவி நீரில்தான் எத்தகைய ஜிலு ஜிலுப்பு!

ஆனல் அவர்களுடைய உள்ளங்களில்?

சிவகாமியைப் பாலகிருஷ்ணன் ஒரு ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றான். இனிய உணவு வகைகள் எல்லாம் இருவருக்கும் பரிமாறும்படி உத்தரவிட்டான். பால கிருஷ்ணனுக்கு நல்ல பசி. அவைகளை ஆவலுடன் உண்டான். ஆனல் சிவகாமி அவைகளைத் தொடவில்லை.

"மிகக் களைப்புற்றிருக்கிறாய். சாப்பிடு, சிவகாமி," என்று பாலகிருஷ்ணன் சொன்னன்.

"எனக்கு வேண்டாம்."

"கொஞ்சமாவது சாப்பிடு. இல்லையானல் மிகக் களைப்பாயிருக்கும்."

"வேண்டாம் என்றால் விடு," என்று சிறிது கடு கடுப்புடன் கூறினள் சிவகாமி.

பாலகிருஷ்ணன் அவளை உற்றுக் கவனித்தான். சிறிது நேரத்திற்குப் பின் "புறப்படலாமா?" என்றான் பாலகிருஷ்ணன்.

"உம்."

பாலகிருஷ்ணன் முன்னால் சென்றான். அவனைப் பின் தொடர்ந்து சிவகாமி சென்றாள். அவர்கள் இருவரும் அறையை அணுகி. வாசற்படி ஏற யத்தனித்தார்கள். முதலில் பாலகிருஷ்ணனுக்குக் கால் இடறியது. அவ னுக்குப் பின்னால், சிவகாமிக்கும் கால் இடறியது!

வீழ்ச்சியைத் தடுக்கும் பொங்குமாகடல்! பொங்குமா கடலினால் சிற்றாற்றின் வீழ்ச்சியைத் தடுக்க முடிந்ததா?

அவர்கள் மேலே சென்றார்கள். கதவைத்திறப்பதற்கு பாலகிருஷ்ணன் சாவியை எடுத்தான்.

கதவு திறக்கப்படும். அப்புறம் அடைக்கப்படும். அறைமுழுதும் இருள் சூழ்ந்து கொள்ளும். அவர்களுடைய உள்ளங்களிலும் இருள் சூழும். அப்புறம்?

அறைக் கதவு திறக்கப்பட்டது! அச்சமயம் எங்கி ருந்தோ 'சிவகாமி! சிவகாமி' என்று ஒரு குரல் கேட்டது.

அது எங்கிருந்து வந்தது?

வானுலகத்திலிருந்தா, பூவுலகத்திலிருந்துதானா? அது மனிதக்குரலா? தெய்வக்குரலா?

அது யாருடைய குரல்?

## பதினேழாவது அத்தியாயம்

அக்குரலைக் கேட்டவுடன் சிவகாமியும் பாலகிருஷ் ணனும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தனர். சிறிது தூரத்தில் ஓர் ஆடவரும் சிறு பெண்ணொருத்தியும் வந்து கொண்டிருப்பது தெரிந்தது. அவர்களைக் கண்டதுமே சிவகாமியின் நெஞ்சந் துணுக்குற்றது. தன் கதி என்ன

வாகுமோ என்று அஞ்சினுள். அவர்கள் சமீபத்தில் நெருங்க, நெருங்க அவளுடைய இருதயத் துடிப்பின் வேகம் அதிகரித்தது. அவளுடைய தலை சுழல்வது போல் தோன்றியது; நல்லவேளையாகப் பக்கத்தில் ஒரு தூண் இருக்கவே, அதைப் பிடித்துக்கொண்டு சமாளித்துக் கொண்டாள். அவர்கள் யார்? உரத்த குரலில் அவளைச் "சிவகாமி! சிவகாமி!" என்று கூப்பிட்டது யார்?

பாலகிருஷ்ணனும் அவ்விருவரையும் உற்று நோக்கியவாறே இருந்தான். என்ன பேசுவது, எப்படி நடந்து கொள்வது என்று தீவிரமாக யோசித்தான். அவனுடைய உள்ளத்தில் எழுந்த கலவரத்தில் ஒன்றும் தோன்றவில்லை.

இதற்குள் பகவான் செட்டியாரும், அவருடைய மகளும் அறையை அணுகிவிட்டனர். நல்லவேளையாக பகவான் செட்டியாரே பேச்சை ஆரம்பித்தார். "நேற்றுத் தான் கடிதம் கிடைத்தது. உடனே புறப்பட்டு வந்தேன். உங்களை இங்கே சந்தித்தது நல்லதாய்ப் போய் விட்டது!" என்றார்.

எந்தக் கடிதம், யார் எழுதியது, எதைப்பற்றி என்பது ஒன்றும் பாலகிருஷ்ணனுக்கு விளங்கவில்லை.

பகவான் செட்டியார் திடீரென்று சொல்லி வைத்தது போல், குற்றாலத்தில் தோன்றியது அவனைத் திடுக்குறச் செய்தது. ஏற்கெனவே அவனுடைய உள்ளத்திலிருந்த குழப்பத்துடன் இதுவுஞ் சேர்ந்துகொள்ளவே ஒன்றும் பதில் சொல்லத் தெரியாமல் விழித்தான். கடைசியில் தட்டுத் தடுமாறிக் கொண்டு, "சிவகாமியைத் திருநெல்வேலியில் சேர்த்துவிட்டு, தூத்துக்குடிக்குப் போய் சில சரக்குகள் கொள்முதல் செய்துகொண்டு வரும்படி தாத்தா என்னை அனுப்பினர்" என்று அவன் சொன்னன்.

"உங்கள் இருவரையும் இங்கேயே பார்த்துக்கொண்டது நல்லதாயிற்று, இல்லையானால், இன்னுங் கொஞ்ச நேரத்தில் நான் ஊருக்கல்லவா போய்க் கொண்டிருப்பேன்?" என்றார் பகவான் செட்டியார்.

எந்த ஊருக்கு, ஏன் போய்க் கொண்டிருப்பார்? பாலகிருஷ்ணனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"நான் குற்றாலம் பார்த்ததில்லை. சிவகாமியும் பார்த்ததில்லை. அருவியில் ஸ்நானம் செய்துவிட்டுப் போகலாம் என்று நடுவில் இங்கு இறங்கினோம்" என்றான் பாலகிருஷ்ணன்.

"அது சரிதான்! அது சரிதான்! நீங்கள் இங்கே வந்ததனால் எனக்கு ஒரு சிரமம் குறைந்தது!" என்றார் பகவான் செட்டியார்.

சிவகாமியைத் திருநெல்வேலிக்கு உடனே கொண்டு வந்து விடுமாறு பகவான் செட்டியார் எழுதிய கடிதத்தை பார்த்ததும், சுந்தரஞ் செட்டியார் அதற்குப் பதில் உடனே எழுதிவிட்டார். லக்ஷ்மியம்மாளுக்கு உடம்பு சிறிது அசௌகரியமாயிருப்பதாயும், தனக்குக் கடையில் அவசர வேலைகள் இருப்பதாகவும், ஆகையினால் பகவான் செட்டியாரே புறப்பட்டு வந்து, சிவகாமியைக் கூட்டிக் கொண்டு செல்லும்படியும் சுந்தரஞ் செட்டியார் அக் கடிதத்தில் எழுதியிருந்தார். இதை லக்ஷ்மியம்மாளிடம் கூறிய போது, அவளுக்கு அவர் எழுதிய பதில் பிடிக்கவில்லை. "சிவகாமியை நாம் போய்க் கூட்டிக் கொண்டு வந்தோம். நாமேதான் கொண்டுபோய் விட வேண்டும். அப்படியிருக்கப் பெண்ணை இங்கே வைத்துக் கொண்டு, 'நீங்கள் வந்து கூட்டிப் போங்கள்' என்று சொல்வது சரியல்ல" என்று அவள் சொன்னாள். அதற்கப்புறந்தான் பாலகிருஷ்ணன் வசம் சிவகாமியை உடனே அனுப்புவது

என்று தீர்மானித்தார்கள். இந்த விஷயம் பாலகிருஷ்ண னுக்கோ சிவகாமிக்கோ தெரியாது.

அக்கடிதத்தைப் பார்த்துத்தான் பகவான் செட்டி யார் புறப்பட்டார். சிவகாமியை ஒரு அவசர காரியத்தின் நிமித்தமல்லவா உடனே கொண்டுவந்து விடும்படி அவர் சுந்தரஞ் செட்டியாருக்குக் கடிதம் எழுதியிருந்தார்? அந்த அவசர காரியம் வேறொன்றுமில்லை. அந்த 'சீச'னுக் குச் சிவகாமியை அவர் குற்றாலத்திற்கு அழைத்துச் செல் வதாகச் சொல்லியிருந்தார். அவருடைய கடைக்கு வந்த சிலர் குற்றாலத்தில் சாரல் ஆரம்பித்து விட்டதாகவும் 'சீசன்' ஆரம்பம் அவ்வருடம் மிகத்திவ்யமாயிருப்பதாகவும் சொன்னார்கள். உடனே புறப்பட வேண்டும் என்று நினைத் துத்தான் அவர் சுந்தரஞ் செட்டியாருக்குக் கடிதம் எழுதி னார். தன் மாமனார் எழுதிய பதிலைப் பார்த்ததும், அவர் தன் மகள் ருக்மணியைக் கூட்டிக்கொண்டு குற்றாலத்திற்கு வந்தார். அங்கு ஒரு ஜாகை அமர்த்தி, அவளை அதில் வைத்து விட்டு, தான் மட்டும் வெற்றிபுரம் சென்று சிவகாமியைக் கூட்டிக்கொண்டு, மறு ரயிலிலேயே வந்து விடலாம் என்பது அவருடைய எண்ணம்.

அவ் வெண்ணத்துடன் அவர் குற்றாலத்திற்கு வந்த போது தான், எதிர் பாராத விதமாய் அங்கு பாலகிருஷ் ணனையும் சிவகாமியையும் ஒரு அறைக்கு வெளியில் பார்த்தார்! அவர்களைத் திடீரென்று அங்கு கண்டதும். முதலில் அவருக்கு மனது ஒரு மாதிரியாகத்தானிருந்தது அவர்களிருவரும் எப்படி அங்கு வந்து சேர்ந்தார்கள்? அவருக்கு வேறு விதமாகவல்லவா கடிதம் வந்திருந்தது? ஒரு வேளை சுந்தரஞ்செட்டியார் பின்னல் தன் மனதை மாற்றிச் சிவகாமியை அனுப்பி வைப்பதென்று தீர் மானித்துவிட்டாரோ? அப்படியே அனுப்பிவைத்தாலும்

சிறு பெண்ணை இப்படியா அனுப்பிவைப்பது? ஆனால் அதில் என்ன குற்றம்? சுந்தரஞ்செட்டியார் விஷயங்களை நன்கு அறிந்த அனுபவசாலி. அவருக்குத் தெரியாத விஷயமா? குற்றமில்லை என்று நினைத்துத்தானே அவர் அனுப்பியிருக்கிறார்? அவர் தவறு செய்வாரா? அவர் குற்றமில்லை என்று நினைத்தால், அதில் ஒரு குற்றமுமிராது. சரி, அது தான் போகட்டும். அவர்கள் ஏன் தனியாகக் குற்றாலத்திற்கு வந்தார்கள்? பாலகிருஷ்ணன் குற்றாலம் பார்க்க வில்லையாம். அதனால் வந்தார்களாம். சின்னஞ் சிறிசுகள். ஊர் பார்க்கும் ஆசை! ஆனால் சிவகாமியைக் குற்றாலத்திற்குக் கூட்டிப் போவதாகத்தான் அவர் சொல்லியிருந்தாரே. அப்படி இருந்தும்...........சிறு பிள்ளையிலிருந்து ஒன்றாய் வளர்ந்தவர்கள். சகஜமாய்ப் பழகியவர்கள். கல்மிஷமற்ற உள்ளத்துடன் வந்திருக்கிறார்கள் போலும். இம்மாதிரி நினைத்துப் பகவான் செட்டியார் ஒருவாறு தன் மனதைச் சமாதானப் படுத்திக் கொண்டார்.

பகவான் செட்டியார் பாலகிருஷ்ணனுடன் பேசிக் கொண்டிருந்தபோது, சிவகாமி தன் மனதிற்குள் "என்னைத் தடுத்தாட்கொண்ட சுவாமி, என்னை மன்னியுங்கள், மன்னியுங்கள்!" என்று பலமுறை சொல்லிக் கொண்டாள். அவ்வாபத்தான சமயத்தில் தன்னைச் "சிவகாமி!" என்று கூப்பிட்டுப் பாதுகாத்த அவளுடைய கணவனின் குரலை அவள் தெய்வக் குரலாகவே மதித்தாள். அவளுடைய உள்ளத்தில் எழுந்த தீ அணைந்து விட்டது. இனி ஒருபோதும் தோன்றாது என்று அவள் நினைத்தாள்.

பகவான் செட்டியாருடன் பேசிக்கொண்டிருந்த பாலகிருஷ்ணன் திடீரென்று திரும்பிய போது, பக்கத்திலிருந்த ருக்மணி தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதைக்

கவனித்தான். அவர்களிருவருடைய கண்களும் ஒரேசமயத்தில் சந்தித்தன!

பாலகிருஷ்ணன் இரண்டு நாட்கள் குற்ருலத்தில் தங்கியிருந்துவிட்டுத் தூத்துக்குடிக்குச் சென்று விட்டான். குற்ருலத்தில் பகவான் செட்டியாருடைய குடும்ப வாழ்க்கை சகஜமாகவே நடந்து கொண்டிருந்தது. ஒரு நாளில் பல முறை அருவியில் குளிப்பதும், மாலைநேரங்களில் மலையின் மீதோ மலைச்சாரலிலோ உலாவுவது மகாச் சந்தோஷமாகவே நாட்கள் சென்று கொண்டிருந்தன. இப்படியிருக்கையில் ஒரு நாள் சிவகாமி தன் கணவனைப் பார்த்து, "பாலகிருஷ்ணனைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"நான் என்ன நினைக்கிறேன்! ஒன்றும் நினைக்கவில்லையே!" என்ருர் அவர்.

"இல்லை. அவன் எப்படி?"

"நல்லவன் தான். எதற்காகக் கேட்கிருய்?"

"இன்னும் உங்களுக்குத் தெரிய வில்லையா?"

"தெரிய வில்லையே. என்ன?"

"நம்ம ருக்குமணிக்கு அவன் ஏற்ற மாப்பிள்ளையல்லவா? அதற்காகத்தான் கேட்டேன்"

"நல்ல மாப்பிள்ளை தான். நம் கலியாணத்திற்கு முன்பு, உன்னைப் பார்ப்பதற்காக நான் முதன் முதலில் வந்தேனல்லவா? அப்பொழுதே எனக்கு அவ்வெண்ணம் மனதில் உதித்தது. அதற்கு இப்பொழுது என்ன?"

ஒரு நல்ல காரியத்தை நினைத்தால், உடனே அதைச் செய்ய வேண்டும் என்பார்கள்!"

ஜாதகம் பிடிக்க வேண்டுமல்லவா? ஜாதகத்தை அனுப்பச்சொல்லிப் பார்க்கலாம்."

"நான் அம்மாளிடம் கேட்டு, ஜாதகத்தை வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன்!"

இதைக் கேட்டதும் பகவான் செட்டியாருக்கு மிகவும் ஆச்சரியமாக விருந்தது.

அவருடைய ஜோஸ்ய நண்பர் ஒருவர் குற்றாலத்திற்கு வந்திருந்தார். அவரிடம் காட்டிக் கேட்டபொழுது, ஜாதகம் நன்ருய்ப் பிடித்திருந்தது.

"நீங்கள் இக்காரியத்தைச் செய்ய வேண்டுமென்று நினைத்தால் உடனே பேசி முடிக்க வேண்டும். அவனுக்குப் பெண் கொடுப்பதாக அநேகம்பேர் நெருக்கிக்கொண்டிருக்கிருர்கள்," என்று சிவகாமி தன் கணவனிடம் கூறினுள்.

"பார்க்கலாம்," என்ருர் அவர்.

அவளுடைய மூத்தாளின் மகளைப் பாலகிருஷ்ணனுக்குக் கலியாணம் பண்ணிக் கொடுப்பதற்கு ஏன் அவள் அங்ஙனம் துடித்துக் கொண்டிருந்தாள்?

ஒரு நாள் சிவகாமி ருக்மணியைப் பார்த்து, "ஏண்டீ ருக்கு, உனக்கு மாப்பிள்ளையைப் பிடித்திருக்கிறதாடீ?" என்று கேட்டாள்.

"போம்மா!" என்ருள் ருக்மணி.

"மாப்பிள்ளையைப் பிடிக்காமலா, அன்று அவனை விழுங்கி விடுவதுபோல் பார்த்துக் கொண்டிருந்தாய்?" என்ருள் சிவகாமி.

இதைச் சொல்லவும் ருக்மணிக்கு வெட்கம் வந்து விட்டது. அவள் வாசலுக்கு ஓடிவிட்டாள்!

"பாலகிருஷ்ணன் வருகிருனே என்று பார்ப்பதற்காடீ இப்படி ஓடுகிருய்? அவன் வருவதற்கு இன்னும் நாளிருக்கிறதடி! இங்கே வா!" என்ருள் சிவகாமி.

தூத்துக்குடியில் தன் வேலைகளை எல்லாம் முடித்துக் கொண்டு பாலகிருஷ்ணன் ஊர்போய்ச்சேர்ந்தான். அங்கு அவனுடைய பாட்டிக்கு உடம்பு நன்ருய்ச் சௌகரிய மடைந்திருந்தது.

"என்னடா, சிவகாமியைக் கொண்டுபோய் விட்டாயா? என்ன சொன்னுர் அவள் மாப்பிள்ளை?"

"என்ன சொல்வார்? ஒன்றும் சொல்லவில்லை கூட்டிக் கொண்டுபோய் விட்டதில் அவருக்கு ரொம்பச் சந்தோஷம்!"

"அதுதான் நான் சொன்னேன். நாம் கூட்டிக் கொண்டு வந்தோம். நாமே கூட்டிப் போய்விட வேண்டும் என்று."

குற்ருலத்திற்குப் போன விஷயத்தைப்பற்றிப் பால கிருஷ்ணன் ஒன்றும் சொல்லவில்லை.

"எதற்காக அத்தனை அவசரமாகக் கூட்டிக் கொண்டுவரச் சொல்லிக் காகிதம் போட்டாராம்?"

"குற்ருலத்திற்குச் 'சீசனுக்கு'ப் போவதற்காம்"

"குற்ருலமும் பாபநாசமுமாய் அவர்களுடைய வாழ்க்கை குதூகலமாய்த் தானிருக்கிறது!" என்ருள் லக்ஷ்மியம்மாள்.

அந்தச் சமயம் சுந்தரஞ் செட்டியார் கடையிலிருந்து வந்தார். பேரனைப் பார்த்ததும் எல்லா விபரங்களையும் விசாரித்துவிட்டுச் சாப்பிட உட்கார்ந்தவர், லக்ஷ்மியம்மாளைப் பார்த்து, "உன் பேரனுக்குக் கலியாணமாமல்லவா?" என்ருர்.

"அப்படி என்று யார் சொல்கிருர்கள்?" என்று சிரித்துக்கொண்டே லக்ஷ்மியம்மாள் கேட்டாள்.

"நான் தான் சொல்கிறேன் என்று வைத்துக் கொள்ளேன்."

"இப்படித் திடும் என்று ஒரு விஷயத்தைச் சொன்னால் என்ன விளங்குகிறது?"

"ஏன் விளங்கவில்லை? இன்று உமையொருபாகஞ் செட்டியார் வந்தார். கடையிலே உட்கார்ந்து பேசினோம். எல்லாம் நிச்சயமாகி விட்டது!"

"இதென்ன காரியம் செய்திருக்கிறீர்கள்? பெண்ணை நாம் பார்க்க வேண்டாமா? அவர்களுடைய குலங் கோத்திரம் எல்லாம் விசாரிக்க வேண்டாமா? நமக்குப் பிடித்திருந்தாலும், உங்கள் மகனுக்கு அந்த இடம் பிடிக்கவேண்டாமா? இப்படி ஏன் முன்பின் யோசியாமல் சங்கடத்தில் மாட்டிக் கொண்டீர்கள்?"

"இல்லையடி அம்மா, இல்லை! நீ என்ன சொல்கிறாய் என்று பார்க்கலாமிண்ணு சொன்னேன். உன்னைக் கேட்காமலா உன் பேரன் கலியாணத்தை நிச்சயம் பண்ணி விடுவேன்?"

"பின் நடந்ததென்ன? ஒன்றுமில்லாமல் இவ்வளவு கதை அளக்க மாட்டீர்களே?"

"உன் பேரன் ஜாதகம் பிடித்திருக்கிறதாம். எல்லாம் பேசிமுடித்து வெற்றிலை பாக்குப் பரிமாற இன்னும் சில நாட்களில் வருவதாக உமையொருபாகஞ் செட்டியார் கடிதம் எழுதியிருக்கிறார்" என்று சுந்தரஞ் செட்டியார் சிரித்துக் கொண்டே சொன்னார்.

பாலகிருஷ்ணனும் தாத்தாவுடன் சாப்பிட்டுக் கொண்டு தானிருந்தான். அவர் சொன்ன விஷயங்களைக் கேட்டபோது, அவன் குற்றாலத்தில் பார்த்த ருக்மணியின்

முகமும், அவளுடைய கண்களும் அவனுக்கு ஞாபகம் வந்தன. சிவகாமியின் ஞாபகமும் அவைகளுடன் கூடவே வந்தது!

## பதினெட்டாவது அத்தியாயம்

“எவ்வளவோ பெரிய மனிதர்களெல்லாம் இருக்கையில் சின்ன மளிகைக் கடை வியாபாரியான என்னை இந்த முக்கியமான காரியத்திற்குக் கூப்பிடுகிறீர்களே” என்றார் சுந்தரஞ் செட்டியார்.

“எங்களுக்கு உங்களுடைய சரக்குத்தான் பிடித்திருக்கிறது. நீங்கள் அவசியம் வர வேண்டும். எல்லோரும் உங்களைத்தான் விரும்புகிறார்கள்.”

“பள்ளிக்கூட விழா என்கிறீர்கள். கல்வி இலாக்கா அதிகாரிகளை அழைத்துக் கௌரவித்தால், உங்களுக்குப் பலவிதங்களில் அவர்கள் உதவியாயிருப்பார்கள். என்னால் உங்களுக்கு என்ன பலன் ஏற்படப் போகிறது?” என்று மீண்டும் சுந்தரஞ் செட்டியார் கூறினார்.

“அவர்களை எல்லாம் முந்தின வைபவங்களுக்குக் கூப்பிட்டு விட்டோம். இதற்கு நீங்கள் தான் கட்டாயம் தலைமை வகிக்க வேண்டும்”

“இன்னொரு யோசனை சொல்கிறேன். நான் ஒரு பேச்சாளனாக வருகிறேன். வேறு யாராவது பெரிய மனுஷரைத் தலைவராகப் போட்டுக் கொள்ளுங்கள்.”

“தலைவர் நீங்கள்தான். அது நிச்சயமாகிவிட்டது. நீங்கள் பேச்சாளர் என்று சொன்னதுந்தான் எனக்கு

ஞாபகம் வருகிறது. உங்கள் பேரன் இவ் வைபவத்தின் போது ஒரு சொற்பொழிவாற்ற வேண்டும்."

"என்னய்யா ஒரு புதுச் சங்கடத்தை உண்டு பண்ணுகிறீர்கள்?" என்று சுந்தரஞ் செட்டியார் சிரித்தார்.

"உங்கள் பேரனைப்பற்றி அதிகம் கேள்விப்பட்டிருக்கிறோம். அதனால் தான் சொல்கிறேன்."

"ஏண்டா பாலு, இவர் என்னமோ சொல்கிறாரே. உன்னைப் பற்றி ஏதேதோ தாறுமாறாய்ப் பேசுகிறார்!" என்று சொல்லி, வந்தவரை நோக்கிச் சுந்தரஞ்செட்டியார் புன்முறுவல் செய்தார்.

பாலகிருஷ்ணன் அவ்விடம்வந்து, ஒன்றுந் தெரியாமல் விழித்தான்.

"பலர் பேசிக் கொள்வதைத்தான் சொல்கிறேன். நான் புதிதாக ஒன்றும் கற்பனை செய்து சொல்லவில்லை" என்றார் வந்திருந்தவர். அவருடைய பெயர் பழனிசெட்டியார். சுந்தரஞ் செட்டியாருடைய ஹாஸ்ய உணர்ச்சி அவரையும் பிடித்துக் கொண்டது.

பாலகிருஷ்ணன் மேலுங் கலவரத்துடன் விழித்தான்.

"மதுரையில் எல்லோரும இதைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது ரயிலில் வரும் போது கூடப் பலர் இதைப்பற்றிச் சொன்னார்கள்."

மதுரையில் எதைப் பற்றிப் பேசிக் கொள்கிறார்கள், ரயிலில் எதைப் பற்றிப் பேசினார்கள் என்று பாலகிருஷ்ணனின் மனம் தீவிரமாக யோசிக்க வாரம்பித்தது. அவனுடைய எண்ணமெல்லாம் ஒரு விஷயத்தைச் சுற்றியே வட்டமிட்டுக் கொண்டிருந்தது. ஆசையினால் எல்லாம் அதன் மயமாகவே அவனுக்குத் தோன்றியது.

"அது முற்றிலும் பொய். அதற்கு ஆதாரமே இல்லை" என்று ஆத்திரத்துடன் மறுக்கவேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது.

பழனி செட்டியார் அப்பொழுது மீண்டும் பேச வாரம்பித்தார். "எல்லாராலும் பேசப்படுவதென்றால் அது லேசான விஷயமா? பையன் பலே பையன்! லேசான பையன் என்று நினைக்காதீர்கள் என்று சுந்தரஞ் செட்டியாரைப் பார்த்துக் கூறினர்.

"அது சுத்தப் பொய். சிறிதும் ஆதாரம் அற்றது!" என்று பாலகிருஷ்ணன் மிகுந்த ஆத்திரத்துடன் கூறினன்.

"நீ எவ்வளவு மறுத்தாலும், நடந்தது இல்லை என்ருகிவிடும், தம்பீ? ஊர் வாயை மூட உலை மூடி உண்டா? அது தான் இப்பொழுது ஊர் முழுதும் பரவி விட்டதே!" என்ருர் பழனி செட்டியார்.

பாலகிருஷ்ணனுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. அவனுடைய உள்ளம் மேன் மேலுங் கலக்கமுற்றது. எது ஊர் முழுதும் பரவி விட்டது? அவன் சிவகாமியுடன் குற்ருலத்திற்குப் போனதா? அது பரவக் காரணமில்லையே. ஆயினும் விஷயத்தைத் தெளிவாய்க் கேட்டுவிடுவதென்று தீர்மானித்து மிகுந்த தைரியத்துடன், "எது ஊர் முழுவதும் பரவி விட்டதென்கிறீர்கள்? எனக்கு ஒன்றும் நீங்கள் பேசுவது புரியவில்லை," என்ருன்.

"என்ன தம்பி, ஒன்றுந் தெரியாதவன் மாதிரி பேசிகிருய். ஜில்லா மாணவர்கள் பேச்சுப் போட்டியில் நீ வெற்றி பெற்றது ஒருவருக்குந் தெரியாதா என்ன? அதென்ன லேசான விஷயமா? ஏன் ஊரெல்லாம் பரவாது?" என்று சொல்லி அவர் சிரித்தார். சுந்தரஞ் செட்டியாரும் தன் பேரன் புகழைப் பிறர் வாயால் கேட்டுச் சந்தோஷமடைந்தார்!

பாலகிருஷ்ணனின் தலையிலிருந்து ஒரு பெரும் பாரம் நீங்கியது போலிருந்தது. பாரம் நீங்கினால் தலை நிமிர வல்லவா வேண்டும்? அது ஏன் குனிந்தது!

பழனி செட்டியார் மதுரையிலுள்ள ஒரு பெண் பாட சாலையின் மானேஜர். பள்ளிக்கூட ஆண்டுவிழாக் கொண் டாட்டத்திற்கு அவ்வருடம் தலைமை வகிப்பதற்குச் சுந்தரஞ் செட்டியாரை அழைப்பதற்காக வந்திருந்தார். முடிவாகச் சுந்தரஞ் செட்டியாரைத் தலைவராகவும், பால கிருஷ்ணனைப்பேச்சாளனாகவும் தீர்மானம் செய்துவிட்டுச் சென்றார். கடைசியாக "தாங்கள் வரும் ரயிலைக் குறிப் பிட்டு எனக்கு அவசியம் கடிதம் எழுத வேண்டும். நான் ரயிலடியில் தங்களுக்காகக் காத்துக் கொண்டிருப்பேன்," என்றார்.

"ஐயோ, அதெல்லாம் வேண்டாம். நாங்கள் நேரே தங்கள் வீட்டிற்கே வந்து விடுவோம். நான் ஒரு சின்ன வியாபாரி. அவனோ சிறு பையன். எங்களுக்காக ஆடம் பரங்கள் ஒன்றும் வேண்டாம்," என்று சுந்தரஞ் செட்டி யார் கூறினார்.

குறித்த தேதியில் தாத்தாவும் பேரனும் மதுரை போய்ச் சேர்ந்தார்கள். சுந்தரஞ் செட்டியார் ஆடம்பரங் கள் ஒன்றும் வேண்டாம் என்று கூறியிருந்தபோதிலும், அங்கு ஆடம்பரங்களுக்கு ஒன்றும் குறைவில்லை. ரயில் நிலையத்திலிருந்து அவர்களிருவரும் காரில் மானேஜரின் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு அவர்களுக்கு நடந்த விருந்தும், உபசாரமும் அற்புதமா யிருந்தன. பின்பு அவர்கள் பாடசாலைக்குச் சென்றார்கள். 'வாசலில் வணிகத்தலைவரே வருக! வருக!' என்று பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தது. அதைப் பார்த்ததும் சுந்தரஞ் செட்டியார் உள்ளத்தில் உவகை பொங்கியது.

'நான் வணிகத்தலைவர்ரமே!' என்று தனக்குள் சொல்லிக்கொண்டார். சுந்தரஞ் செட்டியார் தமிழில் சிறந்த அறிவாளிதான். ஆங்காங்கே சிறு சிறு கூட்டங்களில் முன்பு பேசியது உண்டு. ஆனால் ஒரு பள்ளிக் கூடத்தின் வருஷக் கொண்டாட்டமாகிய ஒரு பெரிய வைபவத்தில் அவர் கௌரவிக்கப்படுவது அதுதான் முதல்தடவை.

தன்னுடைய தாத்தா அம்மாதிரி மதிக்கப்பட்டதைப் பார்த்துப் பாலகிருஷ்ணன் மிகவும் பெருமையடைந்தான்.

விழா மிகவும் விமரிசையுடன் கொண்டாடப்பட்டது. தலைவருடைய முன்னுரை, பின்னுரை, அவர் கொண்டாட்டத்தை நடத்திய திறமை, பள்ளிக்கூடத்தின் முன்னேற்றத்துக்காக அவர் கூறிய யோசனைகள்—இவையெல்லாம் வந்திருந்த யாவராலும் போற்றப்பட்டன. பாலகிருஷ்ணனுடைய பேச்சும் அருமையாயிருந்தது. அதில் முதுமையின் அனுபவமில்லாவிட்டாலும், வாலிபத்தின் ஆவேசமும் முறுக்கும் இருந்தன.

அவ்விழாவிற்கு உமையொருபாகஞ் செட்டியாரும் வந்திருந்தார். அவர் வந்ததற்கு ஒரு முக்கிய காரணமுமிருந்தது. கூட்டம் முடிந்த பிறகு, அவர் சுந்தரஞ் செட்டியாரையும் பாலகிருஷ்ணனையும் தனியாகக் கண்டு பேசினர். அப்போது, ஒருவர் வந்து பாலகிருஷ்ணனைத் தங்கள் சங்கக் கூட்டம் ஒன்றில் பேசவேண்டும் என்றும் எந்த நாள் அவனுக்குச் சௌகரியமாயிருக்கும் என்றும் கேட்டார். பரீக்ஷை முடிந்து விடுமுறை விட்டிருந்தார்களாகையால், எந்த நாளும் அவனுக்குச் சௌகரியந்தானென்று பாலகிருஷ்ணன் அவருக்குக் கூறினன். இதைக் கவனித்துக் கொண்டிருந்த சுந்தரஞ்செட்டியார் அவரைப் பார்த்து, "ஏன் ஐயா, என் பேரன்தான் உங்களுக்கு வேண்டுமாக்கும்? நான் வேண்டாமாக்கும்!" என்ருர். அங்குக் கூடியிருந்த அனைவரும் சிரித்தார்கள்!

அன்றிரவே சுந்தரஞ் செட்டியாரும், பாலகிருஷ்ண னும் ஊருக்குப்புறப்பட்டார்கள். ரயிலில் போகும்போது, சுந்தரஞ்செட்டியார் பேரனைப் பார்த்து, "ஏண்டா பாலு, இன்றைய விழாவில் எல்லாப் பரிசுகளையும் ஒரு பெண் கட்டிக்கொண்டு சென்றுளே, நீ கவனித்தாயா?" என்று கேட்டார்.

பாலகிருஷ்ணன் வாய் திறந்து பதில் சொல்லாமல் "உம்" என்று மட்டுந் தலையை அசைத்தான்.

"அவள் யார் தெரியுமா?"

பாலகிருஷ்ணன் பதில் சொல்லாமல் பேசாமலிருந் தான்.

அவள்தான் உமையொருபாகஞ்செட்டியார் மகளாம். நல்ல பெண்ணுய்த்தானிருக்கிருள்."

பாலகிருஷ்ணனுக்கு அவர் சொன்ன விஷயம் புதி தல்ல. ஒவ்வொரு தடைவையும் பரிசு வாங்குவதற்காக ஒரே பெண் எழுந்து வந்தபோதே, அச் சிறு பெண் அவ னுடைய கவனத்தைக் கவர்ந்தாள். அப்பொழுதே அவள் யார் என்று அவன் விசாரித்து அறிந்திருந்தான்!

'நல்ல பெண்தான். உமையொருபாகஞ் செட்டியார் வந்தால் உடனே பேசி முடித்துவிடலாம்' என்று சுந்தரஞ் செட்டியார் தன் மனதில் தீர்மானித்துக்கொண்டார்.

ஏறக்குறைய அதேசமயம் உமையொருபாகஞ்செட்டி யார் வீட்டில் ஒரு சம்பாஷணை நடந்துகொண்டிருந்தது.

"என்னடியம்மா, மாப்பிள்ளையை நீயே பார்த்துக் கொண்டாயல்லவா? உனக்குத் திருப்திதானே? நான் சொன்னதில் உனக்கு நம்பிக்கை ஏற்படவில்லை!" என்ருர். உமையொருபாகஞ் செட்டியார்.

"நல்ல பையன்தான். படிப்பிலும் அழகிலும் நம் சகுந்தலைக்கு ஏற்றவன்தான்'' என்றாள் அவருடைய மனைவி செல்லம்மாள்.

"உனக்குத்திருப்தி ஏற்பட்டு என்ன பிரயோஜனம்? அவளல்லவா சொல்லவேண்டும்? கண்ணை மூச்சிக் கலியாணம் பண்ணிக்கொள்ள மாட்டேன் என்றாளே அந்த நவீன நாகரீகக்காரி, அவளல்லவா பதில் சொல்லவேண்டும்! அவள் எங்கே?'' என்று உமையொருபாகஞ் செட்டியார் கேட்டார்.

"அவளை என்ன கேட்பது? சீக்கிரம் பேசிமுடித்துவிட வேண்டியதுதான். எப்பொழுது போகிறீர்கள்?'' என்று செல்லம்மாள் கேட்டாள்.

## பத்தொன்பதாவது அத்தியாயம்

" நான் ஏன் அடிக்கடி இதைப்பற்றிப் பேசவேண்டும்? இப்படிப் பேசுவதனால் நீங்கள் என்ன நினைத்துக் கொள்கிறீர்களோ, தெரியவில்லை. ஒரு வேளை நம்ம ருக்மணியை எங்கள் வகையில் கலியாணம் செய்து கொடுக்க விரும்புகிறேன் என்று நினைத்துக் கொள்கிறீர்களோ, என்னமோ. உங்கள் பெண்ணை நீங்கள் எங்குகொடுத்தால் எனக்கென்ன? நான் இனி இந்தப் பேச்சே எடுப்பதில்லை. உங்கள் பாடு உங்கள் பெண் பாடு. உங்களுக்கில்லாத ஆத்திரம் எனக்கென்ன வந்தது?'' என்றாள் சிவகாமி.

"கோபித்துக் கொள்ளாதேடி அம்மா. குற்றாலத்தில் இதுவரை இருந்தோம். அப்புறம் இங்கு வந்ததும், அந்த

வேலை இந்த வேலை என்று நாள் கழிந்து விட்டது. இனி மேல் இந்த விஷயத்தைப் பற்றிக் கவனிப்போம்'' என்றார் பகவான் செட்டியார்.

"நீங்கள் கவனித்தாலும் சரி, கவனிக்காவிட்டாலும் சரி உங்கள் பெண் நல்லாயிருக்க வேண்டும் என்று உங்களுக்கில்லாத கவலை எனக்கென்ன?'' என்றாள் சிவகாமி.

சிவகாமி தன் மூத்தாள் பெண்ணின் கலியாணத்தில் இவ்வளவு சிரத்தை எடுத்துக் கொண்டதைப் பார்க்கப் பகவான் செட்டியாருக்கு மிகவும் சந்தோஷமாயிருந்தது.

"அது சரி நாம் இவ்வளவு தூரம் பேசுகிறோமே. ருக்மணிக்கு மாப்பிள்ளை பிடித்திருக்கிறதா என்று அவளுடைய அபிப்பிராயத்தையும் தெரிந்துகொள்ள வேண்டாமா?''

"தெரிந்துகொள்ளுங்கள், சும்மா இருங்கள்'' என்று சொல்லிச் சிவகாமி விரைவாகச் சமயலறைக்குப் போய் விட்டாள். சிறிது நேரத்திற்குப் பின் அங்கிருந்து சத்தம் வந்தது. "இவர் தன் மகளுக்கு மாப்பிள்ளை பிடித்திருக்கிறதா என்று அவளுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்வதற்குள் அங்குக் கலியாணமே முடிந்துவிடும்!''

"போகலாம் என்று தான் சொல்கிறேனே சிவகாமி உனக்கு ஏன் இத்தனை கோபம் வருகிறது?''

சமயலறையிலிருந்து சிவகாமி மீண்டும் கணவனிடம் வந்தாள். "நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், அங்கே பெண் வீட்டுக்காரர்கள் நெருக்கிக் கொண்டிருக்கிறார்கள். நான் அங்கே இருந்த பொழுதே சாதகம் பிடித்திருப்பதாக இரண்டொரு பெண்வீட்டார் தெரிவித்திருந்தார்கள். அவர்கள்வந்து பேசிமுடித்துவிட்டால், அப்புறம் நம்முடைய எண்ணம் என்னவாகிறது? அல்லது நாம்

முன்னுடியே இதைப்பற்றி ஒரு வார்த்தை அவர்களுக்குச் சொல்லி யிருக்கிறோமா அதுவுமில்லை. நமக்கு இம்மாதிரி அபிப்பிராயமிருக்கிற விஷயமும் அவர்களுக்குத் தெரியாது. தெரிந்தாலாவது இதைக் கருதிக்கொண்டு அவர்கள் வேறு இடத்தைக் கவனிக்காமலிருப்பார்கள். அதுவுமில்லையே. உங்களுக்கும், ருக்மணிக்கும் மாப்பிள்ளை பிடிக்கா விட்டால், நான் இவ்வளவு தூரம் பேசமாட்டேன். உங்களுக்கும் மாப்பிள்ளையைப் பிடித்திருக்கிறது, அவளுக்கும் பிடித்திருக்கிறது. அப்படி இருக்கும்போது, அந்தக் காரியத்தைச் சீக்கிரம் முடிவு செய்துவிட்டால் என்ன என்றுதான் கேட்கிறேன்.''

இவ்வளவுதூரம் சிவகாமி சொன்னதன் பிறகு, பகவான் செட்டியார், பஞ்சாங்கத்தைப் புரட்ட வாரம்பித்தார்.

"இனி, நாளும் நக்ஷத்திரமும் பார்க்கப் போகிறீர்களாக்கும்!'' என்று சிவகாமி மீண்டும் சமயலறைக்குப் போய் விட்டாள்.

"நல்லவேளையாக நாளைக்கே நல்ல நாளாயிருக்கிறது சிவகாமி. நாளைக்குப் புறப்பட்டுப் போய், உடனே பேசி முடித்துக் கொண்டு வந்துவிடுகிறேன்'' என்ருர் பகவான் செட்டியார்.

மறு நாளிரவு சுந்தரஞ் செட்டியார் வீட்டிற்குள் பகவான் செட்டியார் நுழைந்தபோது, 'வாருங்கள், வாருங்கள்! சரியான சமயத்தில் வந்து சேர்ந்தீர்கள். பாலகிருஷ்ணனின் கலியாணப் பேச்சு நடந்து கொண்டிருக்கிறது' உட்காருங்கள் என்று சுந்தரஞ் செட்டியார், அவரை உபசரித்தார்.

ஹாலில் சுந்தரஞ் செட்டியாரும் அவருக்கு முன்னுல் மதுரை உமையொருபாகஞ் செட்டியாரும், அவருடன்

வந்த சிலரும் உட்கார்ந்திருந்தார்கள். பாலகிருஷ்ணனின் தந்தை ராமநாதஞ் செட்டியாரும் கூடவிருந்தார். அதைப் பார்த்ததும் பகவான் செட்டியாருக்கு 'வெறுக்' கென்றிருந்தது. 'சரியான சமயத்திலா வந்திருக்கிறேன்? சமயம் தவறி விட்டதே!' என்று தனக்குள் நினைத்துக் கொண்டார்.

உட்கார்ந்திருப்பவர்களுக்கு மத்தியில் ஒரு தாம்பாளத்தில் வெற்றிலை, பாக்கு, தேங்காய், பழம், பூ முதலியவை வைக்கப்பட்டிருந்தன. அவைகளைப் பார்த்ததும் பகவான் செட்டியாருக்கு ஒரு யோசனை தோன்றியது. சுந்தரஞ் செட்டியாரை ஜாடை செய்து வீட்டிற்குள் கூப்பிட்டார்.

"இன்னும் வெற்றிலை பாக்குப் பரிமாறவில்லையல்லவா?" என்று உள்ளே சென்றதும் பகவான் செட்டியார் சுந்தரஞ் செட்டியாரைக் கேட்டார்.

"ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்? என்ன விஷயம்?"

"இன்றைக்கு நல்லநாள் என்று நானும் அதே காரியத்திற்காகத்தான் வந்திருக்கிறேன்."

சற்றுத் தூரத்தில் நின்று கொண்டிருந்த லக்ஷ்மியம்மாள், "நான் நினைத்தேன்! சிவகாமி அன்று என்னிடம் ஜாதகம் கேட்ட பொழுதே அப்படித்தான் நினைத்தேன். ஆனால் இப்பொழுது என்ன செய்வது? காரியம் மிஞ்சி விட்டதே" என்றாள்.

"நீங்கள் இதைப்பற்றி முன்பே பிரஸ்தாபித்திருந்தாலும், நாங்கள் பேசாமலிருந்திருப்போம். இப்பொழுது திடீரென்று காரியம் முடியப்போகிற சமயத்தில் வந்திருக்கிறீர்களே!" என்றார் சுந்தரஞ் செட்டியார்.

"நீங்கள் இல்வளவு சீக்கிரமாக உங்கள் பேரன் கலியாணத்தை முடிக்க நினைப்பீர்கள் என்று நான் எண்ணவில்லை."

"தாயில்லாப் பிள்ளை, பாருங்கள். எல்லாங் காலாகாலத்திலே முடிந்து விட்டால் நல்லது என்று நினைத்தேன். பின்னால் எதெது எப்படி நடக்குமோ, யார் கண்டது?" என்றார் சுந்தரஞ் செட்டியார்.

"இப்பொழுது யோசனை?"

"யோசனை என்ன? கலியாணத்திற்கு எல்லோரும் வந்து சேருங்கள்."

பகவான்செட்டியார் முகத்தில் ஏமாற்றம் படர்ந்தது. சிறிது நேரம் அசைவற்று நின்றார். அவருடைய நிலைமையைப் பார்ப்பதற்குப் பரிதாபகரமாயிருந்தது. இதையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த லக்ஷ்மியம்மாள், அவர்கள் சமீபத்தில வந்து, "பாவம்! அவர் இதற்காகவே திருநெல்வேலியிலிருந்து மெனக்கட்டு வந்து, ஏமாற்றம் அடைந்து போவது நல்லாயில்லை" என்றாள்.

"இப்பொழுது நாம் என்ன செய்ய முடியும்?"

"இன்னும் வெற்றிலை பாக்குப் பரிமாறவில்லையல்லவா?"

"இருந்தாலும், பேசின பேச்சிலிருந்து மாறுவது நன்றாயிருக்கிறதா?"

"ஒன்றுக்குள் ஒன்று பின்னிக்கொண்டு கிடக்கும்; அதை, இதை யோசிக்காமல், இவர் பெண்ணைத்தான் முடியுங்கள்" என்றாள் லக்ஷ்மியம்மாள்.

"அவர்களுக்கு என்ன சொல்வது?"

"சகுனம் சரியில்லே. ஒரு அசந்தர்ப்பம் நடந்து விட்டது, என்று சொல்லிவிடுங்கள்"

இருவரும் ஹாலுக்குள் நுழைந்தனர். பகவான் செட்டியார் பேசாமல் தலே கவிழ்ந்து உட்கார்ந்து கொண்டார். சுந்தரஞ்செட்டியார் மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தார்.

"நம்ம பேச்சு இப்படி முடியும் என்று நான் நினைக்க வில்லேயே!"

"என்ன?" என்று உமையொருபாகஞ் செட்டியார் ஆவலுடன் கேட்டார்.

"நம்முடைய பேச்சை இத்துடன் முடிக்க வேண்டியதுதான்"

"என்ன விஷயம்?"

"சகுனம் சரியில்லே. ஒரு அசந்தர்ப்பம் நடந்து விட்டது!"

"நன்ருக விட்டுப் பேசுங்களேன்? என்ன அசந்தர்ப்பம் நடந்துவிட்டது?"

"சகுனம் சரியில்லே என்ருல் விடுங்களேன், ஐயா. எல்லாவற்றையும் அவசியம் விவரித்துச் சொல்லத்தான் வேண்டுமோ?" என்ருர் பகவான் செட்டியார்.

உமையொருபாகஞ் செட்டியாரும், அவருடன் வந்திருந்தவர்களும் விஷயம் இன்னதென்று யூகித்துக் கொண்டார்கள்.

"அபசகுனம் ஒன்றுமில்லே அண்ணே; இந்த மனுஷன் இந்தச் சமயத்தில் வந்து சேர்ந்தானல்லவா? அதுதான் அபசகுனம்! எழுந்திருங்கள் அண்ணே, போகலாம் மனுஷன் பேசின பேச்சு மாறும் பொழுது அப்புறம்

என்ன இருக்கிறது? ஞானியாம்! அறிவாளியாம்! எழுந்திருங்கள் அண்ணே!'' என்ருர் ஒருவர்.

"என்னய்யா பேசினேம், மாறிவிட்டோம்? வெற்றிலை பாக்குப் பரிமாறினல்தான் ஐயா, பேச்சு ஊர்ஜிதமாகும்? எத்தனையோ பேச்சுக்கள் பேசுவது போல் இதையும் பேசினேம். பிடிக்கவில்லை என்ருல், பேசாமல் போங்களேன்; வார்த்தை வித்தியாசமாய் ஏன் பேசுகிறீர்கள்?'' என்ருர் ராமநாதஞ் செட்டியார்.

சுந்தரஞ் செட்டியார் ஒன்றும் பேசவில்லை. தான் செய்வது சரியல்ல என்று அவருக்குத் தோன்றியது.

"என்னண்ணே யோசனை? இனி என்ன நமக்கு இங்கு இருப்பு? எழுந்திருங்கள்!'' என்று மதுரைக்காரர் ஒருவர் உமையொருபாகஞ் செட்டியாரைப் பார்த்துச் சொன்னுர்.

"யோசனை ஒன்றுமில்லை. இதைப் போல மாப்பிள்ளை எத்தனையோ உண்டு உலகத்தில். ஆனுல் சுந்தரஞ்செட்டியாரைப் போன்ற மனுஷர் இவ்வளவு சுலபமாய் வாக்கு மாறுவார் என்று நான் நினைக்கவில்லை'' என்று சொல்லிக் கொண்டே உமையொருபாகஞ் செட்டியார் எழுந்தார்.

"உலகமே அப்படித்தான் அண்ணே, சொல்லொன்று, செயலொன்று!'' என்று சொல்லிக் கொண்டே மதுரைக்காரர் யாவரும் எழுந்து போய் விட்டார்கள்.

அரைமணிக்கொரு முறை வண்டி மதுரைக்குச் சென்று கொண்டிருந்தது. அடுத்த ரயிலிலேயே உமையொருபாகஞ் செட்டியாரும், அவருடைய சகாக்களும் புறப்பட்டு விட்டனர். ரயிலில் விளக்கு வெளிச்சத்தில் பார்த்தபோது, உமையொருபாகஞ் செட்டியார் மிகுந்த கவலையுடனிருப்பது தெரிந்தது. 'ஏன் அண்ணே, கவலைப்படுகிறீர்கள்?

நீங்கள் சொன்னது போல் இவனை விட அழகானவனும் படிச்சவனும் எத்தனைபேர் இருக்கிறன்கள்! ஏன் கவலைப் படுகிறீர்கள்?'' என்று ஒருவர் கேட்டார்.

"அது நிஜந்தான். ஆனல் இந்தப் பயல் பள்ளிக்கூட வருஷ விழாவில், அன்று பேசினனல்லவா? அதைப் பார்த்ததிலிருந்து அந்தச் சின்னக் கழுதை இவனைத்தான் கட்டிக் கொள்வேன் என்று பிடிவாதம் செய்கிறது. நான் இங்கு வருவதற்கு முன்பு, இன்னொரு மாப்பிள்ளையைப் பேசலாம் என்று கூட நினைத்தேன். அதற்கு அந்தக் கழுதை இடங்கொடுக்கவில்லை,'' என்ருர் உமையொரு பாகஞ் செட்டியார்.

நிற்க, அங்கே சுந்தரஞ் செட்டியார் வீட்டில் கலியாணப் பேச்சு தொடர்ந்து நடந்தது. பேச்சுக்கள் முடிந்து வெற்றிலை பாக்கும் பரிமாறப்பட்டது. லக்ஷ்மியம் மாள் மிக்க சந்தோஷமடைந்தாள்.

பகவான் செட்டியார் திருநெல்வேலிக்குச் சென்று, விஷயங்களை எல்லாம் விஸ்தாரமாகச் சொன்னபோது சிவகாமியும் அதிகச் சந்தோஷமடைந்தாள். "நான் சொன்னேனு என்ன? கொஞ்சந் தாமதித்திருந்தால் அப்புறம் நமக்கு அந்தச் சம்பந்தம் கிடைத்திருக்குமா?'' என்ருள்.

சகுந்தலையையும், ருக்மணியையும் சீர்தூக்கிப் பார்த்தால், சகுந்தலையே அதிக அழகானவள். அவளைத்தான் பாலகிருஷ்ணனுக்கும் அதிகம் பிடித்திருந்தது. ஆயினும் அவனும் இந்தச் சம்பந்தத்தில் திருப்தியே அடைந்தான்.

## இருபதாவது அத்தியாயம்

கலியாண ஏற்பாடுகள் இரண்டு வீடுகளிலும் ஆரம்பமாயின. சிவகாமி தன்னுடைய சொந்தப் பெண்ணின் கலியாணத்தைப் போலவே அதில் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டாள். சீர்களெல்லாம் மிகச் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்று அவள் தன் கணவரிடங் கூறினாள். இம்மாதிரி ஒரு நிலைமை ஏற்படுத்திக் கொண்டதில் பகவான் செட்டியாருக்கு மிகுந்த சந்தோஷம் ஏற்பட்டது. ருக்மணியின் தாயாருடைய ஆபரணங்கள் எல்லாம் அவளுக்காகவே ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவைகளே ஏராளமாயிருந்தன. ஆயினும் இப்பொழுது பல புதிய நகைகள் செய்யப்பட்டன. அதில் சிவகாமி அதிக உற்சாகங் காட்டினாள். மன நிறைவுடனும், சந்தோஷத்துடனும் எல்லாக் காரியங்களையும் செய்தாள்.

"இந்த வைரப் பதக்கங்களைப் பார் சிவகாமி, வாங்கலாமா? நன்றாயிருக்கிறதா?" என்று பகவான் செட்டியார் கேட்டார்.

"நன்றாய்த்தானிருக்கிறது. என்ன விலை சொல்லுகிறார்கள்?" என்று சொல்லிக்கொண்டே அவ்விரண்டு பதக்கங்களில் ஒன்றை எடுத்து ருக்மணியின் கழுத்தில் போட்டுப் பார்த்தாள்.

"ஐந்நூறு ரூபாய் சொல்கிறான். கொஞ்சங் குறைக்கலாம் என்று நினைக்கிறேன்."

"வாங்கிவிடுங்கள். நன்றாய்த்தானிருக்கிறது."

"இரண்டையும் வாங்கிவிடலாம் என்று நினைக்கிறேன். உனக்கு வெள்ளைப் பதக்கம் இல்லையல்லவா?"

"எனக்கெதற்கு வைரப் பதக்கம்? அவளுக்கு மட்டும் வாங்குங்கள் போதும்," என்று கூறினாள் சிவகாமி.

மகளுடைய கலியாணத்தைச் சாக்காக வைத்துக் கொண்டு, மனைவிக்கும் இரண்டொரு நகைகள் வாங்கிப் போட்டால், அவளுக்கு மிகுந்த உற்சாகமாயிருக்கு மென்று பகவான் செட்டியார் நினைத்தார். ஆனால் இக் கலியாணத்தில் உற்சாகங் கொள்வதற்கு அவளுக்கு இம்மாதிரி சில்லறை விஷயங்கள் தேவையாயில்லை.

ருக்மணிக்குச் செய்வதெல்லாம் பாலகிருஷ்ண னுக்கே செய்வதாக அவள் மதித்தாள். ருக்மணியை அலங் கரித்தால், அவ்வலங்காரத்தை முடிவில் அனுபவிக்கப் போகிறவன் பாலகிருஷ்ணன்தானே! அதை நினைத்துச் சிவகாமி இன்பமடைந்தாள். பாலகிருஷ்ணனை அவளால் கலியாணம் பண்ணிக் கொள்வதற்கு முடியவில்லை. அந்த ஆனந்தம் அவளுக்குக் கொடுத்து வைக்கவில்லை. அவ்விஷ யம் தீர்மானமாகிய பொழுதே, பாலகிருஷ்ணனுக்கு நல்ல பெண்ணைப் பார்த்துக் கலியாணம் பண்ணி வைக்க வேண்டும் என்று நிச்சயித்தாள். அதை நிறைவேற்று வதற்குரிய சாதனமும் தன் கையிலேயே இருப்பதை யறிந்தபோது, அவள் மிக்க மகிழ்ச்சி கொண்டாள். அவள் அவனுக்கு மாமியாராய் விடலாம். எவ்வளவு பெருமை யுள்ள பதவி! இரண்டாந்தாரமாய் வாழ்க்கைப் படுவதி லும் ஒரு அனுகூலம் இருக்கத்தான் செய்தது. அவள் முதல்தாரமாய் யாருக்காவது வாழ்க்கைப் பட்டிருந்தால், பாலகிருஷ்ணனுக்கு மாமியாகும் பாக்கியம் கிடைக்குமா? பாலகிருஷ்ணனும், அவளும் சதிபதியாயிருக்கும் இன்பத் தைத்தான் ஈஸ்வரன் அவளுக்கு அளிக்கவில்லை. மாமியா ராகவாவது இருக்கலாமல்லவா? பாலகிருஷ்ணனுடன் ஏதாவது ஒரு வகையில் சம்பந்தம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அவளுடைய உள்ளம் விழைந்தது.

கலியாணமான பின்பு பாலகிருஷ்ணன் மேல் படிப்பிற்குத் திருநெல்வேலிக்கே வருவான். அவளுடைய வீட்டிலேயே வசிப்பான். உண்பான்; உறங்குவான். அதெல்லாம் எவ்வளவு இன்பகரமாயிருக்கும் என்று சிவகாமி நினைத்தாள்.

பாலகிருஷ்ணன் என்ன நினைத்தான்? அவனுக்கும் இந்தச் சம்பந்தம் மிகவும் பிடித்திருந்தது. அது அவனுக்கு அனேக விதமான கற்பனைகளுக்கு இடங் கொடுத்தது.

"ஜாதகம் மிகவும் பொருத்தமா யிருக்கிறதென்று பகவான் செட்டியார் சொன்னரே. அவர் என் ஜாதகத்தை வாங்கிப் போயிருந்தாரா, பாட்டி?" என்று ஒருநாள் பாலகிருஷ்ணன் கேட்டான்.

"அவர் வாங்கிப் போகவில்லை. சிவகாமி போன தடவை வந்தபோது வாங்கிக்கொண்டு போயிருந்தாள்."

அப்படியானல் சிவகாமியின் தூண்டுதலின் பேரில் தான் இக்கலியாணம் முடிவாயிற்ருே? அப்படித்தானிருக்கவேண்டும். தன் மூத்தாள் மகளை அவனுக்குக் கலியாணம் பண்ணிக் கொடுக்க வேண்டுமென்று சிவகாமிக்கு ஏன் ஆர்வம் ஏற்பட்டது? இதே கேள்வி அவனுடைய மனதில் மீண்டும் மீண்டும் ஏற்பட்டு இன்பத்தை உண்டாக்கியது.

அவன் ஏன் இக் கலியாணத்திற்கு இசைந்தான்? அதில் ஏன் சந்தோஷமடைந்தான்? ருக்மணியையும், சகுந்தலையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், சகுந்தலைதான் அதிக அழகி. குணம்? ஒருவருடைய குணமும் அவனுக்கு அப்பொழுது தெரியாது. அவர்களுடைய வெளியுருவத்தை மட்டுமே அவன் அப்பொழுது பார்த்தான். அதில் சகுந்தலைதான் மேம்பட்டவள். அங்ஙனமிருக்க

ருக்மணியைக் கலியாணம் செய்துகொள்ள ஏன் அவன் சம்மதித்தான்? இந்தக் கேள்வி திரும்பத் திரும்ப அவனுடைய உள்ளத்தில் எழுந்தது. இதற்குச் சுலபத்தில் விடை கிடைக்கவில்லை. கடைசியில், உறவுக்குள் உறவு, அதில் பல சௌகரியங்கள் உண்டு என்று தன் மனத்தைச் சமாதானப் படுத்திக் கொண்டான் பால கிருஷ்ணன்.

இங்ஙனமிருக்கையில், திடீரென்று ஒருநாள் சிவகாமி வெற்றிபுரம் வந்து சேர்ந்தாள்.

"இன்றைக்குக் காலையில் எழுந்ததும், திடீரென்று ஒரு விபரீத ஆசை தோன்றியது, அம்மா. உன்னைப் பார்க்காவேண்டும் என்று நினைத்துக் கொண்டேன். உடனே புறப்பட்டுவிட்டேன்!" என்றாள்.

இதைக் கேட்டதும் லக்ஷ்மியம்மாள் மிக்க சந்தோஷம் அடைந்தாள்.

"உன் புருஷன் ஒன்றும் சொல்லவில்லையா?"

"அம்மாளைப் பார்க்க வேண்டும் என்று ஆசையாயிருக்கிறது என்றேன்; போய்விட்டுவா? என்றார். வேறென்ன சொல்வார்?"

"உன் புருஷனைக் கோயிலில் வைத்துக் கும்பிட வேண்டும், சிவகாமி. உனக்குக் கிடைத்தது போல், வேறு யாருக்குக் கிடைக்கும்?" என்றாள் லக்ஷ்மியம்மாள்.

"ஏன், உனக்குக் கூடக் கிடைக்கவில்லையோ?" என்று அந்தச்சமயம் வீட்டிற்குள் நுழைந்த சுந்தரஞ் செட்டியார் சிரித்துக்கொண்டே மனைவியைப் பார்த்துக் கேட்டுவிட்டு, சிவகாமியின் யோக க்ஷேமங்களை விசாரித்தார்.

சுந்தரஞ் செட்டியார் சாப்பிட்டுவிட்டுப் போன பின்பு, சிறிதுநேரத்தில் பாலகிருஷ்ணன் வீட்டிற்கு வந்து சேர்ந்தான். எதிர்பாராதவிதமாய் வீட்டில் சிவகாமியைக் கண்டதும் திடுக்கிட்டு விழித்தான்.

சிவகாமி தலைகவிழ்ந்து கொண்டிருந்தாள். "வந்தியா சிவகாமி" என்று பாலகிருஷ்ணன் கேட்டான். "ஆம்" என்றாள் சிவகாமி. பாலகிருஷ்ணன் போய்விட்டான்.

வெற்றிபுரத்திற்குச் சிவகாமி வந்து பல நாட்களாய் விட்டன. ஒவ்வொரு நாளும் தான் மறுதினம் ஊருக்குப் புறப்படுவதாகச் சிவகாமி சொல்வாள். ஆனால் ஏனோ இன்னும் புறப்படவில்லை.

பாலகிருஷ்ணன் ஒரு நாள் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்துகொண்டிருந்தான்.

"நாளைக்கு நான் கட்டாயம் ஊருக்குப் புறப்பட வேண்டும் அம்மா. வந்து வெகு நாளாச்சு" என்றாள் சிவகாமி.

இதுகாறும் அவள் இம்மாதிரி சொல்லியபோதெல்லாம், "இன்னும் இரண்டு நாளைக்கு இருந்துவிட்டுப் போகலாம். இப்பொழுதென்ன அவசரம்?" என்றே லக்ஷ்மியம்மாள் சொல்லிக்கொண்டு வந்தாள். ஆனால் இப்பொழுது அவளுக்கும் சிவகாமி புறப்படவேண்டியதுதான், வந்து வெகுநாளாச்சு என்று தோன்றியது. ஆகையினால், "சரி, புறப்படு. இனித்தான் அடிக்கடி இங்கு வருவதற்குச சந்தர்ப்பம் ஏற்படுமல்லவா?" என்றாள்.

அவர்களுடைய பேச்சை அவன் கேட்டும், கேட்காதவன் போல் போய்விட்டான்.

அன்றிரவு அவன் சாப்பிட்டுவிட்டுத் தன் படுக்கையில் வந்து படுத்துக்கொண்டான். அவனும் தாத்தாவும்

மாடியில் தூங்குவது வழக்கம். பாட்டியும், சிவகாமியும் கீழே ஹாலில் தூங்குவார்கள். சிவகாமி வீட்டில் இருக்கும் வரைக்கும் இதுதான் வழக்கமாய் இருந்தது. அவளைக் கலியாணம் செய்து கொடுத்த பிறகு, அதில் ஒரு சிறு மாறுதல் ஏற்பட்டது. கீழே தனியே படுத்திருக்க விரும்பாமல், சிற்சில சமயம் பாட்டியும் மாடிக்கு வந்து விடுவாள். சிவகாமி வந்திருக்கும் சமயங்களில் பாட்டி கீழேயே அவளுடன் படுத்துக் கொள்வாள்.

அன்றிரவு சிவகாமி கீழே ஹாலில் தான் படுத்திருந்தாள். பாலகிருஷ்ணனுக்கு அன்று தூக்கமே பிடிக்கவில்லை. சிவகாமிதான் அன்றிரவு அவனுக்குச் சாதம் பரிமாறினாள். அதுவா காரணம் அவனுக்குத் தூக்கம் வராதததற்கு? படுக்கையில் புரண்டு கொண்டே கிடந்தான். அவனுக்குத் தூக்கமே வரவில்லை. வீட்டுக் கடிகாரம் மணி அடிக்க வாரம்பித்தது. ஒவ்வொன்ருய் எண்ணிஞன். பதிஞெருமணிதாஞ ஆயிற்று? வெகுநேரம் ஆனது போல் தோன்றியதே! போய்க் கடிகாரத்தைப் பார்த்தான் பதிஞென்று தான் ஆகியிருந்தது. படுக்கையில் வந்து மீண்டும் படுத்தான். கடிகாரத்தின் சத்தம் வெகு கோரமாய்க் கேட்டது. அவனுக்குத் தூக்கம் வரவில்லை! அக்கடிகாரத்தின் சத்தத்திஞல் தான் அவனுக்குத் தூக்கம் வரவில்லையோ என்று நினைத்தான்.

அடுத்த அறையில் தாத்தா தூங்கிக் கொண்டிருந்தார். அவருடைய குறட்டைச் சத்தமும் அவனுக்குக் கேட்டது. ஆஞல் அது கடிகாரத்தின் 'டக் டக்' என்ற சத்தத்தைப் போல் அவ்வளவு கோரமாக இல்லை. அவனுக்கு ஜலபாதைக்கு வந்தது. மீண்டும் எழுந்து சென்ருன். அவ்வேலையை முடித்துக் கொண்டு படுக்கையில் வந்து படுத்தான். தூக்கம் வரவில்லை!

கீழே அவர்கள் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய அமைதியான சுவாசத்தின் சத்தங் கூட அச்சலனமற்ற இரவில் அவனுக்குக் கேட்டது. அவன் படுத்திருந்த இடத்திற்கு நேர் கீழேதான் அவர்கள் படுத் திருந்தார்கள்.

கடிகாரம் மணி அடித்தது. அவன் எண்ணினான். மணி பன்னிரண்டு! அமைதியான இரவு!

திடீரென்று ஒரு செருமல் சத்தம் கேட்டது. அது யாருடைய செருமல்? அது கீழே இருந்து வந்தது. அவளு டைய செருமல் தான் அது! அப்படியானால்? அவளுக்குந் தூக்கம் பிடிக்கவில்லையோ? அல்லது மணி அடித்த சத் தத்தில் விழித்திருப்பாளோ?

பாலகிருஷ்ணன் கண்ணை மூடினான். அதென்ன சத்தம்? அது மிகவும் மெதுவாய் இருந்தது. மாடிப்படி யின் ஒவ்வொன்றின் மீதும் மெதுவாய் யாரோ ஏறுவது போல் தோன்றிற்று. பாலகிருஷ்ணன் கூர்ந்து கவனித் தான். மாடிப்படிகள் ஏறி முடிந்தாயிற்று. அதற்குமேல், சத்தம் அவனுடைய படுக்கையை நோக்கி வருவது போல் இருந்தது. படுக்கையை அணுகிவிட்டது. பாலகிருஷ்ணன் திடுக்கிட்டு விழித்தான். ஒன்றையும் காணோம்! சுற்று முற்றும் பார்த்தான்; ஒன்றையும் காணோம்! அப்படி யானால் அச்சத்தம் என்ன? வெறும் பிரமைதானோ?

அவனுக்கு மீண்டும் ஜலபாதைக்கு வந்தது. எழுந்து போனான். அவனுடைய நெற்றி யெல்லாம் கொதித்தது. தலையைத் தொட்டுப் பார்த்தான். உஷ்ணமா யிருந்தது. மறுபடியும் வந்து படுத்துக்கொண்டான்.

கடிகாரம் மணி அடித்தது. மணி ஒன்று!

படுக்கையிலிருந்து மெதுவாய்ப் பாலகிருஷ்ணன் எழுந்திருந்தான். மெதுவாய்க் கால்களைக் கீழேவைத்து

நடந்து சென்ருன். எங்கே? மாடிப் படிகளில் பூனைபோல் காலை வைத்தான். ஒவ்வொரு படியாய் இறங்கினன். விளக்கு மங்கலாய் எரிந்து கொண்டிருந்தது.

அவர்கள் படுத்திருந்தார்கள்!

அவ்விடத்தை அணுகினன். சிவகாமி தன் கையை லக்ஷ்மியம்மாளின் மீது போட்டு அணைத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். ஆம், தூங்கிக் கொண்டிருந்தாள். அப்படியானல் அச் செருமல்! அவளுடையதில்லையோ? அல்லது தூக்கத்திலேயே செருமினளோ?

பாலகிருஷ்ணன் மெதுவாய் அவ்விடத்தை விட்ட கன்று, மெள்ளக் கதைவைத் திறந்தான். வெளியே நக்ஷத்திரம் பூத்த வானம். குளிர்ச்சியான காற்று வீசிக்கொண்டிருந்தது. ஆனல் அது கூட அவனுடைய உள்ளத்தின் வேட்கையையும், வெக்கையையும் தீர்க்கவில்லை. திடீரென்று யாரோ பின்னல் வரும் சத்தம் கேட்டது. யாரது? யாரா யிருக்கலாம்? பாலகிருஷ்ணன் திடுக்கிட்டுத் திரும்பினன்.

பாட்டி!

"என்னடா பாலு, என்ன செய்து கொண்டிருக்கிருய்?"

அந்தக் கேள்வி அவன் தலைமீது, ஒருகுடம் குளிர்ந்த நீரை 'பொத பொத' வென்று ஊற்றுவது போலிருந்தது. அவனுடைய உள்ளத்தில் எழுந்த தீ அணைந்தது.

"வயிற்றுக்குக் குணமில்லை" என்று சொல்லிக் கொண்டு பாலகிருஷ்ணன் மாடிக்குப் போய்விட்டான். அப்புறம் சிறிது தூங்கினன்.

சுமார் ஐந்து மணி யிருக்கும். லக்ஷ்மியம்மாள் "சிவகாமி, சிவகாமி" என்று மகளை எழுப்பினள்.

"ஐயோ! வேண்டாம்! வேண்டாம்," என்று தடபுட கொட்டிக்கொண்டு திடுக்கிட்டு எழுந்திருந்தாள் சிவகாமி.

"என்னடி சிவகாமி. இப்படிப் பயந்துபோய் எழுந்திருக்கிறுய்? என்னமாவது கனவு கினவு கண்டாயா? காலேவண்டியில் ஊருக்குப் போகவேண்டாமா? நேரமாச்சு," என்று லக்ஷ்மியம்மாள் சொன்னுள்.

பாலகிருஷ்ணன் எழுந்து வெளியில் சென்றுன். சிவகாமி வாசல் தெளித்துக் கொண்டிருந்தாள். ஒருவரையொருவர் பார்க்கவில்லே!

சிவகாமியைக் கொண்டு விடுவதற்கு லக்ஷ்மியம்மாள் அவளுடன் சென்றுள். அவர்களுக்கு டிக்கட் வாங்கிக் கொடுப்பதற்காகப் பாலகிருஷ்ணன் அவர்களுடன் ரயில் நிலேயத்திற்குச் சென்றுன். அவன் டிக்கட்டுகள் எடுத்துக்கொண்டு வந்தபோது, சிவகாமி மட்டும் தனியாக நின்று கொண்டிருந்தாள். பாட்டியைக் காணும். பாட்டி வந்த பிறகு டிக்கட்டுகளேக் கொடுக்கலாம் என்று பாலகிருஷ்ணன் நின்று கொண்டிருந்தான்.

'டிக்கட் வாங்கியாச்சா?" என்று சிவகாமி கேட்டாள்.

"இந்தா." என்று பாலகிருஷ்ணன் டிக்கட்டுகளேக் கொடுத்தான்.

"இந்தாருங்கள் என்று சொல்ல வேண்டும். மாமியாரென்ற மரியாதை வேண்டாமா?" என்று சொல்லிச் சிவகாமி சிரித்தாள்!

## இருபத்தொன்றாவது அத்தியாயம்

பாலகிருஷ்ணனுக்கும் ருக்மணிக்கும் நடக்க விருந்த விவாகம் நின்று விட்டது! உலகத்தில் மனிதர்கள் நினைக்கும் காரியங்களெல்லாம் அவர்கள் நினைத்தபடியே நடப்பதில்லை. அம்மாதிரி நடக்காமலிருப்பது நல்லதோ, கெட்டதோ ஆனால் விஷயம் இதுதான். நாம் நினைத்த படியே காரியங்கள் நடப்பதில்லை. இக்கலியாணம் சம்பந்தப்பட்டவர்கள் எல்லாம், அதைப்பற்றி என்னவெல்லாமோ கற்பனை செய்து கொண்டிருந்தார்கள். அவர்களுடைய கற்பனைகளெல்லாம் வீணாயின. பலரும் பலவிதமாக இக்கல்யாணவிஷயத்தில் உற்சாகங் கொண்டார்கள். இம்மணத்தினால் தன் குடும்பத்திற்கும் சிவகாமியின் குடும்பத்திற்கும் உள்ள உறவானது வலிவடையும் என்று லக்ஷ்மியம்மாள் சந்தோஷப்பட்டாள். ஆனால் இது இப்படி முடியும், அதனால் அவ்விரண்டு குடும்பங்களுக்குமுள்ள உறவு ரத்தாகி விடும் என்று அவள் நினைத்தாளா?

அவ்விவாகம் எங்ஙனம் நின்றது? பகவான் செட்டியார் வாக்குமாறிவிட்டார்! தான் பேசின பேச்சை மீறித் தன் பெண்ணை வேறு இடத்தில் கொடுப்பதென்று தீர்மானித்து விட்டார். முன்பொரு சமயம் அதுவுங் கலியாண சம்பந்தமாகவே பகவான் செட்டியார் வாக்கு மாறிவிட்டதாகச் சுந்தரஞ் செட்டியார் அவரைப் பரிகாசம் செய்தார். அது கேலிக்கும், மகிழ்ச்சிக்கும் இடமாயிருந்தது. ஆனால் இப்பொழுதோ, அவர் உண்மையிலேயே வாக்கு மாறி விட்டார்! இது அவமானத்திற்கும் மனக்கசப்பிற்கும் இடமாயிற்று. "சுந்தரஞ்செட்டியார் வீட்டுக் கலியாணம் நின்று விட்டதாமல்லவா! வெற்றிலை பாக்குப் பரிமான பிறகுங்கூட, திருநெல்வேலிச் செட்டியார் பேச்சு

மாறி விட்டாரா மல்லவா?'' என்று இந்த விஷயத்தைப் பற்றி ஊரெல்லாம் இகழ்ச்சியாய்ப் பேச வாரம்பித்தார்கள்.

இத்தனைக்கும் அடிப்படையான காரணம் என்ன? பெரிய நதிகள் எல்லாம் சிறிய மூலத்தையே கொண்டுள்ளன என்று சொல்கிறார்கள். அதுபோல் பெரிய காரியங்களும் சிறிய காரணத்தையே கொண்டுள்ளன.

சிவகாமியைக் கணவன் வீட்டிற்குக் கொண்டுவிட லக்ஷ்மியம்மாள் சென்றிருந்தாளல்லவா? அங்கு ஒரு சிறிய சம்பவம் நடந்தது. ருக்மணியின் கலியாண சமாசாரத்தைக் கேட்டு அவளுடைய சிறிய தாயார் (அவளுடைய தாயார் கூடப் பிறந்தவள்) திருநெல்வேலிக்கு வந்திருந்தாள்.

சில நாட்கள் அங்குத் தங்கியிருந்த லக்ஷ்மியம்மாள் ஒருநாள் ருக்மணியைப் பார்த்து, ''எங்கடியம்மா, பேரன் பெண்டாட்டியின் சமர்த்தைப் பார்க்கலாம். இன்றைக்கு நீ சாதம் பரிமாறு. எப்படிப் பரிமாறுகிறாய் என்று பார்ப்போம்'' என்றாள்.

ருக்மணி பரிமாறும் போது, சோற்றைச் சிறிது சிந்தி விட்டாள். சாம்பாரையும் சிறிது கொட்டி விட்டாள். உடனே அவளைப்பார்த்து லக்ஷ்மியம்மாள் வேடிக்கையாக, ''இப்படிச் சாமான்களை யெல்லாம் கொட்டிக்கொண்டும், சிந்திக்கொண்டும் இருந்தால், எங்கள் வீட்டில் உன்னால் கொண்டு செலுத்த முடியாதம்மா! நீங்கள் பணக்காரர்கள். உங்கள் வீட்டில் எவ்வளவு சிந்தினாலும், சிதறினாலும் அதைப் பற்றிக் கவனிப்பாரில்லை. ஆனால் நாங்கள் உங்களைப்போல் பணக்காரர்கள் இல்லையம்மா!'' என்று சொன்னாள்.

இதை ருக்மணியின் சிறிய தாயார் கவனித்துக் கொண்டிருந்தாள்.

அப்புறம் இன்னொரு நாள் ருக்மணி வாழைப்பழம் ஒன்றை உரித்துத் தின்றுவிட்டு, தோலை வீட்டிற்குள்ளேயே போட்டு விட்டாள்.

லக்ஷ்மியம்மாள் அதைப் பார்த்ததும், "ஏண்டீ வீட்டை இப்படித்தான் அசுத்தம் செய்வதா? என்ன விருந்தாலும் ஆம்பளை வளர்த்த பெண்தானே! அத்துடன் தாயாரில்லாததால் செல்லமாய் வளர்க்கப்பட்ட பெண்!" என்று சொன்னாள்.

லக்ஷ்மியம்மாள் வெற்றிபுரத்துக்கு வந்தவுடன் ருக்மணியின் சிறிய தாயார் பகவான் செட்டியாரிடம் 'வத்தி' வைக்க ஆரம்பித்து விட்டாள். "கிளியை வளர்த்துப் பூனையிடங் கொடுப்பதுபோல், கிளிபோலப் பெண்ணை இந்தக் கொடுமைக் காரியிடமா ஒப்புவிக்கப் போகிறீர்கள்? கலியாணம் ஆவதற்கு முன்பே இம்மாதிரி அதிகாரம் பண்ண வாரம்பிப்பவள், கலியாணம் ஆனபிறகு என்ன அதிகாரம் பண்ணுவாளோ? தாயில்லாப் பெண் வாழைப் பழம் தின்றதுகூட இவளுக்குப் பிடிக்கவில்லையே! இவளா வாங்கிக் கொடுத்துக் கெட்டுப் போய்விட்டாள். அக்கா இருந்தபோது, ருக்மணி எவ்வளவு செல்லமாய் வளர்ந்த பெண்! ஓழக்கரிசி ஜீவன் அவள் ஒருத்திபோக, இந்தப் பெண்ணின் கதி இப்படியாச்சு!" என்று ஒப்பாரிவைத்து அழவும் ஆரம்பித்து விட்டாள். கடைசியில் முடிவாக, "ருக்மணியை நீங்கள் அங்கே கட்டிக் கொடுத்தீர்களானால், நாங்கள் ஒருவரும் கலியாணத்திற்கு வரமாட்டோம். இப்பொழுதே சொல்லிவிட்டேன். கொடுமைக்காரி! பெண்ணை உங்கவிடாமல், திங்கவிடாமல் கெடுத்து விடுவாள். தாயைப் பறிகொடுத்துவிட்டு, இவ்வளவு நாளும் பரிதவித்த பெண், கலியாணமான பிறகு புருஷன் வீட்டிலுமா போய்க் கஷ்டப்படவேண்டும்?" என்று சொன்னாள்.

ருக்மணி விஷயத்தில் தனக்கிருக்கும் உரிமையை விட அவளுடைய சிறிய தாயாருக்கு அதிக உரிமை இருக்கிறதென்று ஏனோ பகவான் செட்டியாரும் நினைத்தார். ஆகையினால் கலியாணம் நின்றுவிட்டது.

லக்ஷ்மியம்மாளைக் 'கொடுமைக்காரி' என்று ருக்மணியின் சிறிய தாயார் சொன்ன சமாச்சாரம் வெளிவந்தபோது, "இப்பேர்ப்பட்ட உத்தமியைக் கொடுமைக்காரி என்று சொன்னவள் நாக்கு இன்னுமா வெந்து போகவில்லை?" என்று அனைவரும் கேட்டார்கள்.

லக்ஷ்மியம்மாளின் மீது இம்மாதிரி அபாண்டமான பழி சுமத்தியதற்கு அடிப்படையான காரணம் வேறு. ருக்மணிக்குத் தாய் கூடப் பிறந்த மாமா ஒருவர் இருந்தார். அவருக்குக் கலியாண வயதடைந்த ஒரு மகன் இருந்தான். ருக்மணியை அவனுக்குக் கட்டவேண்டுமென்பது அவளுடைய சிறிய தாயாரின் எண்ணம். தன் அக்காளுடைய ஆபரணங்களெல்லாம் இன்னொருத்தி வீட்டிற்குப் போவதா என்று அவளுக்கு வயிற்றெரிச்சல். ஆகையினால் அந்தக் கலியாணத்தை எப்படியாவது நிறுத்திவிட வேண்டுமென்று கங்கணங் கட்டிக்கொண்டே அவள் திருநெல்வேலிக்கு வந்தாள். அதற்காக ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தபோது, வஞ்சக நெஞ்சுடைய அவளுக்குங்கூட இச்சிறிய விஷயங்கள் தாம் கிடைத்தன. வேறொரு குறையோ, குற்றமோ அகப்படவில்லை. உடனே அவைகளைப் பிடித்துக் கொண்டு கூத்தாட வாரம்பித்து விட்டாள். அவளுடைய உண்மையான எண்ணம் பகவான் செட்டியாருக்குத் தெரிந்தபோது கூட அவர் அதை விசேஷமாக எதிர்க்கவில்லை. தாயில்லாப் பெண்ணாகிய ருக்மணியை அவளுடைய தாயார் வழியிலேயே கொடுப்பது நலம் என்று அவர் தீர்மானித்தார்.

சுந்தரஞ் செட்டியார் இவ்விஷயத்தை அறிந்த போது, மிகுந்த வருத்தமடைந்தார். ஆனுல் பகவான் செட்டியாரைக் குறை கூறவில்லை. தன்னைத்தானே நொந்துகொண்டார். உமையொருபாகஞ் செட்டியாரிடம் பேசிவிட்டு அவர் உடனே மாறினுரல்லவா? அதற்கு இப்பொழுது, இந்த ஜென்மத்திலேயே, பலன் கிடைத்து விட்டதென்று அவர் கருதினுர். தன்வீட்டில் பேசப்பட்ட ஒருகலியாணம் நின்று விட்டதென்பது அவருக்கு மிகுந்த அவமானமாய்த் தோன்றியது. ஊரெல்லாம் இதைப்பற்றி இகழ்ச்சியாய்ப் பேசுவார்களே என்று அவர் வெட்கினுர். 'சுந்தரஞ் செட்டியார் என்னையா நாணயகாரர்? இவர் அன்றைக்குப் பேச்சு மாறவில்லையா? அதற்கு இப் பொழுது பலன் கிடைத்துவிட்டது!' என்று ஊராரெல் லாம் பேசுவார்களே என்று அவர் மிகவும் வருந்தினுர். அன்று உமையொருபாகஞ் செட்டியார் வயிறெரிந்து அவருடைய வீட்டை விட்டகன்ருர். இன்று வயிறெரிய வேண்டியது சுந்தரஞ் செட்டியாருடைய முறை! பெண் புத்தி கேட்டுத் தான் மதி கெட்டுப் போனதாக அவர் தன்னைத்தானே குறை கூறிக்கொண்டார்.

திருநெல்வேலியில் ருக்மணிக்கும் அவளுடைய மாமன் மகனுக்கும் நடக்கவிருந்த கலியாணத்திற்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. ஆனுல் சிவகாமி அந்த விஷ யத்தில் சிறிதேனும் உற்சாகங் கொள்ளவில்லை. அவ ளுக்குக் கோபம் பொங்கிக்கொண்டு வந்தது. 'இவளுடைய மாமன் மகனுக்குக் கொண்டு சேர்க்க வேண்டுமென்ரு நான் இத்தனை நகைகளையும் செய்யச் சொன்னேன்?' என்று அவள் நினைத்தாள்.

"வைரப் பதக்கம் எனக்கொன்று வாங்குவதாகச் சொன்னீர்களே, அதை உடனே வாங்கிக்கொண்டு வாங் கள்?'' என்று தன் கணவருக்கு உத்தரவிட்டாள்.

அவர் சென்று பார்த்தபோது, அது விலைபோய் விட்டது. மனைவியிடம் வந்து அவர் அவ்விஷயத்தைச் சொன்னபோது, "அதென்னமோ, எனக்கு வைரப்பதக்கம் அவசியம் வேண்டும். எப்படி வாங்குவீர்களோ எனக்குத் தெரியாது," என்று கண்டிப்பாய்ச் சொன்னாள்.

எங்கெங்கோ தேடி அலைந்து, கடைசியில் ஒரு வைரப் பதக்கத்தை வாங்கிக் கொண்டு வந்தார். பகவான் செட்டியார்.

ருக்மணிக்குச் செய்த நகைகளைப்போல் தனக்கும் ஒவ்வொன்று வேண்டுமென்று சிவகாமி பிடிவாதம் செய்தாள். அந்த நகைகளெல்லாம் வாங்கிக்கொண்டு வரப் பட்டன. ஆனால் கலியாண தினத்தன்று அவள் அந்நகைகளில் ஒன்றேனும் போட்டுக் கொள்ளவில்லை. அவள் சாதாரணமாய்ப் போட்டுக் கொள்ளும் ஆபரணங்களையும் கழற்றி விட்டாள். இம்மாதிரி அடத்திற்குமேல் அடம் செய்துகொண்டிருந்தாள் சிவகாமி. பெரும்பான்மையான கலியாணச் சடங்குகளில் அவள் கலந்து கொள்ளவே இல்லை. அவசியமான சில சடங்குகளில் மட்டும் வேண்டா வெறுப்பாய்க் கலந்து கொண்டாள்.

இந்த விஷயம் லக்ஷ்மியம்மாளுக்கு எட்டிவிட்டது. அவள் ஒருநாள் தன் கணவனைப் பார்த்து, "ருக்மணியை நம்ம பாலகிருஷ்ணனுக்குக் கலியாணம் பண்ண வேண்டு மென்று சிவகாமிக்குக் கொள்ளை ஆசை" என்று சொன்னாள்.

"எல்லாம் உன்னால்தானே கெட்டது?"

"நீங்களும் என்னைத்தான் குறை கூறுகிறீர்களா? நான்தான் கலியாணம் நடக்க விடாமல் செய்து விட்டேனா?"

"கலியாணம் ஆவதற்கு முந்தி நீ ஏன் பேரன் பெண்டாட்டி என்று உரிமை பாராட்டிக் கொண்டு அதிகாரம் செய்ய வாரம்பித்தாய்? நீ தோஷிக் கழுதை! உனக்குத் தான் ஒன்றும் இருக்கக் கூடாதென்று கடவுள் பிடுங்கிக் கொண்டானே! அப்புறமும் மருமகள் என்றும், பேரன் பெண்டாட்டி என்றும் உனக்கு ஏன் இந்த வீண் ஆசை? உமையொருபாகஞ் செட்டியார் மகளையும் கட்டவிடாமல் அன்று தடுத்தாய்; இப்பொழுது இந்தப் பெண்ணையுங் கட்டவிடாமல் செய்துவிட்டாய்!" என்று தன் வயிற்றெரிச்சல் தீரக் கத்தினர் சுந்தரஞ் செட்டியார்.

"நானு என் பேரனுடைய கலியாணத்தைத் தடுத்து விட்டேன்? என் தலைவிதி! தலைவிதி!" என்று கண்ணீர் முத்து முத்தாய் உதிர, ஒரு மூலையில் உட்கார்ந்து தன் ஆத்திரம் எல்லாம் தீர லக்ஷ்மியம்மாள் அழ வாரம்பித்தாள்.

"அன்றைக்கு நல்ல பெண் வந்தபோது, தன் மகள் வழியில்தான் கலியாணம் பண்ணவேண்டுமென்று, அந்தக் கலியாணத்தைத் தடுத்தாளே. இப்பொழுது இந்தக் கலியாணம் நடந்து விட்டதா? கெடுதல் காரி! எப்பொழுதும் அவளுக்குக் கெடுதல் புத்திதான் தோன்றுகிறது" என்று ராமநாதஞ் செட்டியாரும் தன் நண்பர்களிடம் குறைப் பட்டுக் கொண்டார்.

இப்படி இருக்கையில், ஒருநாள் திடீரென்று சிவகாமிக்கு டைபாயிட் ஜுரமென்றும், மிகவும் அபாயமான நிலையிலிருக்கிருள் என்றும் தந்தி வந்தது. லக்ஷ்மியம்மாள் போக வேண்டுமென்று துடியாய்த் துடித்தாள்.

"அங்குப் போவதென்ருல் நீ அங்கேயே இருந்து விடு. அப்புறம் இங்கே வரத் தேவையில்லை." என்ருர் சுந்தரஞ் செட்டியார்.

"பாவம்! அவள் என்ன செய்தாள் உங்களுக்கு?"

"என்னை மதியாதவன் வீட்டிற்கு நீ என்ன போவது?"

"நான் அவர்கள் வீட்டிற்குப் போகாமல், வேறு யார் வீட்டிலாவது இறங்கிச் சிவகாமியைப் பார்த்து விட்டு வந்து விடுகிறேன்."

"கூடாது."

இங்ஙனம் சுந்தரஞ் செட்டியார் குடும்பத்திற்கும், பகவான் செட்டியார் குடும்பத்திற்கும் பேச்சு வார்த்தையற்று, போக்கு வரவற்றுப் போய்விட்டது!

## இருபத்திரண்டாவது அத்தியாயம்

"அந்தக் கலியாணம் நின்று விட்டதா மல்லவா?" என்றாள் செல்லம்மாள்.

"எந்தக் கலியாணம்?" என்று உமையொருபாகஞ் செட்டியார் கேட்டார்.

"அதுதான், நம்ம சகுந்தலைக்குப் பேசி, அப்புறம் மாறினார்களே, அவர்கள் வீட்டுக் கலியாணம்."

"நின்றுவிட்டதா? ஏன்? உனக்கு யார் சொன்னது?" என்று உமையொருபாகஞ் செட்டியார் உற்சாகத்துடன் கேட்க வாரம்பித்தார்.

"ஊர் முழுதுந்தான் பேசிக் கொள்கிறார்கள். உங்களுக்குத் தெரியாதா?"

"தெரியாதே!"

"நின்றுவிட்டதாம்!"

"ஏன் நின்றுவிட்டதாம்? பெண்ணுக்குப் பையன் பிடிக்க வில்லையா?"

"அதொன்று மில்லையாம். அந்தப் பெண்ணுக்குச் சின்னம்மா ஒருத்தி இருக்காளாம். தன் அண்ணன் மகனுக்கே அவளைக் கட்ட வேண்டுமென்று பிடிவாதமாய் அவள் கட்டிக் கொண்டாளாம்"

"அந்தப் பெண்ணும் கலியாணம் பண்ணிக் கொண்டதல்லவா?"

"உம்"

"உன் பெண்ணைப்போல் பிடிவாதக்காரக் கழுதை எங்கும் கிடையாதம்மா! கலியாணம் பண்ணினுல் அவனைப் பண்ணுவாளாம். இல்லையானுல் கன்னியா யிருப்பாளா மல்லவா? அதைத்தானே பார்க்கப் போகிறேன்!"

இப்பொழுது அந்தக் கலியாணந்தான் நின்று விட்டதே. நீங்கள் மறுபடியும் பேசி முடிவு செய்துவிட்டு வாருங்களேன்? இவளும் பிடிவாதமாயிருக்கிருளல்லவா?"

"இனி நான் அந்த மனுஷன் முகத்தில் முழிக்கப் போவதுமில்லை. அந்த வீட்டு வாசலை மிதிக்கப் போவதுமில்லை. மனுஷன் எப்பப் பேச்சு மாறிஞனே, அவனேடு நமக்கென்ன சம்பந்தம்?"

"இப்படி நீங்களும் பிடிவாதமாயிருந்தால், அந்தப் பெண்ணின் கதி என்னுவது?"

"என் தங்கை மகனின் ஜாதகந்தான் நன்ருய்ப் பிடித்திருக்கிறதே. முகூர்த்தம் நிச்சயிக்க வேண்டியதுதான்."

"சகுந்தலைக்குச் சம்மதமில்லையே!"

"சம்மதமில்லையா? அதைத்தானே பார்க்கப் போகிறேன்!"

"இப்படி வீம்பு பண்ணுதீர்கள்."

"இனி நான் அந்த மனுஷன் வீட்டிற்குப்போக மாட்டேன். அது மட்டும் நிச்சயம்" என்று சொல்லி வெளியே போய்விட்டார் உமையொருபாகஞ் செட்டியார்.

"என்னடி உன்னோடு பெருந் தொல்லையா யிருக்கிறது! நாங்கள் எல்லாம் இப்படித்தானு கலியாணம் பண்ணிக் கொண்டோம்? உன் அத்தை மகனுக்கு என்னடி குறை? அவனுந்தான் படிச்சிருக்கான்; பணமிருக்கிறது. பேசாமல் அவனைக் கலியாணம் பண்ணிக் கொள்ளடி. ஏண்டீ இப்படி எங்களை வாதை பண்ணுகிருய்?" என்று செல்லம்மாள் தன் மகளை நோக்கிக் கூறினுள்.

சகுந்தலை மௌனமா யிருந்தாள்.

"இப்ப அவனுக்குக் கலியாணமாகி யிருந்தால், என்னடி செய்வாய்?"

சகுந்தலை மீண்டும் மௌனஞ் சாதித்தாள்.

"மாடுமாதிரி பெண்ணை வைத்துக்கொண்டு கவலையற்றிருக்கிருளே என்று ஊராரெல்லாம் என்னை ஏசுகிருர்களடி. உனக்கென்ன, கவலையற்றிருக்கிருய்!"

"ஊராரெல்லாம் ஏசினுல், அவர்களைப் போய்க் கடி. என்னை ஏன் தொல்லை பண்ணுகிருய்?"

"அடியே, நீ நினைத்தமாதிரி உன்னை விடமுடியாது. உன்னை உன் அத்தை மகனுக்கே கட்டுகிருேமா, இல்லையா

என்றுபார்'' என்று கோபத்துடன் செல்லம்மாள் கூறினுள்.

''கட்டின மறுநாளே நீங்கள் என் பிணத்தை வந்து பார்க்கிறீர்களா, இல்லையா என்று அதையும்பார்,'' என்று வேகத்துடன் சகுந்தலை கூறிவிட்டு ஒரு அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள். அவளுக்கு அழுகை பொங்கிக்கொண்டுவந்தது. அழுது அழுது அவளு டைய ஆத்திரமெல்லாம் அமர்ந்தபோது, அவளுடைய மனேநிலை சிறிது மாறியது. 'என்ன பண்ணித் தொலை வது? யாருக்கு வேண்டுமானுலும் கல்யாணம் பண்ணிக் கொடுக்கட்டும்' என்றுதான் அவளுடைய மனப்பான்மை இருந்தது. அவளுடைய பிடிவாதம் எல்லாம் அவளுடைய கண்ணீரில் கரையலாயிற்று.

நிற்க, உமையொருபாகஞ் செட்டியார் வெளிப் பார் வைக்குத்தான் பிடிவாதமாகவும், கண்டிப்பாகவும் பேசி ருரே ஒழிய, உண்மையில் அவருடைய மனம் அவ்வளவு கடினமாக இல்லை. அவரும் 'என்ன பண்ணித் தொலைவது? சின்னக் கழுதை பிடிவாதம் செய்யும்பொழுது, நாம் இணங்கித்தான் போகவேண்டும்' என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டார். அவர் தன் கடைக்குச் சென்ற போது, அங்கே பல நண்பர்கள் கூடியிருந்தார்கள்.

''சுந்தரஞ் செட்டியாருடைய பேரன் கல்யாணம் நின்று விட்டதாமல்லவா?'' என்று அவர்களைப் பார்த்து உமையொருபாகஞ் செட்டியார் கேட்டார்.

''உங்களை வயிறெரியப் பண்ணியதற்குப் பலன் இல்லாமலா போய்விடும்?''

''இப்பொழுது அவருடைய அபிப்பிராயம் எப்படி இருக்கிறதென்று தெரியவில்லையே'' என்ருர் உமையொரு பாகஞ் செட்டியார்.

"அதென்ன அப்படிக் கேட்கிறீர்கள்? அங்கே சம்பந்தம் செய்து கொள்ள உங்களுக்கு விருப்ப மிருக்கிறதா?"

"பெண் பெற்றவனுக்கு மானம் ஏது? மரியாதை ஏது ஐயா?" என்ருர் உமையொருபாகஞ் செட்டியார்.

"அது நிஜந்தான்" என்று அங்கிருந்தவர்களும் அவருடைய அபிப்பிராயத்தை ஆமோதித்தார்கள்.

பின்பு, வந்தவர்கள் போனவர்களை எல்லாம் உமையொருபாகஞ் செட்டியார் விசாரிக்க வாரம்பித்தார். சுந்தரஞ் செட்டியாரும் தன்னுடைய சம்பந்தத்தை விரும்புகிருரென்றும், அவ்விதம் சம்பந்தம் செய்து கொள்வதை, அவர் பேச்சு மாறியதற்கு ஒரு பிராயச்சித்தமாகக் கருதுகிருரென்றும் அவருக்குத் தெரியவந்தது. ஒருநாள் திடீரென்று உமையொருபாகஞ் செட்டியார் வெற்றிபுரத்துக்குப் போவதாகச் சொன்னபோது, சகுந்தலை மிகவும் ஆச்சரியப்பட்டாள். அவர் திரும்பி வந்து முகூர்த்தம் நிச்சயமாய் விட்டது என்று சொல்லியபோது அவள் அடைந்த ஆனந்தத்துக்கு அளவே இல்லை.

பாலகிருஷ்ணனுக்கும் சகுந்தலைக்கும் ஒரு நன் முகூர்த்தத்தில் திருமணம் நிறைவேறியது!

பேரன் பெண்டாட்டியைப் பார்த்து லக்ஷ்மியம்மாள் உள்ளம் பூரித்தாள். ருக்மணியைக் காட்டிலும் சகுந்தலை எல்லாவிதங்களிலுமே மேம்பட்டவள் என்று அவளுக்குத் தோன்றியது.

நல்லவேளையாகச் சிவகாமிக்கு ஜுரம் சௌகரியமாகி அவளுடைய உடம்புந் தேறிவிட்டது. ஒருநாள் பகவான் செட்டியார் அவளைப் பார்த்து, "பாலகிருஷ்ணனுக்குக் கலியாணம் ஆகிவிட்டதாம் அல்லவா? உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

"உங்கள் பெண் இல்லாவிட்டால், அவனுக்கு வேறு பெண்ணே கிடைக்காதா? அவன் கலியாணமாகாமல் பிரம்மச்சாரியாகவே இருப்பான் என்று நினைத்தீர்கள்?" என்று சிவகாமி கூறினாள்.

"நமக்கு ஏன் அழைப்பு அனுப்பவில்லை?"

"நீங்கள் செய்த வேலைக்கு அவர்கள் நமக்கு அழைப்பு அனுப்பிவிட்டுத்தான் மறு ஜோலி பார்ப்பார்கள்!"

"மாப்பிள்ளை நல்ல பையன்தான். நம்ம ருக்மணிக்குத் தான் அந்தப் பிராப்தம் இல்லை" என்றார் பகவான் செட்டியார்.

பாலகிருஷ்ணனும் சகுந்தலையும் ஆடிக்கழைக்கப் பட்டு மதுரைக்குச் சென்றார்கள். செல்லம்மாள் மாப்பிள்ளைக்குப் பல விதங்களிலும் உபசாரம் செய்தாள். மாப்பிள்ளையும் பெண்ணும் மிகக் குதூகலமாய்க் காலத்தைப் போக்கினார்கள்.

செல்லம்மாளைக் கல்யாணம் விசாரிக்க வந்தவர்களெல்லாம் "உன்மகள் கெட்டிக்காரியம்மா! பிடிவாதமாய் அவனையே கலியாணம் பண்ணுவேன் என்று சொல்லிக் கடைசியில் அப்பிடிவாதத்தைக் கொண்டு செலுத்தியே விட்டாளா! கெட்டிக்காரிதான்" என்றார்கள்.

அதைக் கேட்கச் செல்லம்மாளுக்கு மிகவும் சந்தோஷமாயிருந்தது. அவர்கள் அப்படிச் சொல்லும் போதெல்லாம், அவள் புன்முறுவல் செய்வாள்.

"சில பெண்களைப் போல், உன் மகள் முட்டாள்தனமான பிடிவாதம் செய்யாமல், நல்ல பொருளுக்குத்தான் அம்மா, ஆசைப் பட்டிருக்கிறாள்! மாப்பிள்ளை நல்ல பையன் தான்!" என்பார்கள்.

"போகட்டும். ஈஸ்வரன் கிருபையில் அதுகள் நன்ருயிருக்க வேண்டும். அவ்வளவுதான். வேறென்ன?" என்பாள் செல்லம்மாள்.

இம்மாதிரி சம்பாஷணையைக் கேட்கும்போதெல்லாம் சகுந்தலையை ஒரு கேள்வி கேட்கவேண்டும் என்று பாலகிருஷ்ணனுக்கு ஆசை தோன்றும். ஆனுல் கேட்பதற்கு வெட்கப்படடுக்கொண்டு பேசாமலிருந்துவிடுவான். புது மணத் தம்பதிகளின் வெட்கம், கூச்சம் இதெல்லாம் சற்று மறைந்தபோது, ஒரு நாள் பாலகிருஷ்ணன் தான் கேட்க நினைத்த கேள்வியைக் கேட்டே விட்டான்.

"ஏன் சகுந்தலா, நீ என்னையே கலியாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று பிடிவாதம் செய்தாயாமே. நான் உனக்கு என்ன அபராதம் செய்தேன்? நீ ஏன் என்னை இப்படித் தண்டிக்க வேண்டும் என்று தீர்மானித்தாய்?"

இதைக் கேட்டதும் சகுந்தலை கோபத்துடன் அவனை விழுங்கி விடுபவள் போல் சற்று நேரம் பார்த்துக்கொண்டிருந்தாள். பின்பு திடீரென்று சிரித்துக்கொண்டு, "அந்த வருஷ விழாக் கொண்டாட்டத்தில் அத்தனைபேர் இருக்க என்னையே ஏன் அப்படி வெறிக்க, வெறிக்கப் பார்த்தீர்கள்? அந்தக் குற்றத்திற்காகத் தான் தண்டிக்க வேண்டுமென்று தீர்மானித்தேன்!" என்று சொன்னுள்.

அன்று இரவுச் சாப்பாடு முடிந்தவுடன் மாமனுர் மருமகனைப் பார்த்து, "என்ன மாப்பிள்ளை, காலேஜ் திறந்தவுடன் சேர வேண்டியதுதானே?" என்று கேட்டார்.

"ஆமாம், அதில் என்ன சந்தேகம்?"

"எந்தக் கல்லூரி? அமெரிக்கன் கல்லூரியிலா, மதுரைக் கல்லூரியிலா?"

'எனக்குத் திருநெல்வேலிக் கல்லூரிக்குப் போகத் தான் விருப்பமாயிருக்கிறது'' என்ருன் பாலகிருஷ்ணன்.

மாமனுர் வருந்தி அழைக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டு மாப்பிள்ளை 'பிகு' பண்ணுவதாக எண்ணி, ''ஏன் நம்ம வீட்டிலேயே இருந்துகொண்டு இங்கேயே படிக்கலாம். நீங்கள் அப்படி ஒன்றும் வித்தியாசமாய் நினைத்துக் கொள்ள வேண்டாம். நம்ம ஊரில் காலேஜ் இருக்கும்பொழுது, நீங்கள் ஏன் இன்னொரு ஊருக்குப் போவது? அதெல்லாம் போகப் படாது. இங்கே இருந்து படிப்பதுதான் பலவிதங்களில் உங்களுக்கும் சௌகரியம் எங்களுக்கும் சௌகரியம். ஹாஸ்டல் சாப்பாடு உங்களுடைய உடம்புக்கு ஒத்துக்கொள்ளாது. மண்டையிடித்தால், காய்ச்சலடித்தால் உங்களை யார் பார்த்துக் கொள்வார்கள் அங்கே? அதெல்லாம் கூடாது. இங்கேதான் வந்து விடுங்கள்,'' என்று உமையொருபாகஞ் செட்டியார் கூறினுர்.

''இப்பொழுதே அதற்கென்ன அவசரம்? பார்க்கலாம். இன்னும் நாளிருக்கிறதல்லவா?'' என்ருன் பாலகிருஷ்ணன்.

## இருபத்து மூன்ருவது அத்தியாயம்

பாலகிருஷ்ணனுடைய இல்லற வாழ்க்கை இன்பகரமாய்ச் சென்று கொண்டிருந்தது. ஆடிக்குச் சென்ற தம்பதிகள் இருவரும் மதுரையிலிருந்து திரும்பி வந்த தினம். அன்று சாயந்திரம் பாலகிருஷ்ணன் கடையிலிருந்து திரும்பியபோது, தன் மனைவிக்காகப் பூவும், பலகாரங்

களும் வாங்கி வந்தான். அங்ஙனம் வந்தபோது, அவன் முன்பு சிவகாமிக்காகப் பூவும் பலகாரங்களும் வாங்கி வரும் வழக்கம் அவனுக்கு ஞாபகம் வந்தது. அவைகளைக் கொண்டு போய்ப் பாட்டியின் கையில் கொடுத்தான், பெரியமனுஷியாகப் பாட்டி வீட்டிலிருக்கும் பொழுது சகுந்தலையின் கையில் கொடுக்கக் கூடாதென்பது அவனுடைய எண்ணம். அன்றுதான் முதன்முதல் அவன் தன் மனைவிக்காகப் பூவும், பலகாரங்களும் வாங்கிவந்திருந்தான்.

“நானும் இங்கே பூவாங்கி யிருக்கிறேனே, நீ வேறு ஏன் வாங்கி வந்தாய்?” என்று பாட்டி கேட்டாள்.

“எனக்குத் தெரியாதே!” என்றான் பாலகிருஷ்ணன்.

லக்ஷ்மியம்மாள் அவைகளைச் சகுந்தலையிடங் கொடுத்தாள். அவள் அப் பலகாரங்களில் சிலவற்றை எடுத்து ஒரு தாம்பாளத்தில் பாட்டிக்குக் கொண்டுவந்து கொடுத்தாள்.

“எனக்கென்ன பலகாரம்? நீ சாப்பிடு,” என்று சொன்னாள் லக்ஷ்மியம்மாள்.

சகுந்தலையும் அப்பலகாரங்களைச் சாப்பிடவில்லை. கணவன் வாங்கிக் கொண்டுவந்த பூவையும் அவள் தலையில் வைத்துக்கொள்ளவில்லை. இதைப் பாலகிருஷ்ணன் கவனித்தான்.

காரணம் என்னவா யிருக்கலாம்? வெகு நேரம் யோசித்தும், அவனுக்கு அதன் மர்மம் விளங்கவில்லை. அவளுடைய கையில் கொடுக்காததனால், அவளுக்குக் கோபமாயிருக்கலாமோ என்று யோசித்தான்.

அன்றிரவு சாப்பாடு முடிந்தவுடன் வெற்றிலை பாக்குத் தட்டை எடுத்துக்கொண்டு சகுந்தலை மாடிக்குச்

சென்றுள். பாலகிருஷ்ணன் படுக்கையில் கோபமாய் உட்கார்ந்திருந்தான்.

"நான் வாங்கிவந்த பூவை நீ ஏன் வைத்துக்கொள்ள வில்லை?"

"நான் வைத்துக்கொள்ள இஷ்டப்படவில்லை!"

"இஷ்டமில்லையா?"

"ஆம்."

"ஏன், நான் தொட்ட பூ உனக்கு ஆகாதோ?"

"நீங்கள் தொட்ட பூ எனக்கு ஆகும்."

"அப்புறம்?"

"நான் வைத்துக் கொள்ள இஷ்டப்படவில்லை."

பாலகிருஷ்ணனுக்கு என்ன சொல்வதென்று தெரிய வில்லை. மிகுந்த கோபத்துடன் அவளைப் பார்த்தான்.

"ஐயோ! உங்கள் கோபத்தைப் பார்த்தால் பயம்மா யிருக்கிறது! இப்படி எல்லாம் என்னைப் பார்க்காதீர் கள்!" என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே தன் மடியி லிருந்து பூவை எடுத்து, "நான் வைத்துக்கொள்ள இஷ்டப் படவில்லை. நீங்களே அதை எனக்குச் சூட்டவேண்டுமென் பது என் ஆசை!" என்று அவன் கையில் கொடுத்தாள்.

பாலகிருஷ்ணனுக்குச் சந்தோஷங் கரைகொள்ள வில்லை!

"அதுதான் சரி. நான் வாங்கிவந்த பலகாரங்களை நீ ஏன் தொட்டுக்கூட பார்க்கவில்லை?"

"எனக்கு சாப்பிட இஷ்டமில்லை"

"சாப்பிட இஷ்டமில்லையா?"

"ஆம்"

"ஆமாம் உனக்குச் சாப்பிட இஷ்டமில்லை. ஆனால் நான் ஊட்ட வேண்டுமென்பது உன்னுடைய இஷ்டம்! அப்படித்தானே?" என்று சொல்லிக்கொண்டே அவளுடைய மடியைப் பற்றி இழுத்தான். அதிலிருந்து அவன் வாங்கிக் கொண்டுவந்த பலகாரப் பொட்டலம் கீழே விழுந்தது!

இங்ஙனம் அவர்களுடைய இல்லறச் சகடம் பூச் சூட்டலும், ஜிலேபி ஊட்டலுமாக இனிது ஓடிக்கொண்டிருந்தது!

வீட்டு வேலைகளிலும் லக்ஷ்மிப்பாட்டிக்குச் சகுந்தலை மிகுந்த உதவியாயிருந்தாள். படித்த பெண்ணாயிருந்த போதிலும், எல்லா வேலைகளையும் சந்தோஷத்துடனும் உற்சாகத்துடனும் செய்தாள். பாட்டியுடன் சென்று தண்ணீர் எடுத்து வந்தாள. பாட்டிக்குச் சமையலில் ஒத்தாசைபுரிந்தாள். இதை எல்லர்ம் பாரத்தபோது, பாட்டிக்கு மிகுந்த சந்தோஷமா யிருந்தது. ஆனால் அத்துடன் அவளுக்கு ஒரு ஏக்கமும் இல்லாமல் இல்லை. "ருக்மணியை கலியாணம் பண்ணியிருந்தால், சிவகாமி வரப்போக இருப்பாளே. அந்த முட்டாள் மனுஷனுடைய முட்டாள் செய்கையால் இப்படிப் போக்குவரவு அற்றுப் போய் விட்டதே. மனுஷன் பேசாமலாவது இருந்து தொலைத்தானா? உறவைக் கெடுத்து விட்டானே!" என்று அவள் அடிக்கடி வருந்தினாள்.

பாலகிருஷ்ணனுக்குத் தன் மனைவி இம்மாதிரிக் கடினமான வேலைகளை எல்லாம் செய்தது பிடிக்கவில்லை. அவளுடைய மென்மையான கரங்கள் தண்ணீர்க் கயிற்றைப் பற்றி இழுக்கும்போது, சிவந்து கன்றிப் போகுமே என்று நினைத்தான். புகைமண்டிய சமையலறையிலிருக்கும் பொழுது, அவளுடைய கண்களில் கண்ணீர் மல்குமே என்று அவனுக்கு வருத்தம் ஏற்பட்டது.

ஒரு நாள் பாட்டியிடம், "ஏன் பாட்டி, எத்தனை நாளைக்குத்தான், இந்த வேலைகளை எல்லாம் நீ செய்து கொண்டிருப்பாய்? உனக்குக் கஷ்டமாக இல்லையா?" என்று பாலகிருஷ்ணன் கேட்டான்.

"இப்பொழுதுதான் உன் பெண்டாட்டி உதவிக்கு வந்திருக்கிறாளல்லவா?" என்று லக்ஷ்மிப் பாட்டி சிரித்துக் கொண்டே சொன்னாள்.

"இதற்கெல்லாம் ஒரு ஆள் வைத்துவிட்டால் என்ன, பாட்டி?"

"அதை நீ விண்டு விளம்ப வேண்டுமென்றுதானே உன் வாயைக் கிளறினேன். ஏண்டாப்பா, இத்தனை நாளும் உனக்கு ஏன் இந்தக் கருணை பிறக்கவில்லை?" என்று பாட்டி சிரித்துக் கொண்டே கேட்டாள்.

பாலகிருஷ்ணனுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

அன்று சுந்தரஞ் செட்டியார் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில், லக்ஷ்மியம்மாள் புன்சிரிப்புடன், "வீட்டு வேலைகளுக்கெல்லாம், ஒரு ஆள் வைக்க வேண்டுமாம். உங்கள் பேரனுக்கு என் மேல் கருணை பிறந்திருக்கிறது!" என்று சொன்னாள். பக்கத்திலேயே சாப்பிட்டுக் கொண்டிருந்த பாலகிருஷ்ணனுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது!

மறுநாள் காலையில் சகுந்தலை குடத்தை எடுத்துக் கொண்டு, தண்ணீர் எடுத்து வரக் கிளம்பியபோது, "வேண்டாம் அம்மா! நீ தண்ணீர் கொண்டு வருவது உன் புருஷனுக்கு இடுப்பு வலிக்கிறதாம்! நான் போகிறேன்." என்று பாட்டி சிரித்துக் கொண்டே சொன்னாள்.

"அவர் என்னிடம் அதைச் சொல்லியிருக்கவேண்டும். நான் நன்றாய்ப் பதில் சொல்லி யிருப்பேன்" என்றாள் சகுந்தலை.

"என்னடியம்மா பதில் சொல்லியிருப்பாய்? படித்த, புத்திசாலிப் பெண்ணாச்சே. எங்கே, சொல் பார்க்கலாம்," என்றாள் லக்ஷ்மியம்மாள்.

"அவர் படித்துப் படித்துக் கண்கள் பூத்துப்போகின்றன. ஒளி மழுங்கிக் கெட்டுவிடும். எழுதி எழுதி, உள்ளங்கை தேய்ந்து, விரல்கள் சூம்பி விடுகின்றன. இதெற்கெல்லாம் முதலாவது ஒரு ஆள் வைத்துக் கொள்ளுமாறு சொல்லி யிருப்பேன்!" என்றாள்.

"சபாஷ்! எனக்கு இந்த யோசனை தெரியவில்லையேடீ, படித்த பெண்ணென்றால், படித்த பெண்தான்!" என்று பேத்தியை மெச்சினாள் லக்ஷ்மிப்பாட்டி.

அவளுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. பாலகிருஷ்ணன் வந்தவுடன், "நாளைக்கு ஒரு ஆளை வரச்சொல்லி யிருக்கிறேண்டாப்பா" என்றாள்.

பாலகிருஷ்ணன் சந்தோஷத்துடன், "அதுதான் நல்லது பாட்டி! நான் சொன்னால் கேலி பண்ணுகிறாயே?" என்றான்.

"ஆமாண்டா பாலு! இப்படி வைத்த கண் மாறாமல் படித்துக்கொண்டே இருந்தால், உன் கண்கள் என்ன கதி ஆவது? எழுதி, எழுதி விரல்களும் சூம்பிப் போகுமல்லவா? ஆகையினால் அந்த வேலைகளை எல்லாம் கவனித்துக் கொள்வதற்காக நாளைக்கு ஒரு ஆளை வரச் சொல்லி யிருக்கிறேன்," என்று லக்ஷ்மியம்மாள் புன்முறுவலுடன் கூறினாள்.

என்ன பதில் சொல்வதென்று பாலகிருஷ்ணனுக்குத் தோன்றவில்லை. இது சகுந்தலையினுடைய குறும்புதான் என்பது அவனுக்கு உடனே தெரிந்து விட்டது. என்ன செய்யலாம்? அவளைக் கன்னத்தில் நன்றாய் அறைய வேண்டும் போல் அவனுக்குத் தோன்றியது!

கல்லூரிக்குப் போவதற்கு இன்னும் சில தினங்களே இருந்தன. திருநெல்வேலி ஹிந்துக் கல்லூரியிலிருந்து பாலகிருஷ்ணனுக்குப் பிரவேச உத்திரவு வந்திருந்தது. அதைக் கையில் வைத்து அவன் பார்த்துக் கொண்டிருந்த பொழுது, அங்கு சகுந்தலை வந்தாள்.

"அதென்ன பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?"

பாலகிருஷ்ணன் அக்கார்டை அவளிடம் நீட்டினான்.

அதைப் பார்த்துவிட்டு, "அப்படியானால் நீங்கள் திருநெல்வேலிக்குத்தான் போகிறீர்களா?" என்று கேட்டாள்.

"ஆம்"

"மதுரையில் எங்கள் வீட்டில் இருந்துகொண்டு படிக்கலாம். அங்குதான் போகவேண்டும்."

"உங்கள் வீட்டில் இருந்து கொள்ளலாம். ஆனால் படிக்க முடியாது."

"ஏன் படிக்கமுடியாது?"

"தேவியார் அல்லும் பகலும் அறுபது நாழிகையும் அங்கே திருக்கோயில் கொண்டருளி யிருக்கும்போது, அடியேன் கவனம் படிப்பில் செல்லுமா?"

சகுந்தலை புன்முறுவல் செய்தாள். "என்னை நீங்கள் இப்படியெல்லாம் ஏமாற்ற முடியாது. நீங்கள் திருநெல்வேலிக்குப் போகும் காரணம் எனக்குத் தெரியும்."

"என்ன?"

"அந்த வருடாந்திர விழாக் கூட்டத்தில் என்னை அந்தப்பார்வை பார்த்தீர்களே. அதில் எவ்வளவோ விஷயம் அடங்கி யிருக்கிறதென்று நினைத்து, நான்

உங்களையே கலியாணம் பண்ணுவதென்று பிடிவாதமா யிருந்தேனே. நீங்கள்மட்டும் அந்தத் திருநெல்வேலிப் பெண்ணைக் கலியாணம் பண்ணிக்கொள்ள ஏன் சம்மதித் தீர்கள்? என்னைக்காட்டிலும் அவள் மீதுதானே உங் களுக்கு அதிக விருப்பம்?''

"அப்படி என்று யார் சொன்னது?''

"அப்படியானால்?''

"அப்படியானால் என்ன?''

"அப்படியானால், உங்கள் தாத்தாவும் பாட்டியுந் தான் பிடிவாதமாய் அதைத் தீர்மானம் செய்தார்களா? உங்களுக்கு அதில் பரிபூர்ணமான இஷ்ட மில்லையா?''

"இல்லை.''

இவ்வார்த்தை சகுந்தலைக்கு மிகவும் ஆறுதல் அளித் தது. இன்னொரு பெண் கிடைக்காததனால் தான் அவன் தன்னைக் கலியாணம் செய்துகொண்டான் என்ற எண் ணம் அவளுடைய மனதை வெகுநாட்களாய் வருத்திக் கொண்டே இருந்தது. அங்ஙனம் இல்லை என்று தெரிந்து கொண்டதில் அவள் மிகவும் சந்தோஷம் அடைந்தாள். அவளுடைய மனதிலிருந்து ஒரு பெரும் பாரம் நீங்கியது போல் தோன்றியது.

பாலகிருஷ்ணன் உண்மையைத்தான் சொன்னான். ஆனால் முழு உண்மையையும் சொல்லி விட்டானா?

அவன் மறுநாள் திருநெல்வேலிக்குப் புறப்பட இருந் தான். அன்றிரவு லக்ஷ்மியம்மாள் மாடிக்கு வந்தாள். "ஏண்டா பாலு, திருநெல்வேலிக்குத் தானே போகப் போகிறாய்?''

அவன் அங்குப் போவதில் அவளுக்கு ஒரு ஆறுதலிருந்தது.

"ஆம்," என்ருன் பாலகிருஷ்ணன்.

"அங்கே சிவகாமியைப் பார்ப்பாயல்லவா?"

"அவளை ஏன் பாட்டி பார்க்கப் போகிறேன்?"

ருக்மணியைத் தனக்குக் கலியாணம் செய்துகொடுக்காததனுல், அவனுக்குச் சிவகாமி மீது வருத்தமிருக்குமோ என்று லக்ஷ்மிப் பாட்டி நினைத்தாள்.

"அப்படியானுல் நீ அவளைப் பார்க்கவே மாட்டாயா?" அவளுடைய கண்களில் கண்ணீர் மல்கியது.

"கல்லூரிக்கும் அவளுடைய வீட்டிற்கும் வெகு தூரம், பாட்டி"

"இருந்தாலும் ஒரே ஊர் தானப்பா." அவளுடைய வார்த்தைகள் கெஞ்சுங் குரலில் இருந்தன.

"எதற்காகப் பாட்டி கேட்கிருய்?"

"அவள் சுகமாயிருக்கிருளா, சௌக்கியமா யிருக்கிருளா என்று பார்த்து எனக்கு ஒரு கடிதம் போட மாட்டாயா?" அவளுடைய கண்களினின்றும் கண்ணீர்த் துளிகள் உதிர்ந்தன.

சிறிது நேரம் மௌனம்.

"கடிதங்கள் கூடப் போடவேண்டாம், பாலு. கடிதம் போட்டால் அவருக்குத் தெரிந்து விடுமல்லவா? நீ எப்பொழுது மறுபடியும் இங்கு வருவாய்?"

"சுமார் மூன்று மாதங்களாகும்"

"பரவாயில்லை. நீ வரும்பொழுது அவளைப் பார்த்து விட்டு வருகிருயா?"

பாட்டியின் குரலும், அவள் பேசிய முறையும், பால கிருஷ்ணனுடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. திருநெல்வேலிக்குப் படிக்கச் செல்வதென்று அவன் தீர் மானித்ததன் ஆதிக் காரணம் வேறுதான். ஆயினும் அப் பொழுது அவனுக்கு முன்னால் நின்ற பிள்ளையில்லாத அப் பெண்ஜன்மத்தைத் திருப்தி செய்வதற்காகவேனும், எத்தகைய தடைகளையும் மீறிக்கொண்டு அவன் திரு நெல்வேலிக்குப் போகலாம் போலத் தோன்றியது.

''மறந்துவிடாதே, தம்பி!'' என்று பிள்ளையில்லாத அப்பெண் ஜன்மத்தின் குரல் மீண்டுங் கெஞ்சியது!

## இருபத்து நான்காவது அத்தியாயம்

பாலகிருஷ்ணனுடைய அறையில் அவனுடைய கல்லூரி நண்பர்கள் பலர் கூடியிருந்தனர். அவன் திருநெல் வேலிக் கல்லூரிக்கு வந்து ஏறக்குறைய ஒருமாதமாகப் போகிறது. அவனுக்குக் கல்லூரியிலும், ஹாஸ்டலிலும் பல நண்பர்கள் சேர்ந்து விட்டனர்.

''நாங்கள் இன்று சினிமாவுக்குப் போகிறோம். நேர மாய் விட்டது. சிக்கிரம் புறப்படும்'' என்றார்கள் நண் பர்கள்.

''என்ன படம்?'' என்று பாலகிருஷ்ணன் கேட்டான்.

''ஹிந்திப் படம் ஒன்று புதிதாய் வந்திருக்கிறது''

ஹிந்திப்படம் என்றால் அவனுக்கு வெகு பிரியம். அவனுக்குச் சிறிது ஹிந்தி தெரியும். ஆகையினால் தான்

அவனைக் கூட்டிச் செல்வதற்கு நண்பர்கள் விசேஷமாய் வந்திருந்தார்கள்.

"நியூ தியேட்டர்ஸ் படம்," என்றான் ஒரு நண்பன்.

கேட்கவே வேண்டியதில்லை. மிக அழகாக விருக்கும்.

"சைகால் நடிக்கிறான்!" என்றான் இன்னொருவன்.

சைகாலுடைய பாட்டில் பாலகிருஷ்ணனுக்கு அபார மோகமுண்டு. அவசியம் அவன் போகத்தான் வேண்டும். ஆனால் அவன் வேறொரு இடத்திற்கு அன்று போவதாகத் தீர்மானம் செய்திருந்தான். ஆகையினால் சினிமாவுக்கு வரமுடியாதென்று பாலகிருஷ்ணன் கூறினான். நண்பர்கள் மிகவும் வற்புறுத்தினர். ஆனால் பாலகிருஷ்ணனும் பிடிவாதமாய் மறுத்து விட்டான். நண்பர்கள் போய் விட்டனர்.

பாலகிருஷ்ணன் திருநெல்வேலிக்கு வந்து ஏறக் குறைய ஒரு மாதமாகிறது. அவன் மனதிலிருந்த ஆசையை அதுவரை அவனால் பூர்த்தி செய்து கொள்வதற்கு முடியவில்லை. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் அன்று சிவகாமியைப் பார்க்க வேண்டுமென்று அவன் தீர்மானித்துக் கொள்வான். ஆனால் ஏனோ அதுவரைக்கும் அது நிறைவேறவில்லை. அந்த ஞாயிற்றுக்கிழமை கட்டாயம் அவளைப் பார்க்க வேண்டும் என்று தீர்மானித்திருந்தான். ஆனால் அவளை எங்ஙனம் பார்ப்பது? அவளுடைய வீட்டிற்கு அவன் போகலாமா? எப்படிப் போவது? அவர்களுடைய குடும்பங்களுக் கிடையில் பேச்சு வார்த்தை இல்லையே. அப்படி இருக்கும்பொழுது, அவன் போவது சரியா? பின் அவளை எங்ஙனம் பார்க்கமுடியும்? அதற்கு என்ன வழி? இவ்விதம் சிந்தித்துக்கொண்டே பாலகிருஷ்ணன் தன் அறையிலிருந்து புறப்பட்டான். சிந்தனையில் ஒரு வழியும் தோன்றா விட்டாலும், சிற்சில சமயங்களில்

மனிதன் காரியத்திலிறங்குகிருன். அம்மாதிரிதான் அன்று பாலகிருஷ்ணனும் சிவகாமியின் வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தான். ஏன்? அவளைச் சந்திப்பதற்கு ஒரு வழியும் புலப்படாத போதிலும், அவன் ஏன் அக்காரியத்தில் முனைந்தான்? ஏதாவது ஒரு வழி தானே தோன்றும் என்று அவன் நினைத்தானே!

அவன் அத்தெருவை அணுகி விட்டான். அவனுடைய கால்கள் வேகமாய் நடந்தன. அவனுடைய நெஞ்சு ஏன் 'திக் திக்' என்று அடித்துக் கொள்கிறது? சிவகாமியின் வீடு சமீபத்தில் வந்து விட்டது.

இதென்ன அதிசயம்? அது நிஜந்தானு, அல்லது அவனுக்கு ஏற்பட்ட ஒரு பிரமைதானு?

சிவகாமி வாசலில் நின்று கொண்டிருந்தாள்! அதே பழைய மோகன உருவம்!

பாலகிருஷ்ணன் அவளைப் பார்த்தான். அரை குறைப் பார்வைதான். நன்முய்க் கூடப் பார்க்கவில்லை. அவளுடைய கண்களை அவனுல் சந்திக்க முடியவில்லை. அதற்குள் அவன் அவளுடைய வீட்டைக் கடந்து விட்டான். ஏனே அத்தனை அவசரம்? மிக வேகமாய் நடந்து போய் விட்டான்!

பாலகிருஷ்ணனுக்கு அன்று வெகு திருப்தி. ஒரு மாதமாய் அவன் கொண்டிருந்த ஆசை அன்று பூர்த்தியாகி விட்டது. சிவகாமியை அவன் பார்த்து விட்டான்!

அதென்ன ஆச்சரியம்? அவன் வரும் சமயம் பார்த்து, அவள் வாசலில் எப்படி நின்றுகொண்டிருக்க நேர்ந்தது? தற்செயலாய் நின்று கொண்டிருந்தாளா......அல்லது ......அல்லது......அவனை எதிர்பார்த்தே நின்று கொண்டிருந்திருப்பாளோ? ஒவ்வொரு நாளும் இங்ஙனம் அவள்

எதிர்பார்த்து, ஏமாற்றம் அடைந்திருப்பாளோ? இவ்வெண்ணம் அவனுக்கு இன்பம் ஊட்டியது. அவ்வின்பத்திலும் ஒரு துன்பம் தலை நீட்டியது. திருப்தியிலும் ஒரு அதிருப்தி! அவளுடைய கண்களை அவனால் சந்திக்க முடியவில்லை! அவன் அவசரமாய்வந்துவிட்டான். சிவகாமி அவனைக் கவனித்தாளோ, இல்லையோ?

இச்சம்பவம் நடந்த மறுநாள் இரவு பகவான் செட்டியார் மாடியில் படுக்கையறையில் உட்கார்ந்து கொண்டு வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தார். சிவகாமி அவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து வெற்றிலை மடித்துக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

"பாலகிருஷ்ணன் இங்கேதான் படிக்கிறான். உனக்குத் தெரியுமா?" என்று பகவான் செட்டியார் கேட்டார்.

சிவகாமி சிறிதேனும் உணர்ச்சியற்ற முறையில் "உம்" என்றாள். அதிலிருந்து அவளுக்கு அவ்விஷயம் தெரியுமா, தெரியாதா என்பதைப் பகவான் செட்டியாரால் அறிந்துகொள்ள முடியவில்லை.

"இங்கேதான் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறான்" என்று மீண்டும் பகவான் செட்டியார் கூறினார்.

"உம்," என்றாள் சிவகாமி.

அத்துடன் அப்பேச்சு நின்றது. இவ்விஷயத்தைச் சிவகாமி வெகு நாட்களுக்கு முன்பே அறிந்திருந்தாள். அயல் வீட்டுக்காரி ஒருத்தி ஒரு நாள் அவளிடம் பேசிக் கொண்டிருந்தபோது "உன் பெரியம்மா பேரன்......" என்று ஆரம்பித்தாள்.

சிவகாமி ஆச்சரியத்துடன் விழித்தாள்.

"அவன் தாண்டியம்மா உங்கள் ருக்மணிக்குக் கூட உன் வீட்டுக்காரர் அவனை முதலாவது பேசினுராமல்லவா" என்று அவள் கேட்டாள்.

"ஆமாம், அவனுக்கென்ன?" என்று பதற்றத்துடன் சிவகாமி கேட்டாள்.

"ஒன்றுமில்லை. அவன் இங்கேதான் காலேஜில் படித்துக் கொண்டிருக்கிறுனும். உனக்குத் தெரியுமா?"

"ஓஹோ! எனக்குத் தெரியாதே!" என்றுள் சிவகாமி.

பாலகிருஷ்ணனுக்கும் ருக்மணிக்கும் நடக்கவிருந்த விவாகம் திடீரென்று எதிர்பாராத விதமாய் நின்று போனது முதலில் சிவகாமிக்கு ஏமாற்றத்தையும் கோபத்தையுமே உண்டு பண்ணியது. ஆரம்பத்தில் உண்டான உணர்ச்சி வேகத்தில், அவள் தன்னுடைய ஏமாற்றத்தையும், கோபத்தையும் வெளியில் காட்டிக் கொள்வதற்குக் கூட அஞ்சவில்லை. ருக்மணியின் கலியாணத்தில் அவள் கலந்து கொள்ளாமலிருந்ததும், மேலும் அவள் செய்த பிடிவாதங்களும் அவ்வேகத்தில் எழுந்த செயல்களே ஆகும். ஆனுல் சிறிதுகாலம் ஆனபின்பு, அவ்விஷயத்தை அவள் சாந்தமாய்ச் சிந்தித்துப் பார்த்தபோது, அக் காரியம் அத்தகைய முடிவுக்கு வந்ததே நலம் என்று அவளுக்குத் தோன்றியது. அத்தகைய மனே நிலையில் இருந்தபோது தான், பாலகிருஷ்ணன் திருநெல்வேலியில் படித்துக் கொண்டிருக்கிறுன் என்ற விஷயத்தை அவள் அறிந்தாள். அது அவளுடைய மனதில் எத்தகைய உணர்ச்சியை உண்டுபண்ணியது?

நிற்க, ஞாயிற்றுக்கிழமைதோறும் மாலை நேரத்தில், சிவகாமியின் வீட்டு வழியாகச் செல்வதையும், அவளைப் பார்ப்பதையும் ஒரு முக்கியமான சடங்காக வைத்திருந்தான் பாலகிருஷ்ணன். அவளும் நாளடைவில் ஞாயிற்

றுக்கிழமை மாலைகளில் அவனை எதிர்பார்க்க வாரம்பித்தாள்.

இம்மாதிரி ஒரு ஞாயிற்றுக் கிழமை மாலை அவள் திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்த போதுதான், அவ்வெதிர்பாராத சம்பவம் நடந்தது. எப்பொழுதும் வழக்கம் போல் தெருவழியே போகாமல் பாலகிருஷ்ணன் அன்று அவளை நோக்கியே நடந்து சென்றான். சிவகாமியின் உள்ளம் படபடத்தது ஐயய்யோ! இதென்ன விபரீதம்! என்று நினைத்துக்கொண்டு எழுந்து உள்ளே போக யத்தனித்து, வீட்டிற்குள் அடி எடுத்து வைத்தாள். அதற்குள் பாலகிருஷ்ணன் அங்கு சென்று, "சிவகாமி!" என்று அழைத்தான். அவள் 'ஏன்?" என்று பதில் சொல்லவில்லை. ஆனால் கதவை ஆதாரமாகப் பிடித்துக் கொண்டு பேசாமல் நின்றாள்.

"நான் நாளை ஊருக்குப் போகிறேன். பாட்டி உன்னைப் பார்த்துவரச் சொன்னாள்"

சிவகாமி ஒன்றும் பதில் சொல்லவில்லை.

"சௌக்கியமாய்த்தானே இருக்கிறாய்? பாட்டி உன்னை விசாரித்துத் தெரிந்துகொண்டு வரச் சொன்னாள்."

இவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் சிவகாமியின் கண்களிலிருந்து 'பொல பொல' வென்று கண்ணீர் உதிர்ந்தது. அக்கண்ணீருடன், "சௌக்கியமாய்த்தானிருக்கிறேன். சௌக்கியத்திற் கென்ன குறை?" என்றாள்.

"சந்தோஷமா யிருக்கிறா யல்லவா?"

இது யாருடைய கேள்வி? பாட்டியினுடைய கேள்வியா? அல்லது பாலகிருஷ்ணனுடைய சொந்தக் கேள்வியா?

"உம்," என்றாள் சிவகாமி.

"நான் நாளைக்குப் புறப்படுகிறேன். பாட்டிக்கு ஏதாவது சமாச்சாரம் சொல்லி விடுகிறாயா?"

"சமாச்சாரம் என்ன இருக்கிறது? அம்மா சுகமா யிருக்கிறதல்லவா?"

"சுகமாய்த்தானிருக்கிறாள்."

இதற்குப் பிறகு சிறிது நேரம் இருவரும் மௌனமா யிருந்தார்கள். கடைசியில் "சரி, நான் போய்வருகிறேன்" என்று பாலகிருஷ்ணன் புறப்பட்டான். சற்றுத் தூரத்தில் பகவான் செட்டியார் வீட்டைநோக்கி வந்து கொண்டிருந் தார்! பாலகிருஷ்ணன், அவரைப் பாராதவன்போல் போய் விட்டான்.

சிவகாமியின் முகம் மாறுபட்டிருப்பதைப் பகவான் செட்டியார் கவனித்தார். சிவகாமி அவருக்குச் சாதம் பரி மாறிக் கொண்டிருந்தாள். வெகு நேரம் வரைக்கும் இருவ ரும் ஒன்றும் பேசவில்லை. அது உண்மையில் வெகுநேரமா யில்லாத போதிலும், வெகு நேரம்போல் தோன்றியது. அந்நிலைமை சகிக்க முடியாததாயிருந்தது. கடைசியில் பகவான் செட்டியார், "இங்கு பாலகிருஷ்ணன் வந்திருந் தானா?" என்று கேட்டார்.

"ஆம்"

"எதற்காக?"

"எதற்காக வருவான்?"

"எதற்காக வந்தான் என்று கேட்டேன்."

"அம்மா ஒரு சேதி சொல்லி விட்டிருந்தது. அதைச் சொல்வதற்காக வந்தான்."

"என்னசேதி ?"

"அம்மா சுகமாயிருக்கிறதாம்"

"அப்புறம் ?"

"அப்புறம் என்ன ?"

"நீ என்னசேதி சொல்லிவிட்டாய் ?"

"நான் சௌக்கியமா யிருக்கிறேன் என்று சொல்லி விட்டேன்."

"அப்புறம் ?"

"அவ்வளவுதான். அப்புறம் ஒன்றுமில்லே."

மறுநாள் காலே பாலகிருஷ்ணன் ஊருக்குப் புறப் பட்டான். அவன் தன்னுடைய மனேவி சகுந்தலாவை விட்டுப் பிரிந்து ஏறக் குறைய மூன்று மாதங்களாய் விட்டன. ரயிலில் சென்று கொண்டிருக்கும் போது, அவளுடைய நினேவு அவனுக்கு வந்தது. முன்னெப் போதையும்விட ஏனே, அப்பொழுது அவனுக்கு அஞ் ஞாபகம் மிகத் தீவிரமாகத் தோன்றிற்று. அவளுடைய அழகிய உருவம், அவளுடைய காதல் வார்த்தைகள், அவள் அவன்மீது கொண்ட ஆசை எல்லாம் அவனு டைய மனத்திரையில் தோன்றின. அவளேப் பார்க்க வேண்டும் என்ற அவா அவனுக்கு உண்டாயிற்று. அவளேப்பற்றி நினேக்க, நினேக்க அவ்வாசை மிகவும் அதிகரித்தது. ரயில் சீக்கிரமாய் ஊர்போய்ச் சேர்ந்து விடாதா என்று விரும்பினுன். அவனுடைய உடம்பு முழுவதிலும் ஒருவித வேகம் பரவியது. அவனுக்கு வேறு ஒரு விஷயத்திலும் உள்ளம் செல்லவில்லே. வண்டி ஒரு நிலேயத்தில் நின்றது. அங்கு சுமார் இருபது நிமி ஷங்கள் வண்டி நிற்கும். பிரயாணிகள் சாப்பாட்டை

முடித்துக் கொள்ளவேண்டிய இடம் அது. ஆனால் பால கிருஷ்ணனுக்குச் சாப்பாட்டில் பிரியம் செல்லவில்லை. ஏதோ சில பலகாரங்களை மட்டும் சாப்பிட்டுக்கொண்டு வண்டியிலேயே உட்கார்ந்து விட்டான்.

கடைசியில் வண்டி அவனுடைய ஊரையடைந்த போது, மாலையாகிவிட்டது. ரயிலிலிருந்து இறங்கியதும், குதிரை வண்டி ஒன்றை அமர்த்திக்கொண்டு பாலகிருஷ் ணன் விரைவில் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தான். பாட் டியும் சகுந்தலையும் அவனை முக மலர்ச்சியுடன் வரவேற் றனர். பாலகிருஷ்ணன் சகுந்தலையைப் பார்த்தான். அவ ளுடைய முகத்தில் ஒரு புனிதச் சோபையும், ஓர் புதிய அழகையும் கண்டான். அவனுடைய உள்ளத்தின் வேக மும், உடலின் பரபரம்பும் அதிகரித்தன. பாட்டி கேட்ட இரண்டொரு கேள்விகளுக்கு அவசரமாய்ப் பதிலளித்து விட்டு, மாடியிலுள்ள தன்னுடைய அறைக்குப் போய் விட்டான்.

அறையில் குறுக்கும் நெடுக்குமாய் நடந்துகொண்டு, 'ஏன் இன்னும் சகுந்தலை வரக்காணோம்?' என்று துடி யாய்த் துடித்துக் கொண்டிருந்தான் பாலகிருஷ்ணன். கடைசியில் அவள் வந்து சேர்ந்தபோது, அவளை ஆவலு டன் இறுகக் கட்டிப் பிடித்து, முத்தத்துக்கு மேல் முத்த மாய்ப் பல முத்தங்களிட்டான்.

"வந்தவுடன் வருவதற்கென்னவாம்? ஏன் இவ்வளவு நேரம்? எவ்வளவு நேரமாய் உனக்குக் காத்திருப்பது?" என்று கேட்டான் பாலகிருஷ்ணன்.

"போனவுடன் வருவதற்கென்னவாம்? ஏன் இத்தனை மாதங்கள்? எத்தனை மாதங்களாய் உங்களுக்காகக் காத்திருப்பது?" என்று சகுந்தலை கேட்டாள்!

இங்ஙனம் அவர்கள் குதூகலமா யிருக்கும் பொழுது லக்ஷ்மிப்பாட்டி அங்கு வந்து சேர்ந்தாள்.

"என்னடா பாலு, வந்ததும் வராததுமாய் மாடியில் ஏறிக்கொண்டாய்? சிவகாமியைப் பார்த்தாயா, தம்பி?" என்று லக்ஷ்மியம்மாள் பேரனைப் பார்த்துக் கேட்டாள். அவள் வேடிக்கையாகப் பேசினாளே ஒழிய, உண்மையில் அவளுடைய முகத்தில் சோகச்சாயை படர்ந்திருந்தது.

"பார்த்தேன் பாட்டி."

"பார்த்து என்ன சொன்னாய்?"

"நீ சுகமாயிருக்கிறாயா என்று பாட்டி பார்த்துவிட்டு வரச்சொன்னாள்'' என்றேன்

"அதற்கு அவள் என்ன சொன்னாள்?"

"அப்படிச் சொன்னேனோ இல்லையோ, அவளுடைய கண்களிலிருந்து 'பல பல' என்று கண்ணீர் உதிர்ந்தது பாட்டி!"

பாலகிருஷ்ணன் இவ்வார்த்தைகளைச் சொன்னானோ இல்லையோ, பாட்டியின் கண்களிலும் கண்ணீர் மல்கியது!

"அவள் சுகமாயிருக்கிறாளா, தம்பி?"

"சுகமாயிருக்கிறாள்."

அவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் பிள்ளையில்லா அப் பெண் ஜென்மத்தின் மனதில் பெரும் ஆறுதல் உண்டாகியது.

பின்பு அவள் மாடியிலிருந்து கீழே இறங்கிய போது, "இப்படி அவள் ஒரு இடத்திலும் நான் ஒரு இடத்திலுமாய் இருக்க வேண்டி யிருக்கிறது. இந்தப் பயலுக்குக் கட்டியிருந்தால் ஒரு தொல்லையு மில்லை. சந்தோஷமாய்

இருக்கலாம்'' என்று தன் மனதிற்குள் சொல்லிக் கொண்டாள். பாலகிருஷ்ணனும் சகுந்தலையும் இருந்த சந்தோஷ நிலைமையைப் பார்த்து, அவளுக்கு இவ் வெண்ணம் உண்டாயிருக்கவேண்டும்.

## இருபத்து ஐந்தாவது அத்தியாயம்

சென்ற அத்தியாயத்தில் கூறிய விஷயங்களுக்குப் பின், சில வருஷங்களில் பல சம்பவங்கள் மிக விரைவாய் நடந்து விட்டன. நாம் எதிர்பார்ப்பது போலவே காரியங்கள் இவ்வுலகத்தில் நடப்பதில்லை. மனிதனுடைய வாழ்க்கைச் சக்கரம் சில சமயம் வேகமாகவும், சில சமயம் மெதுவாகவும் ஓடுவது போல் தோன்றுகிறது. அது வேகமாய் ஓடும் பொழுது, இவ்வளவு சீக்கிரத்தில் இத்தனை காரியங்கள் நிறைவேறி விட்டனவே என்று நாம் அதிசயிக்கிறோம். அக்காரியங்கள் நமக்குப் பாதகமாக விருந்தால், இவை இத்தனை வேகமாகவா நடக்கவேண்டும் என்று நாம் ஆத்திரமும் அடைகின்றோம். பாலகிருஷ்ணனின் வாழ்க்கைச் சக்கரம் இப்பொழுது வேகமாய்த்தான் ஓடியது. ஆனால் அது முன்னேறிச் செல்லாமல் பின்னோக்கியா ஓடவேண்டும்!

பாலகிருஷ்ணனுடைய கல்லூரிப் படிப்பு இடையிலேயே அகாலத்தில் நின்று விட்டது. சுந்தரஞ் செட்டியாருக்கும், மகன் ராமநாதஞ் செட்டியாருக்கும் சிறிது சிறிதாகப் புகைந்து கொண்டு வந்த மனஸ்தாபம் கடைசியில் கொழுந்து விட்டு எரிய வாரம்பித்தது. இறுதியாக அது கோர்ட்டில் வியாஜ்யம் நடக்கும் நிலைமையை அடைந்துவிடும் என்று ஒருவரும் எதிர் பார்க்கவில்லை. ஆயினும் உண்மை அது தான். மகனுக்கும் தந்தைக்கும் வாத்சல்யமான உறவு என்றும் இருந்தது கிடையாது.

''எல்லாவற்றையும் அவனே கட்டிக்கொண்டு ஆளட்டுமே. விட்டு விடுங்களேன். நமக்கு எதற்காக இந்த வம்பும் வழக்கும்? நம்மைக் காடு 'வா! வா!' என்கிறது. வீடு 'போ! போ!' என்கிறது. நமக்கோ பிள்ளையுமில்லை, குட்டியுமில்லை. இத்தனை சொத்தையும் நாம் என்ன பண்ணப் போகிறோம்? அவனுடைய பிள்ளைக்குத்தானே கொடுக்கப் போகிறோம். நாம் கொடுப்பதை அவனே கொடுத்து விட்டுப் போகிறான். கடைசிக் காலத்தில் நீங்கள் ஏன் கோர்ட்டிற்கும் வீட்டிற்குமாக அலைகிறீர்கள்?'' என்று லக்ஷ்மியம்மாள் கணவனிடங் கூறினாள்.

ஆனால் அவர் கேட்கவில்லை. வியாஜ்ஜியம் என்று வந்த பிறகு அவருக்கு வைராக்கியமே தோன்றியது. ''அந்தப் பயலுக்கு அத்தனை தைரியம் என்ன வந்தது? ஏன் என்னிடம் வந்து தன் பங்கைப் பிரித்துவிடச் சொல்லிக் கேட்பதற்கென்ன கொள்ளை? பார்க்கலாம் ஒரு கை! இது பிதிரார்ஜிதச் சொத்தில்லை. என் சுயார்ஜ்ஜிதச் சொத்து. என் இஷ்டப்படி செலவு செய்வதற்குச் சட்டம் இருக்கிறது. அவன் ஜெயித்து விடுவானோ? அதைத்தானே பார்க்கப் போகிறேன்!'' என்று சுந்தரஞ் செட்டியார் வீரியம் பேசினார்.

''சுயார்ஜிதச் சொத்துதான். ஆனால் என்னுடைய தாயாரின் நகைகளை விற்றுத்தானே ஆதியில் கடை வைத்தது?'' என்று மார் தட்டினார் ராமநாதஞ் செட்டியார்.

ராமநாதஞ் செட்டியார் கடையிலிருந்து பணத்தை எடுத்துச் செலவழித்துச் செலவழித்துத் தன் வியாபாரத்தைப் பாழாக்கினார். சுந்தரஞ் செட்டியார் தன் சொத்துக்களை எல்லாம் விற்று, விற்றுச் செலவழித்து இறுதியில் சொத்து முழுவதையும் இழந்தார்.

இதற்கிடையில் லக்ஷ்மியம்மாள் நோய்வாய்ப்பட்டாள். அவள் படுக்கையிலிருந்து எழுந்திருப்பாள் என்ற நம்பிக்கையே ஒருவருக்குமில்லை. "லக்ஷ்மி போய்க்கொண்டிருக்கிருள். வீட்டிலிருந்த லக்ஷ்மியும் போய்க்கொண்டிருக்கிறது!" என்ருர் சுந்தரஞ் செட்டியார்.

வழக்கு ஹைகோர்ட்டுக்குச் சென்றது. அது முடியும் வரைக்குங்கூட லக்ஷ்மி உயிரோடிருக்கவில்லை. ஒரு நாள் கண்ணை மூடிவிட்டாள்!

பின் ஒருநாள் வியாஜ்ஜியம் முடிந்தது. அது முடிவதற்குள் இங்கே சொத்தும் முடிந்து விட்டது! இருவரும் ஓட்டாண்டியானுர்கள். இனி யார் வெற்றியடைந்தால் தான் என்ன? ஒருவருக்குத் தன் வெற்றியில் சந்தோஷமோ, மற்றவருக்குத் தன் தோல்வியில் துக்கமோ ஏற்படவில்லை. வெற்றி தோல்வியைச் சமமாகப் பாவிக்க வேண்டுமென்கிருர்களே, அது இதுதானே? அங்ஙனம் மனிதர்கள் பாவிக்க வேண்டும் என்பதற்காக நீதிஸ்தலங்கள் எவ்வளவு தூரம் உதவுகின்றன!

"லக்ஷ்மியும் போய்விட்டாள். வீட்டிலிருந்த லக்ஷ்மியும் சென்று விட்டது!" என்ருர் சுந்தரஞ் செட்டியார்.

பாலகிருஷ்ணன் தன் படிப்பை நிறுத்தவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டபோது, அவனுடைய மாமனுர் அவனைத் தன் வீட்டிலேயே இருந்துகொண்டு படிக்குமாறு வேண்டினுர். அவன் செல்வத்துடனிருந்தபோது கௌரவத்துடன் மறுத்த ஒன்றை, ஏழ்மையடைந்த பின் ஏற்றுக்கொள்வது கேவலம்என்று மதித்தான். ஆகையினுல் மேலே படிப்பதில்லை என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டான்.

படிப்பை நிறுத்த வேண்டி ஏற்பட்டதை அவன் அவ்வளவு பெரிய துரதிர்ஷ்டமாக மதிக்கவில்லை. ஆனுல்

அந்த வியாஜ்ஜியத்தின் காரணமாகத் தன்னைச் சிறுவயதிலிருந்து வளர்த்து வந்த தாத்தாவையும், முக்கியமாகப் பாட்டியையும் அவன் பிரிய நேர்ந்தது. அந்த வழக்கில் தன்னுடன் சேர்வதில்தான் அவனுக்கு நன்மை இருக்கிறதென்று சொல்லி அவனுடைய மனதை ராமநாதஞ் செட்டியார் பல விதங்களிலுங் கலைத்து விட்டார். இறுதியில் வியாதியாய்க் கிடந்த லக்ஷ்மியம்மாளைப் பார்க்கவுங் கூடாதென்று தடுத்துவிட்டார். பாட்டியின் கடைசிக் காலத்தில், அவளைப் பார்க்க முடியாமற் போனதுதான் பாலகிருஷ்ணனுக்குப் பெரும் வருத்தமாயிருந்தது.

லக்ஷ்மியம்மாள் கண்ணை மூடிய பொழுது, அவள் வளர்த்த பெண்ணாகிய சிவகாமி அவளுடைய பக்கத்திலேயே தானிருந்தாள். அது அவளுக்குப் பெரும் ஆறுதலாயிருந்தது. மகனுக்கும் தனக்கும் சச்சரவு ஏற்படவே, சுந்தரஞ் செட்டியார் பகவான் செட்டியார் மீது கொண்ட பகைமையைப் படிப்படியாய் மறந்தார். பேரனும் அவரை விட்டுப் பிரிந்து விட்டான். பகவான் செட்டியாருடைய உதவியும் சுந்தரஞ் செட்டியாருக்கு வேண்டியிருந்தது. தன் சொத்துக்களை அவரிடம் அடமானம் வைத்துக் கடன் வாங்கினார். பின்பு அவைகளை அவருக்கே விற்றார். இப்படியாக அவரும் அவருடைய மனைவி சிவகாமியும் சுந்தரஞ் செட்டியார் வீட்டிற்கு வரப்போக இருந்தார்கள். இங்ஙனமிருக்கையில்தான் லக்ஷ்மி நோயுற்றாள். அவளுக்குச் செய்ய வேண்டிய தொண்டுகள் எல்லாம் ஒன்றேனுங் குறையில்லாமல் சிவகாமி செய்து வந்தாள்.

ஒருநாள் லக்ஷ்மியம்மாள் சிவகாமியைத் தன் பக்கத்தில் அழைத்தாள்.

"என்னம்மா?" என்று சிவகாமி வந்தாள்.

"இப்படி உட்கார். உன்னை வெகுநாட்களாய் ஒரு கேள்வி கேட்க வேண்டுமென்று எனக்கு ஆசை."

"என்ன கேள்வியம்மா?"

"நீ சந்தோஷமா யிருக்கிருயா சிவகாமி?"

இதைக் கேட்டதும் சிவகாமி திடுக்கிட்டாள். லக்ஷ்மி யம்மாள் எதைக் குறிப்பிடுகின்ருள்?

"நீ இப்படி நோயாக இருக்கும்போது, நான் எப்படி யம்மா சந்தோஷமாயிருப்பேன்?" என்ருள் சிவகாமி.

"நான் அதைக் கேட்கவில்லையடி, சிவகாமி. நீ சந்தோஷமாயிருக்கிருயா என்று கேட்கிறேன்," என்று லக்ஷ்மி யம்மாள் மீண்டும் கேட்டாள்.

"சந்தோஷத்திற் கென்னம்மா குறை? எனக்கும் பெண்ணொன்றும் ஆணொன்றும் இருக்கிறதல்லவா?" என்ருள் சிவகாமி.

"இந்தக் கலியாணம் எல்லாம் என்னடி கலியாணம்? கொட்டையும், முழக்கையும், வீட்டையும், வாசலையும், மாட்டையுங் கன்றையும் பார்த்து நான் அந்தக் காலத்தில் ஆறுதல் அடைந்தேன் என்பது நிஜந்தான். ஆனல் அதெல்லாம் ஒரு ஆறுதல்தானே! உண்மையில் அது சந்தோஷமாகுமா? பூர்ண திருப்தியாகுமா? 'குற்ருலம் போகிருர்கள், பாபநாசம் போகிருர்கள்' என்று என் மனத்தை அடிக்கடி தேற்றிக் கொண்டேன். ஆனல் உண்மையில் சொல்கிறேன். உன் கலியாணத்தைப் பற்றி எனக்கு இத்தினியேனும் சந்தோஷமில்லை."

"ஏனம்மா கடைசிக்காலத்தில் இப்படி மனமுடைந்து பேசுகிருய்? வேண்டாம் அம்மா. நிம்மதியாய்ப் படுத்துக் கொள்," என்ருள் சிவகாமி.

“பாவி மனுஷர் கெடுத்து விட்டாரேடி! நீ ஏழைப் பெண்ணும்! உன்னைத் தன் பேரனுக்குக் கட்டிவிடுவேன் என்று பயந்துதானடி வியாபார விஷயமாய்ப் போனவர் அவசர, அவசரமாய் உன் கலியாணத்தை நிச்சயித்துக் கொண்டு வந்தார்? உன்னை ஏழை என்று நினைத்தார் களே, நீ இப்பொழுது ஏழையாகவா இருக்கிருய்? தங்க ளைப் பணக்காரர்கள் என்று மதித்துக் கொண்டார்களே அவர்கள் பணக்காரர்களாகவே இருக்கப் போகிருர்களா? நீ வேண்டுமானுலும் பார். இந்தக் கேஸ் முடியும்போது அவர்கள் அப்பனும், மகனும் இருக்க வீடில்லாமல், குடிக் கக் கஞ்சியில்லாமல் தெருவில் நிற்கிருர்களா, இல்லையா என்று பார். அந்த நிலைமை வருவதற்குள் என்னை ஆண் டவன் கொண்டுபோய்ச் சேர்த்துவிட வேண்டும் என்பது தான் என் பிரார்த்தனை” என்று ஆத்திரம் அடக்க முடி யாமல் வார்த்தைகளைக் கொட்டினுள் லக்ஷ்மியம்மாள்.

“அம்மா! அம்மா!” என்று பொங்கிவந்த அழுகை யைத் தடுக்க முடியாமல் அழுதாள் சிவகாமி.

“அந்தப் பயல் பாலுவின் கதி என்ன வாகுமோ என்றுதான் என் மனம் நோகிறது. உன்னை அவனுக்குக் கட்டியிருந்தால் இந்தக் குடும்பம் இந்தக் கதிக்கு வரு மாடி?” என்று தேம்பித்தேம்பி லக்ஷ்மியம்மாள் அழுதாள்.

‘ஏனம்மா இப்படி அழுகிருய்? உடம்புக்கு ஆகாது. பேசாமல் தூங்கம்மா!” என்று லக்ஷ்மியம்மாளைச் சாந்தப் படுத்தி விட்டுச் சிவகாமி தனிமையை நாடிச் சென்ருள்.

எதற்காக? விம்மி, விம்மி அழுவதற்காக!

அவளுக்குக் கிடைக்கவிருந்த ஒரு பாக்கியத்தை ஏழ்மை ஐசுவரியம் என்ற வித்தியாசத்தினுல் சமுகம் அவளிடமிருந்து பறித்துக் கொண்டது. அவள் அதைச்

சமூகத்திலிருந்து பலாத்காரமாகப் பிடுங்கிக் கொண்டால் என்ன? லக்ஷ்மியம்மாளின் ஆத்திரந் ததும்பிய சொற்களைக் கேட்டபோது, அவளுடைய மனதில் இத்தகைய எண்ணமே உதித்தது.

பாலகிருஷ்ணன் அச்சமயம் எங்கிருந்தான்? என்ன செய்து கொண்டிருந்தான்? அவன் தன்னுடைய மனைவியுடன் எங்கோ போய்விட்டான் என்று கேள்விப்பட்டிருந்தாள். அவனை எப்படிச் சந்திப்பது? இனி எப்பொழுதாவது அவனைச் சந்திக்கமுடியுமா! எங்ஙனமாவது அவனைப் பார்க்க வேண்டுமென்று அவளுடைய உள்ளம் அவாக் கொண்டது. அவனைப் பார்த்து என்ன செய்வது?

இம்மாதிரி மனோநிலையிருந்த போதுதான் எதிர்பாராத விதமாய் ஒரு நாளிரவு அவள் பாலகிருஷ்ணனைச் சந்திக்க நேர்ந்தது. அவள் ஏதோ ஒரு சோலியாய் மதுரைக்குச் சென்றிருந்தாள். அவனும் அங்கு வந்திருந்தான். அது அவளுக்குத் தெரியாது. ஒரு நாளிரவு இருவரும் மீனாக்ஷியம்மன் கோவிலில் சந்தித்தனர். அம்மனைத் தரிசித்துவிட்டுச் சிவகாமி அம்மன் சந்நிதியிலிருந்து வந்து கொண்டிருந்தாள். பாலகிருஷ்ணன் அம்மன் சந்நிதிக்குப் போய்க் கொண்டிருந்தான். ஒருவரை ஒருவர் பார்த்ததும் இருவரும் திடுக்கிட்டனர். வெகு நாட்களாக அவர்கள் ஒருவரை ஒருவர் பார்க்கவில்லை. அப்பொழுது அவளுக்குச் சுமார் இருபத்திரண்டு, இருபத்துமூன்று வயதிருக்கலாம். மின்சார விளக்குகளின் வெளிச்சத்தில், அவளுடைய முகத்தைப் பாலகிருஷ்ணன் நன்றாய்ப் பார்த்தான். இளம் பருவத்தில் அவளுடைய முகத்தில் அவன் கண்ட சோபை இன்னும் அதில் பிரகாசித்துக் கொண்டுதானிருந்தது. அவளுடைய உருவம் எப்பொழுதும் போல் அவனுக்கு மனோலாகிரியை உண்டு பண்ணவே செய்தது. அவளும் அவனை உற்று நோக்கினாள். எதிர் பாராது ஏற்பட்ட சந்திப்

பினல் இருவருக்கும் பிரமிப்பு ஏற்பட்டது. பாலகிருஷ்ணன் ஏதோ பேச வாயெடுத்தான். சிவகாமியும் ஏதோ பேச முயல்வதுபோல் தோன்றியது. ஆனல் என்ன நேர்ந்ததோ தெரியவில்லை. எதுவும் பேசாமலே இருவரும் ஒருவரைக் கடந்து ஒருவர் சென்று விட்டனர். சிவகாமியைக் கூப்பிட்டுப் பேசலாமா, திரும்பிச்சென்று அவளைப் பார்க்கலாமா என்று பாலகிருஷ்ணன் தயங்கித் தயங்கிப் பல முறை நினைத்தான். ஆனல் ஏனே அவனுக்குத் தைரியம் வரவில்லை.

அவர்களிருவரும் பேசுவதற்கு எத்தனையோ விஷயங்களிருந்தன. எத்தனை எத்தனை விஷயங்கள்! லக்ஷ்மியம்மாள் இறந்த பின்பு, முதல் தடவையாக அப்பொழுதுதான் இருவரும் சந்தித்தார்கள். அவள் அவர்களிருவருக்கும் பொதுவானவள். இருவருக்கும் மிகவும் வேண்டியவள். இருவரையும் வளர்த்தவள். இருவர் மீதும் மிகுந்த பிரியங் கொண்டிருந்தவள். அவளைப்பற்றி அவர்கள் பேசியிருக்கலாம்.

"உன்னை அவ்வளவு பிரியமாக வளர்த்தவளாச்சே. என்ன விருந்தாலும், கடைசிக் காலத்தில் அவளை ஒரு தடவையாவது வந்து பார்க்கக் கூடாதா? பிணத்தின் முகத்திலாவது விழிக்க வேண்டாமா?'' என்று அவள் கேட்டிருக்கலாம்.

"பாட்டி கடைசிக் காலத்தில் என்ன சொன்னுள்? என்னைப்பற்றி நினைத்தாளா? மிகவும் வருத்தப்பட்டாளா?'' என்று அவனும் ஏதாவது பேசியிருக்கலாம். இருவருக்கும் பேசவேண்டுமென்ற விருப்பமும் இருந்தது. பின் ஏன் பேசவில்லை.

பேசவில்லை!

சிவகாமி தன்னை மிகவும் நொந்துகொண்டாள். தனக்குக் கிடைக்காமற் போன அப்பரிசைப் பலாத்காரமாகவேனும் பிடுங்கிக் கொள்ள வேண்டுமென்று அவள் நிச்சயித்திருந்தாள். ஆனால் ஒரு சந்தர்ப்பம் வாய்த்த போது, அவனுடன் பேசுவதற்குக்கூட அவளுக்கு நா எழவில்லை. அவள் தான் பேசவில்லை. அவனாவது அவளுடன் பேசியிருக்கக் கூடாதா? வேறொன்றும் பேசாவிட்டாலும் "சிவகாமி சுகமாயிருக்கிறாயா?" என்றாவது கேட்டிருக்கலாகாதா? அவ்வளவுகூடச் செய்யாத ஒருவனைப் பற்றி நான் ஏன் அடிக்கடி நினைக்கிறேன்? என் மனம் ஏன் அவனையே நாடுகிறது. 'சீ! சீ!' என்று தன்னைத் தானே அவள் மிகவுங் குறை கூறிக்கொண்டாள்.

பாலகிருஷ்ணனின் மனது மிகவுஞ் சங்கடப்பட்டது. 'சிவகாமி ஏன் என்னுடன் பேசவில்லை?' என்ற வினா மீண்டும் மீண்டும் அவனுடைய உள்ளத்தில் எழுந்தது. கடைசியில் அவன் தன்னை ஒருவாறு சமாதானப் படுத்திக் கொண்டான். அவனும் அவளுடன் பேசவில்லையல்லவா? ஆயினும் அவனுடைய பிரியம் சற்றேனும் குறையவில்லையே. அதுபோல் அவளும் அவனுடன் பேசாவிட்டாலும், அவளுடைய பிரியம் குறைந்திராது என்று நினைத்துக் கொண்டான். இவ்வெண்ணம் அவனுக்குச் சிறிது ஆறுதல் அளித்தது.

## இருபத்து ஆறாவது அத்தியாயம்

**பா**லகிருஷ்ணன் ஒரு சிறிய உத்தியோகத்திலிருந்தான். குடும்பச் சொத்துக்கள் முழுவதும் அழிவதற்கு முன்பே அவனுக்கு அவ்வுத்தியோகம் கிடைத்துவிட்டது. உத்தியோகம் சிறிதாயிருந்த போதிலும், அவன் ஊர்

ஊராய் மாற்றப்பட்டான். இப்பொழுது ஒரு சிற்றூரி லிருந்தான். சொந்தவூரிலிருந்து வெகு தூரத்திற்கப்பால். வியாஜ்ஜியம் முடிந்து விட்டதென்றும் சொத்துக்களெல் லாம் தொலைந்துவிட்டன என்றும் அவனுக்குத் தெரிந்த போது; அதற்காக அவன் அதிக வருத்தப்படவில்லை. பாட்டி லக்ஷ்மியம்மாள் புண்ணியவதி. குடும்பத்தின் அவல நிலைமையைக் காணுமலே அவள் போய்ச் சேர்ந்து விட் டாள்! உயிருடனிருந்தவர்களில் அவன் அதிகமாய்க் கட மைப் பட்டது தாத்தா ஒருவருக்குத்தான். அவரைத் தன் னுடன் வந்து வசிக்குமாறு அனேக கடிதங்கள் எழுதினுன். அவர் வரவில்லை. நேரில்சென்றும் ஓரிரு முறைகள் அழைத் தான். ஆனுல் அவர் அவனுடன் செல்ல மறுத்துவிட்டார். நல்லவேளையாக அதற்கப்புறம் அவர் அதிக நாள் உயி ருடனிருக்கவில்லை. சீக்கிரத்தில் சிவலோக பதவி யடைந்து விட்டார். பாலகிருஷ்ணனின் தந்தை அவருடைய இரண் டாந் தாரத்துடனும் மக்களுடனும் கஷ்ட ஜீவனம் செய்து கொண்டிருந்தார்.

பாலகிருஷ்ணனுடைய உத்தியோகத்திலிருந்து, அவ னுக்குக் கிடைத்த வருமானம் சொற்பமே. ஆயினும் அதைக் கொண்டு அவன் திருப்தியாகவே வாழ்ந்து வந் தான். சிற்சில சமயங்களில் தந்தைக்குச் சிறிது உதவி யும் செய்தான். சகுந்தலை அவன்மீது அளவுக்கு மிஞ்சி அன்புடனிருந்தாள். அவனுக்கு மூன்று ஆண் குழந் தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் இருக்கின்றன. அவளுடைய அன்பான பார்வை, சொற்கள் செய்கைகள் இவைகளை எல்லாம் பார்க்குந்தோறும், கேட்குந்தோறும் அனுபவிக்குந்தோறும், அவனுக்கு ஆனந்தம் பொங்கும். சகுந்தலை குடிக்கிசைந்த நாயகி. இல்லறத்துக்குகந்த இல் லாள். மனைக்கேற்ற மனைவி. பாலகிருஷ்ணன் அவள்மீது மிகவும் பிரியமாய்த் தானிருந்தான். ஆயினும் என்ன?

அவனுடைய இல்வாழ்க்கை பூர்த்தியானதாக அவனுக்குத் தோன்றவில்லை. அது நிறைவுள்ளதாகக் காணப்படவில்லை. அது குறையுள்ளதாகவே தென்பட்டது!

சிவகாமியை மறந்துவிட வேண்டுமென்று அவன் முயல்கின்றான். ஆனால் அது முடியவில்லை. காலம் செல்லச் செல்ல, அவளைப்பற்றிய எண்ணம் சிறிது சிறிதாக மங்கி மறைந்து விடுமென்று அவன் நினைத்தான். ஆனால் அங்ஙனம் நடைபெறவில்லை. ஒன்றன்பின் ஒன்றாகப் பல வருஷங்கள் கடந்துவிட்டன. ஆண்டுகள் பல கழிந்தும், அவளைப் பற்றிய நினைவு என்றும் பசுமையாகவே இருந்தது. அப்படியானால் அது காலத்திற்கும் அப்பாற்பட்டதா, என்ன? அது அவனுடைய உள்ளத்தில் மிக ஆழமாகப் பதிந்துவிட்டது. பாலகிருஷ்ணனின் மனம் சிவகாமியை நாடுகிறது. அவனையுமறியாமல் அவனுடைய மனம் அவள்பால் அடிக்கடி இழுக்கப்படுகிறது. 'நான் இப்பொழுது இந்த வேலையைச் செய்துகொண்டிருக்கிறேன். அவள் இப்பொழுது என்ன செய்து கொண்டிருப்பாள்?என்று அடிக்கடி அவன் நினைக்கிறான். அவள் இருப்பதுபோலவும் நிற்பதுபோலவும், நடப்பது போலவும், படுப்பது போலவும், தூங்குவது போலவும், விழிப்பதுபோலவும், பேசுவது போலவும், சிரிப்பதுபோலவும், அழுவதுபோலவும் அவன் அடிக்கடி கற்பனை செய்துகொள்கிறான். இங்ஙனம் அவள் அவனுடைய மனக்கண் முன்பு நடமாடிக்கொண்டே இருக்கிறாள். அத்தகைய சமயங்களில் எல்லாம் அவனுக்கு ஆத்திரம் பொங்கும். சிவகாமியையும் தன்னையும் சேர்த்து வைக்காத சமுகத்தையும், உலகத்தையும் அவன் வெறுத்தான். அதற்கு ஜவாப்தாரியா யிருந்தவர்கள் மீதும் அவனுக்குக் கோபம் உண்டாயிற்று.

தந்தை சரியில்லாதிருந்து, தாயையும் இழந்து தத்தளித்த பாலகிருஷ்ணனை எடுத்து வளர்த்தவர்கள் அவனு

டைய பாட்டியும், தாத்தாவும். அவனை இந்த நிலைக்கா வது கொண்டுவந்தவர்கள் அவர்கள் தாம். அவர்களில்லா விட்டால், அவனுடைய கதி என்னவா யிருக்குமோ? அவர்கள் சொத்துச் சுகத்தைவிட்டுச் செல்லவில்லை என்பது உண்மைதான். ஆயினும் நாலுதுட்டுச் சம்பா தித்துச் சாப்பிடுவதற்கு அவர்கள் அவனுக்குத் தற்புத்தி பண்ணிவைத்து விட்டார்களல்லவா? அதற்காக அவர் களுக்கு அவன் நன்றி செலுத்தவே செய்தான். எனினும் சிவகாமியைப் பற்றிய எண்ணம் அவனுடைய உள்ளத் தில் வந்து மோதிய போதெல்லாம், அவர்கள் மீது அவ னுக்குக் கோபமே பொங்கி எழுந்தது. பாட்டி அன்பாயி ருந்தாளாம் அன்பாய்! என்ன அன்பாயிருந்து விட்டாள்! பேரனுக்கு என்ன சந்தோஷத்தைத் தேடிவைத்திருக்கி ருள்? "சிவகாமியை என் பேரனுக்குத்தான் கலியாணம் செய்வேன் என்று அவள் பிடிவாதஞ் செய்திருந்தால் நடந்திருக்காதோ?' என்று அடிக்கடி அவன் நினைப்பான். அதை யொட்டியே அவனுக்கு இன்னெரு எண்ணமுந் தோன்றும். அவள் எப்படி அங்ஙனம் பிடிவாதம் செய்தி ருக்க முடியும்? அவன்தான் சிவகாமியை எடுத்ததற் கெல்லாம் அடித்துக் கொண்டும், வைது கொண்டு மிருந் தானே. அப்படி நாயும் பூனையும் போலிருந்த அவர்க ளுக்கு முடிபோட்டு வைத்தால், அவர்கள் சந்தோஷமாய் வாழ மாட்டார்கள் என்று அவள் நினைத்திருப்பாளல் லவா? வீணில் அவர்களிருவர் வாழ்க்கையையும் கெடுக்க வேண்டாமென்று அவள் கருதியிருப்பா ளல்லவா? மேலும் அவனுக்குத் தந்தையும், தாத்தாவும் இருந்த போது, அவன் மீது பாட்டிக்கு என்ன உரிமை இருந்தது? ஆகையினுல் அவள் மீது குற்றமில்லையே. சரி, அவள் மீது குற்றமில்லை என்றே வைத்துக்கொள்வோம். அவனுடைய தாத்தா எல்லா விஷயங்களையும் அறிந்திருந்தாரல்லவா?

அவர்களுடைய உள்ளப் போக்கு பின்னுல் எப்படி மாறும் என்பதை அவர் உணர்ந்துதானே இருந்தார்? அவர்களிடையே உள்ள சம்பந்தம் விபரீதமாய் வளர்ந்து விடுமோ என்று அஞ்சித்தானே சிவகாமியைச் சீக்கிரமாய் வேறிடத்தில் கலியாணம் செய்து கொடுத்துவிட்டார்? அதன் மூலம் அவர் அவனுக்கு நன்மையா செய்தார்? ஐயோ நன்மையா செய்தார்? நன்மை செய்யவில்லையே!

சரி, சகுந்தலையை அவனுக்குக் கலியாணம் பண்ணி வைத்தாரே. அதற்காக அவன் நன்றி செலுத்த வேண்டாமா? அவளை அவன் கொஞ்சவில்லையா? அவளுடன் குலாவவில்லையா? அவளை அவன் முத்தமிடவில்லையா? அவளிடம் இன்பந் துய்க்கவில்லையா? ஆம், முத்தமிட்டான். இன்பம் அனுபவித்தான். ஆனுல் வேறிடத்தில் விழவேண்டிய முத்தமல்லவா அங்கு விழுந்தது? இன்னொரிடத்தில் அனுபவிக்க வேண்டிய இன்பத்தையல்லவா அவன் அங்கு அனுபவித்தான்! இம்மாதிரி ஏங்கியது அவனுடைய உள்ளம்.

ஆயினும் அவனுடைய இல்லறச் சகடம் மேடுபள்ளமில்லாத பாதையில் இப்போது நேராகத்தான் போய்க்கொண்டிருந்தது. அத்தகைய காலத்தில்தான் ஒரு நாள், தபால்காரன், "உங்களுக்கொரு புக் போஸ்டு இருக்கிறது சார்!" என்று அவனிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் சென்ருன். அது ஒரு புக்போஸ்டுதான். அச்சாதாரணப் புக்போஸ்டே அவனுடைய வாழ்க்கையில் ஒரு பெரிய மாறுதலை உண்டாக்குவதற்கு ஆதாரமாயிருந்ததென்ருல் வியப்பாயில்லையா?

கடிதத்தைப் பிரித்தான். அது ஒரு திருமண அழைப்புப் பத்திரிக்கை! இப்பொழுது பாலகிருஷ்ணனுக்குத் திருமணம் என்ருலே வெறுப்பு ஏற்பட்டிருந்தது. இவ்வுல

கத்தில் எங்குந் திருமணம் நடப்பதில்லை. இங்கு நடப்ப தெல்லாம் வெறும் மணமே என்பது அவனுடைய அபிப் பிராயமா யிருந்தது. ஆகையினுல் முதலில் கலியாணப் பத் திரிக்கையின்மீது அவன் அதிகக் கவனம் செலுத்தவில்லை. பின்பு அது எங்கிருந்துவந்தது என்று தெரிவதற்கு அதன் மேற்புறத்தைக் கவனித்தான். திருநெல்வேலியிலிருந்து அது வந்திருந்தது! யாருக்குக் கலியாணமாயிருக்கும் எனத் திடீரென்று அவனுடைய ஆர்வம் தூண்டப் பட்டது.

பாலகிருஷ்ணன் பத்திரிக்கையை வாசித்தான். சிவ காமியின் மகளுக்கு கலியாணமாம்! ஆம் சிவகாமியின் மகளுக்குக் கலியாணம்! என்ன விசித்திரம்? ஒருகாலத் தில் சிவகாமி மணப்பருவத்தி லிருந்தாள்! பாலகிருஷ்ண னுக்கு அது நேற்றுத்தான் போலத் தோன்றியது. ஆனுல் இன்றே அவளுடைய மகளுக்குக் கலியாணம் நடக்கப் போகின்றது. காலம் பறக்கின்றதோ? இறக்கை கட்டிக் கொண்டு பறக்கிறது போலும் என்று பாலகிருஷ்ணன் நினைத்தான். காலதேவன் வெகு விரைவாய்ப் பிரயாணம் செய்து விட்டதுபோல் அவனுக்குத் தோன்றியது.

சிவகாமியின் மகளுக்குக் கலியாணம்! அத்தகைய சுப வேளையில் அவள் பாலகிருஷ்ணனை மறக்கவில்லை. மீனுக்ஷியம்மன் கோவிலில், அவளை அவன் சந்தித்துப் பல வருஷங்களாய் விட்டன. ஆயினும் அது அவனுக்கு இப் பொழுது ஞாபகத்திற்கு வந்தது. அன்று அவனுடன் ஒரு வார்த்தை கூடப் பேசாத சிவகாமி, அவனைத் தன் மகள் கலியாணத்திற்கு வரச் சொல்லி ஒரு அழைப்புப் பத்தி ரிக்கை அனுப்பியிருந்தாள். விலாசத்தை நோக்கினுன். அது சரியாய் எழுதப்பட்டிருந்தது! அவனுக்கு அது ஆச்சரியமாயிருந்தது. அவனிருந்த ஊர் அவளுக்குத்தெரி

யாது. சொந்தவூருக்குப் பல நூறு மைல்களுக்கப்பால் அவனிருந்தான். அதை எப்படி அவள் விசாரித்தறிந்தாள்? விசாரிக்க முடியாதென்பதல்ல. அதைத் தெரிந்துகொள்ள அதிக சிரமப்பட்டிருக்க வேண்டும். அச்சிரமத்தை எடுத்திருந்தாள் சிவகாமி! அம்மணப் பத்திரிக்கையைப் பார்க்க, அவன் மிக்க மகிழ்ச்சி கொண்டான்.

பத்திரிக்கையில் கண்டிருந்த இன்னொரு விஷயம் அவனுடைய கவனத்தை ஈர்த்தது. "காலஞ்சென்ற பகவான் செட்டியாரின் புத்திரி சௌபாக்கியவதி......" என்று அதில் குறிப்பிட்டிருந்தது. அப்படியானால்?

சிவகாமி ஓர் விதவை! ஐயோ! சிவகாமி விதவையா? அது எதையோ அவனுக்கு அறிவுறுத்துவது போல் தோன்றியது.

அது எப்பொழுது நடந்தது? சிவகாமி அது வரைக்கும் அவனுக்கு ஏது அவ்விஷயத்தைத் தெரியப்படுத்தவில்லை?

பத்திரிக்கையின் அடிப்பாகத்தைப் பாலகிருஷ்ணன் நோக்கினான். விருந்தினரை எதிர்பார்ப்பவர்களின் பெயர்களில் பாலகிருஷ்ணன் பெயரும் காணப்பட்டது!

அவனுடைய உள்ளம் துடித்தது. கட்டாயம் திருநெல்வேலிக்குப் போக வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டான்.

"சக்கு! நாளை நான் திருநெல்வேலிக்குப் புறப்படுகிறேன்," என்றான் பாலகிருஷ்ணன்.

"எப்பொழுது? நாளைக்குக் காலை வண்டியிலா? தாராளமாய்ப் போங்கள்!" என்றாள் சகுந்தலை.

"விளையாட்டில்லை சக்கு? நிஜமாய்த்தான், நாளைக்குப் புறப்படுகிறேன்!"

"அது சரி. இன்றைக்குப் புதிதாகவா இதைச் சொல்கிறீர்கள்? இது அடிக்கடி நீங்கள் சொல்லுவது தானே?" என்று கூறிச் சிரித்துக் கொண்டே சகுந்தலா போய்விட்டாள்.

பாலகிருஷ்ணன் திருநெல்வேலிக்குப் போவதாகச் சொன்னது இது முதல் தடவையல்ல. அடிக்கடி சகுந்தலையிடம் அவன் அப்படிச் சொல்லுவது வழக்கம்.

"திருநெல்வேலியில் உங்கள் கிளையார் யாரிருக்கிறார்களென்று, நீங்கள் அங்கே 'போகப்போறேன் போகப்போறேன்' என்று துடிக்கிறீர்கள்?" என்று சிரித்துக் கொண்டே சகுந்தலை கேட்டாள்.

"அதென்ன சக்கு அப்படிச் சொல்லுகிறாய்? சிவகாமியும் நானும் கூட வளர்ந்தவர்களல்லவா? அவளை ஒரு தடவை பார்த்து விட்டு வரவேண்டுமென்று ஆசையாயிருக்கிறது," என்பான் பாலகிருஷ்ணன்.

"கூட வளர்ந்தவர்களென்றால் ஒன்றாய்ப் பால் குடித்து வளர்ந்தவர்களா?" என்று சிரித்துக்கொண்டே சகுந்தலை அவனுடைய பேச்சை மழுப்பி விடுவாள்.

இந்தத் தடவையும் அந்தமாதிரிதான் அதை அவள் அலக்ஷியம் செய்தாள். ஆனால் பாலகிருஷ்ணன் மேலுங் கூறினான். "நிஜமாகவேதான், சக்கு! நாளைப் புறப்படப் போகிறேன்."

அவன் முகத்தில் தோன்றிய உறுதியைக் கண்டதும், அவள் சற்றுத் திகைத்தாள். பின்பு விஷயம் முழுவதையும் விசாரித்து அறிந்தபோது, அவளுடைய மனதை

ஒரு திகில் பற்றிக்கொண்டது. அது என்ன திகில்? ஏன் உண்டாகியது?

தன் கணவனைத் திருநெல்வேலிக்குப் போகவிடக் கூடாதென்று அவள் தீர்மானித்துக் கொண்டாள்.

"அவள் யார்? நீங்கள் யார்? அவளுடைய மகள் கலியாணத்திற்கு நீங்கள் இவ்வளவு தூரத்திலிருந்து போகவேண்டிய அவசியமில்லை" என்றாள். "நீங்கள்தான் சாதாரணமாய் ஒரு கலியாணத்திற்கும் போகிற வழக்க மில்லையே. இந்தக் கலியாணத்திற்கு மட்டும் போக வேண்டிய தேவை என்ன?"

"நான் அவசியம் போகத்தான் வேண்டும்"

"நீங்கள் போகக் கூடாது!"

"நான் போகிறேனா, இல்லையா என்று பார்."

"அப்படியானால் நானுங் கூட வருவேன்."

"நீ வரக் கூடாது. அவள் என் வகையில் உறவான வள். ஆகையினால் நான் மட்டுந்தான் போவேன்," என்று பாலகிருஷ்ணன் கண்டிப்பாய்க் கூறிவிட்டான்.

அவள் அன்று முழுதும் அழுதாள். புலம்பினாள். இரவு முழுதும் கணவனைப் பலவாறு கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள். ஆயினும் அவன் கேட்கவில்லை. அவளுடைய கண்ணீரையும், இதர தடைகளையும் பொருட்படுத்தாது, மறுநாட் காலையில் புறப்பட்டு விட்டான். சகுந்தலை வாச லில் நின்று கண்ணீருங் கம்பலையுமாய் அவன் மறையும் வரைக்கும் பார்த்துக் கொண்டே நின்றாள்.

# இருபத்து ஏழாவது அத்தியாயம்

ரயிலில் வழி நெடுக பாலகிருஷ்ணனுக்குச் சிவகாமியின் சிந்தனையாகவே இருந்தது. சிவகாமியை முதன் முதல் அவன் சந்தித்தபோது, பாவம், ஓர் ஆதரவுமற்ற சின்னஞ் சிறுமியா யிருந்தாள் அவள். அதிலிருந்து கடைசியாக அவளை மீனாக்ஷியம்மன் கோவிலில் சந்தித்தது வரைக்குமுள்ள சம்பவங்கள் ஒவ்வொன்றாய் அவனுடைய மனதில் தோன்றின. சம்பவங்களெல்லாம் வரிசைக்கிரமப்படி அவனுடைய ஞாபகத்திற்கு வந்தன என்று சொல்வதற்கில்லை. ஒரு சமயம் ஒரு நிகழ்ச்சி தோன்றும். அது முடிவதற்குள்ளேயே அவனுடைய எண்ணம் இன்னொரு நிகழ்ச்சியின் மீது தாவும். இங்ஙனம் அவனுடைய எண்ணமெல்லாம் அப்பொழுது சிவகாமியைப் பற்றியதாகவே இருந்தது. என்ன விந்தை! முதலில் அவ்வளவு தூரம் வெறுத்த ஒரு பெண்ணின் மீது இத்தகைய மாருக்காதல் எப்படி ஏற்பட்டது? அது அவனுக்கு அதிசயமாகவே தோன்றியது. சகுந்தலையும் அழகிதான். சிவகாமியும் அழகியே. அவனை அவ்வளவு தூரம் ஆகர்ஷிப்பதற்குச் சிவகாமியின் அழகில் என்ன விசேஷ அம்சம் பொருந்தி யிருந்தது? அது அவனுக்கு விளங்கவில்லை. ஆனால் அவனுடைய மனம் அவள்பால் இழுக்கப்பட்டது மட்டும் அவனுக்குத் தெரிந்தது. சிவகாமியின் உருவம் அவனுடைய மனக்கண்முன் நின்றது. ஆஹா! சிவகாமிக்கு உவமை சிவகாமியேதான்! அவளுடைய கண்களில்தான் எவ்வளவு பிரகாசம்! அவளுடைய முகத்தில் எத்தனை சோபை! அவளுடைய முகத்தில் மட்டுமா அம்மோகனம்

இருந்தது? அவளுடைய அங்கங்கள் முழுவதிலும் அது பரவி இருந்தது! அவள் மோகனங்கி! அத்தகைய மோகனங்கியைத்தான் அவன் சிறிது நேரத்தில் சந்திக்கப் போகிருன்.

அவள் இப்பொழுது விதவையாயிருந்தாள். அது அவனுக்கு இன்பம் அளித்ததா, துன்பம் அளித்ததா? ஒரு விதத்தில் அவளுக்கு விடுதலை கிடைத்து விட்டது போல் அவனுக்குத் தோன்றிற்று. ஆனல் சமூகம் அவளுக்கு பல இன்னல்களை விளைவிக்கும். ஒரு சுகம் மட்டுமல்ல, பல சுகங்களை இனி அவள் அனுபவிக்க முடியாது. பாவம்! அவனுடைய சிவகாமிக்கு ஆறுதல் அளிக்க வேண்டியது அவனுடைய கடமை. இங்ஙனம் நினைத்தபோது, தன் முழு உருவத்தையும் வெளியில் காட்ட வெட்கப்பட்டது போல், ஒரு எண்ணம் இலேசாக அவனுடைய உள்ளக் கோடியில் தலைகாட்டியது. அது என்ன எண்ணம்? அதற்காகத்தான் அவன் திருநெல்வேலிக்குப் போய்க் கொண்டிருக்கிருனு?

இத்தகைய எண்ணங்களுடன் தாம் அவன் சிவகாமியின் வீட்டை அடைந்தான். அங்கே அவளைப் பார்ப்பதற்குள், அவனுடைய உள்ளம் படாத பாடு பட்டுவிட்டது.

மேளம் முழங்கிக் கொண்டிருந்தது! அன்றுதான் முகூர்த்தம்! வீடு முழுவதிலும் ஆரவாரமா யிருந்தது. புரோகிதர் என்னென்னமோ சாமான்கள் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தார். ஆடவரும் பெண்டிரும் இங்குமங்கும் ஓட்டமும் நடையுமாய்த் திரிந்து கொண்டிருந்தனர். ஒரு சாமானைத் தேடி ஒன்பதுக்கு மேற்பட்டவர்கள் போவார்கள். ஒருவன் அச்சாமானை எடுத்துக் கொண்டுபோய்க் கொடுத்து விடுவான். மற்றவர்களெல்லாம் அதைத் தேடு, தேடென்று தேடிக்

கொண்டிருப்பார்கள். பல கலியாணங்களுக்குச் சென்று இம்மாதிரி விஷயங்களில் அனுபவம் வாய்ந்தவர்கள் ஒருமுறை தேடி அச்சாமனைக் காணாவிட்டால், பேசாமல் ஒரு தனி இடத்திற்குச் சென்று நிம்மதியாய்த் தூங்க ஆரம்பித்து விடுவார்கள்! யாராவது அதை எடுத்துக் கொண்டுபோய்க் கொடுத்திருப்பான் என்று அவர்களுக்கு நிச்சயம். இதில் முன்பின் அனுபவமில்லாதவர்கள், எல்லா இடங்களிலும் அதைத் தேடிக்கொண்டும், கண்டவர்களை எல்லாம் "அது எங்கே? அது எங்கே?" என்று கேட்டுக்கொண்டும், அவர்களைத் திட்டிக்கொண்டுமிருப்பார்கள். இங்ஙனம் வேலை கொஞ்சமாக நடந்தாலும், ஆர்ப்பாட்டம் மட்டும் பலமாக இருக்கும். அவ்வாரவாரம் மிக்க கும்பலில்தான் பாலகிருஷ்ணனும் தான் நாடிவந்த பொக்கிஷத்தைத் தேடிக் கொண்டிருந்தான்!

இதென்ன விந்தை? அதோ பாலகிருஷ்ணனை நோக்கி வருவது யார்?

பாலகிருஷ்ணனை நோக்கி வருவது யாரா? ஏன் அவனுக்கு அடையாளம் தெரியவில்லையா?

அவள்தான் சிவகாமி!

சிவகாமியா?

ஆம், சிவகாமிதான்!

பாலகிருஷ்ணன் பார்க்கவந்த மோகனாங்கி!

ஏன், அவளிடத்தில் மோகனமில்லையா?

அவனை நோக்கி வந்து கொண்டிருந்த அந்த உருவத்தைப் பார்த்ததும் பாலகிருஷ்ணன் பிரமித்தான்!

சிவகாமி பக்கத்தில் நெருங்கிவிட்டாள். "ஏன் இப்படி துரும்பாய் இளைத்து விட்டீர்கள்? அடையாளமே

தெரியவில்லையே!'' என்று சிவகாமி வியப்புடன் கேட்டாள்.

பாலகிருஷ்ணனுக்குத் திருமணப் பத்திரிக்கை அனுப்பிய போது, சிவகாமி அவனுடைய பழைய மதன காம ரூபத்தையே நினைத்துக் கொண்டிருந்தாள். அதைத்தான் அவள் பார்க்கப்போவதாக அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். வாழ்க்கைப் புயலில் அடிபட்டு, வாடி வதங்கிய அவனுடைய உருவத்தைக் கண்டவுடன், அவளுக்கும் முதலில் ஆச்சரியமே ஏற்பட்டது.

சிவகாமியின் வார்த்தைகளைக் கேட்ட பின்புதான் பாலகிருஷ்ணனுக்கு அவனுடைய சொந்த நிலைமை விளங்கியது.

மனிதர்களின் உடல் என்றும் இளமையுடன், என்றும் பதினுறாய் இருக்குமா? உடல் மூப்புக்கு அடிமைப் பட்டது தானே?

முதலில் ஏற்பட்ட பிரமிப்பு நீங்கியவுடன், இருவரும் சகஜமாய்ப் பழக வாரம்பித்தார்கள். என்றுமில்லாத அன்புடன் இருவரும் க்ஷேமலாபங்கள் விசாரித்தனர். என்றுமில்லாத அமைதியுடனும் விகாரமின்மையுடனும் பேச்சு ஒன்றன்பின் ஒன்ருக வளர்ந்து கொண்டே போயிற்று. அவர்கள் பேசவேண்டிய விஷயங்கள் எத்தனையோ இருந்தன.

“சகுந்தலையை ஏன் கூட்டிக்கொண்டு வரவில்லை? உங்கள் இருவரையுமல்லவா தாரை வார்க்கச் சொல்லலாமென்றிருந்தேன். சரி போனல் போகிறது. கலியாணம் முடிந்ததும் ஊருக்குப் போய்க் குடும்பத்தைக் கூட்டிக்கொண்டு இங்கே வந்துவிடுங்கள். இன்னும் ஏன் கண்காணுத தேசத்தில் போய், யாரோ எவரோ போலிருக்கிறீர்கள்? சொத்தில்லையே என்ற கவலை உங்களுக்கு

வேண்டாம். என் சொத்தெல்லாம் இனி உங்கள் சொத்தென்றே நினைத்துக் கொள்ளுங்கள். அதில் தவறு ஒன்றுமில்லை. உங்கள் சொத்தெல்லாம் உண்மையில் என்னுடைய சொத்துடன் தானே ஐக்கிய மடைந்திருக்கிறது,'' என்ருள் சிவகாமி. பாலகிருஷ்ணனுடன், அவள் முதன் முதல் பன்மையில் பேசியது இச்சந்திப்பில்தான்.

“ஐக்யமா?''

“பின் இல்லையா?''

“அது சரிதான். இனி நாம் எங்கிருந்தால் என்ன?''

அவர்கள் பேசிக் கொண்டிருந்த இடத்திற்கு அப்பொழுது ஒரு பெரிய மனிதர் வந்தார். “ஏண்டாப்பா பாலா, ஏனம்மா, சிவகாமி, க்ஷேமலாபங்களை எல்லாம் அப்புறம் பேசிக்கொள்ளக் கூடாதா? அங்கே மாங்கல்ய தாரணத்திற்கு ஏற்பாடாகிக் கொண்டிருக்கிறது. வாருங்கள் மணவறைக்கு!'' என்று அவர் கத்திவிட்டுச் சென்ருர்.

“ஆமாம் முகூர்த்த நேரமாய்விட்டது. வாருங்கள் மணவறைக்குப் போகலாம்!'' என்று சிவகாமி எழுந்திருந்தாள்.

இருவரும் மணவறைக்குச் சென்றனர்! வாத்தியம் முழங்கிக் கொண்டிருந்தது. எல்லாச் சடங்குகளும் முடிந்தபின், சிறிது நேரத்தில் மாப்பிள்ளை பெண்ணின் கழுத்தில் திருமங்கிலியத்தைக் கட்டினுன்.

சிவகாமி பாலகிருஷ்ணனைப் பார்த்தாள். அவனும் அவளைப் பார்த்தான். ஒரே நேரத்தில் இருவருடைய இதழ்களிலும் ஒரு அழகிய புன்முறுவல் பூத்தது!

கெட்டி மேளம் கொட்டியது! திருமணம் நிறைவேறியது!

சிவகாமியின் மகளுக்கு அப்பொழுது நடந்தது திரு மணமோ, என்னவோ? ஆனால் சிவகாமிக்கும் பாலகிருஷ் ணனுக்கும் பல வருஷங்களுக் கப்புறம், அப்பொழுது நிறைவேறியது திருமணமே ஆகும். அதில் சந்தேகமே இல்லை! உடலுக்கு மூப்புண்டு; மாறுதலுண்டு. ஆனால் உள்ளத்திற்கு ஏது மூப்பும் மாறுதலும்? அவர்களுடைய உள்ளங்கள் அன்றுபோல் இன்றும் இளமையுடன் தாமிருந்தன. அவர்களுடைய அன்பும் அன்றுபோல் இன்றும் புதுமை மாறாமல் தானிருந்தது!

அவர்களுடைய உள்ளங்களுக்கிடையே திருமணம் நிறைவேறிவிட்டது! உள்ளங்கள் ஒன்றாய்க் கலந்தன!

அடங்காத் தாகம் அடங்கியது! தீராத மோகம் தீர்ந் தது!

உள்ளத்தையும், உடலையும் எரித்து நாசஞ்செய்யும் காமத் தீ அணைந்தது!

உள்ளத்தையும் உடலையும் ஒருங்கே ஒளிபெறச் செய்யும் காதல் தீபம் சுடர் விட்டது!

கலியாணச்சடங்குகள் எல்லாம் முடிந்தபின், பால கிருஷ்ணன் ஊருக்குச் சென்றான். சகுந்தலை அவனை மலர்ந்த முகத்துடன் வரவேற்றாள். என்னென்ன வெல் லாமோ நினைத்து, அவள் ஏங்கிக் கொண்டிருந்தாள். கணவனை திரும்பக் கண்டவுடன், அவள் கட்டிலடங்காக் களிப்பெய்தினாள்.

"என்ன?" என்றாள் சகுந்தலை.

"திருமணம் நிறைவேறி விட்டது!" என்றான் பால கிருஷ்ணன்.

முன்பு சிவகாமியைப்பற்றி நினைத்த போதெல்லாம், பாலகிருஷ்ணனின் உள்ளத்தில் குழப்பமும், கலவரமுமே தோன்றின. ஆனால் இப்பொழுதோ, அவளைப்பற்றி நினைக்குந் தோறும், நினைக்குந் தோறும் அவனுடைய மனதில் மாசற்ற மகிழ்ச்சி உண்டாகிறது. அவனுடைய வாழ்க்கையை அவள் வளம் படுத்துகிருள். அவளுடைய நினைவு அவனுடைய சிந்தனைக்குத் தெளிவும், சொல்லுக்கு இனிமையும், செயலுக்கு இங்கிதமும் கொடுக்கின்றது.

அவர்களுக்குள் திருமணம் நிறைவேறி விட்டது!

---

காமராசர்

Madras Ripon Press
Ramachandrapuram

தமிழியல்துறை



சு. குருசாமி பி. ஏ., எல். டி. 1909-ஆம் ஆண்டு இராமநாதபுரம் ஜில்லாவில் ஒரு சிறு கிராமத்தில் பிறந்தார். மதுரையிலுள்ள அமெரிக்கன் கல்லூரியிலும், சென்னை இராஜதானிக் கல்லூரியிலுங் கல்வி பயின்றார். சிறிது காலம் சர்க்கார் உத்தியோகத்திலிருந்து அது தமது மனப்பான்மைக்கு ஒவ்வாததைக் கண்டு, அதை விட்டு விலகி, இப்பொழுது கல்வித் துறையில் தொண்டாற்றி வருகிறார். தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஆர்வங் கொண்டவர். சிறந்த மறுமலர்ச்சி எழுத்தாளர்களில் ஒருவர். 'கல்கி' சிறு கதைப் போட்டியில் பரிசு பெற்றவர். நாவல்களும், சிறுகதைகளும், நாடகங்களும் பல எழுதியுள்ளார். இவருடைய கதைகளில் ஒன்று E. S. L. C. பரிக்ஷைக்குப் பாடமாக வைக்கப்பட்டிருக்கிறது. இவருடைய நாவல்களில் ஒன்றாகிய 'மறுமணம்' கலைமகள் பிரசுரமாக சமீபத்தில் வெளி வந்திருக்கிறது. இதர நூல்கள் சமீபத்தில் வெளிவர இருக்கின்றன. இவர் சில மொழிபெயர்ப்புகளும் செய்துள்ளார். அவைகளில் சிறப்பாக "இந்தியச் சிறு கதைகள்" என்னும் நூலைக் குறிப்பிடலாம். இவருடைய நூல்கள் இதுவரை பதினொன்று வெளிவந்திருக்கின்றன.

WRAPPER PRINTED AT THE MADRAS RIPON PRESS,